2897
M 1173
2897

ஸ்ரீஸூக்திமாலா மலர்–19

மணவாள மாமுனிகள்
அருளிச் செய்த

முமுக்ஷுப்படி வ்யாக்யானம்

பதிப்பாசிரியர்:—
ஸ்ரீ. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார்,
அட்வகேட்,
3, புத்தூர் அக்ரஹாரம், திருச்சிராப்பள்ளி.

விலை ரூ. 2-50.

T02897
R001G05

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஆசார்யாக்ரேஸரரான
பிள்ளைலோகாசார்யர்
திருவாய்மலர்ந்தருளிய

முமுக்ஷுப்படி

2897

என்னும் ரஹஸ்ய ரத்நமும்

இதற்கு
மணவாள மாமுனிகள் அருளிச்செய்த

திருமந்த்ரார்த்தம்

என்னும் வ்யாக்யானமும்

பரமகாருணிகரான
பெரியவாச்சான்பிள்ளை அருளிச்செய்த

தத்வத்ரயஸங்க்ரஹம்

என்னும் ரஹஸ்யமும் அடங்கியது.

[முகவுரை ப்ரமாணத்திரட்டுடன் கூடியது]

பதிப்பாசிரியர்.
ஸ்ரீ. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார்,
அட்வகேட்,
3, புத்தூர் அக்ரஹாரம், திருச்சிராப்பள்ளி.

விலை ரூ 2–8–0. (தபால் கூலி 37 ந. பை.)

ஸ்ரீநிவாஸம் பிரஸ், புத்தூர் அக்ரஹாரம், திருச்சி.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

★ முகவுரை ★

1. ஸர்வதாரி ஆனியில் பரமகாருணிகரான பெரியவாச்சான்பிள்ளை அருளிய பரந்தரஹஸ்யம்முதலான எட்டுரஹஸ்ய க்ரந்தங்கள் அஸ்மத்தாதபாதர்களால் வெளியிடப்பட்டன. அப்போது அகப்படாததும், பரமகாருணிகரான பெரியவாச்சான்பிள்ளையருளியதுமான தத்வத்ரய ஸங்க்ரஹமென்னும் ரஹஸ்யமும், ஸர்வஜ்ஞஸார்வபௌமரான பிள்ளைலோகாசார்யரருளிய முமுக்ஷுப்படியெனும் ரஹஸ்ய ரத்நமும், அதற்கு விசதவாக்சிகாமணியென்னும் விருதுபெற்ற ஸ்வாமி மணவாள மாமுனிகளருளிய திருமந்த்ரார்த்தவ்யாக்யானமும் ஸ்ரீஸூக்திமாலை பத்தொன்பதாவது மலராக விளம்பி ரோகிணியில் வெளியிடப்பெறுகிறது.

2. ரஹஸ்யத்ரய ஸங்க்ரஹமென்னும் அதிகம்பீர ஸ்ரீஸூக்திகளைக்கொண்ட இந்த கிரந்தத்திலுள்ள சில வாக்கியங்கள் தத்வத்ரய வ்யாக்யானத்தில் மணவாளமாமுனிகளால் எடுக்கப்பட்டிருக்கின்றன. இதற்குத் தத்வத்ரய விவரணமென்னும் வியாக்கியானமொன்று ஆச்சான்பிள்ளை தம்மாலேயே அருளிச்செய்யப்பட்டுள்ளதென்றும் தத்வத்ரய வியாக்கியானத்திலிருந்தே தெரிகிறது. தத்வத்ரய விவரணத்திலிருந்தும் மாமுனிகள் பல வாக்கியங்களை எடுத்திருக்கிறார். தௌர்பாக்கியவசத்தால் அந்த அத்புதவிவரணக்ரந்தம் எங்கு தேடியும் கிடைக்கவில்லை. ரஹஸ்யத்ரய ஸங்க்ரஹம் மதறாஸ் ஓரியண்டல் மாநுஸ்க்ரிப்ட்ஸ் லைப்ரரியிலுள்ள ஒரு ஓலை ஸ்ரீகோசத்திலுள்ளது. அதைக்கொண்டே இப்போது இது அடியேனால் அச்சிடப்பெற்றுள்ளது. இது பெரியவாச்சான்பிள்ளையருளியதே என்பதை மாமுனிகளின் ஸ்ரீஸூக்திகளைக் கொண்டு மேலே நிரூபிப்போம்.

3. பெரியவாச்சான்பிள்ளை பல ரஹஸ்யங்கள் அருளியிருந்தபோதிலும் அவற்றில் பெரும்பான்மையானவை ஸங்க்ரஹமானவை. மிகவிரிவான பலரஹஸ்யக்ரந்தங்களை முதன்முதலாக அருளிச்செய்த பெருமை பிள்ளைலோகாசார்யர் ஒருவருக்கே உரியதாகும். அவற்றிலும் முமுக்ஷுப்படி என்

னும் ரஹஸ்யம், ரஹஸ்யத்ரயத்தின் அரும்பொருள்களனைத்தையும் பேதைபாமரரும் உணரும்படியான எளிய நடையில் அமைந்துள்ளது. இதனாலேயே மாமுனிகள் ப்ரஹ்ம ஸூத்ரம்போல் கம்பீரமான இதற்கு வியாக்கியானமருளிச் செய்தார்; ஸ்ரீவைஷ்ணவவுலகம் முழுவதும் இதைக் காலக்ஷேபக்ரந்தமாகக்கொண்டு குலாவுகின்றது.

4. இதற்கு மாமுனிகள் அருளியுள்ள வியாக்கியானம் அதிகம்பீரமானதாய், "**உக்தார்த்தவிவ்ருதீகாரயுக்தார்த்தாந்தர போதநம் | மதம் விவரணம்**" என்னும் விவரணலக்ஷணத்திற்கு ஏகலக்ஷ்யமாயிருப்பதாய், பூர்வாசார்யர்களுடைய ஸ்ரீஸூக்திகளின் ஸாரத்தைப் பிழிந்து தருமதாயிருக்கிறது. இந்த வியாக்கியானத்தில் பற்பலவிடங்களில் பெரியவாச்சான் பிள்ளையருளிய பரந்தரஹஸ்யத்தின் பங்க்திகளை, பிள்ளை லோகாசார்யரருளிய அர்த்தங்களுக்கு ஸம்வாதப்ரமாணமாகக் காட்டியருளுகிறார் மாமுனிகள்.

5. ஸுப்ரஸித்த மஹாவித்வானும் தென்மொழி வடமொழி வேதங்கரைகண்டவரும் ஸ்ரீவைஷ்ணவலோகத்திற்கு அத்யந்தோபகாரகருமான காஞ்சீ ஸ்ரீ உ. வே. ப்ர. ப. அண்ணங்கராசார்யஸ்வாமிகள் பரந்தரஹஸ்யகர்த்ரு விஷயத்தில் கருத்துவேற்றுமை கொண்டுள்ளார்கள். (அஷ்டாத்யாயீ முதலானவற்றிலுள்ளபடி) அவர்களுடைய திருவுள்ளம் பின்வருமாறு:-(1) தத்வத்ரயம் அசித்ப்ரகரணம் 27-வது சூர்ணையின் வ்யாக்யானத்தில், "தத்வத்ரயவிவரணத்தில் **ஆச்சான் பிள்ளை** ஒருவிதமாக ஆவரணக்ரமத்தை அருளிச்செய்தார். தத்வநிரூபணத்திலே (வாதிகேஸரி) ஜீயர் மற்றொருவிதமாக ஆவரணக்ரமத்தை அருளினார். பிள்ளைலோகாசார்யர் சுருக்கமாகச் சொல்லுகிறவராகையாலே, ஆவரணக்ரமத்தை அருளிச்செய்யாமலே விட்டுவிட்டார். **பெரியவாச்சான்பிள்ளையும் இப்படியன்றோ** அருளிச்செய்தது" என்னும் பொருளுள்ள ஸ்ரீஸூக்திகளை அருளியிருக்கிறார். (2) இதிலிருந்து விவரண கர்த்தாவான ஆச்சான்பிள்ளை பெரியவாச்சான்பிள்ளையிலும் வேறுபட்டவரென்று தெரிகிறது. (3) பெரியவாச்சான் பிள்ளை ஸாதித்த சுருக்கமானதொரு தத்வத்ரயக்ரந்தத்திற்கு

அவருடைய குமாரரான (நாயனார்) ஆச்சான்பிள்ளை விரிவான வியாக்கியானமாக தத்வத்ரய விவரணத்தை வெளியிட்டிருக்கிறாரென்றும் தெரிகிறது. (4) மணவாளமாமுனிகள் ரஹஸ்யவ்யாக்யானங்களிலே பரந்தரஹஸ்யம், மாணிக்க மாலை, ஜிதந்தேவ்யாக்யானம், கத்யவ்யாக்யானம், தத்வத்ரய விவரணம் ஆகிய கிரந்தங்களின் கர்த்தாவாக எடுக்கும் ஆச்சான்பிள்ளை நாயனாராச்சான்பிள்ளையேயொழிய, பெரியவாச்சான்பிள்ளையல்லர் என்பதும் விளங்குகிறது. இது ஸ்ரீகாஞ்சி ஸ்வாமியின் திருவுள்ளம்.

6. உபயவேதாந்த ரஹஸ்ய குருபரம்பராதி க்ரந்தங்களில் அப்ரதிமமான ஜ்ஞானமுள்ளவரும், ஆராய்ச்சியாளரில் தலைவரும், அநந்தகல்யாணகுணநிதியும், ஸ்ரீவைஷ்ணவ லோகத்திற்கு நிலைநிற்கும் உபகாரங்கள் பல செய்திருப்பவருமான அஸ்மத்தாதபாதர்கள் ஆச்சான்பிள்ளையென்று மாமுனிகளால் ரஹஸ்ய க்ரந்தங்களில் எடுக்கப்பட்ட பரந்த ரஹஸ்யாதிகர்த்தா பெரியவாச்சான்பிள்ளையே என்று வேஷாடசாத்யாயியில் பல கிரந்தங்களைக்காட்டி நிரூபித்தார்கள். மாமுனிகளுக்கு முன்னும், அதிஸமீபகாலத்தில் பின்னும் தோன்றிய பரகாலநல்லான் ரஹஸ்யம், ரஹஸ்யவிவேகம், அஷ்டச்லோகீவ்யாக்யானம், பெரியதிருமுடியடைவு முதலான பல கிரந்தங்களில் பரந்தரஹஸ்யாதிகளைப் பெரியவாச்சான் பிள்ளையுடையதாகவே எடுத்திருப்பதை விரிவாகக் காட்டியருளினார்கள். இவற்றுக்கு பாதகமில்லாதபடி மாமுனிகளின் தத்வத்ரயவ்யாக்யான ஸ்ரீஸூக்திக்கு "**ஸ்திதஸ்ய கதிச்சிந்த நீயா**" என்கிற ரீதியிலே ஒருவகையாக நிர்வாஹமும் காட்டினார்கள். தத்வத்ரயஸங்க்ரமென்னும் (இப்போது அடியேன் அச்சிட்டிருக்கும்) க்ரந்தம் அப்போது கிடைக்காமையாலே அப்படி நிர்வஹிக்கநேரிட்டது. பரந்தரஹஸ்ய விவாதம் முடிந்தபிறகு அடியேன் சென்னையிலிருக்கையில் ராஜகீய புஸ்தகாலயத்திலிருந்து தத்வத்ரய ஸங்க்ரஹத்தை நகலெடுத்துப் பார்த்ததில் பல புதியவிஷயங்கள் வெளியாயின. அவற்றை ஸமய விசேஷத்தில் ஸ்ரீவைஷ்ணவவுலகிற்கு வெளிப்படுத்தும்படி அப்போதே அடியேனை எந்தையார் நியமித்தருளி

னர். அந்யமனத்தைப் பின்பற்றிச் சிறது எழுதுகிறேனடி யேன். மஹான்கள் குற்றம் நீக்கிக் குணங்கொள்வாராக.

7. தத்வத்ரயம், அசித்ப்ரகரணம் 27-வது சூர்ணையின் வ்யாக்யானத்தில் "**பெரியவாச்சான் பிள்ளையும்** இப்படியிறே அருளிச்செய்தது" என்று மாமுனிகள் அருளிச்செய்தது, தத்வத்ரயவிவரணத்துக்கு மூலமான (இப்போது அச்சிட்டிருக்கும்) தத்வத்ரயஸங்க்ரஹம் என்னும் கிரந்தத்தின் 13-முதல் 20 வரையிலுள்ள சூர்ணைகளில் (பிள்ளைலோகாசார்யரைப்போல்) ஆவரணக்ரமத்தை அருளிச்செய்யாமல் அருளியிருக்கும் ஸூக்திகளையே விஷயமாகக்கொண்டதுஎன்பது தத்வத்ரயஸங்க்ரஹத்தைப் படிப்பார்க்குப் புலப்படும். ஆகையால், இத்தத்வத்ரய ஸங்க்ரஹத்தையருளியவர் பெரியவாச்சான்பிள்ளையே என்று ஸித்தித்தது. தத்வத்ரயஸங்க்ரஹகர்த்தாவான இப்பெரியவாச்சான்பிள்ளையை இதற்கு முன்னும் பின்னும் ஆச்சான்பிள்ளையென்றும் மாமுனிகள் குறிப்பிட்டிருப்பதைக் காட்டுவோம் இனி. தத்வத்ரயம் ஈச்வரப்ரகரணம் 47-வது சூர்ணையின் வியாக்கியானத்தில், "'**இவ்வண்டத்திலே பத்தாத்மஸமஷ்டி பூதஞன ப்ரஹ்மா பிறக்கும்; இதுக்குக் கீழ் ஸ்வஸங்கல்பத்தாலே எம்பெருமான் தானே ஸ்ருஷ்டித்தருளும். இதுக்கு மேல் ப்ரஹ்மாவுக்கு அந்தர்யாமியாய் நின்று ஸ்ருஷ்டித்தருளும்' என்று ஆச்சான் பிள்ளை அருளிச்செய்கையாலும்**" என்று மாமுனிகள் அருளியுள்ளார். இதில் **ஆச்சான்பிள்ளை**யுடையவையாக எடுக்கப்பட்ட ஸ்ரீஸூக்திகள் தத்வத்ரயஸங்க்ரஹத்தில் 23, 24-வது சூர்ணைகளாக அமைந்திருப்பதைக் காணலாம். ஆகையால் பெரியவாச்சான் பிள்ளையையே மாமுனிகள் ஆச்சான்பிள்ளையென்று குறிப்பிட்டாரென்று ஸித்தித்தது.

8. தத்வத்ரயம் ஈச்வரப்ரகரணம் ஆறுவது சூர்ணை வ்யாக்யானத்தில் "எம்பெருமானுடைய திவ்யாத்மகுணங்களாவன—ஜ்ஞாநசக்த்யாதி ஷட்குணங்களும் அதிலே பிறந்த ஸௌசீல்யாதிகளும்" என்ற தத்வத்ரயஸங்க்ரஹ (சூர்ணை 43) ஸ்ரீஸூக்தியை எடுத்து "அதிலே பிறக்கையாவது—வஸ்தூத்

கர்ஷாபாதக ஷாட்குண்யாயத்த குணபாவமாகை" என்று அதற்கு **விவரணத்திலே** ஆச்சான்பிள்ளை அர்த்தமெழுதினர் என்று மாமுனிகள் அருளியிருக்கிருர். இதிலிருந்து தத்வ த்ரயஸங்க்ரஹத்துக்கு வ்யாக்யானமாகவே தத்வத்ரயவிவரணம் அமைந்ததென்று தெளிவாகிறது.

9. தத்வதரயவ்யாக்யான அவதாரிகையில் 'நடுவிற்றிரு வீதிப்பிள்ளைபட்டர், **ஆச்சான்பிள்ளை** முதலான **பூர்வாசார் யர்களுடைய** ப்ரபந்தநிர்மாணத்துக்கும் கருத்து இதுவிறே' என்று அருளியுள்ளார் மாமுனிகள். இங்கு குறிக்கப்பட்ட ஆச்சான்பிள்ளையும், மூலமான தத்வத்ரயஸங்க்ரஹ கர்த்தாவான பெரியவாச்சான்பிள்ளையாகவே இருக்கமுடியும்.

10. தத்வத்ரயம் சித்ப்ரகரணம் மூன்ருவது சூர்ணை வியாக்கியானத்தில், "நடுவிற்றிருவீதிப்பிள்ளைபட்டரும், **ஆச்சான்பிள்ளையும்** முதலான ஆசார்யர்கள் தத்வத்ரயமருளிச் செய்கிறவிடத்தில் அசிதுபக்ரமமாக அருளிச்செய்தார்கள்" என்று அருளினர் மாமுனிகள். தத்வத்ரயஸங்க்ரஹம் அசிதுபக்ரமமாகவே அருளிச்செய்யப்பட்டிருக்கிறது. மூலமான அந்த கிரந்தத்தை அருளிய பெரியவாச்சான்பிள்ளையையே ஆச்சான்பிள்ளையென்று மாமுனிகள் இவ்விடத்திலும் குறிப்பிடுகிருர் என்பது தெளிவு. ஆக, பெரியவாச்சான்பிள்ளையென்று நடுவில் குறிப்பிடப்பெற்றவரையே தொடக்கத்தில் இரண்டிடங்களிலும், கடைசியில் ஓரிடத்திலும் மாமுனிகள் ஆச்சான்பிள்ளையென்றும் குறிப்பிட்டிருக்கிருர் என்பது மறுக்கவொண்ணுதது.

11. இதனுல் தத்வத்ரயஸங்க்ரஹத்தை அருளியவர் பெரியவாச்சான்பிள்ளையே என்பதும் அவரை மாமுனிகள் ஆச்சான்பிள்ளையென்று குறிப்பிட்டுள்ளார் என்பதும் உறுதியாகிறது. தத்வத்ரய விவரணமருளியவரையும் ஆச்சான்பிள்ளையென்றே குறிப்பிடுவதால் அவரும் பெரியவாச்சான்பிள்ளையேயாகவேண்டும்.

12. இவற்றிலிருந்து மாமுனிகளால் ரஹஸ்ய வ்யாக்யானங்களில் பரந்தரஹஸ்யம், மாணிக்கமாலை, ஜிதந்தே வ்யாக்யானம், கத்யவ்யாக்யானம் ஆகிய கிரந்தங்களை அருளிய

வராகக் குறிப்பிடப்பட்ட ஆச்சான்பிள்ளை பெரியவாச்சான் பிள்ளையே என்பது தெளிவாகிறது. இது மற்ற ப்ராசீநக்ரந் தங்களாலும் பின்வரும் காரணங்களாலும் வலியுறுத்தப் படுகிறது: (1) மாமுனிகளின் திருவடியான பரவஸ்து பட்டர் பிரான் ஜீயர் தாமருளிய அந்திமோபாயநிஷ்டையில் மாணிக்க மாலையைப் பெரியவாச்சான்பிள்ளையருளியதாகக் குறிப்பிட் டிருக்கிறார். (2) மாமுனிகளுக்கு சுமார் நூறுவருஷங்களுக் குள்ளிருந்த ரஹஸ்யவிவேககாரர் பரந்தரஹஸ்யம், கத்ய வ்யாக்யானம் முதலானவற்றைப் பெரியவாச்சான்பிள்ளையரு ளியதாகக் குறிப்பிட்டுள்ளார். (3) மாமுனிகளுக்கு சுமார் நூறு வருஷங்களுக்குள்ளிருந்த அஷ்டச்லோகீவ்யாக்யாதா வும் நாயனாராச்சான்பிள்ளையிலும் வேறுபட்டவரான ஆச் சான்பிள்ளையே பரந்தரஹஸ்யாதிகர்த்தா என்று காட்டுகிறார். அதோடு வடக்குத் திருவீதிப்பிள்ளையருளிய அஷ்டாக்ஷர தீபிகையென்னும் ரஹஸ்யத்திலும் பரந்தரஹஸ்யத்திலும் வெகுநீண்டதான ஒரு பகுதி ஒரே மாதிரியாயிருப்பதைக் காட்டியிருக்கிறார். இதனாலும் வடக்குத்திருவீதிப்பிள்ளை யின் ஸப்ரஹ்மசாரியான பெரியவாச்சான்பிள்ளையே பரந்த ரஹஸ்யகர்த்தா என்பது ஸித்தம். (4) திருமுடியடைவுகள் முதலானவையும் பெரியவாச்சான்பிள்ளையே பரந்தரஹஸ்ய கர்த்தாவென்று கோஷிக்கின்றன. (5) வெகுஸமீபகாலத்தி லிருந்த கோவர்த்தனம் ஸ்வாமியையும் அயோத்திஜீயர் ஸ்வாமியையும் தவிர ப்ராசீனர் எவருமே இந்த கிரந்தங்களை நாயனாராச்சான்பிள்ளையுடையவைகளாகச் சொல்லியதில்லை. (6) இன்றளவும் எல்லா வித்வான்களாலும் பெரியவாச்சான் பிள்ளையுடையதெனக் காலக்ஷேபகோஷ்டிகளில் குலாவப் பட்டுவரும் கத்யவ்யாக்யானத்தை மாமுனிகள் தத்வத்ரய வ்யாக்யானத்தில் ஆச்சான்பிள்ளையுடையதென எடுத்திருக் கிறார். இதுவும் பெரியவாச்சான்பிள்ளையே மாமுனிகளெடுக் கும் ஆச்சான்பிள்ளையெனத் தெளிவாக்குகிறது. (7) ஸகல வித்வான்களாலும் பெரியவாச்சான்பிள்ளையுடையதெனக் குலாவப்படும் ஜிதந்தேவ்யாக்யானத்தையும் மாமுனிகள் ஆச்சான்பிள்ளையுடையதாக எடுத்திருப்பதும் இதையே வலி யுறுத்துகிறது. இக்காரணங்களால் முமுக்ஷுப்படி வ்யாக் யானத்தில் ஆச்சான்பிள்ளையருளியதாகப் பலகால் எடுக்கப் படும் பரந்தரஹஸ்யத்தை அருளியவர் பெரியவாச்சான்

பிள்ளையே என்பது நடுநிலையாளர்க்கு நன்கு விளங்கும். இது அஸ்மத்தாதபாதர்களின் திருவுள்ளம்.

13. மாமுனிகளின் வியாக்கியானங்களில் எடுக்கப்படும் ஆச்சான்பிள்ளை யார் என்று கண்ணாடிபோல் காட்டித்தருவ தாகையாலே 'தத்வத்ரயஸங்க்ரஹம்' என்னும் கிரந்தம் முமுக்ஷுப்படி வியாக்கியானத்தோடு சேர்த்து வெளியிடப் படுகிறது. இதுவரை இந்நூல் வேறு எவராலும் வெளி யிடப்பட்டிருப்பதாகத் தெரியவில்லை.

14. தத்வத்ரயவிஷயமாகப் பெரியவாச்சான்பிள்ளையும், ரஹஸ்யத்ரயவிஷயமாகப் பிள்ளைலோகாசார்யரும் மணவாள மாமுனிகளும் அருளியிருப்பவையும், ஸ்ரீவைஷ்ணவலோகத் திற்கு அத்யந்தோபகாரகமானவையுமான ஸ்ரீஸூக்திகளை ஒரே ஸம்புடமாகப் பெரியவாச்சான்பிள்ளையின் அவதார தினமான ஸ்ரீஜயந்தியன்று வெளியிடுவதன் மூலம் ஜந்ம ஸாபல்யம் பெற்றவனாகிறேன்.

விளம்பி,
ஆவணியில் ரோகிணி,

இங்ஙனம்,
ஸ்ரீவைஷ்ணவ தாஸன்,
ஸ்ரீ. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார்.

ஸ்ரீ:

ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்சனம்

சிறந்த ஸ்ரீவைஷ்ணவ மாதப்பத்திரிகை

ஹேவிளம்பி மார்கழியிலிருந்து பதினோராவது வருடம் நடைபெறு கிறது. கடந்த ஸஞ்சிகைகளும் கிடைக்கும்.

ஆசிரியர்:-

ஸ்ரீ. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார்,

அட்வகேட்,

3, புத்தூர் அகரஹாரம், திருச்சி.

வருடச்சந்தா ரூ. 3–0–0.

வேதம், ஸ்மிருதிகள், இதிஹாஸபுராணங்கள் முதலியவற்றிலிருந்து ஸ்ரீமந்நாராயணனின் பெருமையை விளக்கும் **ஸ்ரீவிஷ்ணுசித்தவிஜயம் என்னும் பகுதியும்,** விவரண ஸஹிதமான **ஸ்ரீராமாயண தனிச்லோகமும்,** திவ்யப்ரபந்தங்களுக்கு எளிய விவரணங்களோடு கூடிய **பெரியவாச்சான் பிள்ளை வ்யாக்யானங்களும், கம்பராமாயணவுரையும், பெரியாழ்வார் ப்ரபாவமும்,** விசிஷ்டாத்வைத ப்ரகரணக்ரந்தமான **விவரண ஸஹித ஸந்மதகாரிகாவளியும்,** (ஸ்ரீ உ. வே. ப்ர. ப. அண்ணங்கராசார்யஸ்வாமியின்) **முமுக்ஷுப்படி ஸாரார்த்த ஸர்வஸ்வ தீபிகைகளும்,** மற்றும் பல விஷயங்களும் வெளிவருகின்றன.

ஸ்ரீஸூக்திமாலா வெளியீடுகள்

பதவுரை, அரும்பதவுரை, ப்ரமாணத்திரட்டு முதலானவற்றோடுகூடிய பெரியவாச்சான்பிள்ளை முதலான பூர்வாசார்யர்களின் க்ரந்தங்கள்.

க்ரந்தங்கள்	விலை	தபால்
1. பரந்தரஹஸ்யம் முதலிய எட்டு ரஹஸ்யங்கள்	1-50	-18
2. ஸ்தோத்ரரத்ந சதுச்லோகீ ஜிதந்தே வ்யாக்யாநங்கள்	3-	-38
3. திருப்பல்லாண்டு வ்யாக்யாநம்	1-50	-18
4. முதல் திருவந்தாதி வ்யாக்யாநம்	1-88	-25
5. பெருமாள் திருமொழி வ்யாக்யாநம்	1-88	-25
6. திருமாலை வ்யாக்யானம்	2-75	-31
7. திருவாசிரியம் பெரிய திருவந்தாதி வ்யாக்யானம்	1-63	-25
8. சது:ச்லோகீ வ்யாக்யானம் (நாயனாராச்சான்பிள்ளை)	1-50	-18
9. கத்ய வ்யாக்யானங்கள்	2-	-25
10. நாச்சியார் திருமொழி வ்யாக்யானம்	4-	-50
11. திருச்சந்த விருத்த வ்யாக்யானம்	3-	-38
12. நான்முகன் திருவந்தாதி வ்யாக்யானம் (விவரணத்துடன்)	2-50	-38
ஷை மலிவுப் பதிப்பு	2-	-38
13. ஸ்ரீராமாயண தனிச்லோகம் (விவரணத்துடன்)	3-50	-38
ஷை மலிவுப் பதிப்பு	2-75	-38
14. திருப்பள்ளியெழுச்சி வ்யாக்யானம்	0-50	- 8
15. பாசுரப்படி ராமாயணம் (விலையில்லை தபாற்கூலி 0-8)		
16. அமலனாதிபிரான் வ்யாக்யானம்	1-88	-25
17. கண்ணிநுண் சிறுத்தாம்பு வ்யாக்யானம்	2-75	-38
18. சிறிய திருமடல் வ்யாக்யாநம் (விவரணத்துடன்)	1-38	-25

ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்சனம் வெளியீடுகள்

1. திருப்பல்லாண்டு வ்யாக்யானம்	1-50	
2. திருப்பாவை வ்யாக்யானம்	2-25	-25
3. ஸந்த்யா வந்தந பாஷ்யம்	2-25	-25
4. புருஷஸூக்த வ்யாக்யானம்	-75	
5. நாராயணஸூக்த வ்யாக்யானம்	-75	
6. ஸ்ரீஸூக்த வ்யாக்யானம்	2-	-38
ஷை மலிவுப் பதிப்பு	1-50	-31
7. அபயப்ரதராஜ விஜயம்	-63	
8. கம்பராமாயணம் (கையடைப்படலம் முடிய)	2-50	-38
9. ராமாநுஜதேசிக ஸ்தோத்ரங்கள்	1-	-18
10. பலதாரமணம்	-25	
11. பாகவத தசமஸ்கந்த கீர்த்தனை பூர்வ பாகம்	4-	
ஷை உத்தர பாகம்	4-	
12. ஸ்ரீகேசவ மணிமாலை	0-50	-8
13. ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹஸ்தவம்	0-37	-8
14. யதிராஜவிம்சதி வ்யாக்யானம்	0-88	0-12
15. ஸ்ரீ நீளா விஷ்ணுஸூக்த வ்யாக்யானங்கள்	1-75	-25

இடைக்குமிடம்:—

S. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார், அட்வகேட்.

3. புத்தூர் அக்ரஹாரம், திருச்சி.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

பரமகாருணிகரான பெரியவாச்சான்பிள்ளை அருளிய

தத்வத்ரய ஸங்க்ரஹம்

ஸ்ரீமத் க்ருஷ்ண ஸமாஹ்வாய நமோ யாமுந ஸூநவே ।
யத் கடாக்ஷைக லக்ஷ்யாணாம் ஸுலப: ஸ்ரீதரஸ் ஸதா ॥

அவதாரிகை

1. இதரதர்ஶநங்களில் பதார்த்தங்கள் ஆறென்பார், பதினாறென்பார், இருபத்தஞ்சென்பார் இப்படி பஹுப்ரகாரங்களிலே விப்ரதிபத்தி பண்ணுவர்கள்.

2. நம் தர்ஶநத்துக்குத் தத்வம் மூன்று.

3. அவையாவன– 'சித்' என்றும், 'அசித்' என்றும், 'ஈச்வரன்' என்றும்.

அசித்ப்ரகரணம்

4. அசித்தாகிறது– குணத்ரயாத்மகமாய், நித்யமாய், ஜடமாய், விபுவாய், எம்பெருமானுக்கு ப்ரகாரதயா ஶேஷமாய், இவனுக்கு லீலோபகரணமாய், மஹதாதி ஸர்வ விகாரங்களுக்கும் ப்ரக்ருதியாய், தன்னோடு ஸம்பந்தித்த சேதனனுக்கு பகவத்ஸ்வரூபத்தை மறைத்துத் தன்பக்கலிலே போக்யபுத்தியைப் பிறப்பிக்கும் தன்மையை உடைத்தாய், ஸததபரிணாமியாயிருக்கும்.

5. இதில் ஸூக்ஷ்மபரிணாமம் அவிபக்தமாயிருக்கும்.

6. ஸ்தூலபரிணாமம் விபக்தமாயிருக்கும். அதாகிறது மஹதாதி விகாரங்கள்.

7. இந்த மூலப்ரக்ருதி மஹதாதிகளாய்ப் பரிணமிக்கும்படி எங்ஙனேயென்னில்:

8. குணத்ரயங்களினுடைய ஸாம்யாவஸ்தையான மூலப்ரக்ருதியில் நின்றும் மஹான் பிறக்கும்.

9. இதில் நின்றும் அஹங்காரம் பிறக்கும்.

10. இதுதான் ஸாத்விகமாயும், ராஜஸமாயும், தாமஸமாயும் மூன்று படியாயிருக்கும்.

11. இதில் ஸாத்விகாஹங்காரத்தில் நின்றும் ஏகாதசேந்த்ரியங்கள் பிறக்கும்.

12. இந்த்ரியங்கள்தான் எவையென்னில்: ச்ரோத்ர த்வக் சக்ஷுர் ஜிஹ்வா க்ராணங்களென்கிற ஜ்ஞானேந்த்ரியங்களைந்தும், வாக் பாணிபாத பாயூபஸ்தங்களென்கிற கர்மேந்த்ரியங்களைந்தும், இவற்றுக்கு ப்ரதானமான மநஸ்ஸுமாக இந்த்ரியங்கள் பதினொன்று.

13. தாமஸாஹங்காரத்தில் நின்றும் ஶப்ததந்மாத்ரை பிறக்கும்.

14. இதில் நின்றும் இதினுடைய ஸ்தூலாவஸ்தையாய், ஶப்தகுணகமான ஆகாஶம் பிறக்கும்.

15. இதில் நின்றும் ஸ்பர்ஶதந்மாத்ரை பிறக்கும்.

16. இதில் நின்றும் ஸ்பர்ஶகுணகமான வாயு பிறக்கும்.

17. இதில் நின்றும் ரஸதந்மாத்ரை பிறக்கும்.

18. இதில் நின்றும் ரஸகுணகமான ஜலம் பிறக்கும்.

19. இதில் நின்றும் கந்ததந்மாத்ரை பிறக்கும்.

20. இதில் நின்றும் கந்தகுணகையான ப்ருதிவீ பிறக்கும்.

21. ராஜஸாஹங்காரம் இரண்டிற்கும் அநுக்ராஹகமாயிருக்கும்.

22. ஆக, இந்த மஹதாதி ஸகலபதார்த்தங்களுங்கூட அண்டமாய்ப் பரிணமிக்கும்.

23. இவ்வண்டத்திலே பத்தாத்மஸமஷ்டி பூதனான ப்ரஹ்மா பிறக்கும்.

24. இதுக்குக் கீழ் ஸ்வஸங்கல்பத்தாலே எம்பெருமான் தானே ஸ்ருஷ்டித்தருளும்; இதுக்கு மேல் ப்ரஹ்மாவுக்கு அந்தர்யாமியாய் நின்று ஸ்ருஷ்டித்தருளும்.

25. இவ்வண்டந்தான் பத்தாத்மாக்களுக்கு போக்ய போகோபகரண போகஸ்தானமாய்க்கொண்டு பரிணமிக்கும்.

26. போக்யங்களாவன—ஶப்தாதிகள்.

27. போகோபகரணங்களாவன—இந்த்ரியங்கள்.

28. போகஸ்தாநமாவன-தேவதிர்யங்மநுஷ்ய ஸ்தாவர ரூபமான சதுர்வித ஶரீரங்களும், பூமி முதலான மேலேழு லோகங்களும், பாதாளாதி லோகங்கள் ஏழும்.

29. இந்த்ரியங்களும் இச்சரீரங்களும் ஐச்வர்யாதி புருஷார்த்தங்களுக்கு ஸாதகமாயிருக்கும்.

30. இது வ்யக்தாவ்யக்தரூபமான அசித்தத்வம்.

31. காலமாகிறது,– அசித்விசேஷமாய், நித்யமாய், ஏகரூபமாய், கீழ்ச்சொன்ன ப்ரக்ருதி பரிணாமாதிகளுக்கு ஸஹகாரியாய்க்கொண்டு நிமேஷகாஷ்டாதி விகாரங்களையுடைத்தாய், எம்பெருமானுக்கு ப்ரகாரதயா ஶேஷமாய், லீலாபரிகரமாய் இருப்பதொன்று.

அசித்ப்ரகரணம் முற்றிற்று.

சித்ப்ரகரணம்

32. ஆத்மதத்வம் மூன்று வர்க்கமாய், அஸங்க்யாதமாயிருக்கும்.

33. இதில், பகவச்சேஷைகரஸரான, அநந்தகருடவிஷ்வக்ஸேந ப்ரப்ருதிகள் நித்யவர்க்கம்.

34. ஸம்ஸாரிகளாய், ஒருநாளிலே பகவத்ஜ்ஞாநம் பிறந்து அதனாலே பகவத்ப்ராப்தி பண்ணினவர்கள் விமுக்தவர்க்கம்.

35. அநாதியான கர்மப்ரவாஹத்தாலே சதுர்வித ஶரீரங்களையும் ப்ரவேசித்து, அதனாலே ஶப்தாதிவிஷயப்ரவணரான ஸம்ஸாரிகள் பத்தவர்க்கம்.

36. ஆத்மஸ்வரூபம் இருக்கும்படி எங்ஙனேயென்னில்: ஜ்ஞாநாநந்த ஸ்வரூபமாய், நித்யமாய், அசித்திற்காட்டில் ஸௌக்ஷ்மமாய், ஜ்ஞாநகுணகமாய், அணுபரிமாணமாய், பகவதாயத்த கர்த்ருத்வகமாய், ஈச்வரனுக்கு ப்ரகாரதயா ஶேஷமாயிருக்கும்.

37. பத்தாத்மாக்களுடைய ஜ்ஞாநம் ஸங்கோசவிகாஸங்களுக்கு அர்ஹமாயிருக்கும்.

38. நித்ய முக்தர்களுடைய ஜ்ஞாநம் ஸங்கோச விகாஸங்களுக்கு அநர்ஹமாயிருக்கும்.

சித்ப்ரகரணம் முற்றிற்று

ஈச்வரப்ரகரணம்

39. ஈச்வரன் சேதநாசேதநாத்மகமான உபயவிபூதிக்கும் நியந்தாவாயிருக்கும்.

40. எம்பெருமானுடைய திவ்யாத்மஸ்வரூபம் ஹேயப்ரத்யநீகமாய், கல்யாணைகதாநமாய், ஸகலேதரவிலக்ஷணமாய், அதிஸூக்ஷ்மமாய், தேஶகாலவஸ்துக்களால் அபரிச்சிந்நமாய் உள்ள ஜ்ஞாநாநந்தமாயிருக்கும்.

41. திவ்யமங்களவிக்ரஹம் சுத்தஸத்வமாய், பஞ்சோபநிஷந்மயமாய், எம்பெருமானுக்கு ஸர்வதா அபிமதமாய் திவ்யாத்ம ஸ்வரூபத்துக்கும் அதை ஆச்ரயித்திருக்கும் கல்யாண குணங்களுக்கும் ப்ரகாஶகமாய் ஏகரூபமாய், ஸர்வ விஸஜாதீயமாய், அப்ராக்ருதமாய், அளவிறந்த தேஜஸ்ஸையுடைத்தாய், நித்யயௌவன ஸ்வபாவமாய், ஸர்வகந்த ஸ்வபாவமாய், ஸௌந்தர்யாதி கல்யாணகுண யுக்தமாய், அதிமநோஹரமாய், நித்யர்க்கும், முக்தர்க்கும் அநுபாவ்யமாய், முமுக்ஷுக்களுக்கும் சுபாச்ரயமாயிருக்கும்.

42. பரமபதமும், அங்குள்ள பதார்த்தங்களும், முக்தருடைய விக்ரஹங்களும், நித்யஸித்தருடைய விக்ரஹங்களும் சுத்தஸத்வமாய், பஞ்சோபநிஷந்மயமாயிருக்கும்.

43. எம்பெருமானுடைய திவ்யாத்மகுணங்களாவன-ஜ்ஞாந ஶக்த்யாதி ஷட்குணங்களும், அதிலே பிறந்த ஸௌசீல்யாதிகளும்.

44. இவைதான் ஓரோ குணங்களுக்கு அவதியின்றியிலே இவற்றுக்குத் தொகையுமின்றியிலேயிருக்கும்.

45. இப்படிப்பட்ட ஸ்வரூபாதிகளையுடைய ஈச்வரன் பரவ்யூஹாதிகளினாலே உபயவிபூதியையும் நிர்வஹித்தருளும்.

46. எங்ஙனேயென்னில்:

47. கீழ்ச்சொன்ன ஷாட்குண்யாதி ஸமஸ்த கல்யாண குணங்களோடும், திவ்யமங்கள விக்ரஹத்தோடும் பரம

பதத்திலே நித்யரும் முக்தரும் தன்னையனுபவிக்க, அவர்களை அநுபவி(ப்பி?)த்துக்கொண்டு இருக்குமிருப்பு பராவஸ்தை.

48. வ்யூஹாவஸ்தையாவது—லீலாவிபூதியை நிர்வஹிக்கைக்காக ஷாட்குண்யங்களிலே இரண்டிரண்டு குணங்களை ப்ரகாசிப்பித்துக்கொண்டு ஸங்கர்ஷண ப்ரத்யும்நாதிரூபேண வந்து அவதரிக்கை.

49. இந்த வ்யூஹங்கள் தான் ஜகத்ருஷ்ட்யாதிகளுக்கும், திருவவதாரங்களுக்கும் அடியாயிருக்கும்.

50. விபவமாவது—திவ்யமங்களவிக்ரஹத்தை தேவதிர்யங்மநுஷ்ய ஸ்தாவர ஶரீரங்களோடே ஸஜாதீயமாக்கிக்கொண்டு தன் படிகள் ஒன்றையும் விடாதே அவ்வோ ஜாதிகளிலேவந்து அவதரிக்கை—ஸாக்ஷாத்விபவமாவது; சேதநர் பக்கல் ஸ்வரூபேண ஆவேசித்து அவதரிக்கை ஸ்வரூபாவேஶாவதாரம்; சில சேதநர் பக்கலிலே சக்தியினாலே கார்யகாலத்திலே ஆவேசித்து ரக்ஷிக்கை ஶக்த்யாவேஶாவதாரம்.

51. அர்ச்சாவதாரமாவது—ஆஶ்ரிதர் உகந்தது ஏதேனுமொரு த்ரவ்யத்தை அதிஷ்டித்து, அதிலே திவ்யமங்களவிக்ரஹத்திற் பண்ணும் ஆதரத்தைப் பண்ணிக்கொண்டு, ஆஶ்ரிதபராதீனனாய்க்கோயில்களிலும் க்ருஹங்களிலும் காலாவதியின்றிக்கே அவதரிக்கை.

52. உபாஸிப்பாருடைய ஹ்ருதயங்களிலே விக்ரஹஸஹிதனாய்க்கொண்டு அவர்களுக்கு சுபாச்ரயமாயிருப்பதொரு ப்ரகாரமுமுண்டு.

53. இப்படி சிதசிதீச்வரதத்வங்களும் ஸங்க்ரஹேண சொல்லப்பட்டது.

54. ஸகல சேதநாசேதநங்களையும் ஈச்வரன் ப்ரகாரமாக உடையனாய், தான் அவற்றுக்கு ப்ரகாரியாய், வேறு சேதனர்க்கு ப்ரகாரியில்லாமையாலே நம் தர்ஶனத்துக்குத் தத்வம் ஒன்றே என்னவுமாம்.

பரமகாருணிகரான பெரியவாச்சான்பிள்ளையருளிய
தத்வத்ரயஸங்க்ரஹம் முற்றிற்று.
பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்.

மாமுனிகளின் திருவாக்கில் (தத்வத்ரயவ்யாக்யானத்தில்) தத்வத்ரய ஸங்க்ரஹமும், தத்வத்ரய விவரணமும்

தத்வத்ரயஸங்க்ரஹம்

1. (அவதாரிகை)—"நடுவிற்றிருவீதிப்பிள்ளைபட்டர், ஆச்சான்பிள்ளை முதலான பூர்வாசார்யர்களுடைய ப்ரபந்த நிர்மாணத்துக்கும் கருத்து இதுவிறே"

2. (சித்-3) "நடுவிற்றிருவீதிப்பிள்ளைபட்டரும், ஆச்சான்பிள்ளையும், முதலான ஆசார்யர்கள் தத்வத்ரயமருளிச்செய்கிறவிடத்தில் அசிதுபக்ரமமாக அருளிச்செய்தார்கள்" *இந்த ஸ்ரீஸூக்தியிலிருந்து தத்வத்ரயஸங்க்ரஹம் ஆதிகாலத்தில் ஆச்சான்பிள்ளையருளிச்செய்த "தத்வத்ரயம்" என்றே வழங்கப்பட்டுள்ளதெனத் தெரிகிறது. பிள்ளைலோகாசார்யர் தத்வத்ரயத்தை வ்யாவர்த்திப்பதற்காக தத்வத்ரயஸங்க்ரஹமென்று பின்புள்ளார் வழங்கியிருக்கவேண்டும்.*

3. (அசித்-27) "ஸங்கோசேந உத்பத்திக்ரமத்தை அருளிச்செய்தாரித்தனை; பெரியவாச்சான்பிள்ளையும் இப்படியிறே அருளிச்செய்தது" *ஸங்க்ரஹம் 13–20 சூர்ணைகளில் ஆவரணக்ரமத்தை விவரிக்காமல் அருளியிருக்கும் ஸ்ரீஸூக்திகளையே இங்கு மாமுனிகள் குறிக்கிறாரென்பது தெளிவு. ஆச்சான்பிள்ளையென்று பலவிடங்களில் எடுக்கப்பட்டவர் பெரியவாச்சான்பிள்ளையே என்று தெளிவுபடுத்துகிறார் மாமுனிகள்.*

4. (ஈச்-9) "'எம்பெருமானுடைய திவ்யாத்மகுணங்களாவன—ஜ்ஞாந சக்த்யாதி ஷட்குணங்களும் அதிலே பிறந்த ஸௌசீல்யாதிகளும்' என்கிற இவ்வாக்யத்துக்கு அர்த்தமெழுதுகிறவளவில் 'அதிலே பிறக்கையாவது-வஸ்தூத்கர்ஷாபாதக ஷாட்குண்யாயத்தகுணபாவமாகை' என்றிறே விவரணத்தில் ஆச்சான்பிள்ளை அருளிச்செய்தது" *ஸங்க்ரஹம் 43-வது சூர்ணையே இங்கு எடுக்கப்பட்ட மூலவாக்யம். இதிலிருந்து ஸங்க்ரஹத்திற்கு வ்யாக்யானமாயமைந்தது விவரணம் என்று தெளிவாகிறது.*

5. (ஈச்-47) "'இவ்வண்டத்திலே பத்தாத்ம ஸமஷ்டி பூதனான ப்ரஹ்மா பிறக்கும்; இதுக்குக் கீழ் ஸ்வஸங்கல்பத்தாலே எம்பெருமான்றானே ஸ்ருஷ்டித்தருளும்; இதுக்குமேல் ப்ரஹ்மாவுக்கு அந்தர்யாமியாய் நின்று ஸ்ருஷ்டித்தருளும்' என்று ஆச்சான்பிள்ளை அருளிச்செய்கையாலும்" *ஸங்க்ரஹம் 23, 24 சூர்ணைகளை ஆச்சான்பிள்ளையருளியதாகக் குறிப்பிடுகையால், பெரியவாச்சான்பிள்ளையை மாமுனிகள் ஆச்சான்பிள்ளையென வழங்கினார் என்பதற்கு நிஸ்ஸந்திக்தப்ரமாணமிது.*

தத்வத்ரயவிவரணம்

1. (சித்-35) "என்று விவரணத்திலே ஆச்சான்பிள்ளையும்."

2. (அசித்-27) "இது தத்வத்ரயவிவரணத்தில் ஆச்சான்பிள்ளையருளிச்செய்த க்ரமம்"

3. (அசித்-48) "இதுவிறே தத்வத்ரயவிவரணத்தில் ஆச்சான்பிள்ளை ப்ராதாந்யேந அருளிச்செய்தது"

4. (ஈச்-9) "......என்றிறே விவரணத்தில் ஆச்சான்பிள்ளை அருளிச்செய்தது"

5. (ஈச்-40) "இப்படி விவரணத்திலே ஆச்சான்பிள்ளை அருளிச்செய்தாரிறே"

குறிப்பு:— *விவரணத்தையெடுக்கும்போது நியமேந* **'விவரணத்திலே ஆச்சான்பிள்ளை'** *என்று அருளுகையாலே, ஸங்க்ரஹ விவரண கர்த்ரைக்யம் தோற்றுகிறது.*

I.

ஸ்ரீ:

திருமந்த்ரார்த்தம் தொடங்கும்போது அநுஸந்திக்கும் தனியன்கள்

[''ஸ்ரீசைலேச'' விலிருந்து ''ப்ரணதோஸ்மி நித்யம்'' வரை பொதுத்தனியன்களை அநுஸந்தித்தபின் பின்வரும் தனியன்களை அநுஸந்திப்பது.]

மாமுனிகள் அருளிச்செய்த
ரஹஸ்யார்த்த ஸம்ப்ரதாய பரம்பரையின் ஒட்டுத்தனியன்.

लोकगुरुं गुरुभिस्सह पूर्वैः कूरकुलोत्तमदासमुदारम्।
श्रीनगपत्यभिरामवरेशौ दीप्रशयानगुरुञ्च भजेहम्॥

லோககுரும் குருபிஸ்ஸஹபூர்வை: கூரகுலோத்தமதாஸ
முதாரம்।
ஸ்ரீநகபத்யபிராமவரேசௌ தீப்ரசயாநகுருஞ்சபஜே஽ஹம்॥

பூர்வோக்த குருபரம்பரைக்கு ப்ரத்யேக தனியன்கள்.
பிள்ளைலோகாசார்யர் தனியன்.
(ஈயுண்ணி பத்மநாபர் அருளிச்செய்தது.)

लोकाचार्याय गुरवे कृष्णपादस्य सूनवे।
संसारभोगिसन्दष्टजीवजीवातवे नमः॥

லோகாசார்யாய குரவே க்ருஷ்ணபாதஸ்ய ஸூநவே।
ஸம்ஸாரபோகிஸந்தஷ்ட ஜீவஜீவாதவே நம:॥

திருவாய்மொழிப்பிள்ளை அருளிச்செய்த
கூரகுலோத்தமதாஸர் தனியன்.

लोकाचार्यकृपापात्रं कौण्डिन्यकुलभूषणम्।
समस्तात्मगुणावासं वन्दे कूरकुलोत्तमम्॥

லோகாசார்யக்ருபாபாத்ரம் கௌண்டிந்யகுலபூஷணம்।
ஸமஸ்தாத்மகுணாவாஸம் வந்தேகூரகுலோத்தமம்॥

மணவாளமாமுனிகள் அருளிச்செய்த
திருவாய்மொழிப்பிள்ளை தனியன்.

नमः श्रीशैलनाथाय कुन्तीनगरजन्मने।
प्रसादलब्धपरमप्राप्यकैङ्कर्यशालिने॥

நமஶ்ஸ்ரீசைலநாதாய குந்தீநகரஜந்மநே।
ப்ரஸாதலப்தபரம ப்ராப்ய கைங்கர்யசாலிநே॥

மணவாளமாமுனிகளுக்கு மாதாமஹரான
கோட்டூர் அழகியமணவாளப்பெருமாள்பிள்ளை தனியன்.

लोकाचार्यपदांभोजराजहंसायितान्तरम् ।
ज्ञानवैराग्यजलधिं वन्दे सौम्यवरं गुरुम् ॥

லோகாசார்ய பதாம்போஜ ராஜஹம்ஸாயிதாந்தரம் ।
ஜ்ஞாநவைராக்யஜலதிம் வந்தே ஸௌம்யவரம் குரும் ॥

மணவாளமாமுனிகள் அருளிச்செய்த
திகழக்கிடந்தான் திருநாவீறுடையபிரான் தாதரண்ணரையர் தனியன்.

श्रीजिह्वावदधीशदासममलमशेषशास्त्रविदम् ।
सुन्दरवरगुरुकरुणाकन्दलितज्ञानमन्दिरं कलये ॥

ஸ்ரீஜிஹ்வாவததீஶதாஸமமல மஶேஷஶாஸ்த்ரவிதம் ।
ஸுந்தரவரகுருகருணாகந்தளித ஜ்ஞாநமந்திரம் கலயே ॥

இதன்பிறகு ஸ்வாசார்யபரம்பரைத் தனியன்களை அநுஸந்திக்க வேண்டும்.

சாற்றும்போது அநுஸந்திக்கும் தனியன்கள்.
வாநமாமலைசீயர் அருளிச்செய்தது.

கோதிலுலகாசிரியன் கூரகுலோத்தமதாதர்
தீதில்திருமலையாழ்வார் செழுங்குரவைமணவாளர்
ஓதரியபுகழ்த்திருநாவீறுடையபிரான்தாதருடன்
போதமணவாளமுனிபொன்னடிகள் போற்றுவனே.

வாழியுலகாசிரியன் வாழியவன் மன்னுகுலம்
வாழி முடும்பையென்னுமாநகரம்—வாழி
மனஞ் சூழ்ந்த பேரின்பமல்குமிகுநல்லா
ரினஞ் சூழ்ந்திருக்குமிருப்பு.

ஓதுமுடும்பையுலகாசிரியனரு
ளேது மறவாத வெம்பெருமான்—நீதி
வழுவாச் சிறுநல்லூர் மாமறையோன் பாதந்
தொழுவார்க்கு வாராதுயர்.

இதன்பிறகு "நம:ஸ்ரீசைல" என்றுதொடங்கி ஸ்வாசார்ய பரம்பரைத் தனியன்களை முன்போல் அநுஸந்தித்து முடிக்கவேண்டும்.

பிள்ளைலோகாசார்யர் திருவடிகளே சரணம்.
சீயர் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

மணவாள மாமுனிகள் அருளிச்செய்த

முமுக்ஷுப்படி வ்யாக்யான அவதாரிகை

***

ஸ்ரிய:பதியாய், ஸ்ரீவைகுண்டநிகேதநனாய், நித்யமுக்தாநுபாவ்யனாய் நிரதிசயாநந்தயுக்தனாயிருக்கிற ஸர்வேச்வரன், அந்த நித்யஸூரிகளோபாதி தன்னை அநுபவித்து நித்யகைங்கர்யரஸராய் வாழுகைக்கு ப்ராப்தியுண்டாயிருக்கச்செய்தேயும் அத்தை இழந்து 1. **"असन्नेव" (அஸந்நேவ)** என்கிறபடியே அஸத்கல்பராய்க்கிடக்கிற ஸம்ஸாரிசேதநருடைய இழவை அநுஸந்தித்து, அத்யந்த வ்யாகுலசித்தனாய், இவர்கள் கரணகளேபரங்களை இழந்து இறகொடிந்த பக்ஷிபோலே கிடக்கிற தசையிலே கரணாதிகளைக் கொடுத்து, அவற்றைக்கொண்டு வ்யபிசரியாதே தன்னையாச்ரயித்து உஜ்ஜீவிக்கைக்கு உடலாக, அபௌருஷேயமாய் நித்யநிர்தோஷமாய் ஸ்வத:ப்ரமாணமான வேதத்தையும் ததுபப்ரும்ஹணங்களான ஸ்ம்ருதி இதிஹாஸ புராணாதிகளையும் ப்ரவர்த்திப்பித்தவிடத்திலும், அந்த சாஸ்த்ராப்யாஸத்துக்கு அநேகயோக்யதை வேண்டுகையாலே அவ்வழியாலே ஜ்ஞாநம் பிறந்து சேதநர் உஜ்ஜீவிக்கை அரிதாயிருக்கிறபடியைத் திருவுள்ளம்பற்றி ஸகல சாஸ்த்ர தாத்பர்யங்களையும் ஸூக்ரஹமாக இவர்கள் அறியலாம்படி பண்ணவேணுமென்று, ஸ்வரூபோபாய புருஷார்த்த யாதாத்ம்ய ப்ரதிபாதகமான ரஹஸ்யத்ரயத்தையும், ஸ்வயமேவ ஆசார்யனாய் நின்று ப்ரகாசிப்பித்தருளினான்.

அதில், திருமந்த்ரத்தை ஸ்ரீபதரிகாச்ரமத்திலே ஸ்வாம்சபூதனான நரன் விஷயமாக ப்ரகாசிப்பித்தான். த்வயத்தை ஸ்ரீவிஷ்ணுலோகத்திலே ஸ்வமஹிஷியான பிராட்டி விஷயமாக ப்ரகாசிப்பித்தான். சரமச்லோகத்தைத் திருத்தேர்த்தட்டிலே ஸ்வாச்ரிதனான அர்ஜுநன் விஷயமாக ப்ர

காஶிப்பித்தான். ஆகையாலிறே, 2.“**लक्ष्मीनाथसमारम्भां**”(**லக்ஷ்மீ நாத ஸமாரம்பாம்**) என்று குருபரம்பராதியிலே ஈச்வரனை அநுஸந்திக்கிறது.

இனி இந்த ரஹஸ்யத்ரயந்தான் சப்தம் ஸுக்ரஹமாயிருந்ததேயாகிலும் அர்த்தம் உபதேசகம்யமாகையாலும், அதறிந்தே எல்லார்க்கும் உஜ்ஜீவிக்க வேண்டுகையாலும், அந்த ரஹஸ்யத்ரயத்திலும் பூர்வாசார்யர்களுடைய உபதேச பரம்பரா ப்ராப்தமான அர்த்த விசேஷங்களை ஸர்வர்க்கும் ஸுக்ரஹமாகவும் ஸுவ்யக்தமாகவும் பிள்ளைலோகாசார்யர் தம்முடைய பரமக்ருபையாலே இப்ரபந்தமுகேந அருளிச் செய்கிறார். முன்பே ரஹஸ்யத்ரய விஷயமாக மூன்று ப்ரபந்தம் இட்டருளியிருக்கச்செய்தேயும், அதில் **யாத்ருச்சிகப்படி** அதிஸங்க்ரஹமாகையாலும், **பரந்தபடி** அதிவிஸ்த்ருதமாகையாலும், **ஸ்ரிய:பதிப்படி** உபயதோஷமுமின்றிக்கே இருந்ததேயாகிலும் ஸம்ஸ்க்ருத வாக்ய பஹுளமாகையாலே பெண்ணுக்கும் பேதைக்கும் அதிகரிக்கப் போகாமையாலும், த்ரிவிததோஷமுமில்லாதபடி இன்னமும் ஒரு ப்ரபந்தமிட வேணுமென்று திருவுள்ளம்பற்றி எல்லாவற்றுக்கும் பின் பிறே முமுக்ஷுப்படியாகிற இப்ரபந்தம் இட்டருளிற்று.

ஆகையிறே, அல்லாத ப்ரபந்தங்கள் கிடக்க, இத்தை எல்லாரும் அதிகரித்துப்போருகிறது. இன்னமும் பூர்வ ப்ரபந்தங்களில் அநுக்தமான அர்த்த விசேஷங்களும் இப்ரபந்தத்திலே உண்டாகையாலும், இதுவே எல்லார்க்கும் ஆதரணீயமாயிருக்கும்.

வ்யாக்யாந அவதாரிகை முற்றிற்று.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

பிள்ளைலோகாசார்யர் அருளிச்செய்த

முமுக்ஷுப்படி - திருமந்த்ரப்ரகரணம்

மூ. 1. முமுக்ஷுவுக்கு அறியவேண்டும் ரஹஸ்யம் மூன்று.

முமுக்ஷுப்படி வ்யாக்யானம்—திருமந்த்ரப்ரகரணம்

வ்யாக்யாநம்:—(*முமுக்ஷுவுக்கு அறியவேண்டும் ரஹஸ்யம் மூன்று.) முமுக்ஷுவாகிறான் மோக்ஷத்திலே இச்சையுடையனானவன்.* **“मुच्ऌ मोक्षणे” (முச்ல் மோக்ஷணே)** *யிறே தாது. இத்தால், ஸம்ஸார விமோசநத்தில் இச்சை பிறந்தவனுக்கு என்றபடி. ஆத்மப்ராப்தி காமனுக்கும் முமுக்ஷுத்வமுண்டேயாகிலும், இவ்விடத்தில் அவன் விவக்ஷிதனன்று. அவனுக்கு ரஹஸ்யத்ரயஜ்ஞாநாபேக்ஷை இல்லையிறே. ஆகையால், இவர் முமுக்ஷுவென்கிறது, பகவத்ப்ராப்தி காமதயா ஸம்ஸார நிவ்ருத்தியில் இச்சை பிறந்தவனை. ஏவம்பூதனானவனுக்கு ‘அறியவேண்டும் ரஹஸ்யம் மூன்று’ என்றது இவனுக்கு அவச்யம் ஜ்ஞாதவ்யமாயுள்ளது ஸ்வரூப உபாய புருஷார்த்தங்களாகையாலும், அவற்றை இந்த ரஹஸ்ய த்ரயம் உள்ளபடி ப்ரதிபாதிக்கையாலும், ரஹஸ்யத்ரயமுமே அறியவேண்டுவதென்கை.* 3. **“स्वज्ञानं प्रापकज्ञानं प्राप्यज्ञानं मुमुक्षुभिः। ज्ञानत्रयमुपादेयमेतदन्यन्न किञ्चन॥”** (**ஸ்வஜ்ஞாநம் ப்ராபக ஜ்ஞாநம் ப்ராப்யஜ்ஞாநம் முமுக்ஷுபி:। ஜ்ஞாநத்ரயமுபாதேயம் ஏததந்யந்ந கிஞ்சந॥**) *என்னக்கடவதிறே. ‘ரஹஸ்யம் மூன்று’ என்று இவர் உத்தேசிக்கிறது-திருமந்த்ரமும் த்வயமும் சரமச்லோகமுமாகிற இவற்றை என்னுமிடம், மேலே ஸுஸ்பஷ்டம். இவற்றை ரஹஸ்யங்களென்கிறது, ஸகல வேதாந்த ஸாரார்த்த ப்ரதிபாதகதயா பரமகுஹ்யங்களாகையாலே. ஆக, இவ்வாக்யத்தால், அதிகாரி நிர்த்தேசமும் தஜ்ஜ்ஞாதவ்ய நிர்த்தேசமும் பண்ணியருளினாராய்த்து.*

இனி, அந்த ரஹஸ்யத்ரயத்திலும் ப்ரதமரஹஸ்யம் ஏது என்னும் ஆகாங்க்ஷையிலே அருளிச்செய்கிறார்; 'அதில் ப்ரதம ரஹஸ்யம் திருமந்த்ரம்' என்று;

மூ. 2. அதில் ப்ரதம ரஹஸ்யம்—திருமந்த்ரம்.

வ்யா:—அதாவது-அந்த ரஹஸ்யத்ரயத்திலும் வைத்துக் கொண்டு, இவ்வதிகாரிக்கு ப்ரதமம் ஜ்ஞாதவ்யமான ரஹஸ்யம் ஸ்வரூபயாதாத்ம்யபரமாய் த்யாஜ்யோபாதேய விபாகஜ்ஞாநத்தைப் பரிபூர்ணமாகப் பிறப்பிக்குமதான திருமந்த்ரமென்கை. அநந்யார்ஹசேஷத்வம் அநந்யசரணத்வம் அநந்ய போக்யத்வமாகிற ஆகாரத்ரயத்தையும் ப்ரதிபாதிக்கையாலே சேதநஸ்வரூப யாதாத்ம்ய ப்ரதிபாதநபரமாய், ததநுகுணமான த்யாஜ்ய உபாதேய விபாகத்தையும் ஸுஸ்பஷ்டமாக ப்ரதிபாதியாநின்றுள்ள இம்மந்த்ரத்தாலே ஸுசிக்ஷிதமான ஸ்வரூபத்தை உடையவனுக்கிறே, மற்றை ரஹஸ்யங்களிரண்டாலும் ப்ரதிபாதிக்கப்படுகிற உபாயோபேயங்களில் அபேக்ஷை ஜநிப்பது. ஆகையால், ஸ்வரூபயாதாத்ம்யபரமான திருமந்த்ரம், ப்ரதம ரஹஸ்யமென்னக் குறையில்லை. இன்னமும், ப்ரணவத்துக்கு மந்த்ரசேஷம் விவரணமானாற் போலே மந்த்ரசேஷத்துக்கு த்வயம் விவரணமாய், த்வயத்துக்குச் சரமச்லோகம் விவரணமாயிறே இருப்பது. அந்த ந்யாயத்தாலும், இதினுடைய ப்ராதம்யம் ஸித்தமிறே. ஆக, இவை எல்லாவற்றையும் திருவுள்ளம் பற்றியாய்த்து 'ப்ரதம ரஹஸ்யம் திருமந்த்ரம்' என்று இவர் அருளிச் செய்தது. இத்தை மந்த்ரமென்கிறது 4. **"मन्तारं त्रायत इति मन्त्रः"** **(மந்தாரம் த்ராயத இதி மந்த்ர:)** என்கிறபடியே சப்த சக்தியாலும் அர்த்த போதநத்தாலும் தன்னை அநுஸந்திப்பார்க்கு ரக்ஷகமாகையாலே. சப்தசக்தியாலே ரக்ஷகமாம், ஜபஹோமாதிகளாலே கார்யங்கொள்ளும் உபாஸகர்க்கு. அர்த்த போதநத்தாலே ரக்ஷகமாம் ஈச்வரனே உபாயோபேயமென்றிருக்கும் ப்ரபந்நர்க்கு. அர்த்தபோதநத்தாலே

ரக்ஷகமாகையாவது, 5. **"देहासक्तात्मबुद्धिर्यदि भवति पदं साधु विद्यात्तृतीयं स्वातन्त्र्यान्धो यदि स्यात्प्रथममितरशेषत्वधीश्चेद्द्वितीयम्। आत्मत्राणोन्मुखश्चेन्नम इति च पदं बान्धवाभासलोलः शब्दं नारायणाख्यं विषयचपलधीश्चेत् चतुर्थीं प्रपन्नः॥"** (தேஹாஸக்தாத்மபுத்திர் யதி பவதி பதம் ஸாது வித்யாத் த்ருதீயம் ஸ்வாதந்த்ர்யாந்தோ யதி ஸ்யாத் ப்ரதமம் இதரசேஷத்வதீச்சேத் த்விதீயம் ஆத்மத்ராணோந்முகச்சேந்நம இதி ச பதம் பாந்தவாபாஸலோலச் சப்தம் நாராயணாக்யம் விஷய சபலதீச்சேச் சதுர்த்தீம் பரபந்ந:) *என்று பட்டர் அருளிச்செய்தபடியே தன்னை அநுஸந்திப்பார்க்கு தேஹாத்மாபிமாநமும், ஸ்வாதந்த்ரியமும், அந்யசேஷத்வமும், ஸ்வரக்ஷணே ஸ்வாந்வயமும், அபந்துஸங்கமும், விஷயப்ராவண்யமும் மேலிடாதபடிபண்ணி ஸ்வரூபாநுரூபமாக நடக்கும்படி நோக்குகை.*

இனிமேல் இம்மந்த்ரத்தினுடைய வைபவத்தை விஸ்தரேண ப்ரதிபாதிப்பதாகத் திருவுள்ளம்பற்றி, ப்ரதமம் இதனுடைய அநுஸந்தாந க்ரமகதநமுகத்தாலே இதன் வைபவத்தை அருளிச்செய்கிறார். 'திருமந்த்ரத்தினுடைய' என்று தொடங்கி.

மூ. 3. திருமந்த்ரத்தினுடைய சீர்மைக்குப் போரும்படி ப்ரேமத்தோடே பேணி அநுஸந்திக்கவேணும்.

வ்யா:-*திருமந்த்ரத்துக்குச் சீர்மையாவது,* 6. **"ऋचो यजूंषि सामानि तथैवाथर्वणानि च। सर्वमष्टाक्षरान्तस्थम्"** (ருசோ யஜூம்ஷி ஸாமாநி ததைவாதர்வணாநிச-ஸர்வமஷ்டாக்ஷராந்தஸ்தம்)*என்கிறபடியே ஸகலவேத ஸங்க்ரஹமாய், ‡"மற்றெல்லாம் பேசிலும்" என்கிறபடியே ஜ்ஞாதவ்ய ஸகலார்த்த ப்ரதிபாதகமாய்* 7"**मन्त्राणां परमो मन्त्रो गुह्यानां गुह्यमुत्तमम्। पवित्रं च पवित्राणां मूलमन्त्रस्सनातनः॥** (மந்த்ராணாம் பரமோ மந்த்ரோ குஹ்யாநாம் குஹ்யமுத்தமம் பவித்ரம் ச பவித்ராணாம் மூலமந்த்ரஸ்ஸநாதந:)*என்கிற*

---

‡ *பெரிய-திரு 8-10-3.*

படியே மந்த்ரங்களில் வைத்துக்கொண்டு பரமமான மந்த்ரமாய், குஹ்யங்களில் வைத்துக்கொண்டு உத்தமமான குஹ்யமாய், பவித்ரங்களுக்கும் பவித்ரமாயிருக்கிற கௌரவம். (சீர்மைக்குப் போரும்படி) என்றது, தகும்படியென்கை. (ப்ரேமத்தோடே பேணி அநுஸந்திக்கை) யாவது, இத்தை அநுஸந்திக்குமளவில் சுஷ்கஹ்ருதயனாயிருந்தநுஸந்திக்கையன்றிக்கே, இதின் வைலக்ஷண்ய ஜ்ஞாநமடியாக இதின் பக்கல் தனக்குண்டான ப்ரேமத்தோடே, குஹ்யாநாம் குஹ்யமானவிது அநதிகாரிகள் செவிப்படாதபடி 9. **"मन्त्रं यत्नेन गोपयेत्"** **(மந்த்ரம் யத்நேந கோபயேத்)** என்கிறபடியே பேணிக்கொண்டநுஸந்திக்கை. இப்படி அநுஸந்திக்கவேணுமென்கையாலே ப்ரகாராந்தரேண அநுஸந்திக்கலாகாதென்கிற நியமம் தோற்றுகிறது.

இப்படி, தன்பக்கல் ப்ரேமமுண்டாகவே இம்மந்த்ரம் இவனுக்குக் கார்யகரமாமோ வென்ன வருளிச்செய்கிறார், 'மந்த்ரத்திலும்' என்று தொடங்கி.

மூ. 4. மந்த்ரத்திலும் மந்த்ரத்துக்கு உள்ளீடான வஸ்துவிலும் மந்த்ரப்ரதனான ஆசார்யன்பக்கலிலும் ப்ரேமம் கனக்க உண்டானால் கார்யகரமாவது.

வ்யா:— அதாவது-ஜ்ஞாதவ்யார்த்தஜ்ஞாபகமான இம்மந்த்ரந்தன்னிலும், சேஷித்வ சரண்யத்வ ப்ராப்யத்வங்களாகிற ஆகாரத்ரயயுக்ததயா இம்மந்த்ரத்துக்கு வாச்யவஸ்துவாயிருக்கிற ஈச்வரவிஷயத்திலும் 9. **"तन्मन्त्रं ब्राह्मणाधीनम्"** **(தந் மந்த்ரம் ப்ராஹ்மணாதீநம்)** என்கிறபடியே இம்மந்த்ரம் ஆசார்யாதீநமாயிருப்பதொன்றாகையாலே இத்தை யதாப்ரதிபத்தியுக்தனாய்க்கொண்டு, தனக்கு உபகரித்த ஆசார்யவிஷயத்திலும் தத்தத்வைலக்ஷண்யாநுரூபமாக ப்ரேமம் அதிசயேந உண்டானால், இம்மந்த்ரம் இவனுக்குக் கார்யகரமாவதென்கை. 10. **मन्त्रे तद्देवतायाञ्च तथा मन्त्रप्रदे गुरौ। त्रिषु भक्तिस्सदा**

कार्या सा हि प्रथमसाधनम्॥ (மந்த்ரே தத்தேவதாயாஞ்ச ததா மந்த்ரப்ரதே குரௌ। த்ரிஷு பக்திஸ் ஸதா கார்யா ஸா ஹி ப்ரதம ஸாதநம்) *என்னக்கடவதிறே.*

இனி இம்மந்த்ரத்தினுடைய அவதரணப்ரகாரகதந முகத்தாலே இதினுடைய அப்ரதிமவைபவத்தை அருளிச் செய்கிறார், 'ஸம்ஸாரிகள்' என்று தொடங்கி.

மூ. 5. ஸம்ஸாரிகள் தங்களையும் ஈச்வரனையும் மறந்து, ஈச்வர கைங்கர்யத்தையும் இழந்து, இழந்தோமென்கிற இழவுமின்றிக்கே ஸம்ஸாரமாகிற பெருங்கடலிலே விழுந்து நோவுபட, ஸர்வேச்வரன் தன் க்ருபையாலே இவர்கள் தன்னையறிந்து கரைமரஞ்சேரும்படி, தானே சிஷ்யனுமாய், ஆசார்யனுமாய் நின்று திருமந்த்ரத்தை வெளியிட்டருளினான்.

வ்யா:–*ஸம்ஸாரிகளாகிறார் அநாத்யசித்ஸம்பந்தத்தாலே ப்ரவாஹரூபேண வருகிற அவித்யாகர்மவாஸநாருசிவிவசராய் ஜந்மமரணாதி க்லேசபாகிகளாய்த்திரிகிற பத்தசேதனர். 'தங்களையும் ஈச்வரனையும் மறந்து' என்றது 11.* **"दासभूताः स्वतः सर्वे ह्यात्मानः परमात्मनः। नान्यथा लक्षणं तेषां बन्धे मोक्षे तथैव च॥"** (தாஸபூதா: ஸ்வதஸ்ஸர்வே ஹ்யாத்மாந: பரமாத்மந:। நாந்யதா லக்ஷணம் தேஷாம் பந்தே மோக்ஷே ததைவ ச॥) *என்கிறபடியே ஸ்வதஸ்ஸித்தமான பகவச்சேஷத்வத்தை லக்ஷணமாகவுடையராயிருக்கிற தங்களையும்12.* **"पतिं विश्वस्य"** *(பதிம்விச்வஸ்ய) 13.* **"स्वामित्वं ब्रह्मणि स्थितं"** **(ஸ்வாமித்வம் ப்ரஹ்மணி ஸ்த்திதம்)** *இத்யாதிகளிற் சொல்லுகிறபடியே தங்களுக்கு நிருபாதிகசேஷியாயிருக்கிற ஈச்வரனையும் அறியாதேயென்கை. ஆனால், 'அறியாமலென்னாதே மறந்தென்பான் என்? முன் ஒருகால் நினைத்துப் பின்பு அந்நினைவுக்கு ப்ரச்யுதி வந்தவிடத்திலிறே மறந்து என்னலா

வது' என்னில்: "மறந்தேனுன்னை முன்னம்" என்கிறபடியே ஸ்வதஸ்ஸித்தமான ஸம்பந்தத்தையுணர்ந்தால் முன்பு நினைத்திருந்த அர்த்தத்தை மறந்தாற்போலே இருக்கும் ஸம்பந்தத்தில் உறைப்பை நினைத்து அருளிச்செய்தாராமித்தனை. 'ஈச்வர கைங்கர்யத்தையும் இழந்து' என்றது- கீழ்ச் சொன்ன அஜ்ஞாநத்தாலே வகுத்த சேஷியான ஈச்வர விஷயத்தில் கைங்கர்யமாகிற பரமபுருஷார்த்தத்தையும் ப்ராபிக்கப்பெறாதேயென்கை. புருஷார்த்தத்தினுடைய கௌரவத்தையும், அதுக்கிட்டுப் பிறந்துவைத்துக் கிட்டப் பெறாமல் கிடந்தபடியையும் நினைத்து, 'இழந்து' என்கிறார். 'இழந்தோமென்கிற இழவுமின்றிக்கே' என்றது ஸ்வ ஸ்வரூபபரஸ்வரூப ஜ்ஞானமும் புருஷார்த்த ஜ்ஞாநமும் இல்லாமையாலே. ஸ்வசேஷத்வாநுரூபமான சேஷிவிஷய கைங்கர்யரூப புருஷார்த்தத்தை இழந்தோமென்கிற அலாப க்லேசந்தானுமின்றிக்கே என்கை. (ஸம்ஸாரமாகிற பெருங் கடலிலே விழுந்து நோவுபட) என்றது 14. "**संसारसागरं घोरमनन्त क्लेशभाजनम्**" (**ஸம்ஸாரஸாகரம் கோரம் அநந்தக்லேச பாஜநம்**) என்கிறபடியே அநந்தக்லேசபாஜநமாய், ஒருவராலும் ஸ்வயத்நத்தால் கரைகாண அரிதாம்படியிருக்கிற ஸம்ஸாரமாகிற மஹாஸமுத்ரத்துக்குள்ளே விழுந்து தாபத்ரயாபிபூதராய்க்கொண்டு க்லேசப்படவென்கை. இத்தால், தங்களையும் ஈச்வரனையும் அறியாமையாலும், புருஷார்த்தத்தை அறியாமையாலும், ஸம்ஸார ஸமுத்ரத்துக்குள்ளே கிடந்து நோவுபடாநிற்க விரோதியான ஸம்ஸாரந்தன்னையும் தந் நிஸ்தரணோபாயத்தையும் அறியாமையாலும், ஜ்ஞாதவ்யமான அர்த்தபஞ்சகத்திலும் ஒன்றையும் அறியாமற் கிடந்தார்களென்கை. 15. "**प्राप्यस्य ब्रह्मणो रूपं**" (**ப்ராப்யஸ்ய ப்ரஹ்மணோ ரூபம்**) இத்யாதிப்படியே ஸகலசாஸ்த்ரங்களும் ப்ரதிபாதிப்பது அர்த்தபஞ்சகத்தையுமிறே. இவ்வர்த்தங்களை இவர்களுக்கு ஸுக்ரஹமான அறிவிக்கைக்காக, ஸகலசாஸ்த்ர ஸங்க்ரஹமான திருமந்த்ரத்தை ஸர்வேச்வரன் வெளியிட்ட ப்ரகாரத்தைச்சொல்லுகிறது மேல். ஸர்வேச்வரன் தன்

க்ருபையாலே என்றது 16. **"ईशेशितव्यसंबन्धादनिदंप्रथमादपि"** (**ஈசேஶிதவ்யஸம்பந்தாத் அநிதம்ப்ரதமாதபி**) என்கிறபடியே அநாதியாக ஸர்வரோடுமுண்டான ஈசேஶிதவ்ய ஸம்பந்தத்தையுடையனான எம்பெருமான், 17. **"एवं संसृतिचक्रस्थे भ्राम्यमाणे स्वकर्मभिः। जीवे दुःखाकुले विष्णोः कृपा काप्युपजायते॥"** (**ஏவம் ஸம்ஸ்ருதிசக்ரஸ்தே ப்ராம்யமாணே ஸ்வகர்மபி:— ஜீவே து:காகுலே விஷ்ணோ: க்ருபா காப்யுபஜாயதே**) என்கிறபடியே இவர்கள்படுகிற து:க்கதர்சநமாத்ரத்தாலுண்டான தன்னுடைய நிர்ஹேதுகக்ருபையாலேயென்கை. 'இவர்கள் தன்னையறிந்து கரைமரம்சேரும்படி' என்றது இப்படி ஸம்ஸாரஸாகரத்திலே கிடந்து நோவுபடுகிற இவர்கள் 18. **"त्वामेव शरणं प्राप्य निस्तरन्ति मनीषिणः"** (**த்வாமேவ சரணம் ப்ராப்ய நிஸ்தரந்தி மநீஷிண:**) என்றும், 19. **"संसारार्णवमग्नानां विषयाक्रान्तचेतसां। विष्णुपोतं विना नान्यत् किंचिदस्ति परायणम्॥"** (**ஸம்ஸாரார்ணவமக்நாநாம் விஷயாக்ராந்தசேதஸாம் விஷ்ணு போதம் விநா நாந்யத் கிஞ்சிதஸ்தி பராயணம்**) என்றும் சொல்லுகிறபடியே ஸம்ஸார நிஸ்தரணோபாயபூதனை தன்னை யறிந்து ஸம்ஸாரஸாகரத்தைக் கடந்து அக்கரைப் படும்படி யென்கை. 'தானே ஶிஷ்யனுமாய் ஆசார்யனுமாய் நின்று' என்றது- /"நரநாரணனாயுலகத்தறநூல் சிங்காமைவிரித்தவன்" என்கிறபடியே நரநாராயணரூபேண அவதரித்து நரனானதான் ஶிஷ்யனுமாய், நாராயணனான தான் ஆசார்யனுமாய் நின்று என்கை. 'திருமந்த்ரத்தை வெளியிட்டருளினான்' என்றது ஸகலசாஸ்த்ர ஸங்க்ரஹமாய் அந்த சாஸ்த்ர தாத்பர்யமான அர்த்தபஞ்சகத்தையும் ஸுஸ்பஷ்டமாக ப்ரதிபாதியாநிற்கும் திருமந்த்ரத்தை ப்ரகாசிப்பித்தருளினானென்கை. அருளிச்செய்தானென்னாதே வெளியிட்டருளினானென்றது இப்போது, தான் ஒன்றை நிர்மித்துச் சொன்னானல்லன், அநாதியானத்தை ப்ரகாசிப்பித்தானித்தனை என்னுமிடமும், அதிகுஹ்யமாயுள்ளத்தை

/பெரியதிரு 10-6-1.

இவர்கள் துர்க்கதிகண்டு ஸஹிக்கமாட்டாமையாலே ப்ரகாசிப்பித்தானென்னுமிடமும் தோற்றுகைக்காக.

ஆனால், ஆசார்யனாய்நின்று வெளியிட்டருளிவிட அமையாதோ? சிஷ்யனாய் நின்றது எதுக்காக? என்ன அருளிச்செய்கிறார், 'சிஷ்யனாய்' என்று தொடங்கி.

மூ. 6. சிஷ்யனாய் நின்றது சிஷ்யனிருக்குமிருப்பு நாட்டாரறியாமையாலே அத்தை அறிவிக்கைக்காக.

வ்யா:—*அதாவது-ஆசார்யனாய் நின்று வெளியிட்டருளின அளவன்றிக்கே, தானே சிஷ்யனுமாய்க்கொண்டு நின்றது,* *20.* **"आस्तिको धर्मशीलश्च शीलवान् वैष्णवः शुचिः। गम्भीरश्चतुरो धीरः शिष्य इत्यभिधीयते॥"** (ஆஸ்திகோ தர்மசீலச்ச சீலவாந் வைஷ்ணவச்சுசி: கம்பீரச்சதுரோ தீரச் சிஷ்ய இத்யபிதீயதே) *21.* **"शरीरं वसु विज्ञानं वासः कर्म गुणानसून्। गुर्वर्थं धारयेद्यस्तु स शिष्यो नेतरः स्मृतः॥"** (சரீரம் வஸு விஜ்ஞாநம் வாஸ: கர்ம குணாநஸூந் குர்வர்த்தம் தாரயேத் யஸ்து ஸ சிஷ்யோ நேதர: ஸ்ம்ருத:) *22.* **"सद्बुद्धिः साधुसेवी समुचितचरितस्तत्त्वबोधाभिलाषी शुश्रूषुस्त्यक्तमानः प्रणिपदनपरः प्रश्नकाल-प्रतीक्षः। शान्तो दान्तोऽनसूयुः शरणमुपगतः शास्त्रविश्वासशाली शिष्यः प्राप्तः परीक्षां कृतविदभिमतस्तत्त्वतः शिक्षणीयः॥"** (ஸத்புத்திஸ்ஸாதுஸேவீ ஸமுசிதசரிதஸ்தத்வபோதாபிலாஷீ சுச்ரூஷுஸ்த்யக்தமாந: ப்ரணிபதநபர: ப்ரச்நகாலப்ரதீக்ஷ:। சாந்தோ தாந்தோநஸூயுச் சரணமுபகதச்சாஸ்த்ரவிச்வாஸசாலீ சிஷ்ய: ப்ராப்த: பரீக்ஷாம் க்ருதவிதபிமதஸ்தத்வதச்சிக்ஷணீய:॥) *இத்யாதிகளிற் சொல்லுகிறபடிகளும் ஸாத்யாந்தர நிவ்ருத்தியும் பலஸாதந சுச்ரூஷையும், ஆர்த்தியும், ஆதரமும், அநஸூயையும் உடையனாயிருக்கையுமாகிற சிஷ்யலக்ஷணம் லோகத்திலுள்ளார் அறியாமையாலே அத்தை ஸ்வாநுஷ்டாநத்தாலே அறிவிக்கைக்காகவென்கை. உபதேசத்தாலே அறிவிக்குமளவில் ஸ்வோத்கர்ஷம் தேடிக்கொள்ளவந்தானித்தனை யென்று நினைக்கவுங் கூடும்; அநுஷ்டாநத்தாலே அறிவிக்குமளவில் நமக்கும் இது*

வேணுமென்று விச்வஸித்துப் பரிக்ரஹிக்கைக்கு உடலாயிருக்குமிறே.

"இப்படி சிஷ்யனுய்நின்று இம்மந்த்ரசிக்ஷபண்ணி இவ்வழியாலே ஜ்ஞாநம்பிறக்கவேணுமோ? †"ஞானக்கலைகள்" என்கிறபடியே ஸகலசாஸ்த்ரங்களும் ஜ்ஞாநஸாதநமாயன்றோ இருப்பது: அவற்றை அப்யஸித்து அவ்வழியாலே ஜ்ஞாநம் பிறந்தாலோ?" என்ன, சாஸ்த்ரஜந்யஜ்ஞாநத்துக்கும் இம்மந்த்ரஜந்யஜ்ஞாநத்துக்கும் உண்டான விசேஷத்தை ஸத்ருஷ்டாந்தமாக அருளிச்செய்கிறார் 'ஸகலசாஸ்த்ரங்களாலும்' என்று தொடங்கி.

மூ. 7. ஸகல சாஸ்த்ரங்களாலும் பிறக்கும் ஜ்ஞாநம் ஸ்வயமார்ஜிதம்போலே; திருமந்த்ரத்தால் பிறக்கும் ஜ்ஞாநம் பைத்ருகதநம்போலே.

வ்யா:— *அதாவது-தத்வஜ்ஞாந ஜநகங்களான ச்ருதி ஸ்ம்ருத்யாதி ஸகலசாஸ்த்ரங்களாலும் சேதநருக்குப்பிறக்கும் ஜ்ஞாநம் ஸ்வயம் ஆர்ஜிததநம்போலே அத்யாயாஸலப்யமாயிருக்கும். ஆசார்யோபதேசம் அடியாகத் திருமந்த்ரத்தால் பிறக்கும் ஜ்ஞாநம், பைதருகதநம்போலே அநாயாஸலப்யமாயிருக்குமென்கை. 23.* **"शास्त्रज्ञानं बहुक्लेशं बुद्धेश्चलनकारणं। उपदेशाद्धरिं बुद्ध्वा विरमेत्सर्वकर्मसु॥ (சாஸ்த்ர ஜ்ஞாநம் பஹுக்லேசம் புத்தேச் சலந காரணம்। உபதேசாத் ஹரிம் புத்வா விரமேத் ஸர்வ கர்மஸு॥)** *என்னக்கடவதிறே. இத்தால், சாஸ்த்ரங்களிற்காட்டில் தத்ஸங்க்ரஹமான திருமந்த்ரத்துக்கு உண்டான வைபவம் சொல்லிற்றாயிற்று.*

ஆனால், சாஸ்த்ரங்களொழிந்ததாகிறது; பகவந் மந்த்ரந்தான் இதொன்றுமன்றே; பின்னேயும் பலவில்லையோ? என்கிற சங்கையிலே, மந்த்ராந்தரங்களிற்காட்டில் இதுக்கு உண்டான வைபவத்தை அருளிச்செய்வதாகத் திருவுள்ளம் பற்றி, 'பகவந் மந்த்ரங்கள் தான் அநேகங்கள்' என்கிறார்.

† *திருவாய் 1-9-8.*

மூ. 8. பகவந் மந்த்ரங்கள் தான் அநேகங்கள்.

வ்யா:-*24.* **“आस्तान्ते गुणराशिवद्गुणपरीवाहात्मनां जन्मनां सङ्ख्या”** **(ஆஸ்தாந்தே குணராசிவத்குணபரீவாஹாத்மநாம் ஜந்மநாம் ஸங்க்யா)** *25.* **“बहवो नृप कल्याणगुणाः पुत्रस्य सन्ति ते”** **(பஹவோ ந்ருப கல்யாணகுணா: புத்ரஸ்ய ஸந்திதே)** *26.* **“तवानन्तगुणस्यापि षडेव प्रथमे गुणाः”** **(தவாநந்தகுணஸ்யாபி ஷடேவ ப்ரதமே குணா:)** *27.* **“बहूनि मे व्यतीतानि जन्मानि तव चार्जुन”** **(பஹூநி மே வ்யதீதாநி ஜந்மாநி தவ சார்ஜுந)** *என்றும் *“எண்ணில் தொல்புகழ்” என்றும், †“எங்கின்ற யோனியுமாய்ப்பிறந்தாய்” என்றும் இத்யாதிகளிற் சொல்லுகிறபடியே பகவத்குணங்களும் குணபரீவாஹரூபங்களான அவதாரங்களும் அஸங்க்யாதமாயிருக்குமாபோலே அவற்றை அநுபந்தித்திருக்கும் மந்த்ர விசேஷங்களும்* *28.* **“अनन्ता वै भगवन्मन्त्राः”** **(அநந்தா வை பகவந்மந்த்ரா:)** *என்கிறபடியே அநேகங்களாயிருக்குமென்கை.*

‘அவையெல்லாந்தான் ஏகவர்க்கமோ?’ என்ன, ‘அவைதான் வ்யாபகங்களென்றும் அவ்யாபகங்களென்றும் இரண்டு வர்க்கம்’ என்கிறார்;

மூ. 9. அவைதான், வ்யாபகங்களென்றும் அவ்யாபகங்களென்றும் இரண்டுவர்க்கம்.

வ்யா:-*அதாவது-ஸர்வவ்யாபகமான பகவத்ஸ்வரூபத்தை ப்ரதிபாதிக்கையாலே வ்யாபகங்களென்றும், பகவதவதாரகுண சேஷ்டிதங்களில் ஒரொன்றை ப்ரதிபாதிக்கையாலே அவ்யாபகங்களென்றும் உபயவர்க்கமாயிருக்குமென்கை.*

‘வர்க்கத்வயமும் தன்னிலொக்குமோ?’ என்ன, ‘அவ்யாபகங்களில் வ்யாபகங்கள் மூன்றும் ச்ரேஷ்டங்கள்’ என்கிறார்.

---

* திருவாய் 3-3-3. † திருவிருத்தம்-1.

மூ. 10. அவ்யாபகங்களில் வ்யாபகங்கள் மூன்றும் ச்ரேஷ்டங்கள்.

வ்யா:—*அதாவது-அவ்யாபகங்களாய் இருந்துள்ள ஸகல மந்த்ரங்களிலும் 29.* **"नारायणाय विद्महे वासुदेवाय धीमहि तन्नो विष्णुः प्रचोदयात्"** (நாராயணாய வித்மஹே வாஸுதேவாய **தீமஹி, தந்நோ விஷ்ணு:** ப்ரசோதயாத்) *என்று விஷ்ணு காயத்ரியில் ஓதப்படுகிற வ்யாபகமந்த்ரங்கள் மூன்றும் ச்ரேஷ்டங்களாயிருக்குமென்கை.*

இந்த விஷ்ணுகாயத்ரியிலே நாராயண வாஸுதேவ விஷ்ணு சப்தங்கள் அந்த மந்த்ரத்ரயத்துக்கும் ப்ரதாநபூத நாமத்ரயங்களாகையாலே, ஸாதாரணப்ரணவ நமஸ்ஸுக் களோடேகூடின மந்த்ரத்ரயத்துக்கும் உபலக்ஷணமாகக் கடவது.

'இந்தவ்யாபகமந்த்ரத்ரயமும் தன்னிலொக்குமோ' என்ன, 'இவை மூன்றிலும் வைத்துக்கொண்டு பெரிய திருமந்த்ரம் ப்ரதாநம்' என்கிறார்.

மூ. 11. இவை மூன்றிலும் வைத்துக்கொண்டு பெரிய திருமந்த்ரம் ப்ரதாநம்.

வ்யா:—*அதாவது- அவ்யாபகங்களிற்காட்டில் ச்ரேஷ்டமாயிருந்துள்ள இந்த வ்யாபகமந்த்ரங்கள் மூன்றிலும் வைத்துக்கொண்டு 29.* **"नारायणाय विद्महे"** (நாராயணாய வித்மஹே) *என்று ப்ரதமோபாத்தமாகையாலும், அர்த்த பூர்த்யாதிகளாலும், 30.* **"नास्ति चाष्टाक्षरात्परः"** (நாஸ்தி சாஷ்டாக்ஷராத்பர:) *31.* **"न मन्त्रोऽष्टाक्षरात्परः"** (ந மந்த்ரோஷ்டாக்ஷராத் பர:) *என்னும்படியான பெருமையையுடைய திருமந்த்ரம் ப்ரதாநமாயிருக்குமென்கை.*

'மற்றை வ்யாபகத்வயத்துக்கும் தாழ்வு ஏது?' என்ன 'மற்றையவையிரண்டுக்கும் அசிஷ்டபரிக்ரஹமும் அபூர்த்தியும் உண்டு' என்கிறார்.

மூ. 12. மற்றையவை இரண்டுக்கும் அசிஷ்டபரிக்ரஹமும் அபூர்த்தியும் உண்டு.

வ்யா:— *அதாவது- வாஸுதேவவிஷ்ணுசப்தங்களான மற்றை வ்யாபகமந்த்ரங்களிரண்டுக்கும், நாராயணசப்தம் போலே ஸ்வரூபரூபகுணாதிகளையெல்லாம் ப்ரதிபாதியாதே ஸ்வரூபமாத்ரத்தை ப்ரதிபாதிக்கையாலே, நிர்விசேஷசிந்மாத்ரவஸ்துவாதிகளான குத்ருஷ்டிகள், மிகவும் ஆதரித்துப்போருகையாகிற அசிஷ்டபரிக்ரஹமும், வ்யாப்யாத்யாஹாராதிஸாபேக்ஷதையாகிற அபூர்த்தியும் உண்டென்கை. "ஷடக்ஷரி-வ்யாப்யபதார்த்தங்களையும், வ்யாபநப்ரகாரத்தையும் வ்யாப்திபலத்தையும் வ்யாபகனுடைய குணங்களையும் சொல்லாதே வ்யாப்திமாத்ர ப்ரகாசகமாகையாலே அபூர்ணம். வ்யாபநப்ரகாரத்தைச் சொல்லாநிற்கச்செய்தேயும், வ்யாப்யபதார்த்தங்களுக்கு வாசகசப்தம் இல்லாமையாலும்* 'सर्वं वसति' **(ஸர்வம் வஸதி)** *என்று அர்த்தபலத்தாலே ஸர்வசப்தம் புகுந்தாலும் அதில் குணம் அந்வயியாமையாலும், இனி, குணஸித்திக்காக பகவச்சப்தத்தைக் கூட்டிக்கொள்ள வேண்டுகையாலும், வ்யாப்திபலத்தைச் சொல்லாமையாலும், திருத்வாதசாக்ஷரியும் அபூர்ணம். இம்மந்த்ரம் அவைபோலன்றியிலே, வ்யாப்ய பதார்த்தங்களோடு வ்யாபநப்ரகாரத்தோடு வ்யாப்திபலத்தோடு வ்யாபகனுடைய குணங்களோடு வாசியற சாப்தமாகக் காட்டுகையாலே, அவற்றிற்காட்டில் இதுக்கு அர்த்தபௌஷ்கல்யநிபந்தநமான ஆதிக்யம் உண்டு" என்று, மற்றைவ்யாபகமந்த்ரங்களிரண்டினுடைய அபூர்த்தியையும் திருமந்த்ரத்தினுடைய அர்த்தபூர்த்தியையும் ஸுஸ்பஷ்டமாக ஆச்சான்பிள்ளை அருளிச்செய்தாரிறே.*

'இதுதனக்கு சிஷ்டபரிக்ரஹம் உண்டோ'? என்ன, அருளிச்செய்கிறார் 'இத்தை' என்று தொடங்கி.

மூ. 13. இத்தை வேதங்களும், ருஷிகளும், ஆழ்வார்களும், ஆசார்யர்களும் விரும்பினார்கள்.

வ்யா:—*அதாவது- விஷ்ணுகாயத்ரியிலே வ்யாபகமந்த்ர த்ரயத்தையுஞ் சொல்லுகிறவளவில் ப்ரதமத்திலே நாராயணசப்தத்தை ப்ராதாந்யேந ப்ரதிபாதிக்கையாலும், 32.* "विश्वं नारायणं" (விச்வம் நாராயணம்) *என்று தொடங்கி, 33.* "नारायणपरं ब्रह्म तत्त्वं नारायणः परः। नारायणपरो ज्योतिरात्मा नारायणः परः। यच्च किञ्चिज्जगत्यस्मिन् दृश्यते श्रूयतेऽपि वा। अन्तर्बहिश्च तत्सर्वं व्याप्य नारायणः स्थितः॥" (நாராயணபரம் ப்ரஹ்ம தத்வம் நாராயண: பர:, நாராயணபரோ ஜ்யோதிராத்மா நாராயண: பர:, யச்ச கிஞ்சிஜ்ஜகத்யஸ்மிந் த்ருச்யதே ச்ருயதேபி வா, அந்தர்ப்பஹிச்ச தத்ஸர்வம் வ்யாப்ய நாராயணஸ் ஸ்தித:) *என்று ஸகலவேதாந்த ஸாரபூதமான நாராயணாநுவாகத்திலும், 34* "एको ह वै नारायण आसीन्न ब्रह्मा नेशानो नेमे द्यावापृथिवी" (ஏகோ ஹ வை நாராயண ஆஸீந்ந ப்ரஹ்மா நேசாநோ நேமே த்யாவாப்ருதிவீ) *என்று மஹோபநிஷத்திலும் 35*"चक्षुश्च द्रष्टव्यञ्च नारायणः श्रोत्रञ्च श्रोतव्यञ्च नारायणः" (சக்ஷுச்ச த்ரஷ்டவ்யஞ்ச நாராயண: ச்ரோத்ரஞ்ச ச்ரோதவ்யஞ்ச நாராயண:) *என்று தொடங்கி 36.*"दिशश्च प्रदिशश्च नारायणः" (திசச்ச ப்ரதிசச்ச நாராயண:) *என்று முடிவாக நடுவு அடைய ஸுபாலோபநிஷத்திலும், 37.* "यस्यात्मा शरीरं यस्य पृथिवी शरीरं" (யஸ்யாத்மா சரீரம் யஸ்ய ப்ருதிவீ சரீரம்) *என்று தொடங்கி 38.* "यस्य मृत्युः शरीरं" (யஸ்ய ம்ருத்யு: சரீரம்) *என்கிறது ஈருக நடுவுள்ளபர்யாயங்கள்தோறும் 39.* "एष सर्वभूतान्तरात्मा अपहतपाप्मा दिव्यो देव एको नारायणः" (ஏஷ ஸர்வபூதாந்தராத்மா அபஹதபாப்மா திவ்யோ தேவ ஏகோ நாராயண:) *என்று அந்தர்யாமி ப்ராஹ்மணத்திலும் வாஸுதேவ விஷ்ணுசப்தங்களை அநாதரித்து நாராயண சப்தத்தையிட்டு பகவத்ஸ்வரூபாதிகளை நிர்த்தேசிக்கையாலும் அபௌருஷேயமாய் நித்யநிர்த்தோஷமாய் ஸ்வத: ப்ரமாணங்களான வேதங்களும் விரும்பிற்றின. 40.* "यथा सर्वेषु देवेषु नास्ति नारायणात्परः। तथा सर्वेषु मन्त्रेषु नास्ति चाष्टाक्षरात्परः॥" (யதா ஸர்வேஷு தேவேஷு நாஸ்தி நாராயணாத் பர: ததா ஸர்வேஷு மந்த்ரேஷு நாஸ்தி சாஷ்டாக்ஷராத்பர:॥)

31. "भूत्वोर्ध्वबाहुरद्यात्र सत्यपूर्वं ब्रवीमि वः। हे पुत्रशिष्याः शृणुत न मन्त्रोऽष्टाक्षरात्परः॥" (பூத்வோர்த்வபாஹுரத்யாத்ர ஸத்யபூர்வம் ப்ரவீமி வ:। ஹே புத்ரசிஷ்யாச்ச்ருணுத ந மந்த்ரோஷ்டாக்ஷராத் பர:) *41.* "सर्ववेदान्तसारार्थः संसारार्णवतारकः। गतिरष्टाक्षरो नृणां अपुनर्भवकाङ्क्षिणाम्॥" (ஸர்வவேதாந்தஸாரார்த்த ஸ்ஸம்ஸாரார்ணவதாரக: கதிரஷ்டாக்ஷரோ ந்ருணும் அபுநர்ப்பவகாங்க்ஷிணும்) *42.* "आर्ता विषण्णाः शिथिलाश्च भीताः घोरेषु च व्याधिषु वर्तमानाः। सङ्कीर्त्य नारायणशब्दमात्रं विमुक्तदुःखाःसुखिनो भवन्ति॥" (ஆர்த்தா விஷண்ணு: சிதிலாச்ச பீதா: கோரேஷு ச வ்யாதிஷு வர்த்தமாநா:। ஸங்கீர்த்ய நாராயணசப்தமாத்ரம் விமுக்த து:காஸ்ஸுகிநோ பவந்தி) *43.* "नारायणेति शब्दोऽस्ति वागस्ति वशवर्तिनी। तथापि नरके घोरे पतन्तीति किमद्भुतम्॥" (நாராயணேதி சப்தோஸ்தி வாகஸ்தி வசவர்த்திநீ। ததாபி நரகே கோரே பதந்தீதி கிமத்புதம்) *44.* "किं तत्र बहुभिर्मन्त्रैः किं तत्र बहुभिर्व्रतैः। नमो नारायणायेति मन्त्रः सर्वार्थसाधकः॥" (கிம் தத்ர பஹுபிர்மந்த்ரை: கிந் தத்ர பஹுபிர்வ்ரதை:- நமோ நாராயணுயேதி மந்த்ர: ஸர்வார்த்தஸாதக:) *இத்யாதிகளாலே வேதார்த்தோபப்ரும்ஹணங்களாயிருக்கிற ஸ்வப்ரபந்தங்களிலே பல விடங்களிலும் இத்தை ச்லாகித்துக்கொண்டு சொல்லுகையாலே, வேதார்த்த விசதீகரண ப்ரவ்ருத்தரான வ்யாஸாதி பரமருஷிகளும் விரும்பினுர்கள்; * "வண்புகழ்நாரணன்" || "செல்வநாரணன்" என்று தொடங்கி / "வாழ்புகழ் நாரணன்" என்று முடிவாக, ஆதிமத்யாவஸாநமாக நம்மாழ்வார் அருளிச்செய்கையாலும், § "நாடுநகரமும் நன்கறிய நமோ நாராயணுய" என்று தொடங்கி † "ஓவாதே நமோ நாரணு வென்பன்" என்று பெரியாழ்வாரும், ‡ "நாத்தழும்பெழ நாரணு" என்று தொடங்கி i "நலந்திகழ்நாரணன்" என்று பெருமாளும், e "நான்முகனை நாராயணன் படைத்தான்" என்று தொடங்கி s "எட்டெழுத்து மோதுவார்கள்*

* *திருவாய் 1-2-10.* || *திருவாய் 1-10-8.* / *திருவாய் 10-9-1.*
§ *திருப்பல்-4.* † *பெரியாழ்திரு 5-1-3.* ‡ *பெரு-திரு 2-4.*
i *பெரு-திரு 10-11.* e *நான்-திருவ-1.* s *நான்-திருவ-77.*

வல்லர் வானமாளவே'' என்று திருமழிசைப்பிரானும், o ''நான் கண்டுகொண்டேன் நாராயணு வென்னும் நாமம்'' என்று உபக்ரமதசையிலே ஒருகால் சொன்னுற்போலே ஒன்பதின்கால் சொல்லி r ''நாராயணுவோ! மணிவண்ணு! நாகணையாய்! வாராய்'' என்று திருமங்கையாழ்வாரும் உபக்ர மத்தோடு உபஸம்ஹாரத்தோடு வாசியற அருளிச்செய்கை யாலும், f ''நன்மாலைகொண்டு நமோ நாரணு வென்னும் சொன்மாலை கற்றேன்'' என்றும், i ''நாரணுவென்ருேவா துரைக்கு முரையுண்டே'' என்றும், s ''ஞானச்சுடர் விளக்கேற்றினேன் நாரணற்கு'' t ''நாரணன்தன் நாமங்கள்'' c ''பகற்கண்டேன் நாரணனைக்கண்டேன்'' என்றும், ||''நாமம் பல சொல்லி நாராயணு'' என்றும் முதலாழ்வார்களும் அருளிச்செய்கையாலும், / ''மயர்வறமதிநல மருளினன்'' என்கிறபடியே நிர்ஹேதுக பகவத் கடாக்ஷத்தாலே ஸமதி கத ஸமஸ்த வஸ்து வாஸ்தவரான ஆழ்வார்களெல்லாரும் விரும்பினுர்கள். இதரமந்த்ரங்களை அநாதரித்து இத்தையே தந்தாமுக்குத் தஞ்சமாக அநுஸந்தித்து, உபதேசவேளை யிலும் தந்தாமைப் பற்றினவர்களுக்கும் இத்தையே உஜ் ஜீவநஹேதுவாக உபதேசித்துப்போருகையாலே, அவ்வாழ் வார்களைப் பின்சென்ற ஆசார்யர்களெல்லாரும் விரும்பினுர்க ளென்கை.

இத்தால் மந்த்ராந்தரங்களிற் காட்டில் இம்மந்த்ரத்துக் குண்டான வைபவஞ் சொல்லிற்றுய்த்து.

இனி வாச்யந்தன்னிலும் இதுக்குண்டான வைபவத்தை அருளிச்செய்கிருர்; 'வாச்ய ப்ரபாவம் போலன்று வாசக ப்ரபாவம்' என்று.

---

o பெரிய திரு 1-1-1. r சிறிய திரும 50. f முதல் திருவ 57. i முதல் திருவ 95. s இர-திருவ 1. t இர-திருவ-2. c இர-திரு 81. || மூன்-திருவ 8. / திருவாய் 1-1-1.

மூ. 14. வாச்ய ப்ரபாவம் போலன்று வாசக ப்ரபாவம்.

வ்யா:—*அதாவது,-இதுக்கு வாச்யனுயிருந்துள்ள ஈச்வரனுடைய பெருமை போலன்று தத்வாசகமான இதின் பெருமையென்றபடி.*

அதுதான் ஏது என்னவருளிச்செய்கிறார் 'அவன் தூரஸ்தனானாலும் இதுகிட்டி நின்றுதவும்' என்று;

மூ. 15. அவன் தூரஸ்தனானாலும் இது கிட்டி நின்று உதவும்.

வ்யா:—*அதாவது-இதுக்கு வாச்யனானவன் ஸந்நிஹிதனன்றிக்கே தூரஸ்தனயிருந்த காலத்திலும் வாசகமான இது ஆஸந்நமாய்நின்று தன்னை வசித்தவர்கள் அபேக்ஷிதங்களை ஸாதித்துக் கொடுக்குமென்கை.*

'இப்படி வாச்யன் தூரஸ்தனயிருக்க, வாசகம் உதவின இடம் உண்டோ?' என்ன அருளிச்செய்கிறார் 'த்ரௌபதிக்கு ஆபத்திலே புடைவை சுரந்தது திருநாமமிறே' என்று.

மூ. 16. த்ரௌபதிக்கு ஆபத்திலே புடைவை சுரந்தது திருநாமமிறே.

வ்யா:—*அதாவது - மஹாஸதஸ்ஸிலே துச்சாஸனன் வஸ்த்ராபஹாரம் பண்ணுகிறபோது 45.* **"महत्यापदि संप्राप्ते स्मर्तव्यो भगवान् हरिः"** (மஹத்யாபதி ஸம்ப்ராப்தே ஸ்மர்த்தவ்யோ பகவாந் ஹரி:) *என்று முன்பே ஸ்ரீவஸிஷ்டமஹர்ஷி சொல்லி வைத்ததை நினைத்து, 46.* **"शङ्खचक्रगदापाणे द्वारकानिलयाच्युत । गोविन्द पुण्डरीकाक्ष रक्ष मां शरणागताम् ॥"** **(சங்கசக்ரகதாபாணே த்வாரகாநிலயாச்யுத । கோவிந்த புண்டரீகாக்ஷ ரக்ஷ மாம் சரணாகதாம்)** *என்று சரணம் புகுந்த த்ரௌபதிக்கு அவ்வாபத்திலே 47.* **"गोविन्देति यदाक्रन्दत्कृष्णा मां दूरवासिनम्"** *என்கிறபடியே வாச்யனான க்ருஷ்ணன் தூரஸ்தனயிருக்கச்செய்தேயும் வஸ்த்ரத்தை*

வர்த்திப்பித்துக்கொடுத்தது, அவ்வவதாரத்துக்கு வாசகமான கோவிந்தனென்கிற திருநாமமிறேயென்கை. நாராயண சப்தார்த்தத்தில் ஏகதேசத்துக்கு வாசகமான ஒருதிருநாமம் செய்தபடி கண்டால், இதன் ப்ரபாவம் கிம்புநர்ந்யாயஸித்தமிறே யென்று கருத்து.

இன்னம் ஒருப்ரகாரத்தாலே இதன் வைபவத்தை அருளிச்செய்கிறார் 'சொல்லும் க்ரமம் ஒழியச்சொன்னாலும்' என்றுதொடங்கி.

மூ. 17. சொல்லும் க்ரமம் ஒழியச்சொன்னாலும் தன் ஸ்வரூபம் கெட நில்லாது.

வ்யா:—அதாவது-ஏதேனும் ஒருமந்த்ரமும் தன்னைத் தஞ்சமாக விச்வஸித்துச் சொன்னவர்களுக்கு ஒழியத் தன் கார்யம் செய்யாதேயாகிலும், இது அங்ஙனன்றிக்கே தன்னைத் தஞ்சமாக விச்வஸித்துச் சொல்லுகையாகிற க்ரமம் ஒழிய, 48. **"साङ्केत्यं पारिहास्यञ्च स्तोभं हेलनमेव वा"** **(ஸாங்கேத்யம் பாரிஹாஸ்யஞ்ச ஸ்தோபம் ஹேலநமேவ வா)** என்கிறபடியே சொல்லிலும், சொன்னவர்களுக்கு ரக்ஷகமாகையாகிற தன் ஸ்வரூபத்தில் நழுவநில்லாதென்கை.

இனி, இதன் ஸர்வாபேக்ஷிதப்ரதத்வமாகிற வைபவத்தை அருளிச்செய்கிறார் 'இதுதான்' என்று தொடங்கி.

மூ 18. இதுதான் "குலந்தரும்" என்கிறபடியே எல்லா அபேக்ஷிதங்களையும் கொடுக்கும்.

வ்யா:-அதாவது-இம்மந்த்ரந்தான் "குலந்தரும்" என்று தொடங்கி ஆழ்வார் அருளிச்செய்தபடியே, அதிகாராநுகுணமான அபேக்ஷிதங்களையெல்லாம் கொடுக்குமென்கை.

அத்தை விசதீகரிக்கிறார் 'ஐச்வர்ய' இத்யாதியாலே.

மூ. 19. ஐச்வர்ய கைவல்ய பகவல்லாபங்களை ஆசைப்பட்டவர்களுக்கு அவற்றைக் கொடுக்கும்.

வ்யா:-அதாவது— 49. "**ऐहलौकिकमैश्वर्यं स्वर्गाद्यं पारलौकिकं। कैवल्यं भगवन्तञ्च मन्त्रोऽयं साधयिष्यति**" (**ஐஹலௌகிகமைச்வர்யம் ஸ்வர்க்காத்யம் பாரலௌகிகம் । கைவல்யம் பகவந்தஞ்ச மந்த்ரோயம் ஸாதயிஷ்யதி ॥**) என்கிறபடியே ஐஹிகமாயும் பாரலௌகிகமாயுமிருக்கும் ஐச்வர்யத்தையும் ஆத்மப்ராப்திரூபமான கைவல்யத்தையும் பரமபுருஷார்த்தமான பகவல்லாபத்தையும் ஆசைப்பட்ட அதிகாரிகளுக்கு ஜபஹோமாதிகளாலே ஸ்வயம் ஸாதநமாய் நின்று, அவ்வோபுருஷார்த்தங்களைக் கொடுக்கு மென்கை.

இனி கர்மாத்யுபாய ஸஹகாரித்வரூபமான இதன் வைபவத்தை அருளிச்செய்கிறார் 'கர்மஜ்ஞாந' இத்யாதியாலே.

மூ. 20. கர்மஜ்ஞாநபக்திகளிலே இழிந்தவர்களுக்கு விரோதியைப் போக்கி அவற்றைத் தலைக் கட்டிக்கொடுக்கும்.

வ்யா:—அதாவது- கர்மயோகத்தில் இழிந்தவர்களுக்கு ஜபஹோமாதிகளாலே தன்னை ஸஹாயமாகக்கொள்ளுமளவில், கர்மயோகாரம்ப விரோதியான பாபத்தைப் போக்கி அந்தக்கர்மத்தினுடைய அவிச்சேதாபாதகமாய்க் கொண்டு அத்தைத் தலைக்கட்டிக்கொடுக்கும். ப்ரதமத்திலே, ஜ்ஞாநயோகத்திலே இழிந்தவர்களுக்குத் தன்னை ஸஹாயமாகக் கொள்ளுமளவில், கர்மஸாத்யமான ஜ்ஞாநாரம்பவிரோதி பாபநிவ்ருத்தியைப்பண்ணி அந்தஜ்ஞாநத்துக்கு நாடோறும் அதிசயத்தைப்பண்ணுநின்றுகொண்டு, அத்தைத் தலைக் கட்டிக்கொடுக்கும். பக்தியோகத்திலே இழிந்தவர்களுக்குத் தன்னை ஸஹாயமாகக் கொள்ளுமளவில், பக்தியோகாரம்ப விரோதியான பாபத்தைப்போக்கிப் பக்திவிவ்ருத்திஹேதுவாய்க்கொண்டு அத்தைத் தலைக்கட்டிக் கொடுக்குமென்கை.

இங்ஙனன்றிக்கே, ப்ரபந்நர்க்கு இது செய்யும் உபகார வைபவத்தை அருளிச்செய்கிறார் 'ப்ரபத்தியிலே' என்று தொடங்கி.

மூ. 21. ப்ரபத்தியிலே இழிந்தவர்களுக்கு ஸ்வரூப ஜ்ஞாநத்தைப் பிறப்பித்துக் காலக்ஷேபத்துக்கும் போகத்துக்கும் ஹேதுவாயிருக்கும்.

வ்யா:—அதாவது-கீழ்ச்சொன்னவைபோலே துச்சகமுமாய் ஸ்வரூபவிருத்தமுமாய் இருக்கையன்றிக்கே ஸௌசகமுமாய் ஸ்வரூபாநுரூபமுமான ப்ரபத்யுபாயத்திலே இழிந்தவர்களுக்கு, தததுரூபமான பகவத்பாரதந்த்ர்யரூப ஸ்வரூப ஜ்ஞாநத்தை விசதமாகப் பிறப்பித்து அர்த்தாநுஸந்தாநாதிகளாலே போதுபோக்குகைக்கும் ஹேதுவாய், * "எனக்கென்றுந் தேனும்பாலுமமுதுமாய திருமால்திருநாமம்" என்கிறபடியே ப்ரதிபாத்யவஸ்துவைப்போலே ஸ்வயம் போக்யமாயிருக்கையாலே போகத்துக்கும் ஹேதுவாயிருக்குமென்கை.

இனி ஜ்ஞாதவ்ய ஸகலார்த்த ப்ரதிபாதகத்வமாகிற இதன் வைபவத்தை அருளிச்செய்கிறார் 'மற்றெல்லாம் பேசிலும்' என்று தொடங்கி.

மூ. 22. "மற்றெல்லாம் பேசிலும்" என்கிறபடியே அறியவேண்டும் அர்த்தமெல்லாம் இதுக்குள்ளே உண்டு.

வ்யா:—அதாவது- ‡ "நின் திருவெட்டெழுத்துங் கற்று மற்றெல்லாம் பேசிலும்" என்கிறபடியே, ஆத்மோஜ்ஜீவநத்துக்கு உடலாக அறியவேண்டும் அர்த்தவிசேஷங்களெல்லாம் இம்மந்த்ரத்துக்குள்ளே உண்டென்கை.

'அறியவேண்டும் அர்த்தமெல்லாம் ஆகிறது எது?' என்னும் ஆகாங்க்ஷையிலே அருளிச்செய்கிறார் 'அதாவது அஞ்சர்த்தம்' என்று.

மூ. 23. அதாவது-அஞ்சர்த்தம்.

---

* பெரிய திரு 6-10-6. ‡ பெரிய திரு 8-10-3.

வ்யா:—*ஸ்வஸ்வரூப பரஸ்வரூப புருஷார்த்தஸ்வரூப உபாயஸ்வரூப விரோதிஸ்வரூபங்களாகிற அர்த்தபஞ்சகமும் என்றபடி.* 50. **"प्राप्यस्य ब्रह्मणो रूपं प्राप्तुश्च प्रत्यगात्मनः। प्राप्त्युपायं फलं प्राप्तेस्तथा प्राप्तिविरोधि च॥ वदन्ति सकला वेदाः सेतिहासपुराणकाः। मुनयश्च महात्मानो वेदवेदार्थवेदिनः॥"** (**ப்ராப்யஸ்ய ப்ரஹ்மணோ ரூபம் ப்ராப்துச்ச ப்ரத்யகாத்மந:। ப்ராப்த்யுபாயம் பலம்ப்ராப்தேஸ் ததாப்ராப்திவிரோதிச॥ வதந்தி ஸகலா வேதாஸ் ஸேதிஹாஸபுராணகா:। முநயச்ச மஹாத்மாநோ வேதவேதார்த்தவேதிந:)** *என்கிறபடியே, ஸகலவேத சாஸ்த்ரங்களும் ப்ரதிபாதிப்பது இவ்வர்த்தபஞ்சகத்தையு மாகையாலே, தத்ஸங்க்ரஹமான இம்மந்த்ரத்துக்கும் ப்ரதி பாத்யம் இதுவேயிறே. இம்மந்த்ரந்தான் ப்ரணவத்தாலே ப்ரத்யகாத்ம ஸ்வரூபத்தையும், நமஸ்ஸாலே விரோத்யுபாய ஸ்வரூபங்களையும், நாராயணபதத்தாலே பரஸ்வரூபத்தை யும், அதில் சதுர்த்தியாலே பலஸ்வரூபத்தையும் ப்ரதி பாதிக்கக் கடவதாயிறே இருப்பது.*

இம்மந்த்ரார்த்த வைபவத்தை அருளிச்செய்கிறார் மேல் 'பூர்வாசார்யர்கள்' என்று தொடங்கி.

மூ. 24. பூர்வாசார்யர்கள் இதில் அர்த்தம் அறிவதற்கு முன்பு, தங்களைப் பிறந்தார்களாக நினைத்திரார்கள்; இதில் அர்த்தஜ்ஞாநம் பிறந்த பின்பு, "பிறந்தபின் மறந் திலேன்" என்கிறபடியே இத்தையொழிய வேறொன் றால் காலக்ஷேபம் பண்ணியறியார்கள்.

வ்யா:—*அதாவது- நாதயாமுந யதிவராதிகளான நம் பூர்வாசார்யர்கள், "அன்று நான் பிறந்திலேன்" என்கிற படியே இம்மந்த்ரத்தில் அர்த்தமறிவதற்கு முன்பு தங்களைப் பிறந்தார்களாக நினைத்திரார்கள்; இதில் அர்த்தஜ்ஞாநம் தங்களுக்குண்டான பின்பு 'பிறந்தபின் மறந்திலேன்' என்று ஆழ்வார் திவ்யஸூக்தியில் சொல்லுகிறபடியே இம்மந்த்*

ரார்த்தத்தையொழிய மற்றொன்றால் காலக்ஷேபம் பண்ணி யறியார்களென்கை. வேதசாஸ்த்ரங்கள், ஆழ்வார் அருளிச் செயல்கள் இவற்றால் போதுபோக்கும் போதும் இம்மந்த் ரார்த்தத்தை உட்கொண்டே அநுஸந்திக்கையாலே, (இத்தை யொழிய வேறொன்றால் காலக்ஷேபம் பண்ணியறியார்கள்) என்னத்தட்டில்லை.

வாசகசக்தி ஸர்வத்தையும் ஸாதித்துக்கொடுக்கவற்றா யிருக்க, இதினுடைய வாச்யத்திலே இவர்களூன்றுகைக்கு ஹேதுவேதென்ன அருளிச்செய்கிறார், 'வாசகத்திற்காட்டில்' என்று தொடங்கி.

மூ. 25. வாசகத்திற்காட்டில் வாச்யத்திலே ஊன்று கைக்கடி, ஈச்வரனே உபாயோபேயமென்று நினைத் திருக்கை.

வ்யா:—அதாவது, ஸர்வபலத்துக்கும் ஸ்வயம் ஸாதந மாயும், ஸாதநாந்தரங்களுக்கும் ஸஹகாரியாய்நின்று தலைக் கட்டிக் கொடுத்தும் போருகிற இதினுடைய வாசகசக்தி தானே அமைந்திருக்கச்செய்தே, அதிலுங்காட்டில் கீழ்ச் சொன்னபடியே, இம்மந்த்ரத்தினுடைய வாச்யத்திலே பூர் வாசார்யர்கள் ஊன்றுகைக்கடி, உபேயாந்தரபரராய் இத்தை ஸாதநமாகக்கொண்டு ஸாதித்தல், உபாயாந்தரபரராய் இத்தை ஸஹகாரியாகக்கொள்ளுதல் செய்யுமவர்களைப் போலன்றிக்கே, உபாயோபேயங்களிரண்டும் ஈச்வரனே யென்று ப்ரதிபத்திபண்ணியிருக்கையென்றபடி.

ஆக, "திருமந்த்ரத்தினுடைய சீர்மைக்குப் போரும்படி" என்று தொடங்கி இவ்வளவும் வாய்வந்தபடி அநுஸந்திக்க வொண்ணாதபடியான இதனுடைய கௌரவத்தையும், ஈச்வரன் தானே சிஷ்யனுமாய் ஆசார்யனுமாய் நின்று வெளியிட்டருளுகையால் வந்த ஏற்றத்தையும், ஸகலசாஸ் த்ரங்களிலும் ஸகலமந்த்ரங்களிலும் வாச்யந்தன்னிலுங்

காட்டில் இதுக்கு உண்டான பெருமையையும், அக்ரமமாகச் சொல்லிலும் தன்கார்யம் செய்யும் ஆதிக்யத்தையும் அபேக்ஷிதஸகலபலப்ரதத்வரூபமாஹாத்ம்யத்தையும், கர்மாத்யுபாயஸஹகாரித்வரூபமான உத்கர்ஷத்தையும், ஜ்ஞாதவ்யஸகலார்த்தப்ரதிபாதகதயா வந்த மாஹாத்ம்யத்தையும் ஏதத்ப்ரதிபாத்ய அர்த்தகௌரவவிசேஷத்தையும் அருளிச்செய்கையாலே, இம்மந்த்ரத்தினுடைய வைபவத்தை எல்லாரும் அறியும்படி தர்சிப்பித்தருளினாராயிற்று.

இனிமேல் இம்மந்த்ரத்துக்கு வாக்யார்த்தம் இரண்டுபடியாக அருளிச்செய்கிறார் 'இதுதன்னில்' என்று தொடங்கி.

மூ. 26. இதுதன்னில்சொல்லுகிற அர்த்தம்-ஸ்வரூபமும் ஸ்வரூபாநுரூபமான ப்ராப்யமும்; ஸ்வரூபமும் உபாயமும் பலமுமென்னவுமாம்.

வ்யா:—அதாவது-இம்மந்த்ரந்தன்னில் சொல்லுகிற **அர்த்தம்**-இவ்வாத்மாவினுடைய சேஷத்வபாரதந்த்ர்யங்களாகிற ஸ்வரூபமும், அந்த ஸ்வரூபத்துக்கு அநுரூபமாயிருந்துள்ள கைங்கர்யமாகிற ப்ராப்யமும்; அன்றிக்கே, சேஷத்வமாகிற ஸ்வரூபமும், அந்த ஸ்வரூபாநுரூபமான உபாயமும், உபாயலப்யமான பலமும் என்று சொல்லவுமாமென்கை. இதில் ப்ரதமயோஜனையில் ப்ரணவ நமஸ்ஸுக்களாலே ஸ்வரூபமும், நாராயணபதத்தாலே ப்ராப்யமும் சொல்லுகிறது. அநந்தரயோஜனையில் ப்ரணவத்தாலே சேஷத்வமும், நமஸ்ஸாலே உபாயமும், நாராயணபதத்தாலே பலமும் சொல்லுகிறது.

'பலவேஷந்தானிருக்கும்படி எங்ஙனே?' என்ன, அருளிச்செய்கிறார் 'பலமிருக்கும்படி' என்று தொடங்கி.

மூ. 27. பலமிருக்கும்படி ப்ரமேயசேகரத்திலும் அர்ச்சிராதிகதியிலும் சொன்னோம்.

வ்யா:—அதாவது, இவ்வாத்மாவுக்கு ப்ராப்யமான பலந் தான் அர்ச்சிராதிமார்க்கத்தாலே பரமபதத்திலே போய் பரிபூர்ண பகவதநுபவத்தைப் பண்ணி, அவ்வநுபவஜநித ப்ரீதிப்ரேரிதனாய்க்கொண்டு பண்ணும் அசேஷசேஷவ்ருத்தி யாகையாலே, அதிருக்கும்படியை ஸங்க்ரஹேண ப்ரமேய சேகரமாகிற ப்ரபந்தத்திலும் விஸ்தரேண அர்ச்சிராதிகதி யாகிற ப்ரபந்தத்திலும் விசதமாகச் சொன்னோம்; அவற்றிலே கண்டுகொள்வதென்கை.

இனி இம்மந்த்ரத்துக்கு ப்ரதிபதம் அர்த்தம் அருளிச் செய்வதாகத் திருவுள்ளம்பற்றி, ப்ரதமம் இதினுடைய அக்ஷரஸங்க்யையையும், பதஸங்க்யையையும் அருளிச்செய் கிறார், 'இதுதான்' என்று தொடங்கி.

மூ. 28. இதுதான் எட்டுத் திருவக்ஷரமாய் மூன்று பதமாயிருக்கும்.

வ்யா:–அதாவது, இம்மந்த்ரந்தான்51. "**ओमित्येकाक्षरं। नम इति द्वे अक्षरे नारायणायेति पञ्चाक्षराणि। इत्यष्टाक्षरं छन्दसा गायत्री चेति॥**" **(ஓமித்யேகாக்ஷரம் நம இதி த்வே அக்ஷரே நாராயணாயேதி பஞ்சாக்ஷராணி இத்யஷ்டாக்ஷரஞ் சந்தஸா காயத்ரீசேதி)** 52. "**ओमित्यग्रे व्याहरेत्। नम इति पश्चात्। नारायणायेत्युपरिष्टात्।** **(ஓமித்யக்ரே வ்யாஹரேத் நம இதி பச்சாத் நாராயணாயேத்யு பரிஷ்டாத்)** என்கிறபடியே எட்டுத்திருவக்ஷரமாய், மூன்று பதமாயிருக்குமென்கை. இதனுடைய அஷ்டாக்ஷரத்வம் சொல்லுகிறவிடத்திலே, 51"**ओमित्येकाक्षरं**"**(ஓமித்யேகாக்ஷரம்)** என்று ப்ரணவத்தை ஓரக்ஷரமாகவும் 51 "**नम इति द्वे अक्षरे**"**(நம இதி த்வே அக்ஷரே)** என்று நமஸ்ஸை இரண்டக்ஷரமாகவும் 51 "**नारायणायेति पञ्चाक्षराणि**" **(நாராயணாயேதி பஞ்சாக்ஷராணி)** என்று நாராயண பதத்தை அஞ்சக்ஷரமாகவும் ச்ருதி சொல்லுகையாலே, ஸமஸ்தபதமான நாராயண பதத்தில் நாரபதத்தைப் பிரித்து ஷடக்ஷரமாக்கி, ப்ரணவத்தை

யொழிய அஷ்டாக்ஷரத்வம் சொல்லுமவர்களுடைய பக்ஷம் அவைதிகமாகையாலே அநாதரணீயமாகக்கடவது.

'இதில் பதத்ரயமும் எவ்வர்த்தத்தைச் சொல்லுகிறது?' என்னும் ஆகாங்க்ஷையிலே, 'மூன்றுபதமும் மூன்றர்த்தத்தைச் சொல்லுகிறது' என்கிறார்.

மூ. 29. மூன்று பதமும் மூன்று அர்த்தத்தைச் சொல்லுகிறது.

அவ்வர்த்தங்கள்தம்மை விசதமாக அருளிச்செய்கிறார் 'அதாவது-சேஷத்வமும், பாரதந்த்ர்யமும், கைங்கர்யமும்' என்று.

மூ. 30. அதாவது-சேஷத்வமும், பாரதந்த்ர்யமும், கைங்கர்யமும்.

வ்யா:—*'ஸ்வரூபமும் ஸ்வரூபாநுரூபான ப்ராப்யமும்' என்று முதற்சொன்ன வாக்யார்த்தம் இத்தை நினைத்திறே.*

'இப்பதத்ரயத்திலும் ப்ரதமபதந்தான் எது?' என்ன, 'இதில் முதல்பதம் ப்ரணவம்' என்கிறார்.

மூ: 31. இதில் முதற்பதம் ப்ரணவம்.

வ்யா:-*52.* **"ओमित्यग्रे व्याहरेत्"** (ஓமித்யக்ரே வ்யாஹரேத்) *என்றிறே ச்ருதி சொல்லிற்று. ஸ்ம்ருதியும், 53.* **"प्रणवाद्यं नमोमध्यं नारायणपदान्तिमम्। मन्त्रमष्टाक्षरं विद्यात्सर्वसिद्धिकरं नृणाम्॥"** (ப்ரணவாத்யம் நமோமத்யம் நாராயணபதாந்திமம் மந்த்ரமஷ்டாக்ஷரம் வித்யாத்ஸர்வஸித்திகரம் ந்ருணாம்) *என்றதிறே.*

இனி, ப்ரணவத்துக்கு அர்த்தம் அருளிச்செய்வதாக, இதனுடைய அக்ஷரத்ரயாத்மகதையை அருளிச்செய்கிறார்; 'இது அ என்றும், உ என்றும், ம என்றும் மூன்று திருவக்ஷரம்' என்று.

மூ. 32. இது 'அ' என்றும், 'உ' என்றும், 'ம' என்றும் மூன்று திருவக்ஷரம்.

வ்யா:—*இப்ரணவந்தான், அஸம்ஹிதகாரத்தாலே மூன்றக்ஷரமாய், மூன்றுபதமாய், மூன்றர்த்த ப்ரகாசகமாய், ஸம்ஹிதாகாரத்தாலே ஏகாக்ஷரமாய், ஏகபதமாய், ஏகார்த்த ப்ரகாசகமாயிறே இருப்பது.*

இந்த அக்ஷரத்ரயத்தினுடையவும் உத்பத்தி க்ரமத்தை ஸத்ருஷ்டாந்தமாக அருளிச்செய்கிறார் 'மூன்று தாழியிலே' என்றுதொடங்கி.

மூ. 33. மூன்று தாழியிலே தயிரை நிறைத்துக் கடைந்து வெண்ணெய் திரட்டினாற்போலே மூன்று வேதத்திலும் மூன்று அக்ஷரத்தையும் எடுத்தது.

வ்யா:-*54*भूरिति ऋग्वेदादजायत। भुव इति यजुर्वेदात् सुवरिति सामवेदात्। तानि शुक्राण्यभ्यतपत्। तेभ्योऽभितप्तेभ्यस्त्रयो वर्णा अजायन्त। अकार उकार मकार इति। तानेकधा समभरत्तदेतदोमिति॥(பூரிதி ருக்வேதாதஜாயத புவ இதி யஜுர்வேதாத் ஸுவரிதி ஸாமவேதாத் தாநி சுக்ராண்யப்யதபத் தேப்யோऽபிதப்தேப்யஸ் த்ரயோ வர்ணா அஜாயந்த அகார உகார மகார இதி தாநேகதா ஸம்பரத் ததேததோமிதி) *என்றும்,55*अकारश्चाप्युकारश्च मकारश्च प्रजापतिः। वेदत्रयान्निरवृहत् भूर्भुवस्स्वरितीति च॥"(அகாரஞ் சாப்யுகாரஞ்ச மகாரஞ்ச ப்ரஜாபதி:வேத த்ரயாந்நிரப்ருஹத் பூர்ப்புவஸ் ஸ்வரிதீதிச) *என்று ச்ருதி ஸ்ம்ருதிகளிற் சொல்லுகிறபடியே ருக்யஜுஸ்ஸாமரூபமான வேதத்ரயத்தில் நின்றும், "பூ: புவ: ஸுவ:" என்கிற வ்யாஹ்ருதித்ரயத்தையும் தோற்றுவித்து அந்தவ்யாஹ்ருதி த்ரயத்தையும் பொன்னோடே வைக்குமாபோலே தன் ஸங்கல்பத்தாலே ஓடவைத்து அவற்றில் நின்றும் அகார உகார மகாரங்களாகிற அக்ஷரங்கள் மூன்றும், அடைவே தோன்றும்படி பண்ணி, இப்படி ஸர்வேச்வரன் ஸமுத்தரித்தபடியைத் திருவுள்ளம்*

பற்றி, பாத்ரத்ரயகதமான தயிரைத் தனித்தனியே கடைந்து, தத்ஸாரமான வெண்ணெயை வாங்கித் திரட்டினாற்போலே, (மூன்று வேதத்திலும் மூன்றக்ஷரத்தையும் எடுத்தது) என்கிறார்.

இத்தால் பலித்தத்தை அருளிச்செய்கிறார் 'ஆகையால் இது ஸகலவேதஸாரம்' என்று.

மூ. 34. ஆகையால், இது ஸகலவேதஸாரம்.

வ்யா:— அதாவது-அக்ஷரத்ரயமும் ஒரோ வேதத்தினுடைய ஸாரமாக ஸமுத்த்ருதமாகையாலே இவ்வக்ஷரத்ரயாத்மகமான ப்ரணவம் ஸகலவேத ஸாரம் என்றபடி.

ஆக, ''இதுதன்னிற்சொல்லுகிற அர்த்தம்'' என்று தொடங்கி இவ்வளவும்-இம்மந்த்ரத்தினுடைய வாக்யார்த்தத்தையும், அக்ஷர ஸங்க்யையையும், பதஸங்க்யையையும், பதத்ரயமும் அர்த்தத்ரய ப்ரதிபாதகமென்னுமத்தையும், அதில் ப்ரதமபதம் இன்னதென்னுமத்தையும், அதுதான் அக்ஷரத்ரயாத்மகமாய் இருக்குமென்னுமத்தையும், அவ்வக்ஷரத்ரயமும் வேதத்ரயஸாரமாக உத்பந்நமாகையாலே தத்ஸமுதாயமான ப்ரணவம் ஸகலவேதஸார மென்னுமத்தையும் அருளிச்செய்தாராயிற்று.

இனி, இவ்வக்ஷரத்ரயத்துக்கும் அடைவே அர்த்தம் அருளிச்செய்வதாகத் திருவுள்ளம்பற்றி, ப்ரதமம் அகாரார்த்தத்தை அருளிச்செய்கிறார், 'இதில் அகாரம்' என்று தொடங்கி.

மூ. 35. இதில் அகாரம்-ஸகலசப்தத்துக்கும் காரணமாய் நாராயணபதத்துக்கு ஸங்க்ரஹமாயிருக்கையாலே, ஸகலஜகத்துக்கும் காரணமாய் ஸர்வரக்ஷகனான எம்பெருமானைச் சொல்லுகிறது.

வ்யா:— அதாவது-இவ்வக்ஷரத்ரயத்திலும் வைத்துக் கொண்டு ப்ரதமாக்ஷரமான அகாரம் 56. **"नामरूपञ्च भूतानां कृत्यानाञ्च प्रपञ्चनम्। वेदशब्देभ्य एवादौ देवादीनां चकार सः॥"** (நாமரூபஞ்ச பூதாநாம் க்ருத்யாநாஞ்ச ப்ரபஞ்சநம்-வேதசப் தேப்ய ஏவாதௌ தேவாதீநாஞ்சகாரஸ:) என்கிறபடியே லௌகிகஸகலசப்தங்களுக்கும் வேதம் காரணமாய், 57. **"प्रणवाद्यास्तथा वेदाः"** (ப்ரணவாத்யாஸ்ததா வேதா:) 58. **"ओङ्कारप्रभवा वेदाः"** (ஓங்காரப்ரபவா வேதா:) இத்யாதிகளிற் சொல்லு கிறபடியே அந்தவேதங்களுக்கும் ப்ரணவம் காரணமாய், 59. **"तस्य प्रकृतिलीनस्य"** (தஸ்ய ப்ரக்ருதிலீநஸ்ய) என்கிறபடியே அந்த ப்ரணவம் தனக்குத்தான் காரணமாயிருக்கையாலே 60. **"अकारो वै सर्वा वाक्"** (அகாரோவைஸர்வாவாக்) 61. **"समस्तशब्दमूलत्वादकारस्य स्वभावतः।"** (ஸமஸ்தசப்தமூலத்வாதகாரஸ்ய ஸ்வபாவத:) என்கிறபடியே ஸகலசப்தத்துக்குங்காரணமாய், ஸர்வேச்வரன் ஸமஸ்த வஸ்துசரீரதயா ஸர்வரக்ஷகனுயிருக் கும்படியை ப்ரதிபாதிக்கிற நாராயணபதத்துக்கு ஸங்க்ரஹமா யிருக்கையாலே 62 **"यतो वा इमानि भूतानि जायन्ते येन जातानि जीवन्ति"** (யதோ வா இமாநி பூதாநி ஜாயந்தே, யேந ஜாதாநி ஜீவந்தி) 63 **"स एव सृज्यः स च सर्गकर्ता स एव पात्यत्ति च पाल्यते च"** (ஸஏவ ஸ்ருஜ்யஸ் ஸ ச ஸர்க்ககர்த்தா ஸ ஏவ பாத்யத்தி ச பால்யதே ச) இத்யாதிகளிற் சொல்லுகிறபடியே எல்லாஜகத்துக்கும் காரணமாய் எல்லார்க்கும் ரக்ஷகனுயிருக்கும் எம்பெருமானைச் சொல்லுகிறதென்கை. இத்தால், இவ்வக்ஷரத்தில் ப்ரக்ருத் யர்த்தமான காரணத்வமும், தாத்வர்த்தமான ரக்ஷகத்வமும் சொல்லிற்றுயிற்று. இவ்வகாரத்துக்கு நாராயணபதஸங்க்ர ஹதயா ரக்ஷகவாசித்வம் சொல்லும்போதும், தாதுஸித்த வேஷத்தை அவலம்பித்தே சொல்லவேணுமிறே.

'ரக்ஷிக்கையாவதுதான் ஏது என்னும் ஆகாங்க்ஷையிலே' அருளிச்செய்கிருர் 'ரக்ஷிக்கையாவது' என்றுதொடங்கி.

மூ. 36. ரக்ஷிக்கையாவது விரோதியைப் போக் குகையும் அபேக்ஷிதத்தைக் கொடுக்கையும்.

வ்யா:-அதாவது, ரக்ஷகத்வந்தான் அநிஷ்டநிவர்த்தகத்வ இஷ்டப்ராபகத்வரூபேண த்விவிதமாகையாலே, ஈச்வரன் சேதநரை ரக்ஷிக்கையாவது-அவர்களுக்கு து:க்காவஹமான விரோதியைப் போக்குகையும் ஸுகாவஹமான அபேக்ஷிதத்தைக் கொடுக்கையும் என்கை.

'இவர்களுக்கு இவன் போக்கும் விரோதி ஏது? கொடுக்கும் அபேக்ஷிதம் எது?' என்ன, அருளிச்செய்கிருர் 'இவையிரண்டும் சேதநர் நின்ற நின்ற அளவுக்கு ஈடாயிருக்கும்' என்று.

மூ. 37. இவையிரண்டும் சேதநர் நின்ற நின்ற அளவுக்கு ஈடாயிருக்கும்.

வ்யா:—சேதநர் நின்ற நின்ற அளவுக்கு ஈடாயிருக்கும் என்றது தத்தததிகாராநுகுணமாயிருக்குமென்றபடி.

இது தன்னை வ்யக்தமாக அருளிச்செய்கிருர் மேல், 'ஸம்ஸாரிகளுக்கு' இத்யாதி.

மூ. 38. ஸம்ஸாரிகளுக்கு விரோதி சத்ருபீடாதிகள், அபேக்ஷிதம் அந்நபாநாதிகள்; முமுக்ஷுக்களுக்கு விரோதி ஸம்ஸார ஸம்பந்தம், அபேக்ஷிதம் பரமபத ப்ராப்தி; முக்தர்க்கும் நித்யர்க்கும் விரோதி கைங்கர்ய ஹாநி, அபேக்ஷிதம் கைங்கர்ய வ்ருத்தி.

வ்யா:—அதாவது தேஹாத்மாபிமாநாதிகளும் சப்தாதி விஷயாநுபவமுமே யாத்ரையாயிருக்கும் ஸம்ஸாரிகளுக்கு நிவர்த்யமான விரோதி சத்ருக்களால் வரும் நலிவு தொடக்கமானவை; ப்ராப்யமான அபேக்ஷிதம் சோறு தண்ணீர் முதலானவை யென்கை. 'சத்ருபீடாதிகள்' என்கிற விடத்தில் 'ஆதி' சப்தத்தாலே ஆதிவ்யாதி முதலானவற்ருல் வரும் பீடைகளைச் சொல்லுகிறது. 'அந்நபாநாதிகள்' என்கிற விடத்தில் 'ஆதி' சப்தத்தாலே ஸ்ரக் வஸ்த்ர ஆபரண அங்கராக அங்கநாலிங்கநாதிகளைச் சொல்லுகிறது.

'முமுக்ஷுக்களுக்கு' இத்யாதி. அதாவது:— ஸம்ஸாரத்தில் அடிக்கொதித்துப் பரமபதத்திலே போக ஆசைப்படாநிற்கும் முமுக்ஷுக்களுக்கு நிவர்த்யமான விரோதி-பொய்ந்நின்ற ஞானமும் பொல்லாவொழுக்கும் அழுக்குடம்புமாய்க்கொண்டு இவ்விபூதியிலேயிருக்கையாகிற ஸம்ஸாரஸம்பந்தம்; ப்ராப்யமான அபேக்ஷிதம் பகவதநுபவாதிகளுக்கு அநுகூலமான பரமபதத்தை ப்ராபிக்கையென்கை.

'முக்தர்க்கும்' இத்யாதி. அதாவது, நிவ்ருத்த ஸம்ஸாரராயும், அஸ்ப்ருஷ்ட ஸம்ஸாரகந்தராயும், பகவதநுபவ ஜநித ப்ரீதிகாரித கைங்கர்யபரராயுமிருக்கும் முக்தர்க்கும் நித்யர்க்கும் விரோதி, வகுத்த சேஷியான ஸர்வேச்வரன் திருவடிகளிலே ஸ்வரூபாநுரூபமாகப் பண்ணிக்கொண்டு போரும் கைங்கர்யத்துக்கு வரும் விச்சேதம்; அபேக்ஷிதம் உத்தரோத்தரம் அடிமைசெய்து செல்லுகையாகிற கைங்கர்ய வ்ருத்தியென்கை,

ஆக இப்படி அதிகாராநுகுணம் விரோதியைப்போக்கி அபேக்ஷிதத்தைக் கொடுக்கையால் ஈச்வரனே ஸர்வரக்ஷகனென்னுமிடம் சொல்லிற்றாயிற்று.

'இப்படி ஈச்வரனேயோ பின்னையெல்லாரையும் ரக்ஷிக்கிறவன், லோகத்திலே மாதாபித்ரு ப்ரப்ருதி தேவதாந்தர பர்யந்தமாக ரக்ஷகராய்ப் போருகிறவர்கள் பலருமில்லையோ' என்ன அருளிச்செய்கிறார் 'ஈச்வரனை ஒழிந்தவர்கள் ரக்ஷகரல்லரென்னுமிடம் ப்ரபந்நபரித்ராணத்திலே சொன்னோம்' என்று.

மூ. 39. 'ஈச்வரனையொழிந்தவர்கள் ரக்ஷகரல்லர்' என்னுமிடம் ப்ரபந்நபரித்ராணத்திலே சொன்னோம்.

வ்யா:—அதாவது-நிருபாதிக பந்துவாய், ஸர்வகாலமும் கைவிடாதே நோக்கிக்கொண்டு போரும் ஸர்வேச்வரனை

யொழிந்த ஔபாதிக பந்துக்களான மாதாபித்ராதிகளும், அர்வாசீநரான தேவதாந்தரங்களும் ரக்ஷகரல்லரென்னு மிடம் ஸஹேதுகமாக **ப்ரபந்நபரித்ராண** *மென்கிற ப்ரபந்தத்திலே சொன்னோம்; அதிலே கண்டுகொள்வதென்கை.*

அநந்தரம், அர்த்தபலத்தாலே இப்பதத்தில் அநுஸந்திக்கப்படும் ஶ்ரிய:பதித்வத்தை அருளிச்செய்கிறார், 'ரக்ஷிக்கும்போது' என்று தொடங்கி,

மூ. 40. ரக்ஷிக்கும்போது பிராட்டி ஸந்நிதி வேண்டுகையாலே இதிலே, ஸ்ரீஸம்பந்தமும் அநுஸந்தேயம்.

வ்யா:— *அதாவது- 64,* **"लक्ष्म्या सह हृषीकेशो देव्या कारुण्य - रूपया । रक्षकस्सर्वसिद्धान्ते वेदान्तेऽपि च गीयते॥" (லக்ஷ்ம்யா ஸஹ ஹ்ருஷீகேசோ தேவ்யா காருண்யருபயா - ரக்ஷகஸ்ஸர்வஸித்தாங்தே வேதாங்தேபி ச கீயதே)** *என்கிறபடியே ரக்ஷகனை ஈச்வரன் சேதநரை ரக்ஷிக்கும் தசையில் இவர்களுடைய அபராதங்களைக் கண்டாதல், தன் ஸ்வாதந்த்ர்யத்தாலே யாதல் உபேக்ஷியாமற் செய்கைக்கு உறுப்பான க்ருபையை ஜநிப்பிக்கும் புருஷகாரபூதையான பிராட்டி ஸந்நிதி அவச்யாபேக்ஷித மாகையாலே, ரக்ஷகனை அவனைச்சொல்லுகிற இவ்வகாரத்திலே அவனுடைய லக்ஷ்மீஸம்பந்தமும் அநுஸங்தேயமென்கை. 'லக்ஷ்மீ' என்னுதே 'ஸ்ரீ' என்றது 65***"श्रयत इति श्रीः"(ச்ரயத இதி ஸ்ரீ:)** *என்கிறபடியே அவனை நித்ய ஸேவை பண்ணுகையாலே அவனோடு இவளுக்கு உண்டான அவிநாபாவமும், 66***"श्रीयत इति श्रीः" (ஸ்ரீயத இதி ஸ்ரீ:)** *என்கிறபடியே சேதநருக்கு இவள் நித்யஸேவ்யையாயிருக்குமென்னுமதுவும் தோற்றுகைக்காக.*

இன்னமும் இவ்வகாரத்தில் ஈச்வரனுடைய லக்ஷ்மீ ஸம்பந்தம் நியமேந தோற்றுமென்னுமத்தை ஆப்தவசநத்தாலே தர்சிப்பிக்கிறார் 'அத்ர' இத்யாதியால்.

மூ. 41. அத்ர பகவத்ஸேநாபதிமிச்ரர் வாக்யம்:–அவன் மார்புவிட்டுப் பிரியில் இவ்வக்ஷரம் விட்டுப்பிரிவது.

வ்யா:—அதாவது, இவ்விடத்திலே ஜ்ஞாநாதிகரான ஸ்ரீஸேநாபதிசீயர் அருளிச்செய்யும் வார்த்தை:- †"அகலகில்லேனிறையும்' என்று அவன் திருமார்பிலே நித்யவாஸம் பண்ணும் இவள், அம்மார்பைவிட்டுப் பிரியிலாயிற்று, அவனுக்கு ப்ரதிபாதகமான இவ்வக்ஷரத்தைவிட்டுப் பிரிவதென்று" என்கை. 'என்று' என்கிற இத்தனையுங் கூட்டாத போது, கீழோடு இவ்வாக்யம் அந்வயியாது.

இத்தால், அவன் திருமார்பில் ஸம்பந்தம் இவளுக்கு நித்யமாகையாலே அவன் தோற்றுமிடத்திலே இவளும் தோற்றுகை நிச்சிதமாகையால், அவன் திருமார்பில் அந்வயத்தோபாதி அவனுக்கு வாசகமான அகாரத்தில் அந்வயமும் இவளுக்கு நித்யமென்றதாயிற்று.

இன்னமும் இவ்வர்த்தத்தை ஸ்திரீகரிக்கைக்காக ஈச்வர சேதந வாசகங்களான அகார மகாரங்களிரண்டிலும் இவளுக்கு உண்டான அநவரதாந்வயத்தை ஸத்ருஷ்டாந்தமாக அருளிச்செய்கிறார் 'பர்த்தாவினுடைய' என்றுதொடங்கி.

மூ. 42. பர்த்தாவினுடைய படுக்கையையும் ப்ரஜையினுடைய தொட்டிலையும் விடாதேயிருக்கும் மாதாவைப்போலே ப்ரதம சரமபதங்களை விடாதேயிருக்கும் இருப்பு.

வ்யா:—அதாவது, சேஷபூதையான தன் ஸ்வரூபத்துக்குச் சேரும்படி அவனை ரக்ஷிப்பிக்கைக்காகப் பர்த்தாவினுடைய படுக்கையையும் விடாதே ரக்ஷகையான தன் ஸ்வரூபத்துக்கும் போரும்படி தத்ரக்ஷணம் பண்ணுகைக்காக ப்ரஜையினுடைய தொட்டிலையும் விடாதே இருக்கும் மாதாவானவளைப்போலே, இவளும் பர்த்ருபூதனை ஈச்வரனுக்கு ப்ரதிபாதகமாயிருந்துள்ள ப்ரதமபதமான அகாரத்தையும், ப்ரஜாபூதரான சேதநர்க்கு ப்ரதிபாதகமாயிருந்துள்ள சரமபத

† திருவாய் 6-10-10.

மான மகாரத்தையும் தத்தத்விஷயத்தில் தனக்கு உண்டான ஸம்பந்தத்துக்கு ஈடாக ரஸிப்பிக்கை ரக்ஷிக்கையாகிற இவற்றைப்பற்ற, விடாதேயிருக்குமிருப்பு என்கை.

கீழ்ச்சொன்ன த்ருஷ்டாந்தத்தை ஒருவிசேஷ நிஷ்டமாக்கி அருளிச்செய்கிறார் 'ஸ்ரீநந்தகோபரையும் க்ருஷ்ணனையும் விடாத' என்று தொடங்கி.

மு. 43. ஸ்ரீநந்தகோபரையும் க்ருஷ்ணனையும் விடாத யசோதைப்பிராட்டியைப்போலே.

வ்யா:— *அதாவது-பார்யையான தன் ஸ்வரூபாநுகுணமாக ரஸிப்பிக்கைக்காக பர்த்தாவான ஸ்ரீநந்தகோபரையும் விடாதே, மாதாவான தன்ஸ்வரூபாநுகுணமாக ரக்ஷிக்கைக்காகப் புத்ரனை க்ருஷ்ணனையும் விடாதே †"அம்பரமே" என்கிற பாட்டிற் சொல்லுகிறபடியே மத்யேவர்த்திக்கும் யசோதைப்பிராட்டியைப்போலே ப்ரதம சரமபத வாச்யரான ஈச்வர சேதனர்களிருவரையும் விடாதே இவளும் வர்த்திக்கும்படி யென்கை.*

'ஈச்வரசேஷத்வமாத்ர மொழியப் பிராட்டிக்கும் சேஷமென்னுமிடம் இவ்வாசகத்தில் இன்றிக்கேயிருக்கச்செய்தேயும், இவளுக்கும் சேஷம் என்று நாம்கொள்ளுகிறபடி எங்ஙனே?' என்ன, அருளிச்செய்கிறார் 'ஒருவன்' என்று தொடங்கி.

மு. 44. ஒருவனடிமைகொள்ளும்போது க்ருஹிணிக்கென்றன்றே ஆவணவோலையெழுதுவது; ஆகிலும், பணிசெய்வது க்ருஹிணிக்கிறே. அதுபோலே நாம் பிராட்டிக்கு அடிமையாயிருக்கும்படி.

வ்யா:— *அதாவது, லோகத்திலே ஒருவன் தாஸதாஸிகள் முதலானதோரடிமையைக் கொள்ளும்போது தனக்கென்றே*

† திருப்பாவை-17.

எழுதிக்கொள்ளுமதொழிய, தன் க்ருஹிணிக்கென்றன்று விலையோலை எழுதிக்கொள்வது; ஆயிருக்கச்செய்தேயும், அடிமைத்தொழில் செய்வது க்ருஹிணிக்கிறே; அதுபோலே ஈச்வர சேஷம் என்னும் அளவை இவ்வகாரம் சொல்லிற்றேயாகிலும் நாம் பிராட்டிக்கு அடிமையாயிருக்கும்படி என்கை.

கீழ்ச்சொன்ன ஹேதுக்களையெல்லாம் அநுவதித்துக்கொண்டு ஈச்வரனுக்கும், பிராட்டிக்கும் ஒருகாலும் ப்ருதக்ஸ்த்தியில்லாமையை அருளிச்செய்கிறார் 'ஆகப் பிரித்து நிலையில்லை' என்று.

மூ. 45. ஆக, பிரித்து நிலையில்லை.

இந்த ப்ருதக்ஸ்தித்யபாவத்துக்கு இரண்டு த்ருஷ்டாந்தமருளிச்செய்கிறார் 'ப்ரபையை' என்றுதொடங்கி.

மூ. 46. ப்ரபையையும், ப்ரபாவானையும், புஷ்பத்தையும் மணத்தையும்போலே.

வ்யா:—அதாவது, ப்ரபைக்கும் ப்ரபாவானுக்கும் ப்ருதக்ஸ்திதி இல்லாதாப்போலவும் புஷ்பத்துக்கும் பரிமளத்துக்கும் ப்ருதக்ஸ்திதி இல்லாதாப்போலவுமென்கை. 67. **"अनन्या राघवेणाहं भास्करेण प्रभा यथा"(அநந்யா ராகவேணாஹம் பாஸ்கரேண ப்ரபா யதா)**68**'अनन्या हि मया सीता भास्करेण प्रभा यथा'(அநந்யா ஹி மயா ஸீதா பாஸ்கரேண ப்ரபா யதா)**என்று ப்ரபாப்ரபாவான்களைப்போலே இருவருக்கும் ப்ருதக்ஸ்திதி இல்லையென்னுமிடம் இருவர் வாக்காலும் சொல்லப்பட்டதிறே. 69.**"प्रसूनं पुष्यन्तीमपि परिमलर्द्धिं जिगदिषुः"(ப்ரஸூநம் புஷ்யந்தீமபி பரிமலர்த்திம் ஜிகதிஷு:)** என்கிறவிடத்திலே ஈச்வரனை புஷ்பஸ்தாநேயாகவும்,பிராட்டியைப் பரிமளஸ்தாநேயாகவும் பட்டரருளிச்செய்கையாலே, புஷ்ப பரிமளங்களுக்குப்போலே, இருவர்க்கும் ப்ருதக்ஸ்திதி இல்லையென்னுமிடம் அர்த்தாத் ஸித்தம்.

இந்த ப்ருதக்ஸ்தித்யபாவத்தை அநுவதித்துக்கொண்டு, இச்சேர்த்தியே சேதநர்க்கு உத்தேச்யமாய்த் தலைக்கட்டின

படியை அருளிச்செய்கிறார் 'ஆக, இச்சேர்த்தி உத்தேச்யமாய்விட்டது' என்று.

மூ. 47. ஆக, இச்சேர்த்தி உத்தேச்யமாய்விட்டது.

வ்யா:— *'இச்சேர்த்தி உத்தேச்யம்' என்கையாலே, இவர்களைத் தனித்தனியே விரும்புகை உத்தேச்யம் அன்று என்றபடி. இருவரையும் பிரித்து விரும்பினால், ராவண சூர்ப்பணகைகளுக்குப்போலே, அநர்த்தமே பலிக்குமத்தனை. இருவரையும் பற்றினலிறே, ஸ்ரீவிபீஷணாழ்வானைப்போலே வாழலாவது.*

இனிமேல், இதில் விபக்த்யர்த்தம் அருளிச்செய்வதாக ப்ரதமம் விபக்திதன்னை நிர்த்தேசிக்கிறார் 'இதிலே சதுர்த்தி யேறிக் கழியும்' என்று.

மூ. 48. இதிலே, சதுர்த்தியேறிக்கழியும்.

வ்யா:— *அதாவது–இவ்வகாரத்திலே சதுர்த்தியேறி* * **"ஸுபாம் ஸுலுக்"** **(ஸுபாம் ஸுலுக்)** *இத்யாதி ஸூத்ரத்தாலே லுப்தமாய்ப்போமென்கை.*

'விபக்த்யந்தரமெல்லாங்கிடக்க, இவ்வகாரத்தில் சதுர்த்தியேறினபடிதான் எங்ஙனே?' என்கிற சங்கையை அநுவதிக்கிறார் 'சதுர்த்தியேறினபடியென்? என்னில்' என்று.

மூ. 49. 'சதுர்த்தியேறினபடியென்?' என்னில்,–

அதுக்கு உத்தரம் அருளிச்செய்கிறார் 'நாராயண பதத்துக்கு ஸங்க்ரஹமாயிருக்கையாலே' என்று.

மூ. 50. நாராயணபதத்துக்கு ஸங்க்ரஹமாயிருக்கையாலே.

வ்யா:—*அதாவது-இவ்வகாரம், சதுர்த்யந்தமான நாராயணபதத்துக்கு ஸங்க்ரஹமாகையாலே, இதிலும் சதுர்த்தி*

யேறிற்றென்கை. இங்ஙன் அன்றாகில், இரண்டுக்கும் ஸங்க்ரஹவிவரணத்வம் ஸித்தியாதிறே.

'இத்தாற்சொல்லுகிற அர்த்தம்தான் எது?' என்ன, அருளிச்செய்கிறார் 'இத்தால், ஈச்வரனுக்கு சேஷமென்கிறது' என்று.

ஸூ. 51. இத்தால், ஈச்வரனுக்கு சேஷமென்கிறது.

வ்யா:-அதாவது, இதுதான் 70. **"तादर्थ्ये चतुर्थी" (தாதர்த்த்யே சதுர்த்தீ)** ஆகையாலே இச்சதுர்த்தியால் ஈச்வரனுக்கு சேஷமென்னுமிடம் சொல்லுகிறதென்கை.

71. **"सर्वं परवशं दुःखं" (ஸர்வம் பரவசம் து:க்கம்)**72. **"सेवा श्ववृत्तिः" (ஸேவா ச்வவ்ருத்தி:)** என்கிற லௌகிக ந்யாயத்தைக்கொண்டு சேஷத்வத்தை து:க்கரூபமாக நினைத்திருக்குமவர்கள் பண்ணும் ப்ரச்நத்தை அநுவதிக்கிறார் 'சேஷத்வம் து:க்கரூபமாகவன்றோ நாட்டில் காண்கிறதென்னில்' என்று.

ஸூ. 52. 'சேஷத்வம் து:க்கரூபமாகவன்றோ நாட்டிற் காண்கிறது' என்னில்,-

அதுக்கு உத்தரம் அருளிச்செய்கிறார் 'அந்த நியமமில்லை' என்றுதொடங்கி.

ஸூ. 53. அந்த நியமம் இல்லை; உகந்த விஷயத்துக்கு சேஷமாயிருக்கும் இருப்பு ஸுகமாகக் காண்கையாலே

வ்யா:-அதாவது, நாடுதன்னிலே / "பணிமின் றிருவருள்" இத்யாதிப்படியே அபிமத விஷயத்துக்கு சேஷமாயிருக்குமிருப்பு ஸுகரூபமாகக் காண்கையாலே சேஷத்வமாகில் து:க்கரூபமாயிருக்குமென்கிற நியமமில்லையென்கை.

/ திருவாய் 4-1-5.

'அபிமத விஷயத்தில் சேஷத்வம் ஸுகமாகிறது, அவ்விஷயத்தில் குணம் அடியாக வந்ததாகையாலேயன்றோ' என்ன, அருளிச்செய்கிறார், 'அகாரத்திலே' என்றுதொடங்கி.

மூ. 54. அகாரத்திலே கல்யாண குணங்களைச் சொல்லுகையாலே, இந்த சேஷத்வமும் குணத்தாலே வந்தது.

வ்யா—*அதாவது-ஈச்வரனுடைய ரக்ஷகத்வப்ரதிபாதகமான அகாரத்திலே அந்த ரக்ஷணோபயோகியான கல்யாண குணங்களைச் சொல்லுகையாலே, ஈச்வர விஷயமான இந்த சேஷத்வமும் அந்த குணங்களடியாக வந்ததென்கை. ஆகையால், இதுவும் ஸுகரூபமாயிருக்கக் குறையில்லையென்று கருத்து.*

'ஆனால், ஔபாதிகமான இது ஸ்வரூபமன்றே?' என்ன, அருளிச்செய்கிறார் 'சேஷத்வமே ஆத்மாவுக்கு ஸ்வரூபம்' என்று.

மூ. 55. சேஷத்வமே ஆத்மாவுக்கு ஸ்வரூபம்.

வ்யா:—*அதாவது-உகந்தவிஷயத்தில் இதன்ஸுகரூபத்துக்கு குணக்ருதத்வத்தை ஹேதுவாகச் சொல்லுகையாலே அந்த குணக்ருதத்வம் இங்கும் உண்டென்னு மிடத்துக்குச் சொன்ன இத்தனையொழிய, அர்த்த ஸ்திதியை நிரூபித்தால் 73.* **"स्वत्वमात्मनि सञ्जातं स्वामित्वं ब्रह्मणि स्थितं" (ஸ்வத்வமாத்மநி ஸஞ்ஜாதம்ஸ்வாமித்வம் ப்ரஹ்மணி ஸ்திதம்)** *74.* **"आत्मदास्यं हरेः स्वाम्यं स्वभावञ्च सदा स्मर" (ஆத்மதாஸ்யம் ஹரேஸ் ஸ்வாம்யம் ஸ்வபாவஞ்ச ஸதா ஸ்மர)** *75* **"दासभूताः स्वतः सर्वे ह्यात्मानः परमात्मनः। नान्यथा लक्षणं तेषां बन्धे मोक्षे तथैव च॥" (தாஸபூதாஸ் ஸ்வதஸ் ஸர்வே ஹ்யாத்மாந: பரமாத்மந: நாந்யதா லக்ஷணந்தேஷாம் பந்தே மோக்ஷே ததைவ ச)** *இத்யாதிகளிலே இத்தை ஆத்மாவுக்கு ஸ்வாபாவிகமாகச் சொல்லுகையாலே, சேஷத்வமே ஆத்மாவுக்கு ஸ்வரூபமென்கை.*

'சேஷத்வமேயென்று அவதரிப்பானென்? ஜ்ஞாநாநந்த ஸ்வரூபமான ஆத்மவஸ்துவுக்கு அல்லாதபோதும் ஸ்வரூபம் இல்லையோ?' என்ன, அருளிச்செய்கிறார் 'சேஷத்வமில்லாத போது ஸ்வரூபமில்லை' என்று.

மூ. 56. சேஷத்வமில்லாதபோது ஸ்வரூபமில்லை.

வ்யா:—சேஷத்வமில்லாதபோது ஆத்மாபஹாரரூபமான ஸ்வாதந்த்ர்யபுத்தி நடக்கையாலே, ஸ்வரூபம் அழிந்துவிடும் என்னுமத்தை தர்ஶிப்பிக்கிறார், மேலிரண்டு வாக்யத்தாலே:—'ஆத்மாபஹாரமாவது' என்றுதொடங்கி.

மூ. 57. ஆத்மாபஹாரமாவது ஸ்வதந்த்ரமென்கிற நினைவு; ஸ்வதந்த்ரமாம்போது இல்லையாய்விடும்.

வ்யா:—அதாவது, 76. "**योऽन्यथा सन्तमात्मानमन्यथा प्रतिपद्यते। किं तेन न कृतं पापं चोरेणात्मापहारिणा**" (**யோऽந்யதா ஸந்தமாத்மாநமந்யதா ப்ரதிபத்யதே। கிந்தேந ந க்ருதம் பாபம் சோரேணாத்மாபஹாரிணா**) என்று ஸர்வபாபமூலமாகச் சொன்ன ஆத்மாபஹாரமாவது தன் ஸ்வரூபம் ஸ்வதந்த்ரம் என்கிற ப்ரதிபத்தி; ஸ்வதந்த்ரம் ஆமளவில் 77. "**असन्नेव**" (**அஸந்நேவ**) என்கிறபடியே ஸ்வரூபம் இல்லையாய்விடும் என்கை. ஆகையால் 'சேஷத்வமில்லாதபோது ஸ்வரூபமில்லை' என்னத்தட்டில்லை என்று கருத்து.

ஆக, ப்ரக்ருத்யர்த்தமான ஈச்வரனுடைய காரணத்வமும், தாத்வர்த்தமான ரக்ஷகத்வமும், அர்த்தபலத்தால் வந்த ஶ்ரிய:பதித்வமும், ப்ரத்யயஸித்தமான சேதனசேஷத்வ ப்ரதிஸம்பந்தியான சேஷித்வமும் ஆகிற அகாரார்த்தத்தை அருளிச்செய்தாராயிற்று.

அநந்தரம் மத்யமாக்ஷரமான உகாரத்துக்கு அர்த்தம் அருளிச்செய்வதாக உபக்ரமிக்கிறார் 'ஸ்தாநப்ரமாணத்தாலே உகாரம் அவதாரணார்த்தம்' என்று.

மூ. 58 ஸ்தாநப்ரமாணத்தாலே உகாரம் அவதாரணார்த்தம்

வ்யா:—*அதாவது*- *78.* **"तदेव भूतं तदु भव्यमा इदं (ததேவ பூதந்தது பவ்யமா இதம்)** *என்றும், 79* **"तदेवाग्निस्तद्वायुस्तत्सूर्य-स्तदु चन्द्रमाः" (ததேவாக்நிஸ்தத்வாயுஸ் தத் ஸூர்யஸ்தது சந்த்ரமா:)** *என்றும் இத்யாதிகளிலே ஏவகாரஸ்தாநத்திலே உகாரத்தை ப்ரயோகிக்கக் காண்கையாலே, ஸ்தாநப்ரமாணத்தாலே உகாரம் அவதாரணத்தை அர்த்தமாக உடைத்தாயிருக்குமென்கை.*

'அவதாரணத்துக்கு அர்த்தம் அயோகவ்யவச்சேதமாதல் அந்யயோகவ்யவச்சேதமாதல் ஆகையாலே, இவ்வவதாரணத்தாற் சொல்லுகிறது எது?' என்ன, அருளிச் செய்கிறார் 'இத்தால், பிறர்க்கு சேஷமன்றென்கிறது' என்று.

மூ. 59. இத்தால், பிறர்க்குசேஷம் அன்று என்கிறது.

வ்யா:—*அதாவது,- அவதாரண வாசகமான இவ்வுகாரத்தால் கீழ் ஈச்வர சேஷமாகச் சொன்ன இவ்வாத்மவஸ்து, அந்யர்க்கு சேஷமன்று என்னுமிடத்தைச் சொல்லுகிறதென்கை. சதுர்த்தியாலே ஈச்வரசேஷத்வம் ப்ரதிபாதிதமாகச்செய்தே, அந்யசேஷத்வம் ப்ரஸ்துதமாமோ? என்னில் லோகத்திலே ஒருவனுக்கு சேஷமான க்ருஹக்ஷேத்ர புத்ர தாஸாதிகள், வேறேயுஞ் சிலர்க்கு சேஷமாயிருக்கக் காண்கையாலே, அப்படிப்பட்ட அந்யசேஷத்வம் இந்த ஸ்தலத்திலும் உண்டோ? என்று ஒரு சங்கை உதிக்குமிறே; ஆகையாலே தாத்ருசமான அந்யசேஷத்வம் இங்கில்லை என்னுமிடத்தை ப்ரதிபாதிக்கிறது உகாரம்.*

அங்ஙனன்றிக்கே, இவ்வுகாரத்தாலே லக்ஷ்மீசேஷத்வம் சொல்லுகிறது என்பாரும் உண்டென்கிறார் 'பெரியபிராட்டியார்க்கு சேஷமென்கிறது என்றுஞ் சொல்லுவர்கள்' என்று.

மூ. 60. பெரியபிராட்டியார்க்கு சேஷமென்கிறதென்றுஞ் சொல்லுவர்கள்.

வ்யா:-*அதாவது*-80"अकारश्चित्स्वरूपस्य विष्णोर्वाचक इष्यते। उकारश्चित्स्वरूपायाः श्रियो वाचि तथा विदुः॥ मकारस्तु तयोर्दास इति प्रणवलक्षणम्॥"(அகாரச்சித்ஸ்வருபஸ்ய விஷ்ணோர்வாசக இஷ்யதே।உகாரச்சித் ஸ்வருபாயாச் ச்ரியோ வாசிததா விது: மகாரஸ்துதயோர் தாஸ இதி ப்ரணவலக்ஷணம்) *என்றும், 81.*"अकारेणोच्यते विष्णुः सर्वलोकेश्वरो हरिः। उद्धृता विष्णुना लक्ष्मीरुकारेणोच्यते सदा॥ मकारस्तु तयोर्विप्र श्रीनारायणयोस्सदा। आत्मनः शेषभूतस्य वाचकः श्रुतिचोदितः॥" (அகாரேணோச்யதே விஷ்ணுஸ் ஸர்வலோகேச்வரோ ஹரி:- உத்த்ருதா விஷ்ணுநா லக்ஷ்மீருகாரேணோச்யதே ஸதா - மகாரஸ்து தயோர்விப்ர ஸ்ரீநாராயணயோஸ்ஸதா-ஆத்மநச்சேஷபூதஸ்ய வாசக: ச்ருதி சோதித:) *என்றும் இத்யாதிகளாலே பகவச்சாஸ்த்ரத்திலே அகாரத்தை பகவத்வாசகமாகவும், உகாரத்தை லக்ஷ்மீவாசகமாகவும், மகாரத்தை ததுபயசேஷபூத ஜீவவாசகமாகவுஞ் சொல்லுகையாலே, உகாரத்தை அவதாரணவாசகமாகக் கொள்ளாதே, லக்ஷ்மீவாசகமாகக்கொண்டு, இவ்வுகாரத்தாலே பெரியபிராட்டியார்க்கு சேஷமென்கிறதென்றும் நிர்வஹிப்பர்களென்கை.*

அத்தைப் பற்றவும் பூர்வயோஜனையே முக்யமென்னும் அத்தையருளிச்செய்கிறார் 'அதிலும் அந்யசேஷத்வம் கழிகையே ப்ரதாநம்' என்று.

மூ. 61. அதிலும் அந்யசேஷத்வம் கழிகையே ப்ரதாநம்.

வ்யா:–*அதாவது, பெரியபிராட்டியார்க்கு சேஷமாகையாகிற அதிலுங்காட்டில் கீழ்ச்சொன்ன பகவச் சேஷத்வத்துக்கு விரோதியான அந்யசேஷத்வம் கழிகையே ப்ரதாநாபேக்ஷிதம் என்கை.*

அந்யசேஷத்வமிப்படி க்ரூரமோ? என்ன, க்ரௌர்யத்தை ஸத்ருஷ்டாந்தமாக அருளிச்செய்கிறார் 'தேவர்களுக்கு' என்று தொடங்கி.

மு. 62. தேவர்களுக்கு சேஷமான புரோடாசத்தை நாய்க்கு இடுமாபோலே, ஈச்வரசேஷமான ஆத்ம வஸ்துவை ஸம்ஸாரிகளுக்கு சேஷமாக்குகை.

வ்யா:— *அதாவது-ஆராத்யரான இந்த்ராதி தேவர்களுக்கு போக்யதயா சேஷமாகக் கல்பிதமான புரோடாசத்தை தர்சநஸ்பர்சநாதிகளுக்கு அநர்ஹமாம்படி நிஹீநமாயிருக்கிற நாய்க்கு இடுமாபோலே இருப்பதொன்று, ப்ராப்தசேஷியான ஈச்வரனுக்கு சேஷமான ஆத்ம வஸ்துவை ஸர்வப்ரகாரத்தாலும் ஹேயரான ஸம்ஸாரிகளுக்கு சேஷமாக்குகை யென்கை.*

'இப்படி க்ரூரமான அந்யசேஷத்வம் கழிகையே ஆத்மாவுக்கு ப்ரதாநாபேக்ஷிதம்' என்று கீழ்ச்சொன்ன அர்த்தத்தை ஸ்திரீகரிக்கிறார் 'பகவச்சேஷத்வத்திலும் அந்ய சேஷத்வம் கழிகையே ப்ரதாநம்' என்று.

மு. 63. பகவச்சேஷத்வத்திலும் அந்யசேஷத்வம் கழிகையே ப்ரதாநம்.

வ்யா:—*அதாவது-லக்ஷ்மீசேஷத்வத்திலுங்காட்டில் ப்ரதாநம் என்ற அளவேயன்று, பகவான் தனக்கு சேஷமாயிருக்குமதிலுங்காட்டில் அந்யவிஷயத்தில் சேஷத்வம் கழிகையே ஆத்மாவுக்கு ப்ரதாநாபேக்ஷிதமென்கை.*

இதுக்கு ப்ரமாணம் காட்டுகிறார் "'மறந்தும்புறந்தொழா மாந்தர்' என்கையாலே" என்று.

மு. 64. "மறந்தும்புறந்தொழாமாந்தர்" என்கையாலே.

வ்யா:— *அதாவது-யமகிங்கரஸம்வாதத்தைத் திருமழிசைப்பிரான் அருளிச்செய்த || "திறம்பேன்மின்கண்டீர்" என்கிற பாட்டிலே பாகவத லக்ஷணஞ்சொல்லுகிறவளவில், 'திருவடி தன்னாமம் மறந்தும் புறந்தொழாமாந்தர்' என்று ஸ்வாமியுடைய திருநாமத்தை மறந்தார்களாகிலும் மற்றொரு விஷயத்தில் சேஷவ்ருத்திபண்ணாதவர்கள் என்று சொல்லுகையாலே யென்கை.*

ஈச்வரசேஷமான ஆத்மவஸ்துவுக்கு ஸ்வசேஷத்வ பரசேஷத்வங்களிரண்டும் அந்யசேஷத்வமாகையாலே, உபயத்தையும் இவ்வுகாரம் கழிக்கிறதென்று சொல்லி நிகமிக்கிறார் 'இத்தால், தனக்கும் பிறர்க்கும் உரித்தன்றென்கிறது' என்று

மூ. 65. இத்தால், தனக்கும் பிறர்க்கும் உரித்தன்று என்கிறது.

வ்யா:— *அதாவது-அந்யசேஷத்வநிவர்த்தகமான இவ்வுகாரத்தாலே, அந்யரில் அந்யதமத்வம் அவிசிஷ்டமாகையாலே இவ்வாத்மவஸ்து தனக்கும் உரித்தன்று, தன்னையொழிந்த ஸம்ஸாரிகளுக்கும் உரித்தன்று என்னுமிடஞ் சொல்லுகிறதென்கை.*

ஆக, உகாரார்த்தத்தை அருளிச்செய்தாராயிற்று. அநந்தரம், த்ருதீயாக்ஷரமான மகாரார்த்தத்தை அருளிச்செய்கிறார் 'மகாரம்' என்று தொடங்கி.

மூ. 66. மகாரம், இருபத்தஞ்சாம் அக்ஷரமாய் ஜ்ஞாநவாசியுமாய் இருக்கையாலே, ஆத்மாவைச் சொல்லுகிறது.

வ்யா:—*அதாவது, 82*"**भूतानि च कवर्गेण चवर्गेणेन्द्रियाणि च । टवर्गेण तवर्गेण ज्ञानगन्धादयस्तथा ॥ मनः पकारेणैवोक्तं फकारेणत्वहङ्कृतिः । बकारेण**

|| நான்-திருவ-98.

भकारेण महान् प्रकृतिरुच्यते। आत्मा तु स मकारेण पञ्चविंशः प्रकीर्तितः॥'' (பூதாநி ச கவர்கேண சவர்க்கேணேந்த்ரியாணி ச। டவர்கேண தவர்கேண ஜ்ஞாநகந்த்தாதயஸ்ததா॥ மந: பகாரேணைவோக்தம் பகாரேண த்வஹம்க்ருதி:। பகாரேண பகாரேண மஹாந் ப்ரக்ருதிருச்யதே॥ ஆத்மா து ஸ மகாரேண பஞ்சவிம்ச: ப்ரகீர்த்தித:) *என்கிறபடியே ப்ருதிவ்யாதி ப்ரக்ருத்யந்தமான இருபத்துநாலு தத்வத்துக்கும் வாசகமாயிருந்துள்ள ககாராதிபகாராந்தமான இருபத்துநாலு அக்ஷரமும் போலன்றிக்கே மகாரம் இருபத்தஞ்சாமக்ஷரமாய்,* * **''मन-ज्ञाने''** (மந ஜ்ஞாநே) *என்கிற தாதுவிலேயாதல்,* (மநு அவபோதநே) *என்கிறதாதுவிலேயாதல் நிஷ்பந்நமாகையாலே, ஜ்ஞாநவாசியுமாயிருக்கையாலே, 84.* **''पञ्चविंशोयं पुरुषः''** (பஞ்ச விம்சோऽயம் புருஷ:) *83* **''पञ्चविंश आत्मा भवति''** (பஞ்சவிம்ச ஆத்மா பவதி) *என்கிறபடியே பஞ்சவிம்சகனாய் 85.* **''विज्ञानात्मा पुरुषः''** (விஜ்ஞாநாத்மா புருஷ:) *86* **विज्ञातारमरेकेन विजानीयात्'** (விஜ்ஞாதாரமரே கேந விஜாநீயாத்) *என்கிறபடியே ஜ்ஞாந ஸ்வரூபனுமாய் ஜ்ஞாந குணகனுமாயிருக்கிற ஆத்மாவைச் சொல்லுகிறதென்கை.*

கீழ்ச்சொன்ன சேஷத்வம் ஸர்வஸாதாரணமாகையாலே த்ரிவிதாத்மவர்க்கத்தையும் இதிலே சொல்லவேண்டுமாகையாலே, அருளிச்செய்கிறார் 'இதுதான் ஸமஷ்டிவாசகம்' என்று.

மூ. 67. இதுதான் ஸமஷ்டிவாசகம்.

வ்யா:—*அதாவது, இப்படி ஆத்மவாசகமான இம்மகாரந்தான் ஆத்மஸமஷ்டிக்கு வாசகமென்கை. 'ஏகவசநம் ஸமஷ்டி வாசகமோ?' என்கிற ஶங்கையிலே அருளிச்செய்கிறார் 'ஜாத்யேகவசநம்' என்று.*

மூ. 68. ஜாத்யேகவசநம்.

வ்யா:-*அதாவது, வ்ரீஹிஸமூஹத்தைச் சொல்லுகிறவன், 'இது ஒரு நெல்' என்றால் அந்த ஏகவசநம், ஜாதிபரமானாற்போலே, இதுவும் ஆத்மஜாதிபரமான ஏகவசநமென்கை.*

'இம்மகாரத்தால், ஆத்மாவினுடைய எவ்வாகாரஞ் சொல்லுகிறது?' என்ன, அருளிச்செய்கிறுர் 'இத்தால்' என்று தொடங்கி.

மூ. 69. இத்தால், ஆத்மா ஜ்ஞாதாவென்று, தேஹத்தில் வ்யாவ்ருத்தி சொல்லிற்ருயிற்று.

வ்யா:—அதாவது—பஞ்சவிம்சாக்ஷரமாய் ஜ்ஞாநவாசியுமாயிருந்துள்ள இம்மகாரத்தால், 'சேஷத்வாச்ரயமான ஆத்மா ஜ்ஞாநாச்ரயபூதனுனவன்' என்று, அசேதநமான தேஹத்திற்காட்டில் ஆத்மாவின் வ்யாவ்ருத்தி சொல்லிற்ருயிற்று என்கை.

'தேவோऽஹம், மநுஷ்யோऽஹம், ஸ்த்தூலோऽஹம், க்ருசோऽஹம் என்று தேஹத்திலே அஹம்புத்தி வ்யவஹாரங்கள் நடவாநிற்க, அஹமர்த்தபூதனுன ஆத்மா, தேஹத்தில் வ்யாவ்ருத்தனென்று சொல்லுகிறபடிதான் எங்ஙனே?' என்ன, அருளிச்செய்கிறுர் 'தேஹத்தில் வ்யாவ்ருத்தி தத்வசேகரத்திலே சொன்னேம்' என்று.

மூ. 70. தேஹத்தில் வ்யாவ்ருத்தி தத்வசேகரத்திலே சொன்னேம்,

வ்யா:—அதாவது—அநேக ஹேதுக்களாலே தேஹத்தினுடைய அநாத்மத்வத்தை ஸாதியாநின்றுகொண்டு, ஆத்மாவினுடைய தத்வ்யாவ்ருத்தியைத் தத்வசேகரமாகிற ப்ரபந்தத்திலே வ்யக்தமாகச் சொன்னேம்; அதிலே கண்டுகொள்வதென்கை.

'தர்மிஸ்வரூபகதந பூர்வகமாக தத்தர்மமான சேஷத்வத்தைச் சொல்லுகை ப்ராப்தமாயிருக்க, இப்ரணவந் தன்னிலே ப்ரதமம் சேஷத்வத்தைச் சொல்லி, பின்னை ஆத்மாவைச் சொல்லுவானென்?' என்கிற ஶங்கையிலே அப்படி

சொல்லுகைக்கு ஹேதுவை அருளிச்செய்கிறார் 'மணத்தை யும்' இத்யாதி வாக்யத்ரயத்தாலே.

மூ. 71. மணத்தையும், ஒளியையுங்கொண்டு, பூவை யும், ரத்நத்தையும் விரும்புமாபோலே, சேஷமென்று ஆத்மாவை ஆதரிக்கிறது. அல்லாதபோது * "உயிரினாற் குறைவிலம்" என்கிறபடியே த்யாஜ்யம்; அது தோன்ற சேஷத்வத்தைச் சொல்லிப்பின்னை ஆத்மாவைச் சொல் லுகிறது.

வ்யா:—*அதாவது, மணத்துக்கு ஆச்ரயமென்று பூவை விரும்புமாபோலேயும், ஒளிக்கு ஆச்ரயமென்று ரத்நத்தை விரும்புமாபோலேயும், சேஷத்வத்துக்கு ஆச்ரயமென்ற யிற்று ஆத்மாவை ஆதரிக்கிறது; சேஷத்வாச்ரயமல்லாத போது, * "உயிரினாற் குறைவிலம்" என்று பகவச் சேஷத்வ ரஹிதமான ஆத்மாவால் அபேக்ஷையுடையோமல்லோம் என் கிறபடியே த்யாஜ்யனாய் விடுமித்தனை. இப்படியிருந்துள்ள சேஷத்வத்தின் ஊற்றந்தோற்ற, சேஷத்வத்தை முந்துறச் சொல்லி, பின்னை ஆத்மாவைச் சொல்லிற்றென்கை.*

பதத்ரயாத்மகமான இப்ரணவத்தாற் சொல்லித் தலைக் கட்டின அர்த்தத்தை அருளிச்செய்கிறார் 'ஆக' என்று தொடங்கி.

மூ. 72. ஆக, ப்ரணவத்தால் / "கண்ணபுரமொன்று டையானுக்கு அடியேன் ஒருவர்க் குரியேனோ" என்கிற படியே ஜீவபரஸம்பந்தஞ் சொல்லிற்று.

வ்யா:-*அதாவது-கீழ்ச்சொன்ன எல்லாவற்றாலும், 'ப்ரண வத்தால் / "கண்ணபுரமொன்றுடையானுக்கு" என்று சதுர்த்யந்தமான அகாரார்த்தத்தையும், "அடியேன்" என்று சேஷத்வாச்ரயவாசியான மகாரத்தில் அர்த்தத்தையும், "ஒருவர்க்குரியேனோ" என்று அந்யசேஷத்வ நிவர்த்தகமான*

---

* *திருவாய் 4-8-10.* / *பெரியதிரு 8-9-3.*

உகாரார்த்தத்தையும் சொல்லாநின்றுகொண்டு ப்ரணவார்த்தத்தை அநுஸந்தித்த திருமங்கையாழ்வார் ஸ்ரீஸூக்திப்படியே, ஜீவபரர்களுக்கு உண்டான சேஷசேஷிபாவஸம்பந்தத்தைச் சொல்லிற்றென்கை.

இன்னமும் பொய்கையாருடைய திவ்யஸூக்தியாலே 'சேஷத்வ ப்ரதிஸம்பந்தி ஒருமிதுநம்' என்னுமிடந்தோற்ற இந்த ஜீவபரஸம்பந்தத்தை அருளிச்செய்கிறார் "இத்தால் * 'தாமரையாள் கேள்வன்'" என்று தொடங்கி.

மூ. 73. இத்தால், * "தாமரையாள் கேள்வனொருவனையே நோக்கு முணர்வு" என்றதாயிற்று

வ்யா:—அதாவது-இப்ரணவத்தால், * "தாமரையாள் கேள்வன்" என்று-அகாரவாச்யனாய் சேஷத்வ ப்ரதிஸம்பந்தியான ஸ்ரிய:பதியையும், *'ஒருவனையே நோக்கும்' என்று-சதுர்த்யுகாரங்களாற் சொல்லுகிற அநந்யார்ஹசேஷத்வ ப்ரயுக்தமான ஆத்மாவினுடைய ததேகபரதையையும், 'உணர்வு' என்று - அந்த சேஷத்வ ஆச்ரயமாக மகாரத்தாற் சொல்லப்பட்ட ஜ்ஞாநைகநிரூபணீயனான ஆத்மாவையும் சொல்லுகிற ஸூக்தியிற்படியே, ஜீவபரஸம்பந்தம் சொல்லிற்றாயிற்றென்கை.

அகாரத்தில் ப்ரத்யயார்த்த ப்ரதாநமாக ப்ரணவார்த்தத்தை யோஜித்தார் கீழ்; அதில் தாத்வர்த்த ப்ரதாநமாக ப்ரணவத்துக்கு இன்னமும் ஒருயோஜனை அருளிச்செய்கிறார் 'அகாரத்தாலும்' என்று தொடங்கி.

மூ. 74. அகாரத்தாலும் மகாரத்தாலும், ரக்ஷகனையும், ரக்ஷ்யத்தையும் சொல்லிற்று; சதுர்த்தியாலும் உகாரத்தாலும் ரக்ஷணஹேதுவான ப்ராப்தியையும் பலத்தையும் சொல்லிற்று,

---

* முதல்-திரு 67.

வ்யா:–அதாவது, அகாரத்தாலே ரக்ஷகனை ஈச்வரனைச் சொல்லிற்று; மகாரத்தாலே தத்ரக்ஷ்யமான ஆத்மவஸ்துவைச் சொல்லிற்று; சதுர்த்தியாலே ரக்ஷிக்கைக்கு ஹேதுவான சேஷத்வமாகிற ப்ராப்தியைச் சொல்லிற்று; இப்படி ரக்ஷிக்கிறதற்குப் பலம்-இவ்வாத்மவஸ்து அத்தலைக்கு அநந்யார்ஹமாக விநியோகப்படுகையாகையாலே, அவ்வநந்யார்ஹ சேஷத்வ வாசியான உகாரத்தாலே ரக்ஷணபலத்தைச் சொல்லிற்றென்கை.

ஆக, இம்மந்த்ரத்திற் ப்ரதமபதமான ப்ரணவார்த்தத்தை அருளிச்செய்தாராயிற்று.

இனி,மேலிற்பதங்களுக்கும் அர்த்தம் அருளிச்செய்வதாக மந்த்ரசேஷமும் இதுக்கு விவரணமாயிருக்கும்படியை முந்தற அருளிச்செய்கிருர், (இனிமேல் ப்ரணவத்தை விவரிக்கிறது) என்று.

75. மு. இனிமேல் ப்ரணவத்தை விவரிக்கிறது.

வ்யா:-"இவ்விடத்தில் விவரணமாகிறது, ப்ரஸ்துதமான அர்த்தத்துக்கு உபயுக்தமான அர்தத்தைச்சொல்லிக்கொண்டு பூர்வோக்தமான அர்த்தத்தை விசதீகரிக்கை" என்று தீபப்ரகாசத்திலும், 87. **"उक्तार्थविशदीकारयुक्तार्थान्तरबोधनम्। मतं विवरणं तत्र महितानां मनीषिणाम्॥"(உக்தார்த்தவிசதீகார யுக்தார்த்தாந்தர போதநம்। மதம் விவரணம் தத்ர மஹிதாநாம் மநீஷிணும்)** என்று ரஹஸ்யத்ரயார்த்த விவரணக்ரமமருளிச்செய்த ப்ரபந்தத்திலும்,விவரணலக்ஷணத்தை ஜீயரருளிச்செய்தாரிறே-

விவரிக்கிறபடிதான் எங்ஙனேயென்ன அருளிச்செய்கிருர் 'உகாரத்தை விவரிக்கிறது நமஸ்ஸு'என்று தொடங்கி.

76. மு. உகாரத்தை விவரிக்கிறது நமஸ்ஸு; அகாரத்தை விவரிக்கிறது நாராயணபதம்; மகாரத்தை விவரிக்கிறது சதுர்த்தி; நாரபதமென்றுஞ் சொல்லுவர்கள்.

வ்யா:— *அதாவது-அந்யஶேஷத்வத்தைக்கழிக்கிறவிடத்தில் அந்யரிலே அந்யதமனைச் சொல்லப்பட்ட தன்னை வெளியாகச்சொல்லிக் கழிக்கையாலே, உகாரத்தை விவரிக்கிறது நமஸ்ஸு; ரக்ஷகனை ஈச்வரனுடைய ஸ்வரூபத்தையும் ரக்ஷ்யபூத சேதநாசேதநங்களையும் ரக்ஷணோபயோகியான குணுதிகளையும் ரக்ஷணப்ரகாரத்தையும் விஶதமாகச் சொல்லுகையாலே, அகாரத்தை விவரிக்கிறது நாராயண பதம்; 88.* **"नाकिञ्चित्कुर्वतः शेषत्वम्" (நாகிஞ்சித்குர்வதஶ்ஶேஷத்வம்)** *89.* **"अकिञ्चित्करस्य शेषत्वानुपपत्तिः" (அகிஞ்சித்கரஸ்ய ஶேஷத்வாநுபபத்தி:)** *என்கிறபடியே கிஞ்சித்காரமில்லாதபோது ஶேஷத்வஸித்தி இல்லாமையால் தத்ஸித்திக்கு உறுப்பான கிஞ்சித்காரத்தை ப்ரதிபாதிக்கிற சதுர்த்தி, ஶேஷத்வாஶ்ரயமான ஆத்மவஸ்துவைச் சொல்லுகிற மகாரத்தை விவரிக்கிறது. மகார வாச்யனை ஆத்மாவினுடைய நித்யத்வம், ஏகரூபத்வம், பஹுத்வம் தொடக்கமானவற்றை ப்ரதிபாதிக்கையாலே மகாரத்தை விவரிக்கிறது நாரபதமென்றுஞ் சொல்லுவர்கள் என்கை.*

'அக்ஷரக்ரமத்திலே விவரியாதே வ்யுத்க்ரமமாக விவரிப்பானேன்?' என்ன, அருளிச்செய்கிறார் 'அடைவே' என்று தொடங்கி.

மூ. 77. அடைவே விவரியாதொழிகிறது, விரோதி போய் அநுபவிக்க வேண்டுகையாலே.

வ்யா:—*அதாவது, அக்ஷரக்ரமத்திலே விவரியாதொழிகிறது, அகார விவரணமான நாராயணபதத்தில் பகவதநுபவத்துக்கு விரோதியான அஹங்கார மமகாராதிகள் நமஸ்ஸாலே கழியுண்டுபோய்ப் பின்னை அநுபவிக்கவேண்டுகையாலேயென்கை.*

இனி மத்யமபதமான நமஸ்ஸுக்கு அர்த்தம் அருளிச்செய்வதாக அதில் அவாந்தரபதபேதத்தை அருளிச்செய்கிறார் "'நமஸ்ஸு' 'ந' என்றும் 'ம:' என்றும்.இரண்டுபதம்" என்று.

மூ. 78. நமஸ்ஸு–"ந" என்றும் "ம:"என்றும் இரண்டு பதம்

'இவ்விரண்டு பதங்களுக்கும் அர்த்தம் எது?' என்ன, அருளிச்செய்கிறார் 'ம: என்கிற இத்தால்' என்றுதொடங்கி.

மூ. 79. 'ம:' என்கிற இத்தால், 'தனக்கு உரியன்' என்கிறது; 'ந' என்று அத்தைத் தவிர்க்கிறது.

வ்யா:–அதாவது, 'ம:' என்று ஷஷ்ட்யந்தமான இம் மகாரத்தால் மகாரவாச்யனான ஆத்மாவுக்குக் கீழ்ச்சொன்ன தாதர்த்ய ப்ரதிகோடியான ஸ்வார்த்தத்வம் தோற்றுகை யாலே 'தனக்கு உரியன்' என்னுமத்தைச் சொல்லுகிறது; 'ந' என்று நிஷேதவாசியான நஞ்ஞாலே அத்தைக் கழிக்கிற தென்கை.

உபயபதத்தாலும் சொன்ன அர்த்தத்தைச் சேரப்பிடித்து அருளிச்செய்கிறார் 'ஆக நம: என்கிற இத்தால் தனக்கு உரியன் அன்றென்கிறது' என்று.

மூ. 80. ஆக 'நம:' என்கிற இத்தால், 'தனக்கு உரியனன்று' என்கிறது.

வ்யா:–பதக்ரமத்திலே அர்த்தஞ் சொல்லாதே, வ்யுத்க்ரம மாகச் சொல்லுகிறது நிஷேத்யத்தைச்சொல்லி நிஷேதிக்க வேண்டுகையாலே; க்ரமத்திலே சொல்லும்போது * "வீடு மின் முற்றவும்" என்னுமாபோலே நிஷேதபூர்வகமாக நிஷேத்யத்தைச் சொல்லுகிறதென்று யோஜிக்கவேணும். அதுதானும் பரந்தபடியிலே இவர்தாமே அருளிச்செய்தார்.

'தனக்கும் பிறர்க்கும் உரித்தன்று' என்று அந்யசேஷத் வத்தை நிஷேதித்த உகாரத்தை விவரிக்கிறதாகில், பிறர்க்கு

* திருவாய் 1-2-1.

உரித்தன்றென்றத்தையும் விவரியாமல், 'தனக்குரியனன்று' என்ற இத்தையே விவரிப்பானேன்? என்கிற ஶங்கையிலே அருளிச்செய்கிறார் 'பிறர்க்கு உரியனானவன்று' என்றுதொடங்கி.

மூ. 81. பிறர்க்கு உரியனை அன்று தன் வைலக்ஷண்யத்தைக் காட்டி மீட்கலாம்; தனக்கென்னுமன்று யோக்யதையும் கூட அழியும்.

வ்யா:-*அதாவது, அந்யஶேஷபூதனை அன்று, ஶேஷத்வத்துக்கு இசைகையாலே அந்யரிற்காட்டில் தனக்குண்டான ஸர்வகாரணத்வ ஸர்வரக்ஷகத்வ ஸர்வஶேஷித்வாதியான வைலக்ஷண்யத்தைக்காட்டி அந்நிலையில் நின்றும் மீட்கலாம். 'தனக்குரியன்' என்று நிற்குமன்று 90* **"त्वं मे" (த்வம் மே)** *என்றால், 90* **"अहं मे" (அஹம் மே)** *என்னுமது ஒழிய ஶேஷத்வத்துக்கு இசையாமையாலே, மீட்கைக்கு யோக்யதையுங்கூட இல்லையாய்விடுமென்கை.*

'இந் நமஸ்ஸால் செய்கிற அம்ஶந்தான் எது?' என்ன, அருளிச்செய்கிறார் 'இத்தால் விரோதியைக் கழிக்கிறது' என்று.

82. இத்தால் விரோதியைக் கழிக்கிறது.

'அதுதான் ஒன்றோ? பலவோ?' என்ன, அருளிச்செய்கிறார் 'விரோதிதான் மூன்று' என்று.

மூ. 83. விரோதிதான் மூன்று.

அம்மூன்றுந்தான் எது? என்ன, அருளிச்செய்கிறார் 'அதாவது, ஸ்வரூப விரோதியும், உபாய விரோதியும், ப்ராப்ய விரோதியும்' என்று.

மூ. 84. அதாவது ஸ்வரூப விரோதியும், உபாய விரோதியும், ப்ராப்ய விரோதியும்.

வ்யா:-இத்தால் ப்ரதமபதத்திற்சொன்ன ஸ்வரூபத்துக்கு விரோதியும், இப்பதத்தில் ஆர்த்தமாக ஸித்திக்கிற உபாயத்துக்கு விரோதியும், உத்தரபதத்தில் சொல்லுகிற ப்ராப்யத்துக்கு விரோதியுமென்கை. இந்நமஸ்ஸுதான், காகாக்ஷிந்யாயத்தாலே பூர்வோத்தரபதங்களிற் சொல்லுகிற ஸ்வரூப ப்ராப்யங்களினுடைய விரோதிகளைக் கழிக்கக் கடவதாயிறே இருப்பது.

'இவ்விரோதித்ரயமும் கழிகையாவதுதான் எது?' என்ன, அதுதன்னை அடைவே அருளிச்செய்கிறார், மேல் மூன்று வாக்யத்தாலே.

மூ. 85. ஸ்வரூப விரோதி கழிகையாவது-* "யானே நீ என்னுடைமையும் நீயே" என்றிருக்கை; உபாயவிரோதி கழிகையாவது-† "களைவாய் துன்பம் களையாதொழிவாய் களைகண்மற்றிலேன்" என்றிருக்கை; ப்ராப்ய விரோதி கழிகையாவது-/"மற்றை நங்காமங்கள் மாற்று" என்றிருக்கை.

வ்யா:-'ஸ்வரூப விரோதி' இத்யாதி. அதாவது-ஸ்வரூபத்துக்கு விரோதி *"யானே என்தனதே" என்றிருக்கையாகையாலே, அது கழிகையாவது "*யானே நீயென்னுடைமையும் நீயே" என்று ஆத்ம ஆத்மீயங்கள் இரண்டும் அத்தலைக்கு ப்ரகாரதயாஶேஷம் என்றிருக்கை யென்கை. 'உபாயவிரோதி' இத்யாதி. அதாவது-உபாயத்துக்கு விரோதி ஸ்வரக்ஷணே ஸ்வாந்வயமாகையாலே, அது கழிகையாவது-† "களைவாய் துன்பம் களையாதொழிவாய் களைகண் மற்றிலேன்" என்று- 'து:க்கத்தைப் போக்குவாய் போக்காதொழிவாய், வேறொரு ரக்ஷகவஸ்துவையுடையேனல்லேன்' என்றிருக்கை யென்கை. 'ப்ராப்யவிரோதி' இத்யாதி. அதாவது- ப்ராப்யத்துக்கு விரோதி ஸ்வப்ரயோஜநபுத்தியாகையாலே, அது கழிகை

* திருவாய் 2-9-9. † திருவாய் 5-8-8. / திருப்பாவை 30.

யாவது- / "மற்றைநங்காமங்கள் மாற்று" என்று- 'உன்னு கப்புக்குப் புறம்பான எங்களுடைய ஆசையைப் போக்கு' என்றிருக்கை என்கை.

இப்படி ஸ்வரூபோபாய புருஷார்த்தங்கள் மூன்றுக்கும் விரோதியாகிறது இவனுடைய அஹங்கார மமகாரங்களாகையாலே, அதினுடைய க்ரௌர்யத்தையும் தந்நிவ்ருத்தியிலுண்டான நன்மையையும் அருளிச்செய்கிறார் 'ம: என்கை ஸ்வரூபநாசம்', 'நம:' என்கை ஸ்வரூபோஜ்ஜீவநம்' என்று.

மூ. 86. 'ம:' என்கை ஸ்வரூபநாசம், 'நம:' என்கை ஸ்வரூபோஜ்ஜீவநம்.

வ்யா:—அதாவது, 91. **"चेतनस्य यदा मम्यं स्वस्मिन् स्वीये च वस्तुनि। मम इत्यक्षरद्वन्द्वं तदा मम्यस्य वाचकम्॥" (சேதநஸ்ய யதா மம்யம் ஸ்வஸ்மிந் ஸ்வீயே ச வஸ்துநி। மம இத்யக்ஷரத்வந்த்வம் ததா மம்யஸ்ய வாசகம்॥)** என்கிறபடியே, 'ம:' என்கிற இதிலே அஹங்கார மமகாரங்கள் இரண்டுமுண்டாகையாலே அதிலே அந்விதனுகை, இவ்வாத்மாவினுடைய ஸ்வரூபத்துக்கு நாசம்; 'நம:' என்று அதில் அந்வயமற்றிருக்கை, ஸ்வரூபத்துக்கு உஜ்ஜீவநம் என்கை. 92.**' द्वयक्षरस्तु भवेन्मृत्युस्त्र्यक्षरं ब्रह्मणः पदम्। ममेति द्वयक्षरो मृत्युर्न ममेति च शाश्वतम्॥"(த்வ்யக்ஷரஸ்து பவேந் ம்ருத்யுஸ் த்ர்யக்ஷரம் ப்ரஹ்மண: பதம்। மமேதி த்வ்யக்ஷரோ ம்ருதயுர் ந மமேதி ச சாச்வதம்)** என்னக்கடவதிறே.

இப்படி ஸ்வரூப உபாய புருஷார்த்த விரோதிகளைக் கழிக்கிற அளவன்றிக்கே, இந்நமஸ்ஸு தான் ஸ்வரூபாதித்ரயத்தையும் ப்ரகாசிப்பிக்கும் என்கிறார் 'இதுதான் ஸ்வரூபத்தையும், உபாயத்தையும், பலத்தையும் காட்டும்' என்று.

மூ. 87. இதுதான்–ஸ்வரூபத்தையும், உபாயத்தையும், பலத்தையும் காட்டும்.

இதுதன்னை உபபாதிக்கிறார், மேல் மூன்று வாக்யத்தாலே:— "தொலைவில்லிமங்கலம்" இத்யாதி.

/ திருப்பாவை 30.

மூ. 88. * "தொலைவில்லிமங்கலந் தொழும்' என்கையாலே, ஸ்வரூபம் சொல்லிற்று; † "வேங்கடத்து உறைவார்க்கு நம" என்கையாலே, உபாயம் சொல்லிற்று; || "அந்தி தொழுஞ் சொல்" என்கையாலே, பலம் சொல்லிற்று.

வ்யா:- *அதாவது, * "தொலைவில்லி மங்கலந்தொழும்" என்று, அவனுகந்தருளின நிலத்தளவும்செல்ல சேஷமாயிருக்கும் படியைச் சொல்லுகிறவளவில் 'தொழும்' என்றுநமஸ்காரத்தைச் சொல்லுகையாலே, 'ஸ்வரூபம் சொல்லிற்று' என்கை. 'வேங்கடத்து' இத்யாதி. அதாவது, † "வேங்கடத் துறைவார்க்குநம" என்று 'திருவேங்கடமுடையானுக்கு சேஷம் நான்;எனக்குரியேனல்லேன்' என்று ஸ்வரக்ஷணத்தில் ப்ராப்தியில்லாத ஸ்வரூப பாரதந்த்ர்யத்தைச் சொல்லுகையாலே, அவனே உபாயமென்னுமிடம் ஸித்திக்கையாலே 'உபாயம் சொல்லிற்று' என்கை. "அந்தி தொழுஞ்சொல்" இத்யாதி. அதாவது, || "அந்திதொழுஞ் சொல்" என்று தாஸ்யரஸம் அதிசயித்தால் அதனுடைய சரமதசையிலே சொல்லக்கடவ "தொழுஞ்சொல்" என்று நமஶ்ஶப்தத்தைச் சொல்லுகையாலே, பலம் சொல்லிற்று என்கை.*

இப்பதத்திலே, ததீயசேஷத்வமும் ஆர்த்தமாக அநுஸந்தேயமாகையாலே, அத்தை அருளிச்செய்கிறார் 'உற்றதும்' என்று தொடங்கி.

மூ. 89. / 'உற்றதும் உனனடியார்க்கடிமை' ‡ என்கிறபடியே இதிலே பாகவதசேஷத்வமும் அநுஸந்தேயம்.

வ்யா:— *அதாவது- / "நின்திரு வெட்டெழுத்துங்கற்று நானுற்றதும் உன்னடியார்க்கு அடிமை" என்று 'திருமந்த்ரங் கற்றதால் நான் உற்றதும் உன்னடியார்க்கு அடிமை*

---

* திருவாய் 6-5-1. † திருவாய் 3-3-6. || திருவாய் 10-8-7.
/ பெரியதிரு 8-10-3. ‡ (பா) என்கையாலே.

என்னும் இவ்வர்த்தத்திலே' என்கிறபடியே, அஹங்கார மமகாரங்கள் நிவ்ருத்தமாய் பகவச்சேஷத்வம் உள்ளபடி ப்ரகாசிக்கிற இந்நமஸ்ஸிலே, தத்காஷ்டையான பாகவத சேஷத்வமும் அநுஸந்திக்கவேணுமென்கை.

இப்படி ஆர்த்தமாக அநுஸந்திக்கப்படும் பாகவத சேஷத்வந்தான். இந்நமஸ்ஸிலன்றிக்கே ஸ்தலாந்தரங் களிலே சொல்லுவாருமுண்டாகையாலே, அத்தை அருளிச் செய்கிறார் 'இது அகாரத்திலே என்றுஞ்சொல்லுவர்கள், உகாரத்திலே என்றுஞ்சொல்லுவர்கள்' என்று.

மூ. 90. இது-அகாரத்திலே என்றுஞ் சொல்லுவர் கள்; உகாரத்திலே என்றுஞ் சொல்லுவர்கள்.

வ்யா:—அதாவது, சதுர்த்தியாலே ஆத்மாவினுடைய பகவச்சேஷத்வத்தைச் சொல்லுகையாலே பகவச் சேஷத்வ காஷ்டையான இந்த பாகவத சேஷத்வாநுஸந்தாநம் 'அகா ரத்திலேயென்றும் சிலர் சொல்லுவர்கள். அநந்யார்ஹ சேஷத்வத்துக்கு எல்லை ததீய சேஷத்வபர்யந்தமாக நிற்கை யாலே, அநந்யார்ஹத்வப்ரதிபாதகமான உகாரத்திலேயென் றும் சிலர் சொல்லுவர்களென்கை. ஆர்த்தமாகையாலே, அவ்வவஸ்தலங்களிலும் சொல்லாயிருந்ததேயாகிலும், கந்தல் கழிந்தவிடத்திலே சொல்லுகையே உசிதமென்று கருத்து.

இந்நமஸ்ஸுக்குப் பூர்வத்திற் பிறந்த ப்ரதிபத்தியைப் பற்ற இதிற் பிறந்த ப்ரதிபத்திக்குண்டான வாசியை அருளிச் செய்கிறார், 'ஈச்வரன் தனக்கேயாயிருக்கும்' என்றுதொடங்கி.

மூ. 91. 'ஈச்வரன் தனக்கேயாயிருக்கும்; அசித்துப் பிறர்க்கேயாயிருக்கும்; ஆத்மா தனக்கும் பிறர்க்கும் பொதுவாயிருக்கும்' என்று முற்பட்ட நினைவு; அங்ங னன்றிக்கே அசித்தைப்போலே தனக்கேயாக எனைக் கொள்ளவேணுமென்கிறது நமஸ்ஸால்.

வ்யா:-அதாவது- 93. "स्वरूपं स्वातन्त्र्यं भगवतः" (ஸ்வரூபம் ஸ்வாதந்த்ர்யம் பகவத:) என்கிறபடியே, ஸ்வாதந்த்ர்யமே ஸ்வரூபமான ஈச்வரன், ஸ்வார்த்தபரனாயே இருக்கும்; சைதந்யரஹிதமாகையாலே தனக்கேஎன்கைக்கு யோக்யதையின்றிக்கே பாரதந்த்ர்ய ஸ்வரூபமாயிருக்கும் அசித்து, பரார்த்தமாயே இருக்கும். சதுர்த்தியிற்சொன்ன சேஷத்வத்தையும் மகாரத்திற்சொன்ன ஜ்ஞாத்ருத்வத்தையும் உடையனான ஆத்மா ஜ்ஞாத்ருத்வ பலத்தாலே ஸ்வார்த்ததைக்கும், சேஷத்வத்தாலே பரார்த்ததைக்கும் பொதுவாயிருக்கும் என்று, நமஸ்ஸுக்குப் பூர்வபதத்திற் பிறந்த ப்ரதிபத்தி; அப்படியின்றிக்கே, பரார்த்ததைக வேஷமான அசித்துப் போலே ||"தனக்கேயாக வெனைக்கொள்ளுமீதே" என்கிறபடியே அத்தலைக்கே ரஸமாம்படி விநியோகங் கொள்ள வேணும் என்று அபேக்ஷிக்கிறது, இந்நமஸ்ஸாலே என்கை.

"தனக்கேயாக" என்றத்தை உபபாதிக்கிறார் 'அதாவது' என்றுதொடங்கி.

மூ. 92. அதாவது போகதசையில் ஈச்வரன் அழிக்கும்போது நோக்கவேணுமென்று அழியாதொழிகை.

வ்யா:—இத்தால் அத்தலைக்கே ரஸமாம்படி விநியோகப்படுகையாவது, தன்னோடே கலந்து பரிமாறுந் தசையில் போக்தாவான ஈச்வரன் †"ஆட்கொள்வானொத்து என்னுயிருண்டமாயன்" என்கிறபடியே அடிமை கொள்வாரைப்போலே புகுந்து தன் வ்யாமோஹத்தாலே தாழநின்று பரிமாறி இத்தலையில் சேஷத்வத்தை அழிக்கும்போது 'நம் சேஷத்வத்தை நாம் நோக்கவேணும்' என்று நைச்யம் பாவித்து இருய்த்து அவன் போகத்தை அழியாதொழிகையென்கை.

'இப்படி இவன் அழிக்கைக்கு ஹேதுவென்?' என்ன, அருளிச்செய்கிறார் 'அழிக்கைக்கு ஹேது' என்றுதொடங்கி.

|| திருவாய் 2-9-4. † திருவாய் 9-6-7.

மூ. 93. அழிக்கைக்கு ஹேது-கீழே சொல்லிற்று மேலுஞ்சொல்லும்.

வ்யா:—அதாவது, ஈச்வரன் மேல்விழுந்து விநியோகங் கொள்ளுகிற தசையிலே இவன் நைச்யம்பாவித்து இருய்த்து அவன் போகத்தை அழிக்கைக்கு ஹேது, 'சேஷத்வமே ஆத்மாவுக்கு ஸ்வரூபம்' என்கையாலே கீழே ப்ரணவத்திலே சொல்லிற்று; சதுர்த்தியிலே கிங்கரஸ்வபாவனுகைச் சொல்லுகையாலே, மேலிற் பதத்திலும் சொல்லுமென்கை.

இனி, இப்பாரதந்த்ர்ய ப்ரதிபத்தியினுடைய வைபவத்தைப் பலபடியாக அருளிச்செய்யாநின்றுகொண்டு, இப் பதத்தை நிகமித்தருளுகிறர் மேல்;

மூ. 94. இந்நினைவு பிறந்தபோதே க்ருதக்ருத்யன்; இந்நினைவில்லாதபோது எல்லா துஷ்க்ருதங்களும் க்ருதம்; இந்நினைவிலே எல்லா ஸுக்ருதங்களும் உண்டு. இது இன்றிக்கே இருக்கப் பண்ணும் யஜ்ஞாதிகளும் ப்ராயச்சித்தாதிகளும் நிஷ்ப்ரயோஜநங்கள்; இது தன்னலே எல்லாபாபங்களும் போம், எல்லாபலங்களும் உண்டாம்.

வ்யா:—'இந்நினைவு பிறந்தபோதே க்ருதக்ருத்யன்' என்றது † 'தனக்கேயாக எனைக்கொள்ளவேணும்' என்னும் இவ்வத்யந்த பாரதந்த்ர்யப்ரதிபத்தி பிறந்தபோதே தன்னுடைய ஹிதத்துக்கு உடலாகச் செய்யவேண்டுவதெல்லாம் செய்து தலைக்கட்டினவனென்கை.

'இந்நினைவு இல்லாதபோது எல்லா துஷ்க்ருதங்களும் க்ருதம்' என்றது-இப்பாரதந்த்ர்ய ப்ரதிபத்தி இல்லாதபோது, 94. "किं तेन न कृतं पापं चोरेणात्मापहारिणा" (கிந்தேந ந க்ருதம் பாபம் சோரேணுத்மாபஹாரிணு) என்கிறபடியே ஸகலதுஷ்க்ருதங்களும் இவனலே செய்யப்பட்டதாய்விடுமென்கை.

---

† திருவாய் 2-9-4.

'இந்நினைவிலே எல்லா ஸுக்ருதங்களும் உண்டு' என்றது இது உண்டாகவே எல்லா ஸுக்ருதமும் பண்ணினால் பிறக்கும் ப்ரீதி ஈச்வரனுக்கு விளைகையாலே, இந்தப்பாரதந்த்ர்யப்ரதிபத்தியிலே ஸகலஸுக்ருதமும் உண்டு என்கை.

'இது இன்றிக்கேயிருக்கப் பண்ணும் யஜ்ஞாதிகளும் ப்ராயச்சித்தாதிகளும் நிஷ்ப்ரயோஜநங்கள்' என்றது. இந்த பாரதந்த்ர்ய ப்ரதிபத்தி இன்றிக்கேயிருக்கச்செய்தே, ஈச்வர ப்ரீணநார்த்தமாக இவன் பண்ணும் யாகாதிகர்மங்களும் தன் பாபவிமோசநார்த்தகமாகப் பண்ணும் க்ருச்ச்ரசாந்த்ராயணாதிகளாகிற ப்ராயச்சித்தாதிகளும் ஈச்வரப்ரீதிக்கும் ஸ்வ பாபவிமோசநத்துக்கும் உடலாகாமையாலே நிஷ்ப்ரயோஜநங்கள் என்கை.

'இது தன்னாலே எல்லா பாபங்களும்போம்; எல்லா பலங்களும் உண்டாம்' என்றது, இந்தப் பாரதந்த்ர்ய ப்ரதிபத்தியாலே ஈச்வரன் இவனளவிலே அநுக்ரஹாதிசயத்தைப் பண்ணுகையாலே அவனுடைய நிக்ரஹாத்மகமான ஸகல பாபங்களும்போம்; * "உன்னடியார்க்கென் செய்வனென்றேயிருத்தி நீ" என்கிறபடியே இவனுக்கெத்தைச் செய்வோமென்று மேன்மேலும் உபகரிக்கையாலே ஸம்ஸாரநிவ்ருத்திதொடக்கமான கைங்கர்யப்ராப்தி பர்யந்தமாக ஸகல பலங்களும் உண்டாம் என்கை. ஆக மத்யமபதார்த்தத்தை அருளிச் செய்தாராயிற்று.

அநந்தரம் நாராயணபதார்த்தத்தை அருளிச்செய்கிறார் 'நாராயணனென்றது' என்றுதொடங்கி.

மூ. 95. நாராயணனென்றது நாரங்களுக்கு அயநமென்றபடி.

வ்யா:—அதாவது, நாராயண பதந்தான் "நாராணாம் அயந:ய: ஸ: நாராயண:" என்றும் "நாரா: அயந: யஸ்ய ஸ:

* பெரிய-திருவ 53.

நாராயண:'' என்றும் தத்புருஷபஹுவ்ரீஹிரூப ஸமாஸத்வய ஸித்தமாகையாலே அதில் தத்புருஷனில் அர்த்தத்தை முந்துற அருளிச்செய்கிறார், 'நாரங்களுக்கயநமென்றபடி என்று.

நாரங்களாகிறவை தாம் எவை? என்ன, அருளிச்செய்கிறார் 'நாரங்களாவன நித்யவஸ்துக்களினுடைய திரள்' என்று.

மூ. 96. நாரங்களாவன நித்யவஸ்துக்களினுடைய திரள்.

வ்யா:-நாரபதம் ''நர'' என்றும் ''நார'' என்றும் ''நாரா:'' என்றுமாய் **'रिङ्क्ष्ये''** **(ரிங்க்ஷயே)** என்கிற தாதுவிலே 'ர, என்று பதமாய் க்ஷயிக்கும் வஸ்துவைச் சொல்லி நகாரம் அத்தை நிஷேதித்து ''நர'' என்று க்ஷயமில்லாத நித்ய வஸ்துவைக்காட்டி ஸமூஹார்த்தத்திலே 'அண்' ப்ரத்யயமும், ஆதிவ்ருத்தியுமாய் ''நார'' என்று நித்யவஸ்து ஸமூகத்தை சொல்லி ''நாரா:'' என்று பஹுவசநமாகையாலே ஸமூஹ பாஹுள்யத்தை சொல்லுகையால், 'நித்யவஸ்துக்களினுடையதிரள்' என்கிறார். இதில் 'நித்ய' என்கையாலே நரஶப்தார்த்தமும், 'வஸ்துக்கள்' என்கையாலே நாரஶப்தார்த்தமும், அவற்றினுடைய 'திரள்' என்கையாலே பஹுவசநார்த்தமும் சொல்லப்பட்டதிறே.

'தாத்ருஶங்களானவை தாம் எவை? என்ன, அருளிச்செய்கிறார் 'அவையான' என்றுதொடங்கி.

மூ. 97. அவையான—ஜ்ஞாநந்தாமலத்வாதிகளும், ஜ்ஞாந சக்த்யாதிகளும், வாத்ஸல்ய ஸௌசீல்யாதிகளும், திருமேனியும், காந்தி ஸௌகுமார்யாதிகளும், திவ்யபூஷணங்களும், திவ்யாயுதங்களும், பெரியபிராட்டியார் தொடக்கமான நாச்சிமார்களும், நித்யஸூரிகளும், சத்ரசாமராதிகளும், திருவாசல் காக்கும் முதலிகளும்,

கஞ்ஜிபரும், முக்தரும், பரமாகாசமும், ப்ரக்ருதியும், பத்தாத்மாக்களும், காலமும், மஹதாதி விகாரங்களும், அண்டங்களும், அண்டத்துக்கு உட்பட்ட தேவாதி பதார்த்தங்களும்.

வ்யா:— *ஜ்ஞாநாநந்தாமலத்வாதிகள் ஆவன, ஸ்வரூப நிரூபக தர்மங்கள். ஆதிசப்தத்தாலே அநந்தத்வத்தைச் சொல்லுகிறது. (ஜ்ஞாநசக்தியாதிகள்) ஆவன, நிரூபித ஸ்வரூப விசேஷணங்களான ஸமஸ்த கல்யாணகுணங்களுக்கும் ப்ரதாநமாயிருந்துள்ள ஜ்ஞாநசக்தி பல ஐச்வர்ய வீர்யதேஜஸ்ஸுக்களாகிற ஷட்குணங்கள். (வாத்ஸல்ய ஸௌசீல்யாதிகள்) ஆவன, அந்த ஷாட்குண்யாயத்தமான வாத்ஸல்ய ஸௌசீல்ய ஸ்வாமித்வ ஸௌலப்யாத்ய ஸங்க்யேயகல்யாணகுணவிசேஷங்கள். "திருமேனி" ஆவது அஸாதாரணமான திவ்யமங்கள விக்ரஹம். ஏகவசநம் ஜாத்யபிப்ராயமாய் நித்யமான திவ்யவிக்ரஹத்தையும் இச்சிகமாகப் பரிக்ரஹிக்கும் விக்ரஹாந்தரங்களையும் சொல்லுகிறது; அல்லாதபோது ஒரே ஸமூஹமாக எண்ணிவருகிற ப்ரகரணத்துக்குச் சேராது. இதுதான் நடுவிற்றிருவீதிப் பிள்ளை பட்டர் ஆச்சான்பிள்ளை இவர்கள் அருளிச்செய்த ப்ரபந்தங்களிலே ஸுஸ்பஷ்டம். 'காந்தி ஸௌகுமார்யாதிகள்' ஆவன-அந்த விக்ரஹகுணங்களான ஸௌந்தர்ய ஸௌகுமார்ய ஸௌகந்த்ய லாவண்ய யௌவநாதிகள். 'திவ்யபூஷணங்கள்' ஆவன-ஆபரணசூர்ணையிலே பாஷ்யகாரர் அருளிச்செய்தபடியே கிரீடாதி நூபுராந்தமாக அத்திருமேனிக்குச் சாத்தும் அஸங்க்யேயமான திருவாபரணங்கள். 'திவ்யாயுதங்கள்' ஆவன-அழகுக்கும் ஆச்ரிதவிரோதி நிரஸநத்துக்கும் உடலாயிருந்துள்ள சங்கசக்ரகதா அஸி சார்ங்காதி அஸங்க்யேய ஆயுதவிசேஷங்கள். 'பெரிய பிராட்டியார் தொடக்கமான நாச்சிமார்' ஆவார் 95.* **"श्रीवल्लभ एवंभूतभूमिनीलानायक"** (ஸ்ரீவல்லப எவம்பூதபூமிநீளாநாயக) *96.* **"देवि त्वामनु नीलया सह मही देव्यस्सहस्रं तथा"** (தேவி த்வா

மநு நீளயா ஸஹ மஹீதேவ்யஸ்ஸஹஸ்ரந்ததா) என்கிற படியே ப்ரதாநமஹிஷியான பெரியபிராட்டியார் முதலாகத் தத்ஸமாநைகளான பூமிநீளைகளும், மற்றும் அநேகராகச் சொல்லப்படுகிறவர்களும். "லக்ஷ்மீ ப்ரப்ருதி மஹிஷீவர்க்கங்களும்' என்றிறே ஆச்சான்பிள்ளை அருளிச்செய்தது. நித்ய ஸூரிகள் ஆவர், அநந்தகருட விஷ்வக்ஸேநாதிகளாயிருந்துள்ள அஸங்க்யேயரான ஸூரிஜநங்கள். சத்ரசாமராதிகள் ஆவன, கைங்கர்யஉபகரணங்களான சத்ர சாமர தாலவ்ருந்த ப்ருங்கார பதத்க்ரஹாதிகள். 'திருவாசல்காக்கும் முதலிகள்' ஆவார், சண்டப்ரசண்ட பத்ரஸுபத்ர ஜய விஜயாதிகள். 'கணாதிபர்' ஆவார், குமுதகுமுதாக்ஷ புண்டரீக வாமந ஶங்குகர்ண ஸர்வநேத்ர ஸுமுக ஸுப்ரதிஷ்டிதாதிகள். 'முக்தர்' ஆவார், * "கரைகண்டோர்" என்கிறபடியே ஸம்ஸார ஸாகரத்தைக் கடந்து அக்கரைப்பட்டு நித்யஸூரிகளோடு ஸமாநாகாரராய் நிகிலகைங்கர்ய நிரதராயிருக்கும் அஸங்க்யேயரான சேதநர். 'பரமாகாஶம்' ஆவது, பஞ்சோபநிஷந்மயமான பரமபதம். இதுதான் பஞ்சோபநிஷந்மயமாகையாலே ஸமூஹாத்மகமாயிறே இருப்பது. ஆகையால் ஸமூஹகணனைக்கு விரோதமில்லை. "பஞ்சோபநிஷந்மயமாகையாலே, பரமபதமும் ஸமூஹாத்மகமாயிருக்கும்" என்றிறே ஆச்சான்பிள்ளை அருளிச்செய்தது.

ஆக, 'ஜ்ஞாநாநந்தாமலத்வாதிகளும்' என்றுதொடங்கி இவ்வளவும் ஸ்வரூப நிரூபக தர்மங்களையும், நிரூபித ஸ்வரூப விஶேஷணங்களான கல்யாணகுணங்களையும், அக்குணங்களுக்கு ப்ரகாஶகமான திவ்யமங்கள விக்ரஹத்தையும், விக்ரஹகுணமான ஸௌந்தர்யாதிகளையும், அந்த ஸௌந்தர்யாதிகளோபாதி பூத்தாற்போலே சாத்தின திவ்யாபரணங்களையும், அவ்வாபரணங்களோடு விகல்பிக்கலாம்படியான திவ்யாயுதங்களையும், இவையித்தனையும் காட்டிலெறித்த நிலவாகாதபடி அருகேயிருந்து அநுபவிக்கிற நாச்சிமாரையும்

* திருவாய் 8-3-10.

அச்சேர்த்தியிலே அடிமைசெய்கிற நித்யஸூரிகளையும், அவர்களுக்குக் கைங்கர்யோபகரணங்களான சத்ரசாமராதிகளையும், இச்சேர்த்திக்கு என்வருகிறதோ'' என்று வயிறெறிந்து நோக்கும் திருவாசற்காக்கும் முதலிகளையும், அப்படி மங்களாஶாஸநபரராய் திருப்படை வீட்டுக்கடைய காவலாயிருக்கும் கணுதிபரையும், நிவ்ருத்த ஸம்ஸாரராய் அவர்களோடு ஒருகோர்வையாய் அடிமைசெய்கிற முக்தரையும், அவ்வடிமைக்கு வர்த்தகமான பரமபதத்தையும் அருளிச்செய்தாராயிற்று.

லீலாவிபூதியிலுள்ளவற்றை அருளிச்செய்கிறுர் மேல். ''ப்ரக்ருதி'' ஆவது, குணத்ரயாத்மகதயா ஸமூஹாத்மிகையாயிருக்கும் மூலப்ரக்ருதி. ''குணத்ரயாத்மிகையாகையாலே மூலப்ரக்ருதியும் ஸமூஹாத்மிகையாயிருக்கும்'' என்றிறே இதற்கும் ஆச்சான் பிள்ளை அருளிச்செய்தது ''பத்தாத்மாக்கள்'' ஆவார்' உரைமெழுகிற்பொன்போலே, இப்ரக்ருதிக்குள்ளே உருமாய்த்து கிடக்கிற வாத்மாக்கள். காலம் ஆவது, அஹோராத்ராதிவிபாகயுக்ததயா ஸமூஹாத்மகமாயிருக்கும் அசித்விஶேஷம். ''அஹோராத்ராதிவிபாகங்கள் அநேகமாகையாலே, காலமும் ஸமூஹாத்மகமாயிருக்கும்'' என்றிறே, இதுக்கும் ஆச்சான் பிள்ளை அருளிச்செய்தது.

ஆக இவ்வளவும் ஸ்வரூபேண நித்யங்களான வஸ்துக்களைச் சொல்லிற்று.

மேல் ப்ரவாஹரூபேண நித்யங்களைச் சொல்லுகிறது. ஸ்வரூபேண நித்யத்வமாவது, ஸத்தான பதார்த்தத்தினுடைய உத்பத்தி விநாஶாத்யந்தாபாவம். ப்ரவாஹரூபேண நித்யத்வமாவது, உத்பத்தி விநாஸயோகியாகாநிற்கச் செய்தேயும், பூர்வகாலத்திலுண்டான நாமரூப லிங்காதிகளுடைய அநந்யதாபாவம்.

இதில் 'மஹதாதி விகாரங்கள்' ஆவன, மஹத்தத்வந் தொடங்கி ப்ருதிவியளவாக உண்டான இருபத்துமூன்று

தத்வமும். 'அண்டங்கள்' ஆவன, இம்மஹதாதிகளாலே ஆரப்த்தங்களாய் 97. **"अण्डानान्तु सहस्राणां सहस्राण्ययुतानि च"** (அண்டாநாந்து ஸஹஸ்ராணும் ஸஹஸ்ராண்யயுதாநிச) என்கிறபடியே அஸங்க்யேயமாயிருக்கிற அண்டவிசேஷங்கள். 'அண்டத்துக்கு உட்பட்ட தேவாதிபதார்த்தங்கள்' ஆவன, அண்டாந்தர்வர்த்திகளான தேவ மநுஷ்ய திர்யக் ஸ்தாவரங்கள். ஆக, நாரபதார்த்தம் அருளிச்செய்தாராயிற்று.

மூ. 98. அயநம் என்றது இவற்றுக்கு ஆச்ரயமென்றபடி.

மேல், அயநபதார்த்தத்தை அருளிச்செய்கிருர். 'அயநமென்றது-இவற்றுக்கு ஆஶ்ரயமென்றபடி' என்று;

வ்யா:—அதாவது-அயநஶப்தம் ஆஶ்ரயவாசியாகையாலே இவற்றுக்கு அயநமென்றது இவற்றுக்கு ஆஶ்ரயமென்றபடியென்கை.

பஹுவ்ரீஹி ஸமாஸார்த்தத்தை அருளிச்செய்கிருர் 'அங்ஙனன்றிக்கே, இவைதன்னை ஆஶ்ரயமாக உடையனென்னவுமாம்' என்று.

மூ. 99. அங்ஙனன்றிக்கே, இவைதன்னை ஆச்ரயமாகவுடையனென்னவுமாம்.

வ்யா:—அதாவது, இவற்றுக்கு ஆஶ்ரயமென்று தத்புருஷனுகச் சொல்லுகையன்றிக்கே, 'இவைதன்னை ஆஶ்ரயமாகவுடையன்' என்று பஹுவ்ரீஹியாகச் சொல்லவுமாமென்கை.

'இவற்றுக்கு ஆஶ்ரயம்' என்கிறவிடத்தில் குணங்களையும் சொல்லிற்றேயாகிலும். 'இவைதன்னை ஆஶ்ரயமாகவுடையன்' என்கிற இடத்தில், குணங்களையொழியச் சொல்லவேணும்; அக்குணங்களுக்கு வ்யாப்யத்வம் சொல்லுமளவில், ஆத்மாச்

ரயமும் அநவஸ்தையுமாகிற தோஷங்கள் வருமாகையாலே. "தன்குணங்களிலே ஈஶ்வரன் வ்யாபிக்கும்போது குண விஶிஷ்டனாயே வ்யாபிக்கவேணும். நிர்க்குணமாய் வஸ்து இராமையாலே; அப்போது, வ்யாப்யகுணங்களே வ்யாபக குணங்களாய், வ்யாபக குணங்களே வ்யாப்ய குணங்களாயறுகையாலே, ஆத்மாச்ரய தோஷமுண்டாம்; அதுக்குமேலே, தன் குணங்களிலே குணி வ்யாபிக்கவென்று புக்கால், ததாஶ்ரயமான குணங்களையும் குணி வ்யாபிக்கவேணும்; அந்த வ்யாபகனுடைய குணங்களையும் குணி வ்யாபிக்கவேணும். ஆகையாலே, அநவஸ்தாதுஸ்தமாம்" என்று இதுதன்னை ஸுஸ்பஷ்டமாக ஆச்சான்பிள்ளை அருளிச்செய்தாரிறே.

இவ்வுபய ஸமாஸத்தாலும் பலிதார்த்தத்தை அருளிச் செய்கிறார் இவையிரண்டாலும் என்று தொடங்கி.

மூ. 100. இவையிரண்டாலும் பலித்தது பரத்வ ஸௌலப்யங்கள்.

வ்யா:—அதாவது 'நாரங்களுக்கு அயநம்', 'நாரங்களை அயநமாகவுடையவன்' என்கிற இவை இரண்டாலும் பலித்த அர்த்தம்-தன்னையொழிந்த ஸமஸ்த வஸ்துக்களுக்கும் தான் ஆதாரமாயிருக்கையாகிற பரத்வமும், இப்படிப் பெரியனான தான் ஸகல சேதநாசேதநங்களிலும் தன்னை யமைத்துக்கொண்டு புக்கிருக்கையாகிற ஸௌலப்யமும் என்கை.

இன்னமும் ஒரு ப்ரகாரத்தாலே இந்த ஸமாஸத்வய பலிதங்களை அருளிச்செய்கிறார் 'அந்தர்யாமித்வமும், உபாய த்வமும், உபேயத்வமுமாகவுமாம்' என்று.

மூ. 101. அந்தர்யாமித்வமும், உபாயத்வமும், உபேய த்வமுமாகவுமாம்.

வ்யா:—அதாவது, பஹுவ்ரீஹியும் தத்புருஷனுமாகிற உபயஸமாஸத்தாலும் பலித்தது, அந்தர்யாமி ப்ராஹ்மணதி

களிற் சொல்லுகிறபடியே, அகில சேதநாசேதநங்களிலும் அந்தராத்மதயா அவஸ்திதனாய்க்கொண்டு நியந்தாவாயிருக்கையாகிற 'அந்தர்யாமித்வமும்' "**इणगतौ**" (**இண கதௌ**) என்கிற தாதுவிலேயாதல் "**अयगतौ**" (**அய கதௌ**) என்கிற தாதுவிலேயாதல் ஸித்தமான அயநபதத்தில் கரணேவ்யுத்பத்தியாலும் கர்மணிவ்யுத்பத்தியாலும் ப்ரகாஶிதமான உபாயத்வமும் உபேயத்வமுமாகவுமாம் என்கை. பஹுவ்ரீஹி யோஜனை சொல்லுகிறவிடத்திலே யோக்யதாநுகுணமாக நாரஶப்தத்தை குணங்களையொழிந்த வஸ்துக்களுக்கு வாசகமாகக் கொண்டாப்போலே தத்புருஷ யோஜனையிலும் அயநஶப்தத்தை உபாயோபேய வாசியாகக் கொள்ளுமளவில் யோக்யதாநுகுணமாக நாரஶப்தத்தை அசேதநங்களை ஒழிந்த சேதந வஸ்துக்களுக்கு வாசகமாகக் கொள்ளக்கடவது. 98. "**नारास्त्विति सर्वपुंसां समूहः परिकथ्यते। गतिरालम्बनं तस्य तेन नारायणः स्मृतः॥**" (**நாரஸ்த்விதி ஸர்வ பும்ஸாம் ஸமூஹ: பரிகத்யதே। கதிராலம்பநம் தஸ்ய தேந நாராயணஸ் ஸ்ம்ருத:**) என்றும், 99. "**नारशब्देन जीवानां समूहः प्रोच्यते बुधैः। तेषामयन-भूतत्वान्नारायण इहोच्यते॥**" (**நாரஶப்தேந ஜீவாநாம் ஸமூஹ: ப்ரோச்யதே புதை:। தேஷாமயந பூதத்வாந் நாராயண இஹோச்யதே**) என்றும் இத்யாதிகளிலே இவ்வர்த்தஞ் சொல்லப்படாநின்றதிறே.

கர்மணிவ்யுத்பத்தி ஸித்தமான ப்ராப்யத்வத்துக்கு ஸங்கோசமில்லாமையாலே ஸர்வ ப்ரகார விஶிஷ்டமாயிருக்கையாலும், பந்து லாபமும் ப்ராப்யமாயிருக்கையாலும், ஈஶ்வரனுடைய ஸர்வவித பந்துத்வமும் இப்பதத்திலே சொல்லும்படியை அருளிச்செய்கிறார் 'எம்பிரான்' என்று தொடங்கி.

மூ. 102. "எம்பிரானெந்தை" என்கையாலே, ஈச்வரனே எல்லாவுரவுமுறையுமென்று சொல்லும்.

வ்யா:—அதாவது-நாராயண ஶப்தார்த்தத்தை அநுஸந்திக்கிற திருமங்கையாழ்வார் *"எம்பிரானெந்தையென்னுடைச்சுற்றமெனக்கரசென்னுடைவாணாள்" என்கையாலே, ஈஶ்வரனே இவ்வாத்மாக்களுக்கு ஸர்வவிதபந்துவுமென்று இப்பதத்திலே சொல்லுமென்கை.

'இப்படி பந்துபூதனாய்க்கொண்டு, இத்தலைக்கு அவன் செய்யுமது எது?' என்ன, அருளிச்செய்கிறார் 'நாம் பிறர்க்கானவன்றும், அவன் நமக்காயிருக்கும்' என்று.

மூ. 103. நாம் பிறர்க்கான அன்றும் அவன் நமக்காயிருக்கும்.

வ்யா:—அதாவது-நாம் தன்னோடு ஒட்டற்றுப் பிறர்க்கு நல்லராயிருந்த காலத்திலும், அவன் நமக்கு நல்லனாயிருக்குமென்கை.

'இப்படி நாம் அந்யபரரான அன்றும் நமக்கேயாயிருந்து அவன் செய்து போருமது தான் எது? என்ன, அருளிச்செய்கிறார் 'இராமடம்' என்று தொடங்கி.

மூ. 104. இராமடம் ஊட்டுவாரைப்போலே உள்ளே பதிகிடந்து ஸத்தையே பிடித்து நோக்கிக்கொண்டு போரும்.

வ்யா:-அதாவது, நேர்கொடுநேர் தங்கள் பக்கல் வந்து அபேக்ஷிதங்களை வாங்கி ஜீவியாதே துர்மாநத்தாலே பட்டினியே திரியுமவர்களையும் விடமாட்டாமையாலே அசலறியாதபடி ராத்ரி மடத்திலே புஜிப்பிப்பாரைப்போலே தன் பக்கல் தலைசாயோம் என்று இச்சேதநர் ஸ்வாதந்த்ர்யம் அடித்துத்திரியாநிற்க, இவர்கள் கண்காணாதபடி அந்தராத்மாவாய்க்கொண்டு உள்ளே மறைந்திருந்து இவர்கள் ஸத்தையே தொடங்கி ரக்ஷித்துக்கொண்டு போருமென்கை.

---

* பெரிய திருமொழி 1-1-6.

ஆக, இந்நாராயண பதத்தாலே கைங்கர்ய ப்ரதிஸம்பந்தியான ஈச்வரன் படியை அருளிச்செய்தாராயிற்று.

இனி, இதில் விபக்த்யம்சத்தாலே கைங்கர்யத்தைப் ப்ரார்த்திக்கிறபடியை அருளிச்செய்கிறார், 'ஆய என்கிற இத்தால்' என்றுதொடங்கி.

மூ. 105. 'ஆய' என்கிற இத்தால் * "சென்றாற் குடையாம்" என்கிறபடியே எல்லா அடிமைகளும் செய்ய வேணுமென்று அபேக்ஷிக்கிறது.

வ்யா:–அதாவது- 'ஆய' என்கிற இந்தச் சதுர்த்தியாலே * "சென்றாற் குடையாம்" என்கிற பாட்டிற் சொல்லுகிற படியே திருவநந்தாழ்வானைப்போலே ஸர்வவிதகைங்கர்யங்களும் செய்யவேணு மென்று அபேக்ஷிக்கிறது என்கை.

'நமஸ்ஸாலே தனக்கென்ன ஒன்றை விரும்புகைக்கு ப்ராப்தியில்லாத அத்யந்த பாரதந்த்ர்யம் சொல்லியிருக்க, இக்கைங்கர்யத்தைத் தான் விரும்பி அபேக்ஷிக்கை ஸம்பவியாதுஎன்று இருக்குமவர்கள் பண்ணும் ப்ரச்நத்தை அநுவதிக்கிறார் 'நமஸ்ஸாலே தன்னோடு உறவில்லையென்று வைத்துக்கைங்கர்யத்தை ப்ரார்த்திக்கக் கூடுமோவென்னில்' என்று.

மூ. 106. நமஸ்ஸாலே தன்னோடு உறவில்லையென்று வைத்துக் கைங்கர்யத்தை ப்ரார்த்திக்கக் கூடுமோ?' என்னில்;

அதுக்கு உத்தரம் அருளிச்செய்கிறார் 'படியாய்க் கிடந்து' என்று தொடங்கி.

மூ. 107. / "படியாய்க் கிடந்து உன் பவளவாய் காண்பேனே" என்கிறபடியே கைங்கர்ய ப்ரார்த்தனை வந்தேறி அன்று; ஸ்வரூப ப்ரயுக்தம்.

* முதல்திருவ 53. / பெருமாள் திருமொழி 4-9.

வ்யா:—அதாவது- "படியாய்க்கிடந்து உன்பவளவாய் காண்பேனே" என்று, அத்யந்த பாரதந்த்ர்யத்தோடே கைங்கர்யப்ரார்த்தனையையும் சொல்லுகிறபடியே கைங்கர்ய ப்ரார்த்தனை-ஸ்வபோக்த்ருத்வரூப அஹங்காரப்ரயுக்தமாய்க் கொண்டு வந்தேறியானது அன்று, சேஷிக்கு அதிசயத்தை விளைத்தல்லது தான் தரியாதபடியான தன் ஸ்வரூபத்தைப் பற்றி வந்ததென்கை.

உக்தத்தை ஹேதுவாகக்கொண்டு சதுர்த்தியின் கைங்கர்ய ப்ரார்த்தநாப்ரகாசகத்வத்தை அருளிச்செய்கிறார். 'ஆகையால்' என்று தொடங்கி.

மூ. 108. ஆகையால் * "வழுவிலா அடிமை செய்ய வேண்டு நாம்" என்கிற ப்ரார்த்தனையைக் காட்டுகிறது.

வ்யா:— அதாவது-கைங்கர்ய ப்ரார்த்தனை வந்தேறி யன்றிக்கே, ஸ்வரூபப்ரயுக்தமாகையாலே, * "வழுவிலா வடிமைசெய்யவேண்டுநாம்" என்று, 'அடிமையில் ஒன்றும் நழுவாதபடி ஸகலகைங்கர்யங்களும் செய்யவேண்டும் நாம்' என்கிற ப்ரார்த்தனையை, இச்சதுர்த்தி ப்ரகாசிப்பிக்கிறதென்கை.

இனி, இந்தக் கைங்கர்ய ப்ரார்த்தனை இடைவிடாமல் நடக்கைக்கு உறுப்பான ப்ராப்யருசியுடையார்படியை அருளிச்செய்கிறார் 'கண்ணாரக்கண்டு' என்று தொடங்கி.

மூ. 109. || "கண்ணாரக்கண்டு கழிவதோர் காதலுற்றார்க்குமுண்டோ கண்கள் துஞ்சுதல்" என்கிறபடியே காண்பதற்கு முன்பு உறக்கமில்லை. கண்டால் "ஸதா பச்யந்தி" ஆகையாலே உறக்கமில்லை.

வ்யா:—அதாவது-இமையோர்கள் குழாங், தொழுவதுஞ் சூழ்வதுஞ்செய் தொல்லைமாலைக் கண்ணாரக்கண்டு, கழிவ

---

* திருவாய் 3-3-1. || திருவிருத்தம்-97.

தோர் காதலுற்றார்க்குமுண்டோ கண்கள் துஞ்சுதல்'' என்று 'நித்யஸூரிகளுடைய திரளானது நிரந்தரம் அநுபவம் பண்ணுகிற ஸர்வேச்வரனைக் கண்கள் நிறையும்படி கண்டொழியக் கழியாதபடியான காதலிலே நிலைநின்றவர்களுக்கும் கண்கள் உறங்குதலுண்டோ?' என்னுமாபோலே, விஷயத்தைக் காண்பதற்குமுன்பு ஜ்ஞாநஸங்கோசரூபமான உறக்கமில்லை; கண்டகாலத்தில் 100. **"सदा पश्यन्ति" (ஸதா பச்யந்தி)** என்கிறபடியே ஸதா அநுபவம் பண்ணுகையாலே உறக்கமில்லையென்கை,

இன்னமும் ஒரு ஹேதுவினாலே இவனுக்கு உறக்கமில்லாமையை அருளிச்செய்கிறார் 'பழுதே' என்று தொடங்கி.

மூ. 110. ‡ "பழுதே பல பகலும் போயின" என்று இழந்த நாளுக்குக் கூப்பிடுகிறவனுக்கு உறங்க விரகில்லை.

வ்யா:—அதாவது- ‡ "செங்கணடலோதவண்ணரடி அரவணைமேற்கண்டு தொழுதேன், பலபகலும் பழுதே போயினவென்று அஞ்சி அழுதேன்'' என்று, 'விஷயத்தைக் கண்டு அநுபவித்தவாறே இப்படி அநுபவிக்கைக்கு உடலான அநேககாலமெல்லாம் வ்யர்த்தமே போய்விட்டதே!' என்று இழந்த நாளை நினைத்து க்லேசித்துக் கூப்பிடுகிறவனுக்கு மேலுள்ள நாளில் உறக்கம் வர வழியில்லையென்கை.

'இன்னமும் இவ்விஷயத்தில் அறிவுபிறந்தார்க்கு மறக்கப் போகாது' என்னுமத்தை இசைவிக்கிறார் 'அன்று நான்' என்று தொடங்கி.

மூ. 112. † "அன்று நான் பிறந்திலேன் பிறந்தபின் மறந்திலேன்" என்று நின்றார்களிறே.

---

‡ முதல்திருவ 16. † திருவிருத்தம் 64.

வ்யா:—அதாவது, அவன் என்னைப் பெறுகைக்காகத் திருப்பதிகளிலே நிற்பது இருப்பது கிடப்பதாகாநிற்க, அக்காலத்தில் நான் ஜ்ஞாந லாபரூபமான ஜந்மத்தையுடையனாகப் பெற்றிலேன்; அந்த ஜந்மமுண்டான பின்பு 'அவனை ஒருகாலும் மறந்திலேன்' என்று சொல்லா நின்றார்களிறே என்கை. ஆக, ப்ராப்ய வைலக்ஷண்ய ஜ்ஞாநம் பிறந்தார்படி இதுவாகையாலே, இந்த கைங்கர்ய ப்ரார்த்தனை இடைவிடாமல் நடக்கும் என்று கருத்து.

இனி, இந்தக்கைங்கர்யத்துக்கு தேசகாலாதிநியமில்லாமையை அருளிச்செய்கிறார் 'இவ்வடிமைதான்' என்று தொடங்கி.

மூ. 112. இவ்வடிமைதான் †"ஒழிவில்காலமெல்லாமுடனாய்மன்னி" என்கிறபடியே ஸர்வதேச ஸர்வகால ஸர்வாவஸ்தைகளிலும் அநுவர்த்திக்கும்.

வ்யா:—அதாவது-இவ்வாத்மாவினுடைய ஸ்வரூபாநுரூபபுருஷார்த்தமான இந்தக் கைங்கர்யந்தான் "ஒழிவில் காலமெல்லா முடனாய்மன்னி" என்று- 'ஒழிவில்லாத காலமெல்லாம் ஸர்வதேசத்திலும் உடனாய் ஸர்வாவஸ்தையிலும் பிரியாதுநின்று' என்கிறபடியே ஸர்வதேசத்திலும் ஸர்வகாலத்திலும் ஸர்வாவஸ்தையிலும் நடந்துசெல்லும் என்கை.

பார்யைக்கு மங்களஸூத்ரதாரணம் பர்த்தாவுக்கு அநந்யார்ஹையென்று காட்டுமாபோலே, திருமந்த்ரதாரணம் சேதநர்க்கு பகவதநந்யார்ஹத்வப்ரகாசம் என்னுமிடந்தோற்ற இத்தையொரு மங்களஸூத்ரமாக நிரூபித்தருளிச்செய்கிறார் 'எட்டிழையாய்' என்றுதொடங்கி.

மூ. 113. எட்டிழையாய் மூன்று சரடாயிருப்பதொரு மங்களஸூத்ரம்போலே திருமந்த்ரம்.

---

† திருவாய் 3-3-1.

வ்யா:— அதாவது-பதினறிழையாய் இரண்டு சரடா யிருக்கும் லௌகிகமான மங்களஸூத்ரம்போலன்றிக்கே, எட்டிழையாய் மூன்றுசரடாயிருப்பதொரு மங்களஸூத்ரம் போலே, எட்டுத்திருவக்ஷரமாய் மூன்றுபதமாயிருக்கிற இத்திருமந்த்ரமென்கை.

'இப்படி நிரூபித்துச்சொன்ன இத்தால் எவ்வர்த்தம் சொல்லுகிறது?' என்ன, அருளிச்செய்கிறார் 'இத்தால்' என்று தொடங்கி.

மூ. 114. இத்தால், ஈச்வரன் ஆத்மாக்களுக்குப் பதியாய்நின்று ரக்ஷிக்கும் என்கிறது

வ்யா:–அதாவது-இத்தை மங்களஸூத்ரமாகச்சொன்ன இத்தால், ஈச்வரன் இத்தோடு அந்வயமுடைய ஆத்மாக் களுக்குப் பதியாய் நின்று கொண்டு ரக்ஷிக்குமென்று சொல்லுகிறதென்கை.

இனி, இம்மந்த்ரத்தால் ப்ரதிபாதித்த அர்த்தத்தை ஸங்க்ரஹித்துச்சொல்லி இத்தை நிகமித்தருளுகிறார் 'ஆக' திருமந்த்ரத்தால்' என்று தொடங்கி.

மூ. 115. ஆக, 'திருமந்த்ரத்தால் எம்பெருமானுக்கே உரியேனை நான் எனக்கு உரியனன்றிக்கே ஒழிய வேணும்; ஸர்வசேஷியான நாராயணனுக்கே எல்லா அடிமைகளும் செய்யப்பெறுவேனாகவேணும்' என்ற தாயிற்று.

பிள்ளைலோகாசார்யர் திருவடிகளே சரணம்.
திருமந்த்ரப்ரகரணம் முற்றிற்று.

வ்யா:—'ஆக' என்றது கீழ்பரக்க அருளிச்செய்த எல்லா வற்றையும் தொகுத்து அருளிச்செய்கிறார் என்னுமிடந் தோற்ற. 'எம்பெருமானுக்கே உரியேனை நான்' இதில்

‘எம்பெருமானுக்கு’ என்று சதுர்த்யந்தமான ப்ரதமாக்ஷரத்தில் அர்த்தத்தையும், அவதாரணத்தாலே மத்யமாக்ஷரத்தின் அர்த்தத்தையும் ‘உரியேனான நான்’ என்று த்ருதீயாக்ஷரத்தில் அர்த்தத்தையும் சொல்லுகையாலே, ப்ரதம பதார்த்தத்தை ஸங்க்ரஹித்தபடி. ‘எனக்கு உரியனன்றிக்கே ஒழிய வேணும்’ இதில் ‘எனக்குரியன்’ என்று ஷஷ்ட்யந்தமான மகாரார்த்தத்தையும் ‘அன்றிக்கேயொழிய’ என்கையாலே நகாரார்த்தத்தையும், ‘வேணும்’ என்கையாலே இவ்வர்த்தம் சேதநனுக்கு ப்ரார்த்தநீயம் என்னுமத்தையும் ப்ரதிபாதிக்கையாலே மத்யம பதார்த்தத்தை ஸங்க்ரஹித்தபடி. ‘ஸர்வஶேஷியான நாராயணனுக்கே எல்லா அடிமைகளும் செய்யப் பெறுவேனாகவேணும்’ இதில் ஸர்வஶேஷியான நாராயணனுக்கே’ என்று கைங்கர்ய ப்ரதிஸம்பந்தியையும் கைங்கர்ய ப்ரார்த்தநா ப்ரகாஶிகையான சதுர்த்தியையும் ‘எல்லா அடிமைகளும் செய்யப்பெறுவேனாகவேணும்’ என்று கைங்கர்ய ப்ரார்த்தநா ப்ரகாரத்தையும் சொல்லுகையாலே த்ருதீயபதார்த்தத்தை ஸங்க்ரஹித்தபடி. ‘என்றதாயிற்று’ என்றது என்று சொல்லிற்றாயிற்றென்கை.

விஸ்தரேண அருளிச்செய்தத்தை மீளவும் இப்படி ஸங்க்ரஹித்தருளிச்செய்தது இத்திருமந்த்ரார்த்தத்தை எல்லாருமறிந்து அநுஸந்திக்கைக்காக. ஆகையாலே எல்லார்க்கும் இவ்வர்த்தம் எப்போதும் அநுஸந்தேயம்.

திருமந்த்ரப்ரகரணம் வ்யாக்யானம் முற்றிற்று.

ஜீயர் திருவடிகளே சரணம்.

முமுக்ஷுப்படி த்வயப்ரகரணம்

வ்யாக்யாந அவதாரிகை

ப்ரதம ரஹஸ்யமான திருமந்த்ரத்தினுடைய அர்த்தத்தை தஅருளிச்செய்த அநந்தரம், அதில் மத்யமபதத்தாலும் த்ருதீய பதத்தாலும் ப்ரதிபாதிக்கபட்ட உபாயோபேயங்களை விஶதமாக ப்ரதிபாதியாநின்றுள்ள த்வயத்தினுடைய அர்த்தத்தை அருளிச்செய்கிறார்.

'முன்பு அருளிச்செய்த மூன்று ப்ரபந்தங்களிலும் திருமந்த்ராநந்தரம் சரமஶ்லோகத்தை அருளிச்செய்து பின்பு த்வயத்தை அருளிச்செய்தவர், இப்போது த்வயத்தை முந்துற அருளிச்செய்வான் என்?' என்னில்,— இரண்டு ப்ரகாரமும் அருளிச்செய்யலாயிருக்கையாலே. ஆச்சான்பிள்ளை, சீயர் முதலானோரும் இந்த ப்ரகாரமிறே அருளிச்செய்தது.

'இவ்விரண்டு ப்ரகாரந்தனக்கும் கருத்து என்?'-என்னில், சரமஶ்லோகம் முன்னாக த்வயத்தைச்சொல்லுகிறது வித்யநுஷ்டாந ரூபங்களாயிருக்கையாலே விதிமுன்னாக அநுஷ்டாநத்தைச் சொல்லுகை ப்ராப்தமாயிருக்கையாலும் திருமந்த்ரம் ப்ராப்யபரமாய் சரமஶ்லோகம் ப்ராபகபரமாய் த்வயம் உபயத்தினுடையவும் அநுஷ்டாந ப்ரதிபாதகமாயிருக்கையாலும். த்வயம் முன்னாகச் சரமஶ்லோகத்தைச் சொல்லுகிறது-திருமந்த்ரத்தில் மத்யமத்ருதீயபதங்களுக்கு வாக்யத்வயம் விவரணமாய், அது தனக்குச் சரமஶ்லோகத்தில் அர்த்த த்வயம் விவரணமாயிருக்கும் ஆகாரத்தாலே. ஆனபின்பு, இரண்டு ப்ரகாரமும் அநுஸந்திக்கத் தட்டில்லை. அதில் ஒருப்ரகாரத்தை மூன்று ப்ரபந்தத்திலும் அருளிச்செய்தவராகையாலே, மற்றைப்ரகாரத்தையும் அருளிச்செய்யவேணுமென்று திருவுள்ளம்பற்றி, திருமந்த்ரார்த்தம் அருளிச்செய்த அநந்தரம் த்வயார்த்தத்தை அருளிச்செய்கிறார்.

அவதாரிகை முற்றிற்று.

அதில் ப்ரதமத்திலே வைஷ்ணவனாயிருப்பானொருவனுக்கு ஸ்வாதிகாரார்த்தமாக அவச்யாபேக்ஷிதமாயுள்ளவற்றை, ஸங்க்ரஹமாக அருளிச்செய்கிறார் 'புறம்புண்டான பற்றுக்களையடைய வாஸனையோடே விடுகை' என்று தொடங்கி ஒரு சூர்ணையாலே.

மூ. 116. புறம்புண்டான பற்றுக்களையடைய வாஸனையோடே விடுகையும், எம்பெருமானையே தஞ்சமென்று பற்றுகையும், பேறுதப்பாதென்று துணிந்திருக்கையும், பேற்றுக்கு த்வரிக்கையும், இருக்கும் நாள் உகந்தருளின நிலங்களிலே ப்ரவணனாய்க் குணாநுபவ கைங்கர்யங்களே பொழுது போக்காகையும், இப்படி இருக்கும் ஸ்ரீவைஷ்ணவர்கள் ஏற்றமறிந்து உகந்திருக்கையும், திருமந்த்ரத்திலும் த்வயத்திலும் நியதனாகையும், ஆசார்யப்ரேமம் கனத்திருக்கையும், ஆசார்யன் பக்கலிலும் எம்பெருமான் பக்கலிலும் க்ருதஜ்ஞனாய்ப் போருகையும், ஜ்ஞாநமும், விரக்தியும், சாந்தியும், உடையனாயிருக்கும் பரமஸாத்விகனோடே ஸஹவாஸம் பண்ணுகையும் வைஷ்ணவாதிகாரிக்கு அவச்யாபேக்ஷிதம்.

வ்யா:—*புறம்புண்டான பற்றுக்களையடைய வாஸனையோடே விடுகையாவது 101.*"**पितरं मातरं दारान्**"(பிதரம் மாதரம் தாராந்) *இத்யாதிப்படியே, பாஹ்யவிஷய ஸங்கங்களையடைய மறுவலிடாதபடி ஸவாஸநமாகவிடுகை. 'எம்பெருமானையே தஞ்சமென்று பற்றுகையாவது-வேறொன்று தஞ்சமென்கிற நினைவு கலசாதபடி, நிருபாதிக ரக்ஷகனை ஸர்வேச்வரனையே தஞ்சமாக ஸ்வீகரிக்கை. இவ்விரண்டு வாக்யத்தாலும், சரமச்லோகத்தில் பூர்வார்த்தத்தில் அர்த்தத்தைச் சொல்லுகிறதாகவுமாம். எங்ஙனேயென்னில்? 'புறம்புண்டான பற்றுக்களையடைய' என்று 'ஸர்வதர்மாந்' என்கிற பதத்தில் அர்த்தத்தையும், 'வாஸனையோடே விடுகையும்'*

என்று 'பரித்யஜ்ய' என்கிற பதத்தில் அர்த்தத்தையும், 'எம் பெருமானை' என்று 'மாம்' என்கிற பதத்தில் அர்த்தத்தை யும், 'ஏ' என்று ஏவகாரத்தாலே ஏகபதத்தில் அர்த்தத்தை யும், 'தஞ்சம்' என்கையாலே 'ஶரண' பதத்தில் அர்த்தத்தை யும், 'பற்றுகையும்' என்று 'வ்ரஜ' பதத்தில் அர்த்தத்தையும், அடைவே சொல்லுகையாலே.

பேறுதப்பாதென்று துணிந்திருக்கையாவது— உபாய பல்குத்வமும், உத்தேஶ்ய துர்லபத்வமும், ஸ்வக்ருத தோஷபூயஸ்த்வமும் அடியாகவரும் ஶங்காத்ரயமுமின்றிக்கே பலம் தப்பாமல் ஸித்திக்குமென்று விஶ்வஸித்திருக்கை. பேற்றுக்கு த்வரிக்கையாவது, இப்படி விஶ்வஸித்து 'பேறு ஸித்தித்தபோது காண்கிறோம்' என்று இருக்கையன்றிக்கே, ‡ "மாகவைகுந்தங் காண்பதற்கென் மனமேகமெண்ணும்" * "தாவி வையங்கொண்ட தடந்தாமரைகட்கே கூவிக்கொள்ளுங்காலமின்னங் குறுகாதோ" என்கிறபடியே, க்ரமப்ராப்தி பற்றாமற் பதறுகை. ஆக இவை இரண்டாலும் உபாயோ பேயாதிகாராபேக்ஷிதங்களான மஹாவிஶ்வாஸத்தையும், ப்ராப்யத்வரையையும் சொல்லுகிறது.

இருக்கும் நாள் உகந்தருளின நிலங்களிலே ப்ரவணனாய்க் குணாநுபவ கைங்கர்யங்களே பொழுது போக்காகை யாவது-பரமபதத்திலேபோய் பகவதநுபவ கைங்கர்யங்களைப் பண்ணுகையாகிற பேற்றில் த்வரை நடவா நிற்கச்செய்தேயும், இஶ்ஶரீரத்தோடே இருக்கும் நாள் / "தானுகந்தவூர்" என்கிறபடியே ஸர்வேஶ்வரன் உகந்து வர்த்திக்கிற திவ்யதேசங்களிலே || "கண்டியூரரங்கம் மெய்யங்கச்சி பேர்மல்லை" என்று மண்டுகையாகிற ப்ராவண்யத்தையுடையனாய், அவ்வோதிவ்ய தேஶங்களிலே நிற்கிறவனுடைய கல்யாணகுணாநுபவமும், அது அடியாகக்

‡ திருவாய் 9-3-7. * திருவாய் 6-9-9. / திருநெடு 6.
|| திருக்குறு 19.

கரணத்ரயத்தாலும் அவன் விஷயத்திற் பண்ணுங் கைங்கர் யமுமே காலக்ஷேபவிஷயமாம்படி யிருக்கை. இப்படியிருக் கும் ஸ்ரீவைஷ்ணவர்களேற்றம் அறிந்து உகந்திருக்கையாவது கீழ்ச்சொன்ன இவ்வாகாரங்களெல்லாம் உடையராயிருக்கும் ஸ்ரீவைஷ்ணவர்களைக்கண்டால், இந்தளத்திலே தாமரை பூத்தாற்போலே இந்த விபூதியிலே இங்ஙனேயும் சிலருண் டாவதே என்று அவர்கள் வைபவத்தை யறிந்து அவர்கள ளவில் ப்ரீதியுக்தனாயிருக்கை. கீழ்ச்சொன்னவையெல்லாம் உண்டானாலும் உண்டாக அரிதாயிருப்ப தொன்றிறே இது.

திருமந்த்ரத்திலும் த்வயத்திலும் நியதனாகையாவது, மந்த்ராந்தரங்களினுடைய அருகே மறந்தும் போகாதே த்யாஜ்ய உபாதேயங்களைத் தெளிய அறிவிக்குந் திரு மந்த்ரத்திலும் அதின் அர்த்தத்துக்கு விவரணமாக த்வ யத்திலும் நிஷ்டனாயிருக்கை.

ஆசார்யப்ரேமம் கனத்திருக்கையாவது, கீழ்ச்சொன்ன ஆகாரத்தையெல்லாம் உபதேசத்தாலே தனக்கு உண் டாக்கின ஆசார்ய விஷயத்தில் 102 **"यस्य देवे परा भक्तिर्यथा देवे तथा गुरौ"** **(யஸ்ய தேவே பராபக்திர் யதா தேவே ததா குரௌ)** என்கிறபடியே ப்ரேமம் அதிசயித்திருக்கை.

ஆசார்யன் பக்கலிலும், எம்பெருமான் பக்கலிலும் க்ருத ஜ்ஞனாய்ப் போருகையாவது, நித்யஸம்ஸாரியான தன்னை நித்யஸூரிகள் பேற்றுக்கு அர்ஹனாம்படி இரும்பைப் பொன்னாக்குவாரைப்போலே திருத்தின ஆசார்யன் பக்கலி லும் அத்வேஷாதிகளை விளைத்துக்கொண்டுவந்து ஆசார்ய விஷயத்தோடே சேர்த்த எம்பெருமான் பக்கலிலும் உபகார ஸ்ம்ருதி உடையனாய்ப்போருகை.

ஜ்ஞானமும், விரக்தியும், சாந்தியுமுடையனாயிருக் கும் பரமஸாத்விகனோடே ஸஹவாஸம் பண்ணுகையாவது, தான் கலங்கினாலும் கலங்காமல் நோக்குகைக்கு உறுப்பாகவும்

கீழ்ச்சொன்ன ஆகாரங்கள் தனக்கு வர்த்திக்கைக்கு உறுப்பாகவும் தத்வயாதாத்ம்ய ஜ்ஞாநமும், அப்ராப்தவிஷய விரக்தியும் இவைதானிரண்டும் நமக்குண்டென்று இறுமாப்பற்றிருக்கையாகிற ஶாந்தியும் உடையனாயிருக்கும் பரமஸத்வ நிஷ்டனாயிருப்பான் ஒரு பாகவதனோடேகூட வஸித்துப் போருகை.

'வைஷ்ணவாதிகாரிக்கு அவஶ்யாபேக்ஷிதம்' என்றது-இவையித்தனையும் வைஷ்ணவனென்றிருப்பான் ஒரு அதிகாரிக்கு அவஶ்யம் உண்டாகவேணுமென்கை.

இப்படியிருக்கும் இவனுக்கும் அநுஸந்தாந விஷயம் வகுத்து அருளிச்செய்கிறார் மேல் 'இந்த' என்று தொடங்கி.

மூ. 117. இந்த அதிகாரிக்கு ரஹஸ்யத்ரயமும் அநுஸந்தேயம்.

வ்யா:—அதாவது-கீழ்ச்சொன்ன ஆகாரங்களையுடையனாயிருக்கும் இவ்வதிகாரிக்கு, அந்த ஜ்ஞாநாநுஷ்டாநங்களுக்கு வர்த்தகமான ரஹஸ்யத்ரயமும் அநுஸந்தாந விஷயமாகவேணுமென்கை.

இனி, த்வயத்திற் சொல்லுகிற அர்த்தத்தின் வீறுடைமையை அறிவிக்கைக்காக, ஶாஸ்த்ரம் திருமந்த்ரம் சரமஶ்லோகம் இவற்றிற் சொல்லுகிற ப்ரகாரங்களை அருளிச்செய்துகொண்டு சென்று, பின்னை அதுதன்னை அருளிச்செய்கிறார் 'எல்லா ப்ரமாணங்களிலும்' என்று தொடங்கி.

மூ. 118. எல்லா ப்ரமாணங்களிலும் தேஹத்தாலே பேறென்கிறது; திருமந்த்ரத்தில் ஆத்மாவாலே பேறென்கிறது; சரமச்லோகத்தில் ஈச்வரனாலே பேறென்கிறது; த்வயத்தில் பெரியபிராட்டியாராலே பேறென்கிறது.

வ்யா:—அதாவது-சேதநனுடைய விஶிஷ்டவேஷத்திலே நோக்கான ஸகல ஶாஸ்த்ரங்களிலும், ஸாதநாநுஷ்டாந

யோக்யமான தேஹத்தாலே இவனுக்குப் புருஷார்த்தலாபம் என்கிறது. நிஷ்க்ருஷ்டவேஷத்திலே நோக்கான திருமந்த்ரத்தில், இவன் ஸ்வரக்ஷணத்தில் நின்றும் கைவாங்கினாலொழிய ஈஶ்வரனுடைய ரக்ஷகத்வம் ஜீவியாமையாலே, தத்ப்ரவ்ருத்தி விரோதியான ஸ்வப்ரவ்ருத்தியை விட்டிருக்கும் ஆத்மாவாலே புருஷார்த்தலாபம் என்கிறது. ஈஶ்வர ஸ்வாதந்த்ர்யத்திலே நோக்கான சரமஶ்லோகத்தில், இவனுடைய ஸ்வீகாரமும் மிகையாம்படி, தானே கைக்கொண்டு ப்ராப்திப்ரதிபந்தக ஸகலபாபங்களையும் தள்ளிப்போகட்டு, தன் திருவடிகளிலே சேர்த்துக்கொள்ளும் ஈஶ்வரனாலே புருஷார்த்தலாபம் என்கிறது. ஈஶ்வரனுடைய லக்ஷ்மீவிஶிஷ்ட வேஷத்திலே நோக்கான த்வயத்தில், விஶேஷணபூதையான பெரியபிராட்டியாராலே புருஷார்த்தலாபமென்கிறதென்கை.

உபாயம் ஈஶ்வரனாயிருக்க, இவளாலே பேறாகையாவதென்? என்கிற ஶங்கையிலே அருளிச்செய்கிறார் 'பெரிய பிராட்டியாராலே' என்றுதொடங்கி.

மூ. 119. பெரிபிராட்டியாராலே பேறாகையாவது, இவள் புருஷகாரமானாலல்லது ஈச்வரன் கார்யஞ் செய்யானென்கை.

வ்யா:—அதாவது, இஷ்டாநிஷ்ட ப்ராப்தி பரிஹாரங்கள் இரண்டும் பண்ணுவான் ஈஶ்வரனேயாயிருக்கப் பெரிய பிராட்டியாராலே இவனுக்குப் பேறாகை ஆகிறது, இவனுடைய அபராதத்தைப் பாராதே ரக்ஷிக்கும்படி இவள் புருஷகாரமானால் ஒழிய, ஈஶ்வரன் இவன் கார்யஞ்செய்யான் என்றபடி என்கை.

கீழ், ஸாமாந்யத்திலே வைஷ்ணவாதிகாரிக்கு அபேக்ஷிதங்களிறே சொல்லிற்று; விஶேஷித்து த்வயத்துக்கு அதிகாரியாமவனுக்கு அபேக்ஷிதத்தை அருளிச்செய்கிறார் 'த்வயத்துக்கு' என்றுதொடங்கி.

மூ. 120. த்வயத்துக்கு அதிகாரி ஆகிஞ்சந்யமும், அநந்யகதித்வமும் உடையவன்.

வ்யா:— *அதாவது-ஸித்தோபாயவரண ப்ரதிபாதகமான த்வயத்துக்கு அதிகாரி 103.* **"अकिञ्चनोऽगतिः त्वमेवोपायभूतो भव"** (அகிஞ்சநோகதி: த்வமேவோபாய பூதோமேபவ) *104* **"अकिञ्चनो नन्यगतिः शरण्य"** (அகிஞ்சநோநந்யகதி: ஶரண்ய) *என்றும் * "புகலொன்றில்லா அடியேன்" என்றும் சொல்லுகிற படியே ஆகிஞ்சந்யமும் அநந்யகதித்வமும் ஆகிற இரண்டும் உடையவன் என்கை.*

'இவையிரண்டின் வேஷமுந்தான் எங்ஙனே?' என்ன, அருளிச்செய்கிறார் 'இவையிரண்டும்' என்று தொடங்கி.

மூ. 121. இவை இரண்டும் ப்ரபந்ந பரித்ராணத்திலே சொன்னோம்.

வ்யா:—*அதாவது,- உபாயாந்தர ராஹித்யமாகிற ஆகிஞ்சந்யத்தின் வேஷமும், ரக்ஷகாந்தர ராஹித்யமாகிற அநந்ய கதித்வத்தின் வேஷமும் ப்ரபந்ந பரித்ராணமாகிற ப்ரபந்தத்திலே ஸுஸ்பஷ்டமாகச் சொன்னோம், அதிலே கண்டு கொள்வது என்கை.*

இனி, த்வயத்துக்கு வாக்யார்த்தம் அருளிச்செய்கிறார் 'இதில் முற்கூற்றால்' என்றுதொடங்கி.

மூ. 122. இதில் முற்கூற்றால் பெரியபிராட்டியாரை முன்னிட்டு ஈச்வரன் திருவடிகளை உபாயமாகப் பற்றுகிறது; பிற்கூற்றால் அச்சேர்த்தியிலே அடிமையையிரக்கிறது.

வ்யா:—*அதாவது*-*இந்த த்வயத்தில் பூர்வகண்டத்தாலே 'ஸ்ரீமத்' என்று பெரியபிராட்டியாரை முன்னிட்டு, நாராயண*

---

* *திருவாய் 6-10-10.*

சரணௌ' என்று ஈச்வரன் திருவடிகளை 'சரணம் ப்ரபத்யே' என்று உபாயமாகப் பற்றுகிறது; உத்தரகண்டத்தாலே 'ஸ்ரீமதே' என்று பெரியபிராட்டியாரும் அவனுமான சேர்த்தியிலே, 'நாராயணாய' என்கிற சதுர்த்தியாலே கைங்கர்யத்தை அர்த்திக்கிறது என்கை. 'நமஸ்ஸு' கைங்கர்ய விரோதி நிவ்ருத்தி ப்ரதிபாதகமாகையாலே, அடிமையை இரக்கிறது என்ற இதிலே அந்தர்ப்பூதம்.

இனி ப்ரதிபதம் அர்த்தம் அருளிச்செய்வதாகத் திருவுள்ளம்பற்றி, ஸ்ரீமத்பதார்த்தம் அருளிச்செய்ய உபக்ரமிக்கிறார் 'ஸ்ரீ என்று பெரியபிராட்டியாருக்குத் திருநாமம்' என்று.

மூ. 123. ஸ்ரீ என்று பெரியபிராட்டியாருக்குத் திருநாமம்.

வ்யா:- ஸ்ரீசப்தம் ஸம்பதாதிகளுக்கும் வாசகமாக லோகத்திலே நடந்துபோரக் காண்கையாலே, அத்தை வ்யாவர்த்திக்கைக்காக 'ஸ்ரீ' என்கிற இது பெரியபிராட்டியார்க்குத் திருநாமம் என்கிறார். ஆகையிறே "லக்ஷ்மீ: பத்மாலயா பத்மா கமலா ஸ்ரீர்ஹரிப்ரியா" என்று திருநாமங்களோடே ஸஹபடிதமாயிற்று. இதுதான் எல்லாத் திருநாமங்கள்போலன்றிக்கே 105. **"श्रीरिति प्रथमं नाम लक्ष्म्याः"** **(ஸ்ரீரிதி ப்ரதமம்நாம லக்ஷ்ம்யா:)** என்கிறபடியே இவளுக்கு ப்ரதமாபிதாநமாயிருக்கும். 106. **"अ इति भगवतो नारायणस्य प्रथमाभिधानं"** **(அ இதி பகவதோ நாராயணஸ்ய ப்ரதமாபிதாநம்)** என்று அகாரம் ஈச்வரனுக்கு ப்ரதமாபிதாநமானாற்போலேயாயிற்று, இவளுக்கும் ப்ரதமாபிதாநமாயிருக்கும்படி. அது, அவனுடைய ரக்ஷகத்வத்துக்கு ஏகாந்தமான ஸ்வபாவங்களைச் சொல்லக்கடவதாயிருக்கும்; இது, இவளுடைய புருஷகாரத்வத்துக்கு ஏகாந்தமான ஸ்வபாவங்களைச் சொல்லக்கடவதாயிருக்கும்.

இனி, இந்த ஸ்ரீ ஶப்தத்துக்கு அர்த்தம் அருளிச்செய்வதாக ப்ரதமம் இதன்மேல் வந்த வ்யுத்பத்தித்வயத்தை அருளிச்செய்கிறார் 'ஸ்ரீயதே, ஶ்ரயதே' என்று.

மூ. 124. ஸ்ரீயதே, ஶ்ரயதே.

வ்யா:-அதாவது, "ஶ்ரிஞ்ஸேவாயாம்" என்கிற தாதுவிலே 'ஶ்ரீயத இதி ஸ்ரீ: ஶ்ரயத இதி ஸ்ரீ:' என்று ஸித்தமான கர்மணி வ்யுத்பத்தியையும் கர்த்தரிவ்யுத்பத்தியையும் சொன்னபடி.

இவ்யுத்பத்தி த்வயத்துக்கும் அர்த்தம் அருளிச்செய்கிறார் 'இதுக்கு அர்த்தம்' என்றுதொடங்கி.

மூ. 125. இதுக்கு அர்த்தம்-'எல்லார்க்கும் இவளைப் பற்றி ஸ்வரூப லாபமாய், இவள் தனக்கும் அவனைப்பற்றி ஸ்வரூப லாபமாயிருக்கும்' என்று.

வ்யா:—அதாவது-இவ்வுபயவ்யுத்பத்திக்கும் அர்த்தம் 'ஸ்ரீயதே' என்று எல்லாராலும் ஸேவிக்கப்படாநின்றாள் என்கையாலே ஸகல சேதநர்க்கும் இவளைப்பற்றித் தங்களுடைய ஶேஷத்வரூப ஸ்வரூபலாபமாய் 'ஶ்ரயதே' என்று ஈஶ்வரனை ஸேவியாநின்றாள் என்கையாலே, இவள் தனக்கும் ஈஶ்வரனைப்பற்றித் தன்னுடைய ஸ்வரூபலாபமாயிருக்குமென்று என்கை. இவள் தனக்கு, சேதநவிஷயத்தில் ஶேஷித்வமும் ஈச்வர விஷயத்தில் ஶேஷத்வமும் என்றும் உண்டாயிறே யிருப்பது. ஆகையால், இந்த ஸேவ்யத்வ ஸேவகத்வங்கள் இரண்டும் இவளுக்கு நித்யமாய்ச் செல்லாநிற்கும்.

'ஈச்வரனுக்கு உபாயத்வமும் உபேயத்வமுமாகிற ஆகார த்வயம் உண்டானாற்போலே, இவளுக்கும் புருஷகாரத்வமும் ப்ராப்யத்வமுமாகிற ஆகாரத்வயமும் உண்டாகையாலே, இதில் எவ்வாகாரத்தை நினைத்து இவளை இப்போது சொல்லு

கிறது?' என்ன அருளிச்செய்கிறார் 'இப்போது இவளைச் சொல்லுகிறது புருஷகாரமாக' என்று.

மூ. 126. இப்போது இவளைச் சொல்லுகிறது புருஷ காரமாக.

வ்யா:—'புருஷகாரமாக' என்கையாலே உபாயவஸ்து விசேஷணமாயிருக்கிற ஆகாரத்தையிட்டு, இவளுக்கும் உபாயத்வத்தில் அந்வயம் சொல்லும் பக்ஷம் நிரஸ்தம்.

'ஈச்வரனுடைய நாரயணத்வ ப்ரயுக்தமான ஸ்வாபாவிக ஸம்பந்தாதி ஜ்ஞானத்தை உடையனாய்க்கொண்டு, அவனை ஆச்ரயிக்கிற இச்சேதநனுக்கு இவளைப் புருஷகாரமாக முன்னிட வேண்டுகிறது தானென்?' என்ன அருளிச்செய்கிறார் 'நீரிலே' என்றுதொடங்கி.

மூ. 127. நீரிலே நெருப்புக் கிளருமாபோலே குளிர்ந்த திருவுள்ளத்திலே அபராதத்தால் சீற்றம் பிறந்தால் பொறுப்பது இவளுக்காக.

வ்யா:-அதாவது-சீதலமான ஜலத்திலே, சென்று அணுக வொண்ணாதபடியான நெருப்புக் கிளருமாபோலே, 107 "**सुहृदं सर्वभूतानां**" (ஸுஹ்ருதம் ஸர்வபூதாநாம்) 108. "**समोऽहं सर्वभूतेषु**" (ஸமோ஽ஹம் ஸர்வபூதேஷு) என்கிறபடியே, ஸர்வபூத ஸுஹ்ருத்த்வம் ஸமாச்ரயணீயத்வே ஸமத்வமாகிற ஸ்வபாவ விசேஷங்களாலே ப்ரஸந்நமாய்க் குளிர்ந்திருக்கிற திருவுள்ளத்திலே 109. "**परिपूर्णोऽसि जने हितस्रोतोवृत्त्या भवति च कदाचित् कलुषधीः॥**" (பரிபூர்ணோஸி ஜநே ஹிதஸ்ரோதோ வ்ருத்யா பவதிச கதாசித்கலுஷதீ:) என்கிறபடியே சேதநன் தீரக்கழியப்பண்ணின அபராதம் அடியாக 110"**क्षिपामि**" (க்ஷிபாமி) 110*"**नक्षमामि**" (ந க்ஷமாமி) என்னும்படியான சீற்றம் பிறந்தால் அவ்வபராதத்தைப் பொறுப்பது, 111. "**किमेतन्निर्दोषः क इह जगति**" (கிமேதந் நிர்த்தோஷ:க இஹஜகதி) இத்யாதிப்படியே

தன்னுடைய உபதேசாதிகளாலே அச்சீற்றத்தையாற்றித் தயையை ஜநிப்பிக்கும் இவளுக்காக என்கை. ஆகையாலே ஸம்பந்த ஜ்ஞாநம் பிறந்தவனுக்கும் அபராத பயத்தாலே புருஷகார புரஸ்கரணம் அபேக்ஷிதமென்று கருத்து.

'இத்தலையிற் கார்யம் ஏறிட்டுக்கொண்டும் அத்தலையை வஶீகரித்தும் இரண்டு தலையையும் பொருத்துகைக்கு இவள் தான் கண்ணழிவற்ற புருஷகாரமோ?' என்ன, அருளிச் செய்கிறுர் 'இவள் தாயாய்' என்று தொடங்கி.

மூ. 128. இவள் தாயாய் இவர்கள் க்லேசம் பொறுக்கமாட்டாதே, அவனுக்குப் பத்நியாய் இனிய விஷயமாயிருக்கையாலே, கண்ணழிவற்ற புருஷகாரம்.

வ்யா:—அதாவது- 112. **"त्वं माता सर्वलोकानां"** (**த்வம் மாதா ஸர்வலோகாநாம்**)என்றும், 113**"अखिलजगन्मातरं"**(**அகில ஜகந்மாதரம்**) என்றும் சொல்லுகிறபடியே இச்சேதநர்க்கு இவள் மாதாவாய், *"தந்தம் மக்களழுதுசென்றால் தாய் மாராவார் தரிக்ககில்லார்" என்கிறபடியே அந்த ஸம்பந்த மடியாக இவர்களுடைய க்லேசங்கண்டால் ஸஹிக்க மாட்டாதே, 114.**"विष्णुपत्नी"** (**விஷ்ணுபத்நீ**) என்கிறபடியே அவனுக்குப் பத்நியாய். †"பித்தர் பனிமலர்மேற்பாவைக்கு" என்கிறபடியே அவன் தன் வைலக்ஷண்யத்தைக் கண்டு பிச்சேறித்தன்சொல்வழி நடக்கும்படி அபிமதவிஷயமா யிருக்கையாலே, கண்ணழிவற்ற புருஷகாரமென்கை.

'எல்லாம் செய்தாலும் நிரங்குசஸ்வதந்த்ரனை ஈச்வரன் சேதநருடைய அபராதங்களை நிறுத்து அறுத்துத் தீர்த்து வன் என்று நிற்குமளவில், இவளாலே பொறுப்பிக்கப் போமோ?' என்ன, அருளிச்செய்கிறுர் 'திருவடியை' என்று தொடங்கி.

---

* பெரியாழ்திரு 2-2-3. † திருநெடு-18.

மூ. 129. திருவடியைப் பொறுப்பிக்குமவள், தன் சொல்வழி வருமவனைப் பொறுப்பிக்கச் சொல்ல வேண்டாவிறே.

வ்யா:—அதாவது, தன்னைப் பத்துமாஸம் தர்ஜநபர்த்ஸநம் பண்ணின அந்த ராக்ஷஸிகளுடைய அபராதங்களைக் கணக்கிட்டுச் சித்ரவதம் பண்ண உத்யோகித்து நின்றசொல்மிறுங்கனை திருவடியையுமுட்பட *115.*"**कः कुप्येत्**"(**க:குப்யேத்**)என்றும் *116.*"**न कश्चिन्नापराध्यति**"(**ந கஶ்ச்சிந்நா பராத்யதி**)என்றும் இத்யாதி உபதேசத்தாலே பொறுப்பிக்குமவள். * "மலராள் தனத்துள்ளான்" என்றும், || "மாமலர்மங்கை மணநோக்கமுண்டான்" என்றும், ‡ "அல்லிமலர்மகள் போகமயக்குக்களாகியும் நிற்கும்" என்றும் சொல்லுகிறபடியே தன்போக்யதையிலே குமிழிநீருண்டு, / "நின்னன்பின் வழிநின்று சிலைபிடித்து எம்பிரானேக" என்கிறபடியே மாயாம்ருகத்தின் பின்னே போ என்னிலும் விளைவது அறியாதே அதன் பின்னே போம்படி தன்சொல்வழி வருமவனைப் பொறுப்பிக்க வல்லளென்னுமிடம் கிம்புநர்ந்யாய ஸித்தமிறேயென்கை. [† "செய்தகவினுக்கில்லை கைம்மாறு" என்னும்படி இரண்டு தலைக்குந் தலைதடுமாறாக உபகரித்துத் தன்சொல்வழி போக வேண்டும்படியான திருவடியோடே மறுதலி(லை)க்குமவள் § "தான் முயங்கும்" என்னும்படியான போக்யதைக்குத் தோற்று 'எத்தைச் செய்வோம்' என்று தலைதடுமாறி / "நின்னன்பின் வழிநின்று" f "அதனின்பின்னே படர்ந்தான்" என்னும்படி விளைவதறியாதே முறுவலுக்குத் தோற்றுச் சொல்வழி போமவனைப் பொறுப்பிக்குமென்னுமிடஞ் சொல்ல வேண்டாவிறே]என்று இதுதன்னை இவர் திருத்தம்பியாரும் அருளிச்செய்தாரிறே.

---

* மூன்-திரு-3. || பெரியதிரு 8-10-1. ‡ திருவாய் 3-10-8. / பெரியாழ்திரு 3-10-7. † பெரியதிரு 5-8-2. § மூன்திருவ 100. f பெரியதிரு 2-5-6.

ஆக, ஸ்ரீமத்பதத்தில் ப்ரக்ருத்யம்சத்தை அருளிச் செய்தார் கீழ்; ப்ரத்யயாம்சத்தை அருளிச்செய்கிறார் மேல் 'மதுப்பாலே' என்று தொடங்கி.

மூ. 130. மதுப்பாலே இருவர் சேர்த்தியும் நித்ய மென்கிறது.

வ்யா:—அதாவது—இம்மதுப்புத்தான் நித்யயோகமதுப் பாகையாலே, இத்தால் புருஷகார பூதையான பிராட்டியும் ஈஸ்வரனுமான இருவருடைய சேர்த்தியும் எப்போது முண்டு என்னுமிடம் சொல்லுகிறதென்கை.

இந்நித்யயோகத்தை உபபாதிக்கிறார் 'இவளோடே கூடியே வஸ்துவினுடைய உண்மை' என்று.

மூ. 131. இவளோடே கூடியே வஸ்துவினுடைய உண்மை.

வ்யா:-அதாவது- 117. "**श्रियःपतिर्निखिलहेयप्रत्यनीककल्याणैकतानः स्वेतरसमस्तवस्तुविलक्षणानन्तज्ञानानन्दैकस्वरूपः**" (**ஸ்ரீய:பதிர் நிகிலஹேயப்ரத்யநீக கல்யாணைகதாநஸ் ஸ்வேதர ஸமஸ்த வஸ்து விலக்ஷணாநந்த ஜ்ஞாநாநந்தைக ஸ்வரூப:**) என்று ஸ்வரூபநிரூபகமான ஜ்ஞாநாநந்தாதிகளுக்கு முன்னே ஸ்ரீய: பதித்வத்தைச் சொல்லும்படி அவன் ஸ்வரூபத்துக்கு ப்ரதாந நிரூபகையாயிருக்கையாலே, இவளோடேகூடியே வஸ்துவி னுடைய ஸத்பாவம் இருப்பது என்கை.

ஆக, ஸ்வரூபாநுபந்தித்வ ப்ரயுக்தமான நித்யயோகத்தை அருளிச்செய்தாராயிற்று.

இனி, இவளுடைய குணப்ரயுக்தமான நித்யயோகத்தை அருளிச்செய்கிறார் 'ஈஸ்வர ஸ்வாதந்த்ர்யத்தையும்' என்று தொடங்கி.

மூ. 132. ஈச்வர ஸ்வாதந்த்ர்யத்தையும் சேதநனுடைய அபராதத்தையுங்கண்டு அகலமாட்டாள்.

வ்யா:—அதாவது, அபராதங்களைப் பத்தும் பத்தாகக் கணக்கிட்டு, அ(றி)றுத்து அறுத்துத் தீர்க்கும் ஈஶ்வர ஸ்வாதந்த்ர்யத்தையும் 118. **"यद्ब्रह्मकल्पनियुतानुभवेऽप्यनाश्यं"** (**யத்ப்ரஹ்ம கல்பநியுதாநுபவேப்யநாஶ்யம்**) இத்யாதிப்படியே காலதத்வமுள்ளதனையும் அநுபவியாநின்றாலும் சிறிது வரையிட்டுக் காட்டக் கடவதல்லாதபடி பண்ணிவைத்த இச்சேதநனுடைய அக்ருத்யகரணாத்யபராதத்தையுங்கண்டு, "என்னாகப்புகுகிறதோ?" என்னும் பயத்தாலே ஈஶ்வரனை விட்டு ஒரு க்ஷணகாலமும் அகலமாட்டாளென்கை.

இத்தால், சேதநனுக்குப் பலிக்குமத்தை அருளிச்செய்கிறார் 'சேதநனுக்கு' என்றுதொடங்கி.

மூ. 133. சேதநனுக்கு இவையிரண்டையும் நினைத்து அஞ்சவேண்டா.

வ்யா:—அதாவது, இப்படி இவள் இருந்து நோக்குகையாலே சேதநனுக்கு ஈஶ்வர ஸ்வதாந்த்ர்யமும் ஸ்வாபராதமுமாகிற இவை இரண்டையும் நினைத்து 'என்னை விளையப் புகுகிறதோ' என்று அஞ்சவேண்டா என்கை.

இனி, இம்மதுப்பின் தாத்பர்யார்த்தத்தை அருளிச்செய்கிறார் 'இத்தால்' என்றுதொடங்கி.

மூ. 134. இத்தால் ஆச்ரயிக்கைக்கு ருசியே வேண்டுவது, காலம் பார்க்கவேண்டா என்கிறது.

வ்யா:—அதாவது, இப்படிப் புருஷகார உபாய வஸ்துக்களினுடைய நித்யயோகத்தை ப்ரதிபாதிக்கிற இம்மதுப்பால், இவ்விஷயத்தை ஆஶ்ரயிப்பார்க்கு, ஆஶ்ரயிக்கையில் ருசியே வேண்டுவது, 'இரண்டுதலையும் கூடியிருக்கும் தசையிலே

ஆஶ்ரயிக்கவேணுமே' என்று ஆச்ரயணத்துக்குக் காலம் பார்த்திருக்க வேண்டாவென்கிறதென்கை.

இனி, இவள் புருஷகாரத்வத்தின் அவஶ்யாபேக்ஷித த்வத்தை அறிவிக்கைக்காக இவள் ஸந்நிதிக்கும் அஸந்நிதிக்கு முண்டான வாசியை அருளிச்செய்கிருர், 'இவள் ஸந்நிதியாலே' என்றுதொடங்கி.

மூ. 135. இவள் ஸந்நிதியாலே காகம் தலை பெற்றது; அது இல்லாமையாலே ராவணன் முடிந்தான்.

வ்யா:– 119. "देव्या कारुण्यरूपया" (தேவ்யா காருண்ய ரூபயா) என்கிறபடியே க்ருபைதான் ஒருவடிவு கொண்டாற்போலே இருப்பாளாய், ஸ்வதந்த்ரனை ஈஶ்வரனுக்கும் ஸ்வாதந்த்ர்யத்தையமுக்கி க்ருபையைக் கிளப்புமவளான இவள் ஸந்நிதியாலே, அபராதத்தைத் தீரக்கழியச் செய்து ப்ரஹ்மாஸ்த்ரத்துக்கு இலக்காய்த் தலையறுப்புண்ணத் தேடின காகம் 120. "कृपया पर्यपालयत्" (க்ருபயா பர்யபாலயத்) என்கிறபடியே க்ருபாவிஷயமாய்த் தலைபெற்றுப் போயிற்று; அப்படியிருக்கிற இவள் ஸந்நிதி இல்லாமையாலே போக்கற்றுச் செயல்மாண்டு நின்றநிலை ஒத்திருக்கச் செய்தேயும், காகத்தோபாதி அபராதமுமின்றிக்கே இருக்க, ராமஶரத்துக்கு இலக்காய் ராவணன் முடிந்துபோனுன் என்கை. ஆகையால் ஆஶ்ரயிப்பார்க்கு இவள் ஸந்நிதியே வேணுமென்று கருத்து. ஆக, ஸ்ரீமத்பதார்த்தத்தை அருளிச் செய்தாராயிற்று.

அநந்தரம், நாராயண பதார்த்தத்தை அருளிச்செய்கிருர் 'புருஷகார பலத்தாலே' என்றுதொடங்கி.

மூ. 136. புருஷகார பலத்தாலே ஸ்வாதந்த்ர்யம் தலைசாய்ந்தால் தலையெடுக்குங் குணங்களைச் சொல்லுகிறது நாராயணபதம்.

வ்யா:—அதாவது, உபதேசத்தாலும் அழகாலும் கண்ணழிவற வசீகரித்துக் கார்யங்கொள்ளவல்ல புருஷகார பலத்தாலே ஆஶ்ரயணோந்முகனான சேதநன் அநாதிகாலம் பண்ணின அபராதங்களைப் பார்த்துச் சீறி "அங்கீகரியேன்" என்று இருக்கும் ஈஶ்வர ஸ்வாதந்த்ர்யம் தலைமடிந்தால் அதன்கீழ் தலையெடுக்கப்பெறாத செறிப்புத் தீர்ந்து தலையெடுக்கும் குணங்களைச் சொல்லுகிறது நாராயணபதம் என்கை.

'அவைதாம் எவை?' என்ன, அருளிச்செய்கிறார் 'அவையாவன' என்றுதொடங்கி.

மூ. 137. அவையாவன-வாத்ஸல்யமும், ஸ்வாமித்வமும், ஸௌசீல்யமும், ஸௌலப்யமும், ஜ்ஞாநமும், சக்தியும்.

வ்யா:— இவற்றில், வாத்ஸல்யமாவது-வத்ஸத்தின் பக்கல் தேநு இருக்கும் இருப்பு; அதாவது அதனுடைய தோஷத்தைப் போக்யமாகக் கொள்ளுகையும் க்ஷீரத்தைக் கொடுத்து வளர்க்கையும், எதிரிட்டவரைக் கொம்பிலும் குளம்பிலுங் கொண்டு நோக்குகையுமிறே; அப்படியே, ஈஶ்வரனும் தோஷத்தைப் போக்யமாகக்கொண்டு, || "பாலே போற் சீர்" என்கிற குணங்களாலே தரிப்பித்து, 121. "**कथञ्चन-न त्यजेयं**" (**கதஞ்சந-நத்யஜேயம்**) என்றும், 122. "**अभयं सर्वभूतेभ्यः**" (**அபயம் ஸர்வபூதேப்ய:**) என்றும் சொல்லுகிறபடியே அநுகூலர் நிமித்தமாகவும் ப்ரதிகூலர் நிமித்தமாகவும் நோக்கும். ஸ்வாமித்வமாவது- இவன் விமுகனான தசையிலும் விடாதேநின்று, ஸத்தையை நோக்கிக்கொண்டு போருகைக்கு ஹேதுவான ஒரு பந்தவிஶேஷம்; அதாகிறது-உடையவனாயிருக்குமிருப்பு; அத்வேஷம் தொடங்கிக் கைங்கர்ய பர்யந்தமாக உண்டான ஸ்வபாவ விசேஷங்களையெல்லாம் உண்டாக்குகிறது இந்த பந்தவிசேஷமடியாக.

|| பெரியதிருவ 58.

ஸௌசீல்யமாவது- உபயவிபூதி யோகத்தாலும் பெரிய பிராட்டியாரோட்டைச் சேர்த்தியாலும் நிரங்குஶமாயிருக்கிற ஈச்வரனுடைய மேன்மையையும் தங்கள் சிறுமையையும் பார்த்து * "அவனெவ்விடத்தான் யானார்" என்று பிற்காலியாதபடி எல்லாரோடும் ஒக்க மேல்விழுந்து புரையறக் கலக்கையும் அது தன்பேறாக இருக்கையும், எதிர்த்தலையில் அபேக்ஷையின்றியிலே இருக்கக் கலக்கையும். ஸௌலப்யமாவது-கண்ணுக்கு விஷயமின்றிக்கேயிருக்கிற தான் கண்ணாலே கண்டு ஆஶ்ரயிக்கலாம்படி எளியனாயிருக்கை. ஜ்ஞாநமாவது—இச்சேதநனுக்குக் கழிக்கவேண்டும் அநிஷ்டங்களையும் கொடுக்கவேண்டும் இஷ்டங்களையும் நேராக அறிகைக்கு ஈடான ஸ்வவ்யதிரிக்த ஸமஸ்தபதார்த்தங்களையும் ஒரு காலே அபரோக்ஷிக்கவல்ல அறிவு. ஶக்தியாவது-ஹேயரான நித்யஸம்ஸாரிகளை உபாதேயதமரான நித்யஸூரிகளோடு ஒருகோவையாக்கவல்ல அகடிதகடநா ஸாமர்த்யம். இவற்றில் வாத்ஸல்யாதிகள் நாலும் ஆஶ்ரயண ஸௌகர்யாபாதகம்; ஜ்ஞாநாதிகள் இரண்டும் ஆஶ்ரித கார்யாபாதகம்; || "நிகரில்புகழாய்" என்று தொடங்கி வாத்ஸல்யாதிகள் நாலையுமிறே, ஆஶ்ரயணத்துக்கு உடலாக ஆழ்வார் அருளிச்செய்தது. ஜ்ஞாநஶக்திகள் இரண்டுஞ் சொன்ன இது, ப்ராப்தி பூர்த்திகளுக்கும் உபலக்ஷணம்; கார்யகரத்வத்துக்கு அவையும் அபேக்ஷிதங்களாகையாலே.

'இக்குணங்களுக்கு இவ்விடத்தில் விநியோகங்கள் எவை?' என்ன, அருளிச்செய்கிறார் 'குற்றங்கண்டு' என்று தொடங்கி.

மூ. 138. குற்றங்கண்டு வெருவாமைக்கு வாத்ஸல்யம்; கார்யஞ்செய்யுமென்று துணிகைக்கு ஸ்வாமித்வம்; ஸ்வாமித்வங்கண்டு அகலாமைக்கு ஸௌசீல்யம்;

* திருவாய் 5-1-7. || திருவாய் 6-10-10.

கண்டு பற்றுகைக்கு ஸௌலப்யம்; விரோதியைப் போக்கித் தன்னைக் கொடுக்கைக்கு ஜ்ஞாநசக்திகள்.

வ்யா:—*அதாவது-ஆஶ்ரயணோந்முகனான இச்சேதநன், தன்தோஷத்தைப் பார்த்து அஞ்சாமைக்கு உறுப்பு, தோஷத்தைப் போக்யமாகக் கொள்ளும் வாத்ஸல்யம். 'நங் கார்யம் செய்யுமோ, செய்யானோ?' என்று ஶங்கியாதே கார்யஞ்செய்யுமென்று விஶ்வஸிக்கைக்கு உறுப்பு இழவு பேறு தன்னதாம்படியான ஸ்வாமித்வம். உபயவிபூதிக்கும் கடவனாயிருக்கும் பெருமைக்கு ப்ரகாஶகமான ஸ்வாமித்வத்தைக்கண்டு ஸ்வநிகர்ஷாநுஸந்தாநத்தாலே அகலாமைக்கு உறுப்பு, தாழநின்றவர்களோடே புரையறக் கலக்கும் ஸ்வபாவமான ஸௌஶீல்யம். அதீந்த்ரியனென்று பிற்காலியாமல் கண்ணாலே கண்டு ஆஶ்ரயிக்கைக்கு உறுப்பு தன்வடிவைச் சக்ஷுர்விஷயமாக்குகையாகிற ஸௌலப்யம்; 123.* **"सर्वपापेभ्यो मोक्षयिष्यामि" (ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி)** *என்கிறபடியே ப்ராப்திவிரோதியைப்போக்கி ப்ராப்யனான தன்னை உபகரிக்கைக்கு உறுப்பு, ப்ராப்தாவான இவன் கீழ்நின்ற நிலையும் மேல் போக்கடியும் அறிகைக்கும் அறிந்தபடியே செய்து தலைக்கட்டுகைக்கும் ஏகாந்தங்களான ஜ்ஞாநஶக்திகளென்கை.*

ஸௌகர்யாபாதகங்களான குண சதுஷ்கத்திலும் ஸௌலப்யம் ப்ரதாநமாகையாலே, அந்த ஸௌலப்ய காஷ்டையை அருளிச்செய்கிறார் 'இங்குச்சொன்ன' என்று தொடங்கி.

மூ. 139. இங்குச்சொன்ன ஸௌலப்யத்துக்கு எல்லைநிலம் அர்ச்சாவதாரம்.

வ்யா:—*அதாவது, இப்பதத்தில் ஆஶ்ரயண உபயோகியாகச்சொன்ன ஸௌலப்யத்துக்கு ஸீமாபூமி ‡ "தமருகந்த*

---

‡ *முதல்-திருவ-44.*

தெவ்வுருவம் அவ்வுருவந்தானே'' என்கிறபடியே ஆஶ்ரிதர் உகந்தது ஒன்றைத் திருமேனியாகக்கொண்டு ஸதா ஸந்நிதி பண்ணியிருக்கும் அர்ச்சாவதாரமென்கை.

இதுதன்னை உபபாதிக்கிருர் 'இதுதான்' என்று தொடங்கி.

மூ. 140. இதுதான் பரவ்யூஹ விபவங்கள் போலன்றிக்கே கண்ணாலே காணலாம்படி இருக்கும்.

வ்யா:—அதாவது, இவ்வர்ச்சாவதாரந்தான் தேஶவிப்ர க்ருஷ்டதையாலே கண்ணுக்கு விஷயமாகாத ப்ரவ்யூஹங் களும், காலவிப்ரக்ருஷ்டதையாலே கண்ணுக்கு விஷய மாகாதபடிபோன விபவமும் போலன்றிக்கே, ஆஸந்நமாய் அநவரதஸந்நிதி பண்ணிக்கொண்டிருக்கையாலே, அநவரதம் கண்ணாலே காணலாம்படி இருக்குமென்கை.

'இக்குணங்களெல்லாம் அர்ச்சாவதாரத்திலே காண லாமோ?' என்ன அருளிச்செய்கிருர் 'இவையெல்லாம் நமக்கு நம் பெருமாள் பக்கலிலே காணலாம்' என்று.

மூ. 141. இவையெல்லாம் நமக்கு நம் பெருமாள் பக்கலிலே காணலாம்.

வ்யா:—அதாவது, ஸௌகர்யாபாதகமாகவும் கார்யா பாதகமாகவும் சொன்ன இக்குணங்கள் எல்லாம் இவை காண்கையிலே அபேக்ஷையுடைய நமக்கு நம்முடைய பெரு மாள் பக்கலிலே காணலாமென்கை.

பெருமாள் பக்கலிலே இக்குணங்களுக்கு ப்ரகாஶகங்களா யுள்ளவற்றைச் சொல்லி, 'இவற்றுடனே நிற்கிற நிலையே நமக்குத் தஞ்சம்' என்கிருர் 'திருக்கையிலே' என்றுதொடங்கி.

மூ. 142. திருக்கையிலே பிடித்த திவ்யாயுதங்களும் வைத்து அஞ்சல் என்ற கையும், கவித்த முடியும்,

முகமும் முறுவலும், ஆஸநபத்மத்திலே அழுத்தின திருவடிகளுமாய் நிற்கிற நிலையே நமக்குத் தஞ்சம்.

வ்யா:—அதாவது, கார்யகரத்வ உபயோகியான ஜ்ஞாநஶக்திகளுக்கு ப்ரகாஶகமாம்படி திருக்கைகளிலே தரித்துக்கொண்டிருக்கிற ஶங்கசக்ராதி திவ்யாயுதங்களும், வாத்ஸல்ய ப்ரகாஶகமாம்படி வைத்து அஞ்சலென்ற கையும், ஸ்வாமித்வ ப்ரகாஶகமாகக் கவித்த முடியும், ஸௌஶீல்ய ப்ரகாஶகமான முகமும் முறுவலும், அனைவர்க்குங்கண்டு பற்றலாம்படியான ஸௌலப்ய ப்ரகாஶகமான ஆஸநபத்மத்திலே அழுத்தின திருவடிகளுமாய்க்கொண்டு எழுந்தருளி நிற்கிற நிலையே அநந்ய கதிகளான நமக்கு ரக்ஷகமென்கை.

உபாய உபேய நிஷ்டர்க்கு அபேக்ஷிதமான ஆகாரங்கள் இரண்டும் கீழ்ச்சொன்னபடியே நிற்கிற திருமேனியிலே தோற்றும் என்கிறார் 'ரக்ஷகத்வ போக்யத்வங்கள் இரண்டுந் திருமேனியிலே தோற்றும்' என்று.

மூ. 143. ரக்ஷகத்வ போக்யத்வங்கள் இரண்டும் திருமேனியிலே தோற்றும்.

வ்யா:-அதாவது, ரக்ஷண பரிகரமான திவ்யாயுதங்களோடும் ரக்ஷணத்துக்குக் கவித்த முடியோடுங் கூடியிருக்கையாலே ரக்ஷகத்வம் தோற்றுகையாலும் * "அணியாராழியுஞ் சங்குமுமேந்தும்" || "முடிச்சோதியாயுனது முகச்சோதி மலர்ந்ததுவோ" என்கிறபடியே அவைதானே அழகுக்கு உடலாய் வைத்தஞ்சல் என்ற கையும் முகமும் முறுவலும் ஆஸநபத்மத்திலே அழுத்தின திருவடிகளும் ஓரொன்றே அழகுக்கு எல்லைநிலமாயிருக்கையாலே போக்யத்வம் தோற்றுகையாலும், இரண்டும் திருமேனியிலே ப்ரகாசிக்கும் என்கை. ஆக, நாராயண பதார்த்தத்தை அருளிச்செய்தாராயிற்று.

---

* திருவாய் 7-3-6. || திருவாய் 3-1-1.

இனி, 'சரணௌ' என்கிற பதத்துக்கு அர்த்தம் அருளிச் செய்கிறார் 'சரணௌ—திருவடிகளை' என்று.

மூ. 144. சரணௌ—திருவடிகளை.

இந்த த்விவசனத்தாற் சொல்லுகிற அர்த்தத்தை அருளிச்செய்கிறார் 'இத்தால்' என்றுதொடங்கி.

மூ. 145. இத்தால் சேர்த்தியழகையும், உபாய பூர்த்தியையும் சொல்லுகிறது.

வ்யா:— அதாவது, 'சரணௌ' என்று இரண்டு திருவடிகளையும் சொல்லுகிற இத்தால், / "இணைத்தாமரையடி" என்கிறபடியே இரண்டு தாமரைப்பூவை நிரைத்து வைத்தாற் போலேயிருக்கிற சேர்த்தியழகையும் த்விவசநம் இரண்டுக்கு மேல் மற்றொன்று புகுர ஸஹியாமையாலே ஸஹாயாந்தர நிரபேக்ஷமான உபாயபூர்த்தியையுஞ் சொல்லுகிறதென்கை.

இனி, உபாயத்வ ஏகாந்தமான இதன் குணாதிக்யத்தை அருளிச்செய்கிறார் 'பிராட்டியும்' என்று தொடங்கி.

மூ. 146. பிராட்டியும் அவனும் விடிலும் திருவடிகள் விடாது; ‡ திண்கழலாயிருக்கும்.

வ்யா:— அதாவது – ஸ்ரீமத்பதத்திலே புருஷகாரபூதையாகச்சொன்ன பிராட்டியும் அவள்தானே சிதகுரைக்கிலும் * "என்னடியார் அதுசெய்யார்" என்னும்படி நாராயண பதத்திற்சொன்ன குணவிசிஷ்டனான அவனும் கை விடிலும் திருவடிகள் தன் வைலக்ஷண்யத்தாலே துவக்கிக்கொள்ளுகையாலே கைவிடாது; ‡ "வண்புகழ்நாரணன்திண்கழல்" என்கிறபடியே பற்றினாரை நழுவவிடாதே திண்மையை யுடைத்தாயிருக்கும் என்கை.

/ திருவாய் 1-8-3. * பெரியாழ்திரு 4-9-2. ‡ திருவாய் 1-2-10.

இந்தக் குஹ்யத்தைப்பற்றவும் அன்றிக்கே, இவன் தன் ஸ்வரூபாநுகுணமும் திருவடிகளிலே இழிகை யென்னுமத்தை ஸத்ருஷ்டாந்தமாக அருளிச்செய்கிறார் 'ஶேஷிபக்கல்' என்று தொடங்கி.

மூ. 147. சேஷிபக்கல் சேஷபூதன் இழியும்துறை; ப்ரஜை முலையிலே வாய்வைக்குமாபோலே.

வ்யா:—அதாவது-ஶேஷிபக்கல் ஆஶ்ரயிக்க இழியும் ஶேஷபூதன் தன் ஸ்வரூபாநுகுணமாக இழியுந்துறை திருவடிகள்; ஸ்தநந்தயப்ரஜை தாயினுடைய அவயவமெல்லாங் கிடக்கத் தனக்கு வகுத்ததாயுள்ள முலையிலே வாய் வைக்குமாபோலேயென்கை.

'திருவடிகளைச்சொன்ன இது திருமேனிக்கு உபலக்ஷணம்' என்கிறார், மேல் 'இத்தால்' என்று தொடங்கி.

மூ. 148. இத்தால், பிராட்டிக்கு இருப்பிடமாய்க் குணப்ரகாசகமுமாய் சிசுபாலனையும் அகப்படத்திருத்திச் சேர்த்துக்கொள்ளுந் திருமேனியை நினைக்கிறது.

வ்யா:—அதாவது-'சரணௌ' என்று விக்ரஹ ஏகதேஶமான திருவடிகளைச் சொன்ன இத்தால் *"திருவிருந்த மார்வன்" என்னும்படி ஸ்ரீமத்பதத்திற்சொன்ன புருஷகாரபூதையான பிராட்டிக்கு இருப்பிடமாய், நாராயணபதத்திற்சொன்ன குணங்களுக்கு ப்ரகாஶகமாய், ||"பலபல நாழஞ்சொல்லிப் பழித்த சிசுபாலன்" என்கிறபடியே ப்ரத்வேஷ பரனாய் நிந்தோக்திகளைப் பண்ணித்திரிந்த ஶிஶுபாலனையும் உட்பட ||"அலவலைமை தவிர்த்த அழகன்" என்கிறபடியே தன்னழகாலே த்வேஷாதிகள் போம்படி திருத்தி †"திருவடி தாட்பாலடைந்த" என்கிறபடியே சேர்த்துக்கொள்ளும் ஸ்வபாவத்தையுடைத்தான திவ்ய மங்கள விக்ரஹத்தை நினைக்கிறது என்கை.

* மூன்-திருவ-57. || பெரியாழ் திரு 4-3-5. † திருவாய் 7-5-3.

அநந்தரம், ஶரணபதார்த்தத்தை அருளிச்செய்கிறுர் 'ஶரணம்' என்று தொடங்கி.

மூ. 149. ஶரணம்-இஷ்டப்ராப்திக்கும் அநிஷ்ட நிவா ரணத்துக்கும் தப்பாத உபாயமாக.

வ்யா:- *அதாவது, 124.* **"उपाये गृहरक्षित्रोः शब्दः शरणमित्ययं। वर्तते सांप्रतं चैष उपायार्थैकवाचकः॥" (உபாயே க்ருஹ ரக்ஷித்ரோஶ் ஶப்தஶ்ஶரணமித்யயம் | வர்த்ததேஸாம் ப்ரதஞ்சைஷ உபாயார்த்தைக வாசக:||)** *என்கிறபடியே ஶரண ஶப்தம் ரக்ஷிதாவுக்கும் க்ருஹத்துக்கும் உபாயத்துக்கும் வாசகமேயாகிலும், இவ்விடத்தில் உபாயத்துக்கே வாசக மாகையாலும், உபாய க்ருத்யம் இஷ்டாநிஷ்டப்ராப்தி பரிஹார கரணமாகையாலும், இஷ்டப்ராப்திக்கும் அநிஷ்ட நிவாரணத்துக்கும் தப்பாத உபாயமாக என்று இப்பதத்துக்கு அர்த்தம் அருளிச்செய்கிறுர். இஷ்டாநிஷ்டங்கள் தாம் இன்னவையென்னுமத்தைப் பரந்தபடியிலே விஸ்தரேண அருளிச்செய்தார். ஸ்ரிய:பதிப்படியிலும் "அநிஷ்டமாகிறது-அவித்யையும், அவித்யா கார்யமான ராகத்வேஷங்களும், புண்ய பாபரூபமான கர்மங்களும், தேவாதி சதுர்வித ஶரீரங்களும், ஆத்யாத்மிகாதி து:க்கபரம்பரைகளும்; இஷ்டமாகிறது அர்ச்சிராதி மார்க்ககமநமும், பரமபத ப்ராப்தியும், பரமாத்மதர்ஶநமும், குணநுபவகைங்கர்யங்களும்" என்று ஸங்க்ரஹேண அருளிச்செய்தார்; ஆகையால், இவ்விடத்திலும் அவை வக்தவ்யங்கள்.*

கீழ் நிர்த்தேஶித்த வஸ்துவை உபாயமாகச் சொன்ன தன் தாத்பர்யத்தை அருளிச்செய்கிறுர் 'இத்தால், ப்ராப்யந்தானே ப்ராபகம் என்கிறது' என்று.

மூ. 140. இத்தால், ப்ராப்யந் தானே ப்ராபகம்என் கிறது.

வ்யா— அதாவது-கீழ்ச்சொன்ன விஷயத்தை உபாய மாகச் சொல்லுகிற இத்தால் ப்ராப்ய வஸ்துதானே ப்ரா பகம் என்னுமிடஞ் சொல்லுகிறது என்கை.

'கீழ் ப்ராப்யப்ரஸங்கம் உண்டோ?' என்ன அருளிச் செய்கிறார் 'கீழ்ச்சொன்ன மூன்றும் ப்ராப்யமிறே' என்று.

மூ. 151 கீழ்ச்சொன்ன மூன்றும் ப்ராப்யமிறே.

வ்யா:— அதாவது-ஸமஸ்தபதமான பூர்வபதத்திற் சொன்ன லக்ஷ்மீவிஶிஷ்டத்வமும், கல்யாணகுணயோகமும், திவ்யமங்கள விக்ரஹோபேதத்வமும் ஆகிற மூன்றும். 125. **"श्रिया सार्धं-आस्ते"** (ஶ்ரியா ஸார்த்தம் ஆஸ்தே) 126. **"सर्वान् कामान् अश्नुते"** (ஸர்வாங் காமாந் அஶ்நுதே) 127 **"सदा पश्यन्ति"** (ஸதா பஶ்யந்தி) என்று இவனுக்கு அநுபவவிஷயமாகச் சொல்லப்படுகிறவையாகையாலே ப்ராப்யமிறேயென்கை.

'ஆனுல், இத்தை உபாயமாக்குகிறதுதானென்?' என்ன, அருளிச்செய்கிறார் 'இவன் செயலறுதியாலே உபாய மாக்குகிறானித்தனை' என்று.

மூ. 152. இவன் *செயலறுதியாலே உபாயமாக்கு கிறுனித்தனை

வ்யா:–அதாவது, அகிஞ்சநனுய் அநந்யகதியாயிருக்கிற இவன் தன் * செயல் மாட்சியாலே போக்யமான பாலை மருந் தாக்குவாரைப்போலே, ப்ராப்யமானது தன்னையே ப்ராபக மாக்குகிறானித்தனையென்கை.

இதுதன்னுலே இவ்வுபாயத்துக்கு ஓரதிசயம் சொல்லு கிறது என்கிறார் 'சரணௌ ஶரணம் என்கையாலே' என்று தொடங்கி.

---

* செயலறுதி–செயலற்றுப்போகை; செயல் மாட்சி–செயல் மாண்டுபோகை.

மூ. 153. "சரணௌ ஶரணம்" என்கையாலே, உபாயாந்தர வ்யாவ்ருத்தமான உபாயம் என்கிறது.

வ்யா:-*அதாவது, 'சரணௌ ஶரணம்' என்று ப்ராப்ய வஸ்து தன்னையே ப்ராபகமாகச் சொல்லுகையாலே, ப்ராப்யம்வேறும் தான் வேறுமாயிருக்கும். உபாயாந்தரங்களிற் காட்டில் வ்யாவ்ருத்தமான உபாயம் இது என்னுமிடம் சொல்லுகிறது என்கை*

அநந்தரம், க்ரியாபதத்துக்கு அர்த்தம் அருளிச்செய்கிறார் 'ப்ரபத்யே—பற்றுகிறேன்' என்று.

மூ. 154. ப்ரபத்யே—பற்றுகிறேன்.

வ்யா:–*இப்பதம் 'பதகதௌ' என்கிற தாது ஸித்தமாகையாலே கதிவாசி ஆகையாலும், உத்தமன் ஆகையாலும், 'பற்றுகிறேன்' என்று இதுக்கு அர்த்தம் அருளிச்செய்கிறார்.*

'இதுதான் மாநஸ வாசிக காயிக ரூபையான த்ரிவித கதியையும் காட்டவற்றாகையாலே, அதில் எந்தக் கரணத்தால் உண்டான பற்றுதலைச் சொல்லுகிறது?' என்ன அருளிச்செய்கிறார் 'வாசிகமாகவும்' என்றுதொடங்கி.

மூ. 155. வாசிகமாகவும் காயிகமாகவும் பற்றினாலும் பேற்றுக்கு அழிவில்லை (இழவில்லை); 'ஜ்ஞாநாந் மோக்ஷம்' ஆகையாலே, மாநஸமாகக்கடவது.

வ்யா:-*அதாவது, 128*"**भव शरणं**" (பவ ஶரணம்) *இத்யாதிப்படியே ரக்ஷிக்கவேணும் என்று ப்ரார்த்திக்கையாகிற கேவல வாசிகமாகவும் 129.* "**अञ्जलिः परमा मुद्रा क्षिप्रं देवप्रसादिनी**" **(அஞ்ஜலி: பரமா முத்ரா க்ஷிப்ரம் தேவப்ரஸாதிநீ)** *என்கிற படியே பகவத் ப்ரஸாத ஹேதுபூதமான அஞ்ஜலியை ப்ரயோகித்தல், நிஷாத காகாதிகளைப்போலே ரக்ஷகவஸ்து*

இருந்த இடத்தே வருதல் செய்கையாகிற கேவலகாயிக மாகவும் பற்றினாலும் பலஸித்திக்கு / அழிவில்லை. 130. "ஜ்ஞாநாந்மோக்ஷ:" (ஜ்ஞாநாந்மோக்ஷ:) என்கிறபடியே, ஜ்ஞாநத்தாலே மோக்ஷம் என்கையாலே, மாநஸமான பற்றுதல் (ஆகக்கடவது) என்கை. அதாவது-ஒரு புத்திவிசேஷம். இந்த புத்தி விசேஷந்தன்னைப் பரந்தபடியிலே விஸ்தரேண அருளிச்செய்தார். ஸ்ரிய: பதிப்படியிலும், "இந்தபுத்தி விசேஷமாகிறது-அநந்யார்ஹசேஷத்வ ஜ்ஞாநகார்யமாய், இதரோபாயவ்யாவ்ருத்தமாய், பகவத்ரக்ஷகத்வாநுமதிரூபமாய், ஸக்ருதநுஷ்டேயமாய், வ்யபிசாரவிளம்பவிதுரமாய், ஸர்வாதிகாரமாய், நியமசூந்யமாய், அந்திமஸ்ம்ருதி நிரபேக்ஷமாய், ஸுலபமாய், யாச்ஞாகர்ப்பமாய், த்ருடாத்யவஸாய ரூபமாய் இருப்பதொரு ஜ்ஞாநவிசேஷம்" என்று அருளிச்செய்தார். ஆகையால், இவ்விடத்தே அதுவும் அநுஸந்தேயம்.

இப்படி மாநஸமாத்ரமே அமையுமோ? * "சிந்தையாலும்" இத்யாதிப்படியே த்ரிவிதகரணத்தாலும் ஸ்வீகரிக்கவேண்டாவோ?' என்ன அருளிச்செய்கிறார் 'உபாயம் அவனுகையாலும்' என்று தொடங்கி.

மூ. 156. உபாயம் அவனுகையாலும், இவை நேரே உபாயம் அல்லாமையாலும், இம்மூன்றும் வேணும் என்கிற நிர்ப்பந்தம் இல்லை.

வ்யா:—அதாவது-பலஸித்திக்கு உபாயம்-பற்றப்படுகிற ஈச்வரனுகையாலும் கரணத்ரயத்தாலும் உண்டான பற்றுதல்களான இவை ஆபாதப்ரதீதியில் உபாயம்போல் தோற்றிக்கழியுண்டு போமதொழிய, ஸாக்ஷாத் உபாயம் அல்லாமையாலும் பலஸித்திக்கு அத்யவஸாயாத்மகமான ஸ்வீகாரம் ஒன்றுமேயமையும், இம்மூன்றும் வேணும் என்கிற நிர்ப்பந்தம் இல்லை என்கை. அதவா, இப்படி

/ (பா) இழவில்லை. * திருவாய் 6-5-11.

ஒரொன்றிலே ஒதுக்கிச்சொல்லுகிறதென், த்ரிவிதகரணத்தாலும் பற்றுதலைச் சொன்னுலோவென்ன. 'உபாயம்' இத்யாதியாலே அருளிச்செய்கிருராகவுமாம். அப்போதைக்கு ஒரொன்றே அமையும். இம்மூன்றும் வேணும் என்கிற நிர்ப்பந்தம் இல்லை என்கை. நிர்ப்பந்தம் இல்லை என்கையாலே, இந்த ஸ்வீகாரம் த்ரிவிதகரணத்தாலும் உண்டாளுலும் குறையில்லையென்னுமிடம் தோற்றுகிறது. "இப்ரபதநம் கரணத்ரயத்தாலும் உண்டாகவுமாம்; ஏககரணத்தாலே உண்டாகவுமாம்; பலஸித்திக்குக் குறையில்லை. அதிகாரிபூர்த்திக்குக் கரணத்ரயமும் வேணும். பலஸித்திக்கு ஏககரணமே அமையும்; உபாயபூர்த்திக்கு ஶ்ரிய:பதித்வமும், வாத்ஸல்யாதி குணயோகமும், திவ்யமங்கள விக்ரஹமும் அபேக்ஷிதமாயிருக்கிருப்போலே, அதிகார(ரி)பூர்த்திக்குக் கரணத்ரயமும் அபேக்ஷிதமாயிருக்கும்" என்றிறே பரந்தபடியில் இவர்தாம் அருளிச்செய்தது. 131. **"सकृदेव हि शास्त्रार्थः कृतोऽयं तारयेन्नरम्"**(ஸக்ருதேவஹி ஶாஸ்த்ரார்த்த: க்ருதோயம் தாரயேந் நரம்) 132. **"सकृदेव प्रपन्नाय"**(ஸக்ருதேவ ப்ரபந்நாய) இத்யாதிகளிற் சொல்லுகிறபடியே ப்ரபத்தி ஸக்ருத்கரணீயையாயிருக்க, வர்த்தமாநமாகச் சொல்லுகிறது ஏதுக்காக?' என்ன, அருளிச்செய்கிருர் 'வர்த்தமாந நிர்த்தேஶம்' என்றுதொடங்கி.

மூ. 157. வர்த்தமாந நிர்த்தேசம்-ஸத்வம் தலையெடுத்து அஞ்சினபோது அநுஸந்திக்கைக்காக.

வ்யா:—அதாவது, 133. **"लोकविक्रान्तचरणौ शरणं तेऽव्रजं विभो"** (லோகவிக்ராந்த சரணௌ ஶரணம் தேவ்ரஜம் விபோ) || "நின்னடியிணை அடைந்தேன்" ‡ "அடிக்கீழமர்ந்து புகுந்தேன்" என்கிறபடியே சொல்லாதே 'ப்ரபத்யே' என்று வர்த்தமாநமாகச் சொல்லுகிறது ப்ரக்ருதியோடேயிருக்கிற

|| பெரியதிரு 5-8-1. ‡ திருவாய் 6-10-10.

இவன் ரஜஸ்தமஸ்ஸுக்களாலே கலங்கி உபாயாபாயங்களில் ஏதேனும் ஒன்றிலே அந்வயித்து, பின்னை ஸத்வம் தலையெடுத்து அநுதாபம் பிறந்து பயப்பட்ட காலத்திலே 134. **"प्रायश्चित्तिरियं सात्र यत्पुनः शरणं व्रजेत्" (ப்ராயஶ்சித்திரியம் ஸாத்ர யத்புநஶ்ஶரணம் வ்ரஜேத்)** *என்கிறபடியே ப்ரபத்தியொழிய அதுக்குப் பரிஹாரம் இல்லாமையாலும், அதுதான் ஸக்ருத் க்ருதமானபின்பு புந:கரணம் ஆகாமையாலும், பூர்வப்ரபதநத்தை அநுஸந்திக்கைக்காகக் கொழுந்துபடக்கிடக்கிறதென்கை.*

இன்னமும் இவ்வர்த்தமாநத்துக்குச் சில ப்ரயோஜநங்களை அருளிச்செய்கிறார் 'உபாயாந்தரங்களில்' என்றுதொடங்கி.

மூ. 158. உபாயாந்தரங்களில் நெஞ்சு செல்லாமைக்கும், காலக்ஷேபத்துக்கும் இனிமையாலே விடவொண்ணாமையாலும் நடக்கும்.

வ்யா:—*அதாவது, பூர்வவாஸனையாலே அவஶமாக உபாயாந்தரங்களிலே மநஸ்ஸு செல்லாமைக்காகவும், இவ்வநுஸந்தாநத்தாலொழியப் போதுபோக்க அரிதாகையாலே காலக்ஷேபத்துக்காகவும், இதனுடைய ரஸ்யதையாலே விடமாட்டாமையாலும், இவ்வநுஸந்தாநம் இடைவிடாமல் நடக்கக்கடவதாயிருக்குமென்கை.*

'இங்ஙனன்றிக்கே, பலஸித்திக்குப் பலகாலும் அநுஸந்திக்கவேணுமென்றாலோ?' என்ன, அருளிச்செய்கிறார் 'பேற்றுக்கு' என்றுதொடங்கி.

மூ. 159. பேற்றுக்குப் பலகாலும் வேணுமென்று நினைக்கில் உபாயம் நழுவும்.

வ்யா:–*அதாவது, கீழ்ச்சொன்ன ப்ரயோஜநங்களுக்காக அன்றிக்கே பேற்றுக்கு உறுப்பாகப் பலகாலும் அநுஸந்*

திக்கவேணுமென்று ப்ரதிபத்திபண்ணில், ஸஹாயாந்தர ஸம்ஸர்க்காஸஹமான ஸித்தோபாயம் சணற்கயிறுகண்ட ப்ரஹ்மாஸ்த்ரம்போலே தன்னைக்கொண்டு நழுவும் என்கை. ஆக, பூர்வ வாக்யத்துக்கு அர்த்தம் அருளிச்செய்தாராயிற்று.

இனி, உத்தர வாக்யத்துக்கு அர்த்தம் அருளிச்செய்வதாக உபக்ரமிக்கிறார் 'உத்தர வாக்யத்தாலே ப்ராப்யஞ் சொல்லுகிறது' என்று.

மூ. 160. உத்தர வாக்யத்தாலே ப்ராப்யம் சொல்லுகிறது.

வ்யா:—ப்ராப்யமாவது—ஸ்ரிய:பதியாய் ஸர்வஸ்வாமியாய் இருக்கிற ஸர்வேஶ்வரன் திருவடிகளிற் பண்ணும் கைங்கர்யம்.

ப்ராபகவரணாநந்தரம் ப்ராப்யம் சொல்லுகிற இதுக்கு அபிப்ராயம் அருளிச்செய்கிறார் 'ப்ராப்யாந்தரத்துக்கு அன்றென்கை' என்று.

மூ. 161. ப்ராப்யாந்தரத்துக்கு அன்றென்கை.

வ்யா:—பூர்வவாக்யத்தில் ப்ரதிபாதிதமான ஸாதநம் பல சதுஷ்டய ஸாதாரணம் ஆகையாலே, கீழ்ப்பண்ணின ப்ராபகவரணம் ப்ராப்யாந்தரத்துக்கு அன்று என்னுமிடஞ் சொல்லுகை இப்போது ப்ராப்யம் சொல்லுகிற இதுக்கு ப்ரயோஜநம் என்றபடி.

'ப்ராப்யாந்தரங்களை விட்டு இந்த ப்ராப்யத்தை அபேக்ஷிக்கவேண்டுவானென்?' என்கிற ஶங்கையிலே அருளிச்செய்கிறார் 'உபாயாந்தரங்களை விட்டு' என்றுதொடங்கி.

மூ. 162. உபாயாந்தரங்களைவிட்டுச் சரமோபாயத்தைப் பற்றினாற்போலே, உபேயாந்தரமான ஐச்வர்ய கைவல்யங்களைவிட்டு எல்லையான ப்ராப்யத்தை அர்த்திக்கிறது.

வ்யா:—அதாவது, உபாயவரணம் பண்ணுகிறவளவில் அநந்யஶரணத்வரூபமான ஸ்வரூபத்துக்குஅநுகுணமாகக் கர்ம ஜ்ஞாநபக்திகளாகிற உபாயாந்தரங்களை விட்டுச் சரமமான ஸித்தோபாயத்தைப் பற்றினாற்போலே உபேயப்ரார்த்தனை பண்ணுகிறவளவிலும் அநந்யபோகத்வரூபமான ஸ்வரூபத்துக்கு அநுகுணமாக உபேயாந்தரமான ஐஶ்வர்ய கைவல்யங்களைவிட்டுச் சரமமான ப்ராப்யத்தை அர்த்திக்கிறது என்கை.

நினைவறியும் ஈஶ்வரன்பக்கல் ப்ரார்த்தனை மிகையென்றிருப்பார் பண்ணும் ப்ரஸங்கத்தை அநுவதிக்கிறார் 'இவன் அர்த்திக்கவேணுமோ? ஸர்வஜ்ஞன் இவன் நினைவறியானோ? என்னில்' என்று.

மூ. 163. இவன் அர்த்திக்கவேணுமோ? ஸர்வஜ்ஞன் இவன் நினைவறியானோ என்னில்.

அதுக்கு உத்தரம் அருளிச்செய்கிறார் 'இவன் பாசுரங் கேட்டவாறே திருவுள்ளமுகக்கும்' என்று.

மூ. 164. இவன் பாசுரங்கேட்டவாறே திருவுள்ளம் உகக்கும்.

வ்யா:—அதாவது-ருக்ணதையாலே சோற்றில் ஆசையற்றுக்கிடந்த ப்ரஜை ரோகந்தீர்ந்து பசிவிளைந்து 'சோறு' என்று அபேக்ஷிக்கும் பாசுரங்கேட்டால் பெற்றதாய் உகக்குமாபோலே, அநாதிகாலம் ப்ராப்யாந்தரப்ராவண்யமாகிற நோய்கொண்டு இந்த ப்ராப்யத்தில் நசையற்றுக் கிடந்தவன் இதிலே ருசி பிறந்து தன் பக்கலிலே வந்து இத்தை அபேக்ஷிக்கிற பாசுரங்கேட்டவாறே, ஶேஷியான அவன் திருவுள்ளம் உகக்கும்: அதுக்காக அர்த்திக்கிறானித்தனையென்கை.

இனி, இவ்வாக்யத்துக்கு ப்ரதிபதம் அர்த்தம் அருளிச் செய்வதாகத் திருவுள்ளம்பற்றி, ப்ரதமபதத்தை உபாதாநம் பண்ணுகிறார் 'ஸ்ரீமதே' என்று.

மூ. 165. ஸ்ரீமதே—பெரியபிராட்டியாரோடே கூடி யிருந்துள்ளவனுக்கு.

வ்யா:—அதுக்கு அர்த்தம் அருளிச்செய்கிறார், 'பெரிய பிராட்டியாரோடே கூடியிருந்துள்ளவனுக்கு' என்று. இங்கும் ஸ்ரீசப்தத்துக்குப் பூர்வவாக்யத்திற் சொன்ன வ்யுத்பத்தித்வயமும் அதில் அர்த்தமும் மதுபர்த்தமான நித்ய யோகமும் அநுஸந்தேயம்.

இரண்டிடத்திலும் நித்யயோகம் ஒத்திருக்கச்செய்தே அவ்வவதசாநுகுணமாக இவளிருக்கும் இருப்பை அருளிச் செய்கிறார் 'அவன் உபாயமாமிடத்தில்' என்று தொடங்கி.

மூ. 166 அவன் உபாயமாமிடத்தில் தான் புருஷ காரமாயிருக்கும்; அவன் ப்ராப்யனுமிடத்தில் தான் ப்ராப்யையுமாய்க் கைங்கர்யவர்த்தகையுமாயிருக்கும்.

வ்யா:—அதாவது, அவன் சேதநர்க்கு அநிஷ்டநிவ்ருத்தி இஷ்டப்ராப்திகளுக்கு உபாயமாமிடத்தில் ஸஹாயாந்தர ஸம்ஸர்க்கத்தை ஸஹியாமையாலே தான் உபாய பாவத்தில் அந்வயமின்றிக்கே, ஸாபராத சேதநருடைய அபராதங்களைப் பார்த்து அவன் சீறுமளவில், அத்தை ஸஹித்து அங்கீகரிக்கும்படியாகப் பண்ணும் புருஷகாரமாயிருக்கும்; அவன் சேதநர்க்குக் கைங்கர்ய ப்ரதிஸம்பந்திதயா ப்ராப்யனுமிடத்தில், அவனோபாதி கைங்கர்ய ப்ரதிஸம்பந்தியாய்க்கொண்டு தான் ப்ராப்யையுமாய், இவர்கள் செய்யும் கைங்கர்யத்தை அவன் திருவுள்ளத்திலே ஒன்றுபத்தாகப்படுத்தி உகப்பிக்கையாலே, கைங்கர்ய வர்த்தகையுமாயிருக்குமென்கை. இது தன்னைப் பரந்தபடியிலே "பூர்வவாக்யத்தில் ஸ்ரீமச்சப்தம் சேதநருடைய அபராதத்தையும், ஈச்வரனுடைய ஸ்வாதந்த்ர்யத்தையுங்கண்டு, 'இவர்கள் அவனுடைய க்ரோதத்துக்கு விஷயபூதராய் நசித்துப்போகாதே, இவனைக்கிட்டி உஜ்ஜீவித்துப்போகவேணும்' என்று ஸாபராதரான சேதநரை

ஈஶ்வரனோடே சேர்க்கைக்காக என்றுமொக்க விடாதேயிருக்கும் இருப்பைச் சொல்லுகிறது; இங்குத்தை ஸ்ரீமச்சப்தம் கைங்கர்ய ப்ரதிஸம்பந்தித்வத்தைப் பற்றவும், இவர்கள் பண்ணுங் கைங்கர்யத்தை ஈஶ்வரன் திருவுள்ளத்திலே ஒன்றுபத்தாகப் படுத்துகைக்காகவும், அநுபவவிச்சேதத்தில் தனக்கு ஸத்தாஹாநி பிறக்கும்படி இருக்கையாலே, நிரந்தர ஸம்ஶ்லேஷத்துக்காகவும், அவனை க்ஷணகாலமும் பிரியாதே ஸர்வகாலமும் ஸம்ஶ்லிஷ்டையாயிருக்கும் இருப்பைச் சொல்லுகிறது'' என்று விஸ்தரேண அருளிச்செய்தார்.

திருமந்த்ரத்தில் உத்தரபதத்துக்கு இவ்வுத்தரவாக்யம் விவரணமாயிருக்கிறபடியை அருளிச்செய்கிறார் 'இதிலே' என்று தொடங்கி.

மூ. 167. இதிலே திருமந்த்ரத்தில் சொன்ன ப்ராப்யத்தை விசதமாக அநுஸந்திக்கிறது.

வ்யா:— அதாவது-கைங்கர்யப்ரதிஸம்பந்தி ஒரு மிதுநமென்னுமிடத்தை ஶாப்தமாக ப்ரதிபாதிக்கிற இந்த வாக்யத்திலே, திருமந்த்ரத்தில் 'நாராயணாய' என்று கைங்கர்ய ப்ரதிஸம்பந்தி ஒருமிதுநமென்னுமிடம் ஆர்த்தம் ஆகையாலே அவிஶதமாகச்சொன்ன ப்ராப்யத்தை விஶதமாக அநுஸந்திக்கிறதென்கை. அங்கு, 'நாராயணனுக்கே அடிமை செய்யப் பெறுவேனாகவேணும்' என்கிற இவ்வளவொழிய, 'அடிமை கொள்ளுமவன் ஸ்ரீமானாகவேணும்' என்றும், 'அடிமை செய்யுமவன் நிர்மமனாகவேணும்' என்றும் சொல்லாமையாலும், அவை இரண்டும் இங்குச் சொல்லுகையாலுமிறே, அந்தப்பதத்துக்கு இவ்வாக்யம் விவரணமாயிற்று.

'இம்மிதுநத்துக்கே அடிமை செய்யவேணும் என்கிற நிர்ப்பந்தந்தானென்?' என்ன அருளிச்செய்கிறார் 'இளையபெருமாளைப்போலே' என்றுதொடங்கி.

மூ. 168. இளைய பெருமாளைப்போலே இருவருமான சேர்த்தியிலே அடிமைசெய்கை முறை.

வ்யா:-அதாவது, 135. "**भवांस्तु सह वैदेह्या गिरिसानुषु रंस्यते। अहं सर्वं करिष्यामि जाग्रतः स्वपतश्च ते॥**" (பவாம்ஸ்து ஸஹ வைதேஹ்யா கிரிஸாநுஷு ரம்ஸ்யதே—அஹம் ஸர்வம் கரிஷ்யாமி ஜாக்ரதஸ் ஸ்வபதஶ்ச தே) என்று பெருமாளும் பிராட்டியுமான சேர்த்தியிலே அடிமைசெய்த இளையபெருமாளைப்போலே, இருவருமான சேர்த்தியிலே அடிமைசெய்கை இவ்வாத்மாவுக்கு ஸ்வரூபப்ராப்தம் என்கை. மிதுந சேஷத்வம் ஸ்வரூபமானால் மிதுநகைங்கர்யமிறே ஸ்வரூபப்ராப்தம்.

இன்னமும் அச்சேர்த்தியிலே அடிமைசெய்யுமளவிலுள்ள வாசியை அருளிச்செய்கிறார், 'அடிமை' என்று தொடங்கி.

மூ. 169. அடிமைதான் ஸித்திப்பதும் ரஸிப்பதும் அச்சேர்த்தியிலே.

வ்யா:—அதாவது, ஸ்வதந்த்ரனான ஈஶ்வரன் உபேக்ஷியாமல் கைங்கர்யங் கொண்டருளும்படி பண்ணுமவள் இவளாகையாலே 136. "**सीतामुवाच**" (ஸீதாமுவாச) 137. "**सीता समक्षं काकुत्स्थमिदं वचनमब्रवीत्**" (ஸீதா ஸமக்ஷம் காகுத்ஸ்தமிதம் வசநம் அப்ரவீத்) என்று இவள் முன்னிலையாகத் தம்முடைய ஸ்வரூபாநுரூபமான அடிமையை அபேக்ஷித்துப் பெற்ற இளையபெருமாளைப்போலே, இவன் ப்ரார்த்திக்கிற அடிமைதான் ஸித்திப்பதும் மாதாபிதாக்கள் இருவருமான சேர்த்தியிலே ஶுஶ்ரூஷைபண்ணும் புத்ரனுக்குப்போலே, செய்கிற அடிமைதான் ரஸிப்பது பிராட்டியும் அவனுமான சேர்த்தியிலே என்கை.

இனி, இரண்டாம் பதத்தை உபாதாநம் பண்ணுகிறார் 'நாராயணாய' என்று. அதுக்கு அர்த்தம் அருளிச்செய்கிறார், 'ஸர்வஶேஷியாயுள்ளவனுக்கு' என்று.

மூ. 170. நாராயணாய—ஸர்வஶேஷியாயுள்ளவனுக்கு.

வ்யா:-*நாராயணத்வம், உபயவிபூதி நாதத்வமாகையாலே, ஸர்வஶேஷியாயுள்ளவனுக்கு என்கிறார். கைங்கர்ய ப்ரதிஸம்பந்தியாவான் ஶேஷியிறே.*

கைங்கர்யந்தான் அநுபவஜநித ப்ரீதிகாரிதமாகையாலும், அந்த ப்ரீதிதான் அநுபாவ்ய விஷயாதீநையாகையாலும், அநுபாவ்ய விஷயம் சொல்ல வேண்டுகையாலே அருளிச்செய்கிறார் 'இதிலே திருமேனியையும் குணங்களையும் சொல்லும்' என்று.

மூ. 171. இதிலே திருமேனியையும் குணங்களையும் சொல்லும்.

வ்யா:–*அதாவது-கைங்கர்யப்ரதிஸம்பந்தியைச் சொல்லுகிற இப்பதத்திலே, கைங்கர்யத்துக்குப் பூர்வபாவியாயிருக்கும் அநுபவத்துக்கு விஷயமான திவ்யமங்கள விக்ரஹத்தையும், கல்யாண குணங்களையும் சொல்லும் என்கை.*

138. **"सदा पश्यन्ति" (ஸதாபஶ்யந்தி)** *என்றும், 139.* **"सोऽश्नुते सर्वान् कामान्" (ஸோஶ்நுதே ஸர்வாந் காமாந்)** *என்றும் இத்யாதிகளிற் சொல்லுகிறபடியே திவ்யமங்கள விக்ரஹமும் கல்யாண குணங்களும், 140.* **"रसं ह्येवायं लब्ध्वानन्दी भवति" (ரஸம் ஹ்யேவாயம் லப்த்வாநந்தீ பவதி)** *என்கிற ஸ்வரூபத்தோபாதி கைங்கர்ய வர்த்தகங்களுமாய்ப் போக்யங்களுமாயிறே இருப்பது; 'குணங்கள்' என்று ஸாமாந்யேந சொல்லுகையாலே ஜ்ஞாநஶக்த்யாதி குணங்களோடு வாத்ஸல்யாதி குணங்களோடு ஸௌஶீல்யாதி குணங்களோடு வாசியற எல்லாக் குணங்களும் அநுபாவ்யங்களாயிருக்கையாலே பூர்வவாக்யத்தில் நாராயணபதத்தில் உபாயவரணத்துக்கு உபயுக்ததயா அநுஸந்தேயங்களான குணவிஶேஷங்களும் இப்பதத்தில் ப்ராப்யதயா அநுஸந்தேயங்கள்; ஆஶ்ரயமான ஸ்வரூபத்துக்கு ஆகாரத்வயமுண்டாயிருக்கிறுப்போலே, ஆஶ்*

ரயிகளான குணவிஶேஷங்களுக்கும் ஆகாரத்வயமும் உண்டாயிறேயிருப்பது. இவையெல்லாம் பரந்தபடியிலே அருளிச்செய்தார்.

இனி, இப்பதத்துக்குத் தாத்பர்யம் இன்னதிலே என்கிறார் 'ஶேஷித்வத்திலே நோக்கு' என்று.

மூ. 172. சேஷித்வத்திலே நோக்கு.

வ்யா:–அதாவது, அநுபாவ்யத்வம் அவிஶிஷ்டம் ஆகையாலே ஸகலகுணங்களும் ப்ரதிபாதிதமாயிருந்ததேயாகிலும், சதுர்த்த்யம்ஶத்தில் சொல்லுகிற வ்ருத்திவிஶேஷத்துக்கு மிகவும் அந்தரங்கமாயிருப்பது ஶேஷித்வமாகையாலே, அதிலே இப்பதத்துக்கு நோக்கு என்கை.

இந்தஶேஷித்வ கதந்த்துக்கு ப்ரயோஜநமருளிச்செய்கிறார், 'ப்ராப்தவிஷயத்தில் கைங்கர்யமிறே ரஸிப்பது' என்று.

மூ. 173. ப்ராப்தவிஷயத்தில் கைங்கர்யமிறே ரஸிப்பது.

வ்யா:—அதாவது, *141.* **"सर्वं परवशं दुःखं"** (ஸர்வம் பரவஶம் து:க்கம்) என்றும், *142.* **"सेवा श्ववृत्तिः"** (ஸேவா ஶ்வவ்ருத்தி:) என்றும் சொல்லுகிறபடியே நிஷித்தமான அப்ராப்தவிஷயத்தில் கைங்கர்யம்போலன்றிக்கே, *143.* **"छाया वा सत्त्वमनुगच्छेत्"** (சாயா வா ஸத்வமநுகச்சேத்) என்றும், *144.* **"सा क्रिमर्थं न सेव्यते"** (ஸா கிமர்த்தம் ந ஸேவ்யதே) என்றும் சொல்லுகிறபடியே, விஹிதமான ப்ராப்தவிஷயத்தில் பண்ணும் கைங்கர்யமிறே இவனுக்கு ரஸிப்பது என்கை.

இனி, இப்பதத்தில் விபக்த்யம்ஶத்துக்கு அர்த்தம் அருளிச்செய்கிறார், 'இந்தச் சதுர்த்தி' என்று தொடங்கி.

மூ. 174. இந்தச் சதுர்த்தி, கைங்கர்யத்தை ப்ரகாசிப்பிக்கிறது.

வ்யா:—அதாவது, ஶேஷத்வ ஜ்ஞாநகார்யமான உபாய பரிக்ரஹத்துக்கு அநந்தரம் ப்ராப்தமாயுள்ளது ஆகையாலே, தாதர்த்யப்ரதிபாதகம் அன்றிக்கே, இந்தச் சதுர்த்தி, பரிக்ரஹித்த உபாயத்தினுடைய பலமான கைங்கர்யத்தை ப்ரகாஶிப்பிக்கிறதென்கை. கைங்கர்யத்தை ப்ரகாஶிப்பிக்கையாவது-கைங்கர்ய ப்ரார்த்தனையை ப்ரதிபாதிக்கை. கைங்கர்யமாவது-பகவந் முகவிகாஸ ஹேதுவான வ்ருத்தி விஶேஷம். இக்கைங்கர்யந்தான் 145. **"एतत्साम गायन्नास्ते"** (ஏதத் ஸாம காயந்நாஸ்தே) என்றும் 146. **"नम इत्येव वादिनः"** (நம இத்யேவ வாதிந:) என்றும், 147. **"येन येन धाता गच्छति तेन तेन सह गच्छति"** (யேந யேந தாதா கச்சதி தேநதேந ஸஹ கச்சதி) என்றும்இத்யாதிகளில் சொல்லுகிறபடியே வாசிககாயிக ரூபமாயிருக்கும்.

'இக்கைங்கர்யம் ப்ரார்த்தநீயமாகில் காதாசித்கமாகாதோ?' என்ன, அருளிச்செய்கிறார் 'கைங்கர்யந்தான் நித்யம்' என்று.

மூ. 175. கைங்கர்யந்தான் நித்யம்.

வ்யா:—அதாவது, ஶேஷத்வமே ஆத்மாவுக்கு ஸ்வரூபமாகையாலும், 148. **" अकिञ्चित्कारस्य शेषत्वानुपपत्तेः "** (அகிஞ்சித்கரஸ்ய ஶேஷத்வாநுபபத்தி:) என்கிறபடியே கிஞ்சித்காராபாவத்தில் அதுதான் அநுபபந்நமாகையாலும், கைங்கர்யம் ஆத்மாவுக்கு நித்யமென்கை. ஆகையாலிறே,149. **"नित्यकिङ्करः प्रहर्षयिष्यामि"** (நித்யகிங்கர: ப்ரஹர்ஷயிஷ்யாமி) என்றும், **"नित्यकिङ्करो भवानि"** (நித்யகிங்கரோ பவாநி) என்றும் ஆசார்யர்கள் அருளிச்செய்தது.

'நித்யமாயிருக்குமாகில் ப்ரார்த்திக்கவேணுமோ?' என்ன அருளிச்செய்கிறார் 'நித்யமாக ப்ரார்த்தித்தே பெறவேணும்' என்று.

மூ. 176. நித்யமாக ப்ரார்த்தித்தே பெறவேணும்.

அதாவது, விஷயம் * உத்துங்கமாயிருக்கையாலும், ஆஶ்ரயபூதனை சேதநன் அத்யந்த பரதந்த்ரனாயிருக்கையாலும் ப்ரார்த்தநாவிஶேஷம் இல்லாதபோது கைங்கர்யம் ஸித்தியாமையாலும், நித்யமாக ப்ரார்த்தித்தே பெறவேணும் என்கை.

இது நித்யப்ரார்த்தநீயம் ஆகைக்கு நிதாநத்தை அருளிச்செய்கிறார் 'ஶேஷிக்கு' என்று தொடங்கி.

மூ. 177. சேஷிக்கு அதிசயத்தை விளைக்கை சேஷபூதனுக்கு ஸ்வரூபலாபமும், ப்ராப்யமும்.

வ்யா:-அதாவது- *151.* **"नाकिञ्चित्कुर्वतः शेषत्वं"** (நாகிஞ்சித் குர்வதஶ்ஶேஷத்வம்) என்கிறபடியே ஶேஷிக்கு அதிஶயகரமல்லாத வஸ்துவுக்கு ஶேஷத்வம் இல்லாமையாலே, ஶேஷியான் ஈச்வரனுக்குத் தன்னுடைய வ்ருத்தி விஶேஷங்களாலே ப்ரீதிரூபமான அதிஶயத்தை விளைக்கை ஶேஷபூதனானவனுக்குத் தன் ஸ்வரூபலாபமுமாய், அவனுடைய முகோல்லாஸாநுபவத்துக்கு உறுப்பாயிருக்கையாலே ப்ராப்யமுமாயிருக்குமென்கை. ஆகையாலே, நித்யப்ரார்த்தநீயமாயிருக்குமென்று கருத்து.

அநந்தரம், சரமபதத்தை உபாதாநம் பண்ணுகிறார் 'நம:' என்று. அதுக்கு அர்த்தம் அருளிச்செய்கிறார், 'கைங்கர்யத்தில் களையறுக்கிறது' என்று.

மூ. 178. நம:—கைங்கர்யத்தில் களையறுக்கிறது.

வ்யா:-அதாவது-நமஶ்ஶப்தம் ஸாமாந்யேந அஹங்காரமமகாரங்களைக் கழிக்கையாலே, திருமந்த்ரத்தில் மத்யமபதமான நமஶ்ஶப்தம்போலே ஸ்வரூப உபாய புருஷார்த்த விரோதிகள் மூன்றையுங் கழிக்க வற்றாயிருந்ததேயாகிலும், இங்கு அங்ஙனன்றிக்கே, கைங்கர்யப்ரார்த்தநாநந்தரோக்தம்

* (பா) உத்துங்க தத்வமாயிருக்கையாலும்,

ஆகையாலே, இந்தக் கைங்கர்யத்தில் விரோதியைக் கழிக்கிறது என்கை.

'கைங்கர்யத்துக்குக் களை எது?' என்ன அருளிச்செய்கிறார் 'களையாவது தனக்கென்னப்பண்ணுமது' என்று.

மூ. 179. களையாவது-தனக்கென்னப் பண்ணுமது.

தனக்கென்னப் பண்ணுகையாவது, 152. "**भोक्ताऽहं मम भोगोऽयं**" (**போக்தாஹம் மம போகோயம்**) என்கிறபடியே, இத்தைத் தன்னுடைய ரஸத்துக்கு உறுப்பாக நினைத்துப் பண்ணுகை; பகவந் முகவிகாஸஹேது ஆகையாலே இது நமக்கு ஆதரணீயம் என்கிற ப்ரதிபத்தி ஒழிய, இதில் போக்த்ருத்வ ப்ரதிபத்தியும், மதீயத்வ ப்ரதிபத்தியும் நடக்குமாகில், அபுருஷார்த்தமாயிறே இருப்பது.

இன்னமும் இந்தக் கைங்கர்ய ப்ராப்திக்கு விரோதிகளானவையும் இதிலே தள்ளுண்ணும் என்கிறார் 'இதிலே அவித்யாதிகளும் கழியுண்ணும்' என்று.

மூ. 180. இதிலே அவித்யாதிகளும் கழியுண்ணும்.

வ்யா:—அதாவது, அஹங்கார மமகார நிவ்ருத்தியை ப்ரார்த்திக்கிற இந்நமஸ்ஸிலே, 153. "**अनात्मन्यात्मबुद्धिर्या अस्वे स्वमिति या मतिः। अविद्यातरुसंभूतिबीजमेतद् द्विधा स्थितम्॥**" (**அநாத்மந்யாத்ம புத்திர்யா அஸ்வேஸ்வமிதியாமதி:—அவித்யாதருஸம்பூதிபீஜமேதத் த்விதா ஸ்திதம்**) என்கிறபடியே அநாத்மந்யாத்ம புத்த்யாதிகளை வடிவாகவுடைத்தாய்க் கர்மோத்பத்தி காரணமாயிருந்துள்ள அவித்யையும், தத்கார்யமான கர்மங்களும், தத்கார்யமாய்வரும் ப்ரக்ருதி ஸம்பந்தமும் எல்லாங் கழியுண்ணுமென்கை.

ஆகையிறே, த்வயவிவரணமான கத்யத்திலே நமஸ்ஸப்தார்த்தத்தை அநுஸந்தித்தருளுகிறவளவில், 154. "**मनोवाक्कायैः**" (**மநோவாக்காயை:**) இத்யாதி சூர்ணையாலே,

அக்ருத்யகரணத்யகில கர்மநிவ்ருத்தியையும், 155. "अनादि-कालप्रवृत्त" (அநாதிகாலப்ரவ்ருத்த) இத்யாதி சூர்ணையாலே, அவித்யா நிவ்ருத்தியையும், 156. "मदीयानादि"(மதீயாநாதி) இத்யாதி சூர்ணையாலே, ப்ரக்ருதி ஸம்பந்த நிவ்ருத்தியையும் பாஷ்யகாரர் ப்ரார்த்தித்தருளிற்று. ஆனாலும், இதுக்குப் ப்ரதாநார்த்தம் கைங்கர்யத்தில் ஸ்வப்ரயோஜந நிவ்ருத்தியாகையாலே அத்தை உபபாதிக்கிறார்மேல்.

அதில் ப்ரதமத்திலே, 'கைங்கர்யம் பண்ணும்போது தான் எப்படியாகவேணும்?' என்ன, அருளிச்செய்கிறார் '"உனக்கே நாமாட்செய்வோம்" என்னும்படியேயாக வேணும்' என்று.

மூ. 181. "உனக்கே நாமாட்செய்வோம்" என்னும் படியே ஆகவேணும்.

வ்யா:—அதாவது—கைங்கர்யம் பண்ணுமளவில் *'உனக்கே நாமாட்செய்வோம்' என்று 'உனக்கும் எங்களுக்குமாயிருக்கும் இருப்புத்தவிர்ந்து, உனக்கேயுகப்பாக நாங்கள் அடிமை செய்யவேணும்' என்கிறபடியே, சேஷிக்கே உகப்பாகப் பண்ணவேணுமென்கை. ||"தனக்கேயாக எனைக்கொள்ளுமீதே" என்றிறே ஆழ்வாரும் அருளிச்செய்தது.

இனி, இந்தக் கைங்கர்யத்துக்கு விக்நங்களை அருளிச்செய்கிறார் 'ஸௌந்தர்யம்' இத்யாதி வாக்யத்வயத்தாலே.

மூ. 182. ஸௌந்தர்யம் அந்தராயம்; கீழ்ச்சொன்ன கைங்கர்யமும் அப்படியே.

வ்யா:—அதாவது—அவனுடைய விக்ரஹஸௌந்தர்யமும் சித்தாபஹாரியாய்க் கைசோரப்பண்ணுகையாலே, கைங்கர்யத்துக்கு விக்நம்; இந்நமஸ்ஸுக்குக் கீழே சதுர்த்தியிற் சொன்ன கைங்கர்யமும் அபிமதவிஷயபரிசர்யைபோலே

---

* திருப்பாவை-29. || திருவாய் 2-9-4.

ஸ்வரஸத்துக்கு உடலாயிருக்கையாலே, அவனுடைய முக மலர்த்தியே ப்ரயோஜநமாக /இருக்குமதுக்கு அதுவும் விக்நமென்கை.

இப்படியாகையால், இவ்விரோதி நிவ்ருத்தி ப்ரார்த்தனை இடைவிடாமல் நடக்கும்படியை அருளிச்செய்கிறார் 'கைங் கர்யப்ரார்த்தனைபோலே' என்று தொடங்கி.

மூ 183 கைங்கர்ய ப்ரார்த்தனைபோலே இப்பதத்தில் ப்ரார்த்தனையும் என்றுமுண்டு.

வ்யா:—அதாவது, சதுர்த்தியிற் சொல்லுகிற கைங்கர்ய ப்ரார்த்தனை காதாசித்கமன்றிக்கே நித்யமாய்ச் செல்லுமா போலே, இப்பதத்திற் சொல்லுகிற கைங்கர்யவிரோதி நிவ்ருத்தி ப்ரார்த்தனையும், இங்கிருக்கும் காலத்தோடு ப்ராப்யபூமியிற் போன காலத்தோடு வாசியற எல்லாக் காலமும் நடக்கக்கடவதாயிருக்குமென்கை.

'கந்தல் கழிந்த அந்நிலத்திலும் ஸ்வபோக்த்ருத்வ உதயம் உண்டாமோ?' என்ன, அருளிச்செய்கிறார் '''மருந்தே நங்கள் போகமகிழ்ச்சிக்கு' என்றுநின்றதிறே'' என்று.

மூ 184 ''மருந்தே நங்கள்போகமகிழ்ச்சிக்கு'' என்று நின்றதிறே.

த்வயப்ரகரணம் முற்றிற்று.

பிள்ளைலோகாசாரியர் திருவடிகளே சரணம்.

வ்யா:–அதாவது-உன்னுடைய அநுபவத்தாலே எங்க ளுக்கு வரும் ஆநந்தத்துக்கு ஸ்வபோக்த்ருத்வபுத்தியை விளைத்து, ஸ்வரூபத்தை அழியாதபடி ஸாத்மிப்பிக்கும் பேஷஜமானவனே! என்று நித்யஸூரிகள்பேசும் பாசுர

/(பா) உடையவனுக்கு.

மாகச் சொல்லாநின்றதிறேயென்கை. ஆகையால், அவ்விஷய வைலக்ஷண்ய ப்ரயுக்தமாய் வரும் ஸ்வபோக்த்ருத்வ புத்தி அங்கும் விளைகையாலே, இப்பதத்தில் ப்ரார்த்தனை என்றுமுண்டு என்னுமிடம் ஸித்தமென்றதாயிற்று. ஆகையிறே முக்தர்க்கு லக்ஷணம் சொல்லுகிறவிடத்திலே 157. **"नम इत्येव वादिनः" (நம இத்யேவ வாதிந:)** என்றது.

ஆக, புருஷகாரத்தையும், தந்நித்யயோகத்தையும், தத்ப்ராவிதமான வாத்ஸல்யாதி குணங்களையும், அந்தக் குணப்ரகாசகமான திவ்யமங்கள விக்ரஹத்தையும், குண விக்ரஹ விசிஷ்ட வஸ்துவினுடைய உபாயத்வத்தையும், அவ்வுபாய ஸ்வீகாரத்தையும், தத்பலமான கைங்கர்யத்துக்கு ப்ரதிஸம்பந்தி ஒருமிதுநமென்னுமத்தையும், அவ்வஸ்துவினுடைய ஸர்வசேஷித்வத்தையும், தத்விஷய கைங்கர்யத்தையும், கைங்கர்யவிரோதி நிவ்ருத்தியையும் சொல்லிற்றாயிற்று.

த்வயப்ரகரண வ்யாக்யாநம் முற்றிற்று.
பெரியஜீயர் திருவடிகளே சரணம்.

முமுக்ஷுப்படி—சரமச்லோக ப்ரகரணம்

வ்யாக்யாந அவதாரிகை

மத்யமரஹஸ்யமான த்வயத்தினுடைய அர்த்தத்தை அருளிச்செய்த அநந்தரம் அதில் பூர்வவாக்யத்திற் சொல்லுகிற உபாயவரணம் ஸர்வேச்வரன் தானே விதிக்கையாலே ததபிமதமென்னுமத்தையும் வரணாங்கமான ஸாதநாந்தர பரித்யாகத்தையும் வரணத்தில் ஸாதநத்வபுத்தி ராஹித்யத்தையும் சாப்தமாகப் பூர்வார்த்தத்தாலே ப்ரதிபாதிக்கையாலும், உத்தரவாக்யத்தில் சொல்லுகிற கைங்கர்யத்துக்குப் பூர்வபாவியான ப்ராப்தி ப்ரதிபந்தக ஸகலபாப விமோச

நத்தையும், உத்தரார்த்தத்தாலே ஸாப்தமாக ப்ரதிபாதிக்கையாலும், த்வயத்துக்கு விவரணமாய் பஞ்சம வேதஸாரபூத கீதோபநிஷத்தாத்பர்யமாய், சரமரஹஸ்யமாய் இருந்துள்ள சரமஸ்லோகத்தினுடைய அர்த்தத்தை ஸம்ஸயவிபர்யயமற அருளிச்செய்கிறார்.

இதில் அர்த்தங்கேட்கைக்காகவிறே, எம்பெருமானார் பதினெட்டுப்பர்யாயம் திருக்கோட்டியூர் நம்பிபக்கல் எழுந்தருளிற்று.

நம்பிதாமும் இதில் அர்த்தத்தினுடைய கௌரவத்தையும் இதுக்கு அதிகாரிகள் இல்லாமையையும் பார்த்திறே, இவருடைய ஆஸ்திக்யஆதர பரீக்ஷார்த்தமாகப் பலகால் நடந்து துவளப்பண்ணிச் சூளுறவுகொண்டு மாஸோபவாஸங்கொண்டு அருமைப்படுத்தி அருளிச்செய்தருளிற்று.

நிஷ்க்ருஷ்ட ஸத்வநிஷ்டனுய், பரமாத்மநி ரக்தனுய், அபரமாத்மநி வைராக்யமுடையனுய், ப்ரமாண பரதந்த்ரனுய், பகவத் வைபவம் ஸ்ருதமானல் அது உபபந்நமென்னும்படியான விஸ்ரம்பபாஹுள்யமுடையனுய், ஆஸ்திக அக்ரேஸரனுயிருப்பான் ஒருவனுண்டாகில் அவன் இந்த ஸ்லோகார்த்த ஸ்ரவண அநுஷ்டாநத்துக்கு அதிகாரியாகையாலே, அதிகாரி துர்லபத்வத்தாலும் அர்த்த கௌரவத்தாலும் இத்தை வெளியிடாதே மறைத்துக்கொண்டு போந்தார்கள், எம்பெருமானருக்கு முன்புள்ளார்; ஸம்ஸாரிகள் துர்க்கதிகண்டு பொறுக்கமாட்டாதபடி க்ருபை கரைபுரண்டிருக்கையாலே, அர்த்தத்தின் சீர்மைபாராதே அநர்த்தத்தையே பார்த்து வெளியிட்டருளினர் எம்பெருமானர்.

அப்படி உபதேஸித்துவிடுகிறமாத்ரமுமின்றிக்கே, இவ்வர்த்தத்தை எல்லாரும் அறிந்து உஜ்ஜீவிக்கவேணுமென்னும் பரமக்ருபையாலேயிறே, இதுதன்னைப் பலப்ரபந்தங்களிலும் ஸங்க்ரஹ விஸ்தரரூபேண இவர் அருளிச்

செய்தது. மற்றுள்ள ப்ரபந்தங்கள் எல்லாவற்றிலும் போலன்றிக்கே ஸ்த்ரீபாலர்களுக்கும் அதிகரிக்கலாம்படி தெளிய அருளிச்செய்தது, இப்ரபந்தத்திலேயிறே.

அவதாரிகை முற்றிற்று.

இதில் ப்ரதமத்திலே இந்த ஶ்லோகார்த்தத்தினுடைய கௌரவத்தை எல்லாருடைய நெஞ்சிலும் படுத்துகைக்காக இது தனக்குச் சரமஶ்லோகமென்று திருநாமமாகைக்கு ஹேதுவை அருளிச்செய்கிறார் 'கீழே சில உபாயவிஶேஷங் களை' என்று தொடங்கி.

மூ. 185. கீழே சிலஉபாயவிசேஷங்களை உபதேசிக்க, அவை துச்சகங்களென்றும் ஸ்வரூபவிரோதிகளென் றும் நினைத்து சோகாவிஷ்டனான அர்ஜுநனைக் குறித்து அவனுடைய சோகநிவ்ருத்யர்த்தமாக இனி இதுக்கு அவ்வருகில்லை யென்னும்படியான சரமோபா யத்தை அருளிச்செய்கையாலே, சரமச்லோகமென்று இதுக்குப் பேராயிருக்கிறது.

வ்யா:-அதாவது, இந்த ஶ்லோகத்துக்குக் கீழே அநேகாத் யாயங்களிலே கர்மஜ்ஞாநாதிகளான சில உபாய விஶேஷங் களை ஸ்வப்ராப்திலக்ஷண மோக்ஷஸாதநமாக விஸ்தரேண உபதேசித்தருளக்கேட்டு, காயக்லேஶ ரூபமாகையாலும் இந்த்ரியஜயம் அரிதாகையாலும் ஸாவதாநமாகச் சிரகாலம் ஸாதிக்கவேண்டியிருக்கையாலும் அவை அநுஷ்டிக்க அஶக் யங்களென்று, ஸ்வஶரீரத்வ கதநாதிகளாலே ப்ரதிபாதிக்கப் பட்ட பரதந்த்ரமான ஸ்வரூபத்துக்கு ஸ்வயத்நரூபங்களான இவை விரோதிகளென்றும் புத்திபண்ணி, 'இவற்றாலே எம் பெருமானைப் பெற என்பது ஒன்றில்லை; இனி இழந்தேபோ மித்தனையாகாதே' என்கிற ஶோகத்தாலே ஆவிஷ்டனான அர்ஜுநனைக் குறித்து அவனுடைய அந்த ஶோகம் போகைக் காக ஸௌஶீல்யத்தாலும் ஸ்வரூபாநுரூபதையாலும் இனி

இதுக்குமேலில்லை என்னும்படியான சரமமான உபாயத்தை அருளிச்செய்கையாலே, சரமஶ்லோகமென்று இதுக்குத் திரு நாமமாயிருக்கிறது என்கை.

இனி, இஶ்லோகத்துக்கு வாக்யார்த்தம் அருளிச்செய்கிறார் 'இதில் பூர்வார்த்தத்தாலே' என்றுதொடங்கி.

மூ. 186. இதில் பூர்வார்த்தத்தாலே அதிகாரி க்ருத்யத்தை அருளிச்செய்கிறான்; உத்தரார்த்தத்தாலே உபாய க்ருத்யத்தை அருளிச்செய்கிறான்.

வ்யா:—*அதாவது-அர்த்தத்வயாத்மகமான இந்தஶ்லோகத்தில் பூர்வார்த்தத்தாலே இவ்வுபாயத்துக்கு அதிகாரியானவன் செய்யும் அம்ஶத்தை அருளிச்செய்கிறான்; உத்தரார்த்தத்தாலே உபாயபூதனான தான் இவனுக்குச்செய்யும் அம்ஶத்தை அருளிச்செய்கிறானென்கை.*

'அதிகாரிக்ருத்யமாவது எது?' என்ன அருளிச்செய்கிறார் 'அதிகாரிக்குக் க்ருத்யமாவது-உபாயபரிக்ரஹம்' என்று.

மூ. 187. அதிகாரிக்கு க்ருத்யமாவது-உபாயபரிக்ரஹம்.

வ்யா:—*அதாவது-அதிகாரியானவனுக்கு இங்குச் செய்யத்தக்கது இவ்வுபாயத்தை ஸ்வீகரிக்கையென்கை.*

'ஆனால், அவ்வளவை விதியாதே உபாயாந்தர பரித்யாகம் சொல்லுவானென்?' என்ன, அருளிச்செய்கிறார் 'அத்தை ஸாங்கமாக விதிக்கிறான்' என்று.

மூ. 188. அத்தை ஸாங்கமாக விதிக்கிறான்.

வ்யா:—*அதாவது, அந்த உபாய ஸ்வீகாரத்தை உபாயாந்தர பரித்யாகமாகிற அங்கத்தோடேகூட விதிக்கிறானென்கை.*
158. **"प्रक्षाल्य पादावाचामेत् स्नात्वा विधिवदर्चयेत्। स्थित्वार्घ्यं भानवे दद्यात् ध्यात्वा देवं जपेन्मनुं॥"** (ப்ரக்ஷால்ய பாதாவாசாமேத் ஸ்நாத்வா விதிவதர்ச்சயேத் ஸ்த்தித்வார்க்யம் பாநவே

தத்யாத் த்யாத்வா தேவம் ஜபேந்மநும்) என்று ஆசமநாதி களுக்கு அங்கமாகச்சொன்ன பாதப்ரக்ஷாளநாதிகளையொழிய அவை அநுஷ்டிக்கவொண்ணுதாற்போலே, இங்கும் ல்யபந்தபதத்தாலே அங்கமாகச் சொல்லுகிற உபாயாந்தர த்யாகத்தையொழிய ஸ்வீகாரம் அநுபபந்நம் என்னுமிடம் ஸித்தமிறே. ஆகையால், "ஸர்வதர்மாந் பரித்யஜ்ய ஸ்த்திதஶ் சேத்" என்று துஷ்கரத்வ புத்தியாலே ஸ்வத:ப்ராப்தமான உபாயாந்தரபரித்யாகத்தை அநுவதித்து ஸித்தோபாயஸ்வீ காரத்தை விதிக்கிறதென்கிற அநுவாதபக்ஷம் அயுக்த மென்றதாயிற்று.

'ஆனுல், ஸௌகர்யகத்வாதிகளாலே ராகப்ராப்தமான இதுக்கு விதிதான் வேணுமோ?' என்ன, அருளிச்செய்கிருர் 'ராகப்ராப்தமான' என்றுதொடங்கி.

மூ. 189. ராகப்ராப்தமான உபாயந்தானே வைத மாகுல் கடுகப்பரிக்ரஹிக்கைக்கு உடலாயிருக்குமிறே.

வ்யா:-அதாவது, போக்யதையாலே ராகப்ராப்தமான க்ஷீரத்தைப் பித்தரோகத்துக்கு மருந்தாகக் கொடுக்கச் சொல்லி விதித்தால் ஶீக்ரமாகக் கைக்கொள்ளுகைக்கு உட லாமாபோலே, உபாயாந்தரங்களிற் காட்டில் இதுக்கு உண் டான வைலக்ஷண்யத்தாலே சேதநனுடைய ராகத:ப்ராப்த மாயிருந்துள்ள உபாயந்தானே இத்தை ஸ்வீகரியென்னும் விதிப்ரயுக்தமுமாகுல் ஶீக்ரமாக ஸ்வீகரிக்கைக்கு உடலா யிருக்குமிறேயென்கை.

இனி, இதுக்கு ப்ரதிபதம் அர்த்தம் அருளிச்செய்வதாக பூர்வார்த்த பதஸங்க்யையை அருளிச்செய்கிருர் 'இதில் பூர் வார்த்தம் ஆறுபதம்' என்று.

மூ. 190. இதில் பூர்வார்த்தம் ஆறுபதம்.

அதில் ப்ரதமபதத்தை உபாதாநம் பண்ணுகிருர் 'ஸர்வ தர்மாந்' என்று. அதுக்கு அர்த்தம் அருளிச்செய்கிருர், 'எல் லாத் தர்மங்களையும்' என்று.

மூ. 191. ஸர்வதர்மாந்-எல்லாத் தர்மங்களையும்.

அதுதான் தர்மமும் பஹுவசநமும் ஸர்வஶப்தமுமாய் த்ரிப்ரகாரமாயிருக்கையாலே இம்மூன்றுக்கும் அர்த்தம் அருளிச்செய்வதாக ப்ரதமம் தர்மலக்ஷணத்தை அருளிச்செய்கிறார் 'தர்மமாவது-பலஸாதநமாயிருக்குமது' என்று.

மூ. 192. தர்மமாவது–பலஸாதநமாயிருக்குமது.

தர்மஶப்தம் த்ருஷ்டபல ஸாதநத்திலும் வ்யாப்தமாகையால் அத்தை வ்யாவர்த்திக்கிறார் 'இங்குச் சொல்லுகிற தர்மஶப்தம்' என்றுதொடங்கி.

மூ. 193. இங்குச் சொல்லுகிற தர்மசப்தம் த்ருஷ்டபலஸாதநங்களைச் சொல்லுகையன்றிக்கே, மோக்ஷபலஸாதநங்களைச் சொல்லுகிறது.

வ்யா:–*அதாவது, பூர்வோபாயங்கள்தன்னை உபதேஶிக்கிறபோதே த்ருஷ்டபல ஸாதநங்கள் வ்யாவ்ருத்தங்களாகையாலும், மோக்ஷோபாயங்களை உபதேஶித்து வருகிற ப்ரகரணமாகையாலும், இவ்விடத்திற்சொல்லுகிற தர்மஶப்தம் புத்ர பச்வந்நாதி ஐஹிகமாயும் ஸ்வர்க்காதி ஆமுஷ்மிகமாயும் இருந்துள்ள த்ருஷ்டபலங்களுக்கு ஸாதநங்களானவற்றைச் சொல்லுகை யன்றிக்கே, பகவத்ப்ராப்திரூபமான மோக்ஷ பலத்துக்கு ஸாதநமாயுள்ளவற்றைச் சொல்லுகிறதென்கை,*

இனிமேல், பஹுவசநார்த்தத்தை அருளிச்செய்கிறார் 'அவைதான்' என்று தொடங்கி.

மூ. 194. அவைதான்–ச்ருதிஸ்ம்ருதி விஹிதங்களாய்ப் பலவாயிருக்கையாலே பஹுவசநப்ரயோகம் பண்ணுகிறது.

வ்யா:-*அதாவது. அந்த மோக்ஷபலஸாதனங்கள்தாம் உபப்ரும்ஹ்ய உபப்ரும்ஹணங்களாயிருந்துள்ள ஶ்ருதிஸ்ம்ருதிகளாலே விஹிதங்களாய்க்கொண்டு அநேகங்களாய் இருக்கை*

யாலே, 'தர்மாந்' என்று, பஹுவசநப்ரயோகம் பண்ணு கிறதென்கை.

'அப்படியிருந்துள்ளவைதாம்தாம் எவை?' என்ன, அருளிச்செய்கிறார் 'அவையாவன' என்றுதொடங்கி.

மூ. 195. அவையாவன—கர்மஜ்ஞாந பக்தியோகங்களும், அவதார ரஹஸ்யஜ்ஞாநம், புருஷோத்தம வித்யை, தேசவாஸம், திருநாமஸங்கீர்த்தநம், திருவிளக்கெரிக்கை, திருமாலையெடுக்கை தொடக்கமான உபாய புத்யா செய்யுமவையும்.

வ்யா:—*அதாவது, கீழ் பலவாகச் சொல்லப்பட்ட அவையாவன,* 159 **"कर्मणैव हि संसिद्धिमास्थिता जनकादयः। तस्मादसक्तस्सततं कार्यं कर्म समाचर॥"** (கர்மணைவ ஹி ஸம்ஸித்திமாஸ்திதா ஜநகாதய:தஸ்மாதஸக்தஸ் ஸததம் கார்யம் கர்ம ஸமாசர) *என்று ஸ்வதந்த்ர ஸாதநமாக உக்தமான கர்மயோகமும்,* 160. **"सर्वं कर्माखिलं पार्थ ज्ञाने परिसमाप्यते"** (ஸர்வம் கர்மாகிலம் பார்த்த ஜ்ஞாநே பரிஸமாப்யதே) *161.* **"न हि ज्ञानेन सदृशं पवित्रमिह विद्यते। ज्ञानाग्निस्सर्वकर्माणि भस्मसात्कुरुते तथा॥"** (நஹி ஜ்ஞாநேந ஸத்ருஶம் பவித்ரமிஹ வித்யதே | ஜ்ஞாநாக்நிஸ் ஸர்வகர்மாணி பஸ்மஸாத் குருதேததா||) *என்று சொல்லப்பட்ட கர்மஸாத்யமானஜ்ஞாந யோகமும், 162.* **"भक्त्या त्वनन्यया शक्यः"** (பக்த்யா த்வநந்யயா ஶக்ய:) *163.* **"मन्मना भव मद्भक्तः"** (மந்மநாபவ மத்பக்த:) *இத்யாதிகளாலே சொல்லப்பட்ட கர்மஜ்ஞாந ஸஹக்ருதமான பக்தியோகமும் ஆகிற இவையும், 164.* **"जन्म कर्म च मे दिव्यं एवं यो वेत्ति तत्त्वतः। त्यक्त्वा देहं पुनर्जन्म नैति मामेति सोऽर्जुन"** (ஜந்மகர்ம ச மே திவ்யம்ஏவம் யோ வேத்தி தத்த்வத:த்யக்த்வா தேஹம் புநர்ஜந்ம நைதி மாமேதி ஸோர்ஜுந) *என்று விரோதிநிவ்ருத்தி பூர்வகமான பகவத்ப்ராப்திக்கு ஸாதநமாகச் சொல்லப்பட்ட அவதார ரஹஸ்யஜ்ஞாநம்,* 165 **'एतद्बुद्ध्वा बुद्धिमान् स्यात् कृतकृत्यश्च भारत"** (ஏதத் புத்த்வா புத்திமாந் ஸ்யாத் க்ருதக்ருத்யஶ்சபாரத) *என்று*

அபிமத பலலாபத்தாலே க்ருதக்ருத்யனுக்குமென்கிற புருஷோத்தமவித்யை, 166. "देशोऽयं सर्वकामधुक्" (தேசோயம் ஸர்வ காமதுக்) என்று ஸர்வகாம பல ப்ரதமாகச் சொல்லுகிற புண்யக்ஷேத்ரவாஸம் 167. "सर्वपापविशुद्धात्मा याति ब्रह्म सनातनम्" (ஸர்வபாப விசுத்தாத்மா யாதி ப்ரஹ்ம ஸநாதநம்) என்று ஸர்வபாபவிமோசந பூர்வகமான பகவத் ப்ராப்தியைப் பலமாகச் சொல்லுகிற திருநாமஸங்கீர்த்தநம், 168. "घृतेन वाऽथ तैलेन दीपं यो ज्वालयेन्नरः। विष्णवे विधिवद्भक्त्या तस्य पुण्यफलं शृणु। विहाय सकलं पापं सहस्रादित्यसन्निभः। ज्योतिष्मता विमानेन विष्णुलोके महीयते॥" (க்ருதேந வாதைலேந தீபம் யோ ஜ்வாலயேந்நர:-விஷ்ணவே விதிவத் பக்த்யா தஸ்ய புண்ய பலம் ச்ருணு-விஹாய ஸகலம்பாபம் ஸஹஸ்ராதித்ய ஸந்நிப:-ஜ்யோதிஷ்மதா விமாநேந விஷ்ணுலோகே மஹீயதே) என்று பாபநிவ்ருத்தி பூர்வகமான பகவத் ப்ராப்திக்கு ஸாதநமாகச் சொல்லப்படுகிற திருவிளக்கெரிக்கை, அப்படி விரோதிநிவ்ருத்தி பூர்வக பகவத் ப்ராப்தி ஸாதநமாகச் சொல்லப்படும் திருமாலையெடுக்கை முதலாக ஸாதநபுத்யா செய்யப்படுமவையும் என்கை.

இனி, ஸர்வசப்தார்த்தத்தை அருளிச்செய்கிறார், 'ஸர்வசப்தத்தாலே' என்று தொடங்கி.

மூ. 196. ஸர்வ சப்தத்தாலே அவ்வவஸாதந விசேஷங்களை அநுஷ்டிக்குமிடத்தில் அவற்றுக்கு யோக்யதாபாதகங்களான நித்யகர்மங்களைச் சொல்லுகிறது.

வ்யா:-அதாவது, தர்மவிசேஷமான ஸர்வசப்தத்தாலே பஹுவசநோக்தமான அவ்வோ ஸாதந விசேஷங்களை அநுஷ்டிக்கும் இடத்தில் 169. "सन्ध्याहीनोऽशुचिर्नित्यमनर्हः सर्वकर्मसु" (ஸந்த்யாஹீநோஶுசிர் நித்யம் அநர்ஹஸ் ஸர்வ கர்மஸு) என்கிறபடியே அயோக்யனாகாமல், தன்னை அநுஷ்டிக்கையாலே அவற்றுக்கு யோக்யனாகையை உண்டாக்கிக் கொடுக்கும் ஸந்த்யாவந்தந பஞ்சமஹாயஜ்ஞாதிகளான நித்யகர்மங்களைச் சொல்லுகிறதென்கை. உக்தத்தை நிகமிக்கிறார் 'ஆக' என்றுதொடங்கி.

மூ. 197. ஆக, ஶ்ருதி ஸ்ம்ருதி சோதிதங்களாய் நித்யநைமித்திகாதி ரூபங்களான கர்மயோகாத்யுபாயங்களை என்றபடி.

வ்யா:—அதாவது—ஆக, கீழ்ச்சொன்ன எல்லாவற்றாலும் *170.* **"चोदनालक्षणार्थो धर्मः"** (சோதநா லக்ஷணோர்த்தோ தர்ம:) என்று சோதனையாகிற விதிவாக்யத்தை ப்ரமாணமாகவுடைத்தான அர்த்தம் தர்மம் என்கையாலே, ஶ்ருதி ஸ்ம்ருதிகளாகிற ப்ரமாணங்களாலே விதிக்கப்பட்டுள்ளவையாய், நித்யம் நைமித்திகம் முதலானவற்றை வடிவாகவுடைத்தான கர்மயோகம் தொடக்கமான உபாயங்களையென்றபடி என்கை.

ஸ்வரூபவிருத்தத்வாத் அதர்மமாகச் சொல்லவேண்டுமவற்றைத் தர்மம் என்கிறதுக்கு ஹேதுவை அருளிச்செய்கிறார் 'இவற்றை' என்றுதொடங்கி.

மூ. 198. இவற்றை, தர்மம் என்கிறது—ப்ரமித்த அர்ஜுநன் கருத்தாலே.

வ்யா:— அதாவது, பகவதத்யந்த பாரதந்த்ர்யமாகிற உத்தேஶ்யத்துக்கு விரோதியாயிருக்கையாலே அதர்மஶப்த வாச்யங்களாகப் ப்ராப்தங்களாயிருக்கிற இவற்றைத் தர்மமென்று சொல்லுகிறது, ஸ்வதர்மமான யுத்தத்தை அதர்மம் என்றும் இவற்றைத் தர்மம் என்றும் ப்ரமித்த அர்ஜுநனுடைய நினைவாலேயித்தனையென்கை. ஆக, ப்ரதம பதார்த்தத்தை அருளிச்செய்தராயிற்று.

அநந்தரம், த்விதீயபதத்தை உபாதாநம் பண்ணுகிறார் 'பரித்யஜ்ய' என்று.

மூ. 199. பரித்யஜ்ய.

இதுவும் த்யாகமும் ல்யப்பும் உபஸர்க்கமுமாய்த் த்ரிப்ர காரமாயிருக்கையாலே, அதில் த்யாகவேஷத்தை முந்துற அருளிச்செய்கிறார் 'த்யாகமாவது' என்றுதொடங்கி.

மூ. 200. த்யாகமாவது—உக்தோபாயங்களை அநு ஸந்தித்து, 'ஶுக்திகையிலே ரஜதபுத்தி பண்ணுவாரைப் போலேயும், விபரீததிஶாகமநம் பண்ணுவாரைப்போலே யும் அநுபாயங்களிலே உபாயபுத்தி பண்ணினோம்' என் கிற புத்திவிசேஷத்தோடே த்யஜிக்கை.

வ்யா:—*அதாவது, இவ்விடத்திற் சொல்லுகிற த்யாக மாவது—கேவலம் விடுகை அன்று; கீழ்ச்சொல்லப்பட்ட உபா யங்களின்படியை அநுஸந்தித்து, 'ரஜதமல்லாத ஶுக்தி கையிலே ரஜதபுத்தி பண்ணுவாரைப்போலேயும், ஸ்வகார்ய ஸித்திக்கு உடலான ஒருதிக்கிலே போகக்கோலித் தத்வீபரீத மான திக்கை அதுவாக நினைத்துப் போவாரைப்போலேயும், பகவத்ப்ராப்த்யுபாயாபேக்ஷரான நாம் உபாயமல்லாதவற் றிலே உபாயபுத்தி பண்ணினோம்' என்கிற புத்திவிஶேஷத் தோடே விடுகையென்றபடி.*

இனி, உபஸர்க்கார்த்தத்தை அருளிச்செய்கிறார் 'பரி என்கிற' என்று தொடங்கி.

மூ. 201. 'பரி' என்கிற உபஸர்க்கத்தாலே—பாதகாதி களை விடுமாபோலே ருசி வாஸனைகளோடும் லஜ்ஜை யோடுங்கூட மறுவலிடாதபடி விடவேணுமென்கிறது.

வ்யா:—*அதாவது- 'பரி ஸாகல்யே' என்று ஸாகல்யபர மாகக் கொள்ளுமளவில் அது ஸர்வஶப்தத்திலே உக்தமாகை யாலே அபேக்ஷித மல்லாமையாலே, மிகுதிக்கு வாசகமான பரியென்கிற இந்த உபஸர்க்கத்தாலே* 171. **"ब्रह्महत्या सुरा-पानं स्तेयं गुर्वङ्गनागमः"** (ப்ரஹ்மஹத்யா ஸுராபாநம் ஸ்தே

யம் குர்வங்கநாகம:) என்கிற பாதகங்கள் முதலானவற்றை விடுமளவில் அவற்றில் புநரந்வயத்துக்கு உறுப்பான ருசி வாஸனைகளோடேகூட 'நாம் இதைச்செய்வதே!' என்கிற லஜ்ஜாஸஹிதனுய்க்கொண்டு விடுமாபோலே, 172. **"अथ पातक भीतस्त्वं" (அத பாதகபீதஸ் த்வம்)** என்று தர்மதேவதை பாதகமாகச் சொன்ன உபாயாந்தரங்களை விடுமளவில் புத்தி பூர்வகமாக அவற்றிலே ப்ரவர்த்திக்கைக்கு உறுப்பான ருசியும் அபுத்திபூர்வகமாக மூளுகைக்கு உறுப்பான வாஸனையும் ஆகிற அவற்றோடே கூட 'பகவதேகஸாதநதைகவேஷமான ஸ்வஸ்வரூபத்துக்கு அத்யந்த விருத்தமானவற்றை நாம் செய்வதே!' என்கிற லஜ்ஜாஸஹிதனுய்க்கொண்டு மீளவும் அவற்றில் அந்வயம் வாராதபடி விடவேணுமென்று சொல்லுகிறது என்கை.

இனி, 'ல்யப்' அர்த்தத்தை அருளிச்செய்கிறார் 'ல்யப் பாலே' என்றுதொடங்கி.

மூ. 202. ல்யப்பாலே "ஸ்நாத்வா புஞ்ஜீத" என்னுமா போலே, உபாயாந்தரங்களைவிட்டே பற்றவேணும் என்கிறது.

வ்யா:—அதாவது- 'த்யஜ்ய' என்கிற ல்யப்பாலே 173. **"भुक्त्वा चान्द्रायणं चरेत्" (புக்த்வா சாந்த்ராயணம் சரேத்)** என்னுமாபோலன்றிக்கே, 174. **"स्नात्वा भुञ्जीत" (ஸ்நாத்வா புஞ்ஜீத)** என்கிற விதி 'புஜிக்குமளவில் ஸ்நாநம்பண்ணியே புஜிக்கவேணும்' என்கிற நியமத்தைச் சொல்லுமாபோலே, ஸித்தோபாயத்தைப் பரிக்ரஹிக்குமளவில் த்யாஜ்யமான உபாயாந்தரங்களை த்யஜித்தே பரிக்ரஹிக்கவேணுமென்கிற நியமத்தைச் சொல்லுகிறதென்கை.

இப்படி விட்டேபற்றவேணுமென்கிற இதன் கருத்தை அருளிச்செய்கிறார் 'சசால' என்றுதொடங்கி.

மூ. 203. "சசால சாபஞ்ச முமோச வீர:" என்கிற படியே இவை அநுபாயங்களான மாத்ரமன்றிக்கே கால் கட்டு என்கிறது.

வ்யா:— *அதாவது- 175.* **"यो वज्रपाताशनिसन्निपाताञ्च चुक्षुभे नापि चचाल राजा। स रामबाणाभिहतो भृशार्तश्चचाल चापञ्च मुमोच वीरः।"** (யோ வஜ்ரபாதாஶநிஸந்நிபாதாந் ந சுக்ஷுபே நாபி சசால ராஜா-ஸ ராமபாணாபிஹதோ ப்ருஶார்த்தஶ் சசால சாபஞ்ச முமோச வீர:) *என்கிற ஶ்லோகத்தில் ராவணன் ராம ஶரங்களாலே மிகவும் ஈடுபட்டு நிலைகலங்கிப்போகப் பார்த்த வளவிலும் கையில் வில்லிருக்குமளவும் பெருமாள் போக வொட்டாமையாலே பின்பு போகட்ட வில்லு கையில் இருந்த போது ப்ரதிபக்ஷ ஜயத்துக்கு ஸாதநமாகாதமாத்ரமன்றிக்கே 176.* **"गच्छानुजानामि"** (கச்சாநுஜாநாமி) *என்று பின்பு பண்ணின அநுமதி பெருமாள் அப்போது பண்ணக்காணாமை யாலே போகவுமொண்ணுதபடி கால்கட்டானமையைச் சொல்லுகிறபடியே, உபாயாந்தரங்களான இவற்றிலே ஈஷதந்வயங் கிடக்கிலும் இவை பேற்றுக்கு ஸாதநமாகாத மாத்ரமன்றிக்கே பேற்றுக்கு ப்ரதிபந்தகமாய்த் தலைக்கட்டு மென்றபடி.*

இன்னமும், இவற்றில் அந்வயம் இழவுக்கு உடலா மென்னுமத்தை ஸத்ருஷ்டாந்தமாக அருளிச்செய்கிறார் 'சக்ர வர்த்தியைப்போலே இழக்கைக்கு உறுப்பு' என்று.

மூ. 204. சக்ரவர்த்தியைப்போலே இழக்கைக்கு உறுப்பு.

வ்யா:—*அதாவது-முன்பே வரப்ரதானத்தைப் பண்ணி வைத்து இப்போதாக மறுக்கவொண்ணாதென்றுஆபாஸமான ஸத்யதர்மத்தைப்பற்றி நின்று 177.* **"रामो विग्रहवान् धर्मः"** (ராமோ விக்ரஹவாந் தர்ம:) *என்கிற பெருமாளோடே கூடி வாழ இருந்த பேற்றையிழந்த சக்ரவர்த்தியைப்போலே*

ஆபாஸமான உபாயாந்தரங்களிலே அந்வயித்து நிற்கையாகிறது 178. "क्रुष्णं धर्मं सनातनं" (க்ருஷ்ணம் தர்மம் ஸநாதநம்) என்று ஸநாதநதர்மமான பகவத்விஷயத்தோடே கூடி வாழுகையாகிற பேற்றை இழக்கைக்கு உறுப்பாய் விடுமென்கை.

இனி, இங்குச்சொன்ன ஸர்வதர்ம பரித்யாகத்தின் கருத்து அறியாதார் சொல்லும் தூஷணத்தைப் பரிஹரிக்கைக்காக, தத்பக்ஷத்தை உத்க்ஷேபிக்கிறார் 'ஸர்வதர்மங்களையும்' என்றுதொடங்கி.

மூ. 205. ஸர்வதர்மங்களையும்விட்டு என்று சொல்லுகையாலே சிலர் 'அதர்மங்கள் புகுரும்' என்றார்கள்.

வ்யா:–அதாவது-த்யாஜ்யமான தர்மந்தான் 'இதம் குரு, இதம் மாகார்ஷீ:' என்று விதி நிஷேதாத்மகமாயிருக்கையாலே 'ஸர்வதர்மங்களையும் விட்டு' என்று சொல்லுகையாலே விஹிதாநுஷ்டாநத்தோபாதி நிஷித்தபரிஹாரமும் ஒக்கத் தள்ளுண்ணுமளவில், அடைத்த கதவைத் திறந்தால் நிஹீந பதார்த்தங்கள் புகுருமாபோலே அதர்மங்களான நிஷித்த ப்ரருவ்த்திகள் புகுருமென்று சிலர் சொன்னார்களென்கை.

அத்தைப் பரிஹரிக்கிறார் 'அதுகூடாது அதர்மங்களைச் செய் என்று சொல்லாமையாலே' என்று.

மூ. 206. அது கூடாது; 'அதர்மங்களைச்செய்' என்று சொல்லாமையாலே.

வ்யா:–அதாவது, ஸர்வதர்மங்களையும் விடச்சொன்ன இத்தால் அதர்மங்கள் புகுருமென்கிற இது ஸம்பவியாது; தர்மங்களை விடச்சொன்ன மாத்ரமொழிய அதர்மங்களைச் செய்யென்று சொல்லாமையாலே என்கை.

'அதர்மநிவ்ருத்தியும் தர்மரூபத வாச்யமாகையாலே, அத்தை விடச்சொன்னால், அதர்மத்தைச் செய்யென்னுமிடம்

அர்த்தாத் உக்தமாகாதோ?' என்கிற ப்ரதிவாத்யுக்தியை அநுவதிக்கிறார் 'தன்னடையே சொல்லிற்றாகாதோவென்னில்' என்று.

மூ. 207. 'தன்னடையே சொல்லிற்றாகாதோ?' என்னில்,—

அதுக்கு உத்தரம் அருளிச்செய்கிறார் 'ஆகாது; தர்ம ஶப்தம் அதர்ம நிவ்ருத்தியைக் காட்டாமையாலே' என்று.

மூ. 208. ஆகாது; தர்மசப்தம் அதர்மநிவ்ருத்தியைக் காட்டாமையாலே.

வ்யா:—அதாவது, தர்மங்களை விடச்சொன்ன இத்தால் 'அதர்மங்களைச் செய்' என்னுமிடம் தன்னடையே சொல்லிற்றாகாது; தர்மஶப்தம் அதர்மநிவ்ருத்த்யாதி அங்கஸஹித மாய்ப் ப்ரதாநமாயிருந்துள்ள விஹிதாநுஷ்டாநத்தைக் காட்டுமதொழிய, ஸாமாந்யேந அதர்ம நிவ்ருத்திமாத்ரத்தைக் காட்டாமையாலே என்கை.

"அதர்மநிவ்ருத்திக்கு தர்மஶப்தவாச்யத்வம் முக்யமாக இல்லையேயாகிலும், ஸர்வஶப்த ஸாஹித்யத்தாலே தர்ம ஶப்தம் விஶேஷணபூதமான இதுதன்னையுங் காட்டாதோ?" என்ன, அருளிச்செய்கிறார் 'காட்டினாலும்' என்று தொடங்கி.

மூ. 209. காட்டினாலும், அத்தை ஒழிந்தவற்றைச் சொல்லிற்றுமித்தனை.

வ்யா:—அதாவது, அப்படிக் காட்டிற்றாகிலும், அது இவ்விடத்தில் விவக்ஷிதம் அல்லாமையாலே, அத்தையொழிந்த விஹிதாநுஷ்டாநரூப தர்மங்களானவற்றைச் சொல்லிற்று மித்தனையென்கை.

'இங்ஙன் ஒதுக்குகிறது என்கொண்டு?' என்ன, அருளிச்செய்கிறார் 'தன்னையும்' என்று தொடங்கி.

மூ. 210. தன்னையும் ஈச்வரனையும் பலத்தையும் பார்த்தால் அவை புகுர வழியில்லை.

வ்யா:-*அதாவது, அதர்மாநுஷ்டாநம் சேஷிக்கு அநிஷ்டம் ஆகையாலே அவனுக்கு அதிசயகரனுமது ஒழிய அநிஷ்டகரனுகை சேராதபடியான ஸ்வரூபத்தையுடைய தன்னைப் பார்த்தாலும், ஸஹாயாந்தர ஸம்ஸர்க்காஸஹனையாலே இத்தலையில் ஸ்வயத்ந நிவ்ருத்தி ஒழிய ப்ரவ்ருத்யம்சத்தில் ஒன்றையும் பொறாத உபாயபூதனான ஈச்வரனைப் பார்த்தாலும், இவனுடைய ப்ரவ்ருத்திக்கு பலம் அவனுடைய ப்ரீதியாகையாலே தாத்ருசமான பலத்தைப் பார்த்தாலும், இம்மூன்றுக்கும் விருத்தங்களான அவை புகுரவழியில்லை என்கை. ஆகையால் தர்மசப்தம் அதர்மநிவ்ருத்தியைக் காட்டிற்றாகிலும் அத்தை ஒழிந்தவற்றைச் சொல்லிற்றாகக் கொள்ள வேணும் என்றுகருத்து.*

அநந்தரம் த்ருதீயபதத்தை உபாதாநம் பண்ணுகிறார் 'மாம்' என்று; அதுக்கு அர்த்தம் அருளிச்செய்கிறார் 'ஸர்வ ரக்ஷகனாய்' என்று தொடங்கி.

மூ. 211 மாம்-ஸர்வரக்ஷகனாய், உனக்குக் கையாளாய், உன்னிசைவுபார்த்து, உன் தோஷத்தைப் போக்யமாகக் கொண்டு, உனக்குப்புகலாய், நீர்சுடுமாபோலே சேர்ப்பாரே பிரிக்கும்போதும் விடமாட்டாதே ரக்ஷிக்கிற என்னை.

வ்யா:— *அதாவது- 'நம்முடைய ரக்ஷணம் இவன் பண்ணுமோ? பண்ணானோ?' என்று ஸம்சயிக்கவேண்டாதபடி ஸர்வருடையவும் ரக்ஷணத்திலே தீக்ஷிதனாய், 'தன்பெருமையையும் நம் சிறுமையையும் பார்த்து நம்மோடு கலப்புஅற்று இருக்குமோ?' என்ன வேண்டாதபடி 179.* **"सेनयोरुभयोर्मध्ये रथं स्थापय** (ஸேநயோருபயோர் மத்யே ரதம் ஸ்தாபய) *என்று ஏவிக்கார்யங்கொள்ளலாம்படி உனக்குக் கையாளாய்*

உன்னை ரக்ஷிக்கையில் உண்டான நசையாலே 180.."रक्ष्या-पेक्षां प्रतीक्षते" (ரக்ஷ்யாபேக்ஷாம் ப்ரதீக்ஷதே) என்கிறபடியே ரக்ஷ்யபூதனான உன் இசைவுபார்த்து, 'நங்குற்றங்கண்டு இகழுமோ?' என்று அஞ்சவேண்டாதபடி அஸ்த்தாநஸ்நேஹ காருண்ய தர்மாதர்மதியாகுலனான உன் தோஷத்தைப் போக்யமாகக்கொண்டு, அஶரண்யஶரண்யனாகையாலே நீயும் பிறரும் உனக்குத் தஞ்சமல்லாத தஶையில் ஒதுங்கலாம்படியான புகலாய், ஶைத்யமே ஸ்வபாவமான ஜலம் ஔஷ்ண்யத்தைப் பஜிக்குமாபோலே அபராதக்ஷாமணம் பண்ணி கடிப்பிக்கும் புருஷகாரபூதரே /"தாமரையாளாகிலும் சிதகுரைக்குமேல்" என்கிறபடியே குற்றத்தைக்காட்டி அகற்றும் போதும், விட க்ஷமனன்றிக்கே /"என்னடியாரதுசெய்யார்" என்று மறுதலித்து ஒரு தலைநின்று ரக்ஷிக்கும் என்னை என்கை.

'மாம்' என்று விபவரூபத்தைக் காட்டுகையாலே வ்யாவர்த்திக்கப்படுகிறவற்றை அருளிச்செய்கிறார், 'இத்தால்' என்றுதொடங்கி.

மூ. 212. இத்தால் பரவ்யூஹங்களையும் தேவதாந்தர்யாமித்வத்தையும் தவிர்க்கிறது.

வ்யா:—அதாவது, 'என்னை' என்று அவதரித்துக் கண்ணுக்கிலக்காய் அணுகிநிற்கிற தன்னை வரணீயனாகச் சொன்ன இத்தாலே, தேஶவிப்ரக்ருஷ்டதையாலே காணவுங் கிட்டவும் ஒண்ணாதபடியிருக்கிற பரவ்யூஹங்களையும் அஸாதாரண விக்ரஹயுக்தமன்றிக்கே உபாயாந்தர நிஷ்டர்க்கு உத்தேஶ்யமாயிருக்கிற அக்நீந்த்ராதி தேவதாந்தர்யாமித்வத்தையும் வ்யாவர்த்திக்கிறது என்கை.

தர்மங்களையெல்லாம் விட்டுத் தன்னைப் பற்றச்சொல்லுகையாலே பலிதமானதொரு அர்த்த விஶேஷத்தை அருளிச்செய்கிறார் 'தர்ம ஸம்ஸ்தாபநம்' என்றுதொடங்கி.

/ பெரியாழ்திரு 4-9-2.

மூ. 213. தர்ம ஸம்ஸ்த்தாபநம் பண்ணப்பிறந்தவன்தானே 'ஸர்வ தர்மங்களையும் விட்டு என்னைப் பற்று' என்கையாலே ஸாக்ஷாத் தர்மம் தானேயென்கிறது.

வ்யா:–*அதாவது, 181.* **"धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे"** **(தர்ம ஸம்ஸ்தாபநார்த்தாய ஸம்பவாமி யுகே யுகே)** *என்கிறபடியே ஸ்வப்ராப்திக்கு உடலான தர்மத்தை ஸ்தாபிப்பதாகப் பிறந்தவன்தானே 'ஸர்வதர்மாந் பரித்யஜ்ய' என்று 'மோக்ஷஸாதநதயா சாஸ்த்ரஸித்தங்களான ஸர்வதர்மங்களையும்விட்டு என்னைப்பற்று' என்று சொல்லுகையாலே, அவை ஸாக்ஷாத் தர்மங்களன்று, ஸ்தாபநீயமான ஸாக்ஷாத் தர்மம் 182.* **"कृष्णं धर्मं सनातनं"** **(க்ருஷ்ணம் தர்மம் ஸநாதநம்)** *என்று ஸநாதநதர்மமான தானேயென்னுமிடம் சொல்லுகிறது என்கை.*

'இத்தால் என் சொல்லுகிறது?' என்ன, அருளிச்செய்கிறார் 'இத்தால் விட்ட ஸாதநங்களில் ஏற்றஞ்சொல்லுகிறது' என்று.

மூ. 214. இத்தால், விட்ட ஸாதநங்களில் ஏற்றஞ் சொல்லுகிறது.

வ்யா:— *அதாவது-இப்படிச்சொன்ன இத்தால், கீழ் விட்ட ஸாதநங்களிற் காட்டில் இந்த ஸாதநத்துக்கு உண்டான ஏற்றஞ்சொல்லுகிறது என்கை.*

'அதுதான் எது?' என்ன, அருளிச்செய்கிறார் 'அதாவது' என்று தொடங்கி.

மூ. 215. அதாவது–ஸித்தமாய், பரமசேதநமாய், ஸர்வசக்தியாய், நிரபாயமாய், ப்ராப்தமாய், ஸஹாயாந்தர நிரபேக்ஷமாயிருக்கை.

வ்யா:—*இத்தால், கீழ்விட்ட ஸாதநங்களிற் காட்டில் இதுக்கு ஏற்றமாவது,– சேதநப்ரவ்ருத்தியாலே தன்ஸ்வரூப ஸித்தியாம்படி இருக்கையன்றிக்கே ஸநாதந தர்மமாகை யாலே ஸித்தமாய், 183.* **"यस्सर्वज्ञः सर्ववित्" (யஸ்ஸர்வஜ்ஞஸ்ஸர்வவித்)** *இத்யாதிகளிற் சொல்லுகிற ஸர்வஜ்ஞ விஷயமாகையாலே பரமசேதநமாய், 184.* **"परास्य शक्तिर्विविधैव श्रूयते" (பராஸ்ய ஶக்திர் விவிதைவ ஶ்ரூயதே)** *என்கிறபடியே ஸர்வஶக்தியாய், சேதநஸாத்யமாய், நடுவே அபாயங்கள் புகுருகைக்கு அவகாஶமுண்டாம்படியிருக்கை யன்றிக்கே ஸித்தவஸ்துவாயிருக்கையாலே நிரபாயமாய், பரதந்த்ரனான இச்சேதநனுடைய ஸ்வரூபத்துக்கு அப்ராப்தமா யிராதே ப்ராப்தமாய், கீழ்ச்சொன்ன பரமசேதநத்வாதி களாலே ஸஹாயாந்தரநிரபேக்ஷமாயிருக்கையென்றபடி.*

இந்த ஸஹாயாந்தர நிரபேக்ஷத்வத்தை ஸஹேதுகமாக ஸ்தாபிக்கிறார், 'மற்றை உபாயங்கள்' என்றுதொடங்கி மேல் மூன்று வாக்யத்தாலே.

மு. 216. மற்றை உபாயங்கள் ஸாத்யங்களாகை யாலே, ஸ்வரூப ஸித்தியில் சேதநனை அபேக்ஷித்திருக் கும்; அசேதநங்களுமாய், அஶக்தங்களுமாயிருக்கை யாலே கார்யஸித்தியில் ஈஶ்வரனை அபேக்ஷித்திருக்கும். இந்த உபாயம் அவற்றுக்கு எதிர்த்தட்டாயிருக்கை யாலே, இதர நிரபேக்ஷமாயிருக்கும்.

வ்யா:—*அதாவது, இத்தையொழிந்த உபாயங்கள் சேதந ப்ரவ்ருத்தியாலே ஸாதிக்கப்படுமவையாகையாலே தன் னுடைய ஸ்வரூபஸித்தியில் ப்ரவ்ருத்திகரனான சேதநனை அபேக்ஷித்திருக்கும்; இவனுக்குச் செய்யவேண்டுமவை யறிகைக்கும் அதுதன்னைச் செய்து தலைக்கட்டுகைக்கும் யோக்யதையில்லாத அசேதநங்களுமாய் அஶக்தங்களுமா யிருக்கையாலே, சேதநனுடைய இஷ்டாநிஷ்டப்ராப்தி*

பரிஹாரரூபமான கார்யத்தினுடையஸித்தியில் 185. **"फलमत उपपत्तेः"** **(பலமத உபபத்தே:)** என்கிறபடியே பலப்ரதத்வோப யோகியான ஸர்வஶக்தித்வாதி உபபத்தியுடையனான ஈஶ்வரனை அபேக்ஷித்திருக்கும்; இந்த உபாயம் ஸித்தத்வ பரமசேதநத்வ ஸர்வஶக்தித்வங்களாலே அவற்றுக்கு எதிர்த் தட்டாயிருக்கையாலே, அந்யநிரபேக்ஷமாயிருக்குமென்கை.

இனி, இப்பதத்திலே ஆஶ்ரயண ஸௌகார்யாபாதகங் களான குணவிஶேஷங்களெல்லாம் ப்ரகாசிக்கிறபடியை அரு ளிச்செய்கிறார், 'இதிலே' என்றுதொடங்கி.

மூ. 217. இதிலே, வாத்ஸல்ய ஸ்வாமித்வ ஸௌசீல்ய ஸௌலப்யங்களாகிற குணவிசேஷங்கள் நேராக ப்ரகாசிக்கிறது.

வ்யா:-அதாவது, அதர்மபுத்தியாலே தர்மத்தில் நின்றும் நிவ்ருத்தனான அர்ஜுநனுக்குக்குற்றம்பாராதே பேஅக்ஷிதார்த் தங்களை அருளிச்செய்கையாலே, வாத்ஸல்யம் ப்ரகாஶிக் கிறது; தன்னுடைய பரத்வத்தைப் பலகாலும் அருளிச்செய்த அளவன்றிக்கே அர்ஜுநன் ப்ரத்யக்ஷிக்கும்படி பண்ணுகை யாலே, ஸ்வாமித்வம் ப்ரகாசிக்கிறது; 186. **"हे कृष्ण हे यादव"** **(ஹே க்ருஷ்ண ஹே யாதவ)** என்று அர்ஜுநன் தானே சொல்லும்படி இவனோடே கலந்து பரிமாறுகையாலே, ஸௌஶீல்யம் ப்ரகாஶிக்கிறது; அப்ராக்ருதமான திரு மேனியைக் கண்ணுக்கு இலக்காம்படி பண்ணுகையாலே, ஸௌலப்யம் ப்ரகாஶிக்கிறது என்கை. "குணவிஶேஷங்கள்" என்றது, ஆச்ரயணத்துக்கு அபேக்ஷிதங்களானவையென்று தோற்றுகைக்காக. 'நேராக ப்ரகாஶிக்கிறது' என்றது ஸ்புடமாக ப்ரகாசிக்கிற தென்றபடி.

இவை எல்லாவற்றிலும் வைத்துக்கொண்டு, மிகவும் அபேக்ஷிதம் ஸௌலப்யமாகையாலே, அவதாரப்ரயுக்தமான ஸௌலப்யத்தளவன்றிக்கே ஸாரத்யேவஸ்த்திதனாய் நிற்கிற

ஸௌலப்ய அதிஶயத்தைத் தர்ஶிப்பித்தமையை அருளிச் செய்கிறார் 'கையும் உழவுகோலும்' என்று தொடங்கி.

மூ. 218. கையும் உழவுகோலும், பிடித்த சிறுவாய்க் கயிறும், ஸேநாதூளிதூஸரிதமான திருக்குழலும், தேருக்குக் கீழே நாற்றின திருவடிகளுமாய் நிற்கிற ஸாரத்யவேஷத்தை 'மாம்' என்று காட்டுகிறான்.

வ்யா:—அதாவது-குதிரைகளை ப்ரேரித்து நடத்துகைக் காகத் திருக்கையிலே தரித்த உழவுகோலும், அவற்றை இடவாய் வலவாய்த்திருப்புகைக்காகவும், நிறுத்தருள வேண்டும் இடத்திலே தாங்கி நிறுத்துகைக்காகவும் பிடித்த சிறுவாய்க்கயிறும், திருமுடியில் ஒன்று ஆச்சாதியாமல் நிற்கையாலே ஸேநாதூளியாலே புழுதிபுடைத்த திருக் குழலும், * "தேர்கடவிய பெருமான்கனைகழல்" என்கிற படியே, சாத்தின சிறுசதங்கையுந் தானுமாகத் தேருக்குக் கீழே நாற்றின திருவடிகளுமாய் நிற்கிற ஸாரத்யவேஷத்தை 'என்னை' என்று காட்டுகிறான் என்கை. ஆக, த்ருதீய பதார்த் தத்தை அருளிச்செய்தாராயிற்று,

அநந்தரம், சதுர்த்தபதத்தை உபாதாநம் பண்ணுகிறார் 'ஏகம்' என்று.

மூ. 219. ஏகம்.

அதுக்கு அர்த்தம் அருளிச்செய்கிறார் 'இந்த ஏகஶப்தம்' என்றுதொடங்கி.

மூ. 220. இந்த ஏகசப்தம் ஸ்த்தாநப்ரமாணத்தாலே அவதாரணார்த்தத்தைக் காட்டுகிறது.

வ்யா:—அதாவது, இவ்வுபாயவிஶேஷத்தைச் சொல்லும் இடங்களிலே பலவிடங்களிலும் அவதாரண ப்ரயோகம் உண்டாகையாலே, உகாரம்போலே இந்த ஏகஶப்தமும்

* திருவாய் 3-6-10.

ஸ்தாநப்ரமாணத்தாலே அவதாரணமாகிற அர்த்தத்தைக் காட்டுகிறது என்கை.

இவ்வுபாயத்தை நிர்த்தேஶித்த அநந்தரம் அவதாரண ப்ரயோகம் பண்ணின வசநங்கள் பலவற்றையும் இதுக்கு உதாஹரணமாக அருளிச்செய்கிறார், 'மாமேவ' என்று தொடங்கி.

மூ. 221. "மாமேவ யே ப்ரபத்யந்தே" "தமேவ சாத்யம்" "த்வமேவோபாய பூதோ மே பவ" * "ஆறெனக்கு நின் பாதமே சரணாகத் தந்தொழிந்தாய்" என்றுஞ் சொல்லுகிறபடியே.

வ்யா:–அதாவது, 187. **"मामेव ये प्रपद्यन्ते"** (மாமேவ **யே ப்ரபத்யந்தே)** என்று என்னையே யாவர்சிலர் ப்ரபத்தி பண்ணுகிறார்கள் என்றும், 188. **"तमेव चाद्यं पुरुषं प्रपद्ये"** **(தமேவ சாத்யம் புருஷம் ப்ரபத்யே)** என்று ஆத்யனை அந்தப் புருஷனையே ப்ரபத்திபண்ணுகிறேன் என்றும், 189. **"त्वमेवोपायभूतो मे भव"** **(த்வமேவோபாய பூதோ மே பவ)** என்று நீயே எனக்கு உபாயமாகவேணும் என்றும், * "ஆறெனக்கு நின்பாதமே சரணாகத் தந்தொழிந்தாய்" என்று 'எனக்கு உபாயந்தருகிற இடத்தில் உன் திருவடிகளையே உபாயமாகத் தந்தாயென்றுஞ் சொல்லுகிற இவ்விடங்களில், "மாமேவ" "தமேவ" "த்வமேவ" "நின் பாதமே" என்று ஸ்வீகார்யவஸ்து நிர்த்தேஶாநந்தரம் அவதாரணத்தைச் சொல்லுகிற ப்ரகாரத்திலேயென்கை.

'ஏதத் வ்யாவர்த்யம் எது' என்ன, அருளிச்செய்கிறார் 'இத்தால்' என்றுதொடங்கி.

மூ. 222. இத்தால் 'வ்ரஜ' என்கிற ஸ்வீகாரத்தில் உபாயபாவத்தைத் தவிர்க்கிறது.

* திருவாய் 5-7-10.

வ்யா:—அதாவது, உபாயாந்தரங்கள் வ்யாவர்த்யமாமளவில் பௌநருக்த்யம் ப்ரஸங்கிக்கையாலும், தேவதாந்தரங்கள் வ்யாவர்த்யமாமளவில் 'மாம்' என்று அஸாதாரணாகாரத்தைச் சொல்லுகையாலே அது கீழே ஸித்தமாகையாலும், இந்த அவதாரணத்தால் 'வ்ரஜ' என்று மேல் சொல்லுகிற ஸ்வீகாரத்தில் உபாயத்வத்தைக் கழிக்கிறது என்கை. இந்த ஸ்வீகாரந்தானும் அந்வய வ்யதிரேகத்தாலே ஸாதநம் என்று நினைக்கலாயிருக்கையாலே, இதன் ஸாதநத்வம் அவஶ்யங் கழிக்கவேணுமிறே.

* 'ஸ்வீகாராநந்தரமொழிய உபாயம் கார்யகரமாகாமையாலே பேற்றுக்கு இது அவஶ்யம் வேண்டியிருக்க, இதில் உபாயத்வத்தைக் கழிக்கிறபடிதான் எங்ஙனே?' என்ன, அருளிச்செய்கிறார் 'ஸ்வீகாரந்தானும் அவனாலே வந்தது' என்று.

மூ. 223. ஸ்வீகாரந்தானும் அவனாலே வந்தது.

வ்ய:—அதாவது-ஸ்வீகாராநந்தரம் இவனுக்கு அநிஷ்டநிவ்ருத்தியும் இஷ்டப்ராப்தியும் பண்ணுகையாகிற இது அவனாலே ஆனாற்போலே தத்பூர்வபாவியான ஸ்வீகாரந்தானும் அவனாலே உண்டானது என்கை. இத்தால், ஸ்வீகாரத்துக்கு உபாயகார்யத்வமொழிய உபாயத்வம் இல்லை என்றதாயிற்று.

'அவனாலே வருகையாவது என்?' என்ன, அருளிச்செய்கிறார் 'ஸ்ருஷ்டி' என்று தொடங்கி.

மூ. 224. ஸ்ருஷ்ட்யவதாராதி முகத்தாலே பண்ணின க்ருஷிபலம்,

வ்யா:-அதாவது, கரணகளேபரவிதுரனாய், போகமோக்ஷஶூந்யனாய், அசிதவிசேஷிதனாய்க் கிடக்கிற தஶையிலே, கரணகளேபர விஶிஷ்டனாய், ஜ்ஞாநவிகாஸயுக்தனும்படி

ஸ்ருஷ்டித்து, /"எதிர்சூழல்புக்கு" என்கிறபடியே இவனை அங்கீகரிக்கைக்காக அநேக அவதாரங்களைப்பண்ணி அவதரித்த இடங்களிலே, ஆஶ்ரயணருசி விஶ்வாச ஜநகமான தன்குணசேஷ்டிதாதிகளை ப்ரகாஶிப்பித்து, இவ்வழியாலே அவன் பண்ணின க்ருஷியாலே பலித்தது இதுவென்கை.

இவ்வர்த்தத்தில் ப்ரமாணம் காட்டுகிறார், 'அதுவுமவனதின்னருளே' என்று.

மூ. 225. "அதுவும் அவனது இன்னருளே."

வ்யா:—அதாவது, ||"உணர்விலும்பரொருவனை யவனதருளா லுறற்பொருட்டு என்னுணர்வினுள்ளே யிருத்தினேன்" என்று உணர்வுமிக்கிருக்கக் கடவரான நித்யஸூரிகளுடைய ஸத்தாதிகளுக்கு நிர்வாஹகனான அத்விதீயனானவனை, அவனுடைய அருளாலே ப்ராபிக்கைக்காக என்னுடைய அபேக்ஷாரூப ஜ்ஞாநத்துக்குள்ளே இருத்தினேனென்று தம்முடைய ஸ்வீகாரத்தை அருளிச்செய்த அநந்தரம், ||"அதுவுமவனதின்னருளே" என்று அந்த ஸ்வீகாரந்தானும் அவனுடைய நிர்ஹேதுக க்ருபையினாலே உண்டானது என்று ஆழ்வாரருளிச்செய்கையாலே, ஸ்வீகாரமும் அவனுடைய க்ருஷிபலமென்றே கொள்ளவேணுமென்கை.

இப்படியாகையால் இந்த ஸ்வீகாரத்தில் சரக்கற நினைக்கக்கடவனென்கிறார் 'இத்தையொழியவும்' என்று தொடங்கி.

மூ. 226. இத்தை ஒழியவும் தானே கார்யஞ்செய்யும் என்று நினைக்கக்கடவன்.

வ்யா:—அதாவது-இந்த ஸ்வீகாரத்துக்கும் தானே க்ருஷி பண்ணுவானொருவன் ஆகையாலே, இதுக்காக வன்று அவன்

/ திருவாய் 2-7-6. || திருவாய் 8-8-3.

நமக்குக் கார்யஞ்செய்கிறது; இத்தை ஒழியவும் இவ்வாத்மோஜ்ஜீவநகரனான தானே நம்முடைய இஷ்டாநிஷ்ட ப்ராப்தி பரிஹாரரூபமான கார்யத்தைச் செய்யுமென்று ப்ரதிபத்தி பண்ணக்கடவனென்கை.

இப்படி நினைக்கவேண்டுகிறது என்?' என்ன அருளிச் செய்கிறார் 'அல்லாதபோது' என்று தொடங்கி.

மூ 227 அல்லாதபோது உபாயநைரபேக்ஷ்யம் ஜீவியாது.

வ்யா—அதாவது- 'இத்தையொழியவுங் கார்யஞ்செய்யுமென்ன நினையாதே, இதுவும்வேணும் அவன் கார்யஞ் செய்கைக்கு' என்று நினைக்குமளவில், உபாயத்தினுடைய ஸஹாயாந்தர நைரபேக்ஷ்யம் ஜீவிக்கப்பெறாது என்கை.

ஆனால் இந்த ஸ்வீகாரந்தான் ஏதாவதென்ன அருளிச் செய்கிறார், 'இது' என்று தொடங்கி.

மூ. 228. இது ஸர்வமுக்தி ப்ரஸங்கபரிஹாரார்த்தம், புத்தி ஸமாதாநார்த்தம், சைதந்யகார்யம், ராகப்ராப்தம், ஸ்வரூபநிஷ்ட்டம், அப்ரதிஷேதத்யோதகம்.

வ்யா:—அதாவது, இந்த ஸ்வீகாரம் இத்தலையிலொன்றுமின்றிக்கேயிருக்க ஈச்வரன்தானே உஜ்ஜீவிப்பிக்குமளவில், எல்லாரும் பின்னை முக்தராகவேண்டாவோ என்கிற ஸர்வமுக்தி ப்ரஸங்கபரிஹாரத்துக்குறுப்பு; இதுதான், நெடுங்காலம், நம்மை ரக்ஷியாதவன் இன்று நம்மை ரக்ஷிக்கும் என்றிருக்கிறது நாமென்கொண்டென்று இவன் தளும்பாமல் புத்திஸமாதாநம் பிறந்திருக்கைக்கு உறுப்பு; இவன்தான் அசேதநமன்றிக்கே சேதநனாகையாலே, அவனே உபாயம் என்கிற அத்யவஸாயம் இவன் சைதந்யத்தினுடைய கார்யம்; வைதமாக அன்றிக்கே இதில் ரஸஜ்ஞனான இவனுடைய

ராகத்தாலே ப்ராப்தமான இது, ஸ்வரூபாதிரேகியன்றிக்கே ததேகரக்ஷ்யத்வரூபமான ஸ்வரூபத்திலே நிற்குமது; அநாதி காலம் ஸ்வரக்ஷணாதிகளாலே அவன் பண்ணும் ரக்ஷணத்தை விலக்கிப்போந்த இவன் அது தவிர்ந்தமைக்குப் ப்ரகாசக மென்கை.

இனி, 'மாம்' என்கிற பதத்துக்குக் கீழும், * இங்கும் ஈஶ்வரனுடைய செயல்களை அருளிச்செய்கிறார் 'கீழ்' என்று தொடங்கி.

மூ. 229. கீழ் தானும் பிறருமான நிலையைக் குலைத் தான்; இங்குத்தானும் இவனுமான நிலையைக்குலைக் கிறான்.

வ்யா:—அதாவது- "ஸர்வதர்மாந் பரித்யஜ்ய" என்ற இடத்தில் ஸகலோபாயங்களையும் விடச் சொல்லுகையாலே பலப்ரதனான தானும் உபாயாந்தரங்களுமாய்க் கூடிநிற்கிற நிலையைக் குலைத்தான்; "ஏகம்" என்கிற இடத்தில் ஸ்வீ காரத்தில் உபாயபாவத்தைக் கழிக்கையாலே, உபாய பூதனான தானும் தன் ஸ்வீகாரத்தில் உபாயபுத்திபண்ணி நிற்கிற இவனுமான நிலையைக் குலைக்கிறானென்கை. உபா யாந்தரங்களைப் பிறர் என்றது || "உன்னாலல்லால் யாவ ராலும்" என்றாற்போலே.

இனி, ஸாதநபுத்த்யா இவன் பண்ணும் ஸ்வீகாரத்தி னுடைய தோஷத்தை அருளிச்செய்கிறார் 'அவனை' என்று தொடங்கி.

மூ. 230. அவனை இவன் பற்றும்பற்று அஹங்கார கர்ப்பம், அவத்யகரம்.

வ்யா:-அதாவது-நிருபாதிகரக்ஷகனான அவனை, தத்ரக்ஷ்ய பூதனான இவன், தன் ரக்ஷணத்துக்கு உறுப்பாக ஸ்வீகரிக்கிற

* (பா) மேலும். || திருவாய் 5-8-3.

ஸ்வீகாரம், ஸ்வகர்த்ருத்வரூப அஹங்கார கர்ப்பமுமாய், பிதாவுக்குப் புத்ரன் எழுத்து வாங்குமாபோலே அவத்ய கரமுமாயிருக்குமென்கை.

'ஆனால், ரக்ஷகமாவது தான் எது?' என்ன அருளிச் செய்கிறார் 'அவனுடைய ஸ்வீகாரமே ரக்ஷகம்' என்று.

மூ. 231. அவனுடைய ஸ்வீகாரமே ரக்ஷகம்.

வ்யா:—அதாவது, இவ்வாத்மாவினுடைய ரக்ஷணத் துக்குக் கடவனான அவன், 'இவனை நாம் ரக்ஷிக்கக்கடவோம்' என்று அபிமாநித்துக் கொள்ளுகையாகிற ஸ்வீகாரமே இவ னுக்கு ரக்ஷகமாயறுவது என்கை.

'சேதந ப்ரவ்ருத்தியில் ஒன்றையும் இவ்வுபாயம் ஸஹி யாது' என்னுமத்தைத் தெளிவிக்கைக்காக, உபாயாந்தரங் களுக்கும் இவ்வுபாயத்துக்கும் உண்டான விசேஷத்தை அருளிச்செய்கிறார் 'மற்றை' என்று தொடங்கி.

மூ. 232. மற்றை உபாயங்களுக்கு நிவ்ருத்திதோஷம், இதுக்கு ப்ரவ்ருத்தி தோஷம்.

வ்யா:—அதாவது-ஸித்தோபாயமான இத்தை யொழிந்த உபாயங்களுக்கு சேதநப்ரவ்ருத்தியாலே ஸ்வரூபஸித்தி ஆக வேண்டுகையாலே, இவனுடைய ஸ்வயத்நநிவ்ருத்தி தோஷ மாயிருக்கும்; இந்த உபாயத்துக்கு ஸஹாயாந்தரஸம்ஸர்க்கம் அஸஹ்யமாகையாலே, இச்சேதநனுடைய ப்ரவ்ருத்தி என்பது ஒன்றுமே தோஷமாயிருக்குமென்கை,

'சேதநவ்யாபாரம் ஒன்றும் வேண்டா?' என்னுமிடத் துக்கு ப்ரமாணங் காட்டுகிறார் 'சிற்றவேண்டா' என்று.

மூ. 233. "சிற்றவேண்டா."

வ்யா:–அதாவது-ஸித்தோபாய ஸ்வீகாரஞ் சொல்லுகிற * "மற்றொன்றில்லை" என்கிற பாட்டிலே, * 'சிற்றவேண்டா' என்று -'சிற்றுதல்- சிதறுதலாய், பரக்க ஒரு வ்யாபாரம் பண்ணவேண்டா' என்கையாலே, இவ்வுபாயத்தில் இழியு மவனுக்கு ஒரு வ்யாபாரம் பண்ணவேண்டா என்னுமிடஞ் சொல்லிற்றிறேயென்கை.

இதுதான் இஶ்லோகந் தனக்குள்ளே சொல்லிற்றென் கிறார், 'நிவ்ருத்தி கீழேசொல்லிற்று' என்று.

மூ. 234. நிவ்ருத்தி கீழே சொல்லிற்று.

வ்யா:-'ஸர்வதர்மாந் பரித்யஜ்ய' என்று, ஸகல ப்ரவ்ருத்தி யினுடையவும் நிவ்ருத்தியே இவனுக்கு வேண்டுவதென்னு மிடம் கீழே சொல்லிற்று என்கை.

'ஆனல், உபகாரஸ்ம்ருதிதான் வேணுமோ? அது உபா யத்தில் முதலிடாதோ?' என்ன, அருளிச்செய்கிறார் 'உபகார ஸ்ம்ருதியும்' என்றுதொடங்கி.

மூ. 235. உபகார ஸ்ம்ருதியும் சைதந்யத்தாலே வந்தது; உபாயத்தில் அந்தர்ப்பவியாது.

வ்யா:—அதாவது, † "என்னைத் தீமனங்கெடுத்தாய்" / "மருவித் தொழும்மனமே தந்தாய்" இத்யாதியாலே இவ் வுபாயவிஷயத்தில் இவன் பண்ணும் உபகாரஸ்ம்ருதியும் இவனுடைய சைதந்ய ப்ரயுக்தமாய் வந்ததித்தனை; இது உண்டாகையாலேயன்றே ஈஶ்வரன் கார்யஞ்செய்தது என்று உபாயத்தில் உட்புகாது என்கை. ஆக, சதுர்த்தபதார்த் தத்தை அருளிச்செய்தாராயிற்று.

இனி, பஞ்சமபதத்தை உபாதாநம் பண்ணுகிறார் 'ஶர ணம்' என்று. அதுக்கு அர்த்தம் அருளிச்செய்கிறார்' 'உபாய மாக' என்று.

---

* திருவாய் 9-1-7. † திருவாய் 2-7-8. / திருவாய் 2 7-7.

மூ. 236. சரணம்—உபாயமாக.

அர்த்தாந்தரங்களையுங் காட்டவற்றாயிருக்க, இவ்விடத்தில் இது உபாயத்தையே காட்டுகிறமையை ஸஹேதுகமாக அருளிச்செய்கிறார் 'இந்த ஶரண ஶப்தம்' என்று தொடங்கி.

மூ. 237. இந்த சரணசப்தம்-ரக்ஷிதாவையும் க்ருஹத்தையும் உபாயத்தையும் காட்டக்கடவதேயாகிலும் இவ்விடத்தில் உபாயத்தையே காட்டுகிறது; கீழோடே சேரவேண்டுகையாலே.

வ்யா:— *அதாவது-* *190.* **"उपाये गृहरक्षित्रोः शब्दः शरण - मित्ययं वर्तते"** **(உபாயே க்ருஹரக்ஷித்ரோஶ் ஶப்தஶ்ஶரண மித்யயம்-வர்த்ததே)** *என்கிறபடியே ஶரண ஶப்தமான இது-ரக்ஷிதாவையும் க்ருஹத்தையும் உபாயத்தையும் காட்டக்கடவதேயாகிலும்,* *190.* **" सांप्रतञ्चैष उपायार्थैकवाचकः "** **(ஸாம்ப்ரதம் சைஷ உபாயார்த்தைகவாசக:)** *என்கிறபடியே இந்த ஸ்தலத்திலே உபாயத்தையே காட்டுகிறது. ஸர்வதர்மங்களையும் விட்டுத் தன்னையேபற்றச் சொல்லுகிற ப்ரகரணமாகையால், கீழோடே சேரவேண்டுகையாலேயென்கை.*

'ஆனால், கீழ்ச்சொன்ன ஸாதநாந்தரபரித்யாகந்தானே ஸ்வீகார்ய வஸ்துவின் உபாயத்வத்தைத் தோற்றுவிக்குமதாயிருக்க, ஶரணஶப்தப்ரயோகந்தான் வேணுமோ?' என்னில், வேணும்; ப்ராபகஸமயத்திற்போலே ப்ராப்ய ஸமயத்திலும் நதீநிஸ்தரணாநந்தரத்தில் ப்லவபரித்யாகம் போலே ஸாதநாந்தர பரித்யாகம் ஸமாநமாகையாலே, தத்விசிஷ்டமேயாகிலும் ஸ்வீகாரமாத்ரம் வ்யவச்சேதகமாக மாட்டாமையாலே.

'அங்ஙனஞ் சொல்லலாமோ? இந்த உபாயாந்தரத்யாகம் ஸ்வீகாரத்துக்கு அங்கமாக விதிக்கப்படுகின்றதாகையாலே, ஸ்வீகாரத்தினுடைய உபாயத்வத்தைக் காட்டவற்றாகை

யால், ஶரணஶப்த ப்ரயோகத்துக்கு ப்ரயோஜநம் இல்லையே?' என்னில்; அப்படிச் சொல்லவொண்ணுது, ஆர்த்தமாக வரு மதிற்காட்டில் ஶாப்தமாகச் சொல்லுமது யுக்தம் ஆகை யாலே. 191. **"आक्षेपतः प्राप्तादभिधानिकस्यैव ग्राह्यत्वात्" (ஆக்ஷே பத: ப்ராப்தாத் ஆபிதாநிகஸ்யைவ க்ராஹ்யத்வாத்)** என்றிறே பாஷ்யகாரரும் அருளிச்செய்தது.

ஆக, உபாயவாசியான இந்த ஶரணஶப்தத்தாலே இவ் வஸ்துவுக்கு ப்ராப்யதயாஸ்வீகார்யத்வமும் ப்ராபகதயாஸ்வீ கார்யத்வமும் உண்டாகையாலே, அதில் ப்ராப்யதயா ஸ்வீகாரத்தை வ்யவச்சேதித்ததாயிற்று.

இனி, ஷஷ்டபதத்தை உபாதாநம்பண்ணுகிருர் 'வ்ரஜ' என்று. அதுக்கு அர்த்தம் அருளிச்செய்கிருர் 'புத்திபண்ணு என்று.

மூ. 238. வ்ரஜ–புத்திபண்ணு.

அது தன்னை விஶதீகரிக்கிருர் 'கத்யர்த்தமாவது' என்று தொடங்கி.

மூ. 239. கத்யர்த்தமாவது புத்த்யர்த்தமாய், அத்ய வஸியென்றபடி.

வ்யா:—அதாவது—'வ்ரஜகதௌ' என்கிற தாதுவிலே கத்யர்த்தமாய், 192. **"गत्यर्था बुद्ध्यर्थाः" (கத்யர்த்தா: புத்த் யர்த்தா:)** என்கிற ந்யாயத்தாலே, கத்யர்த்தமாவது புத்த் யர்த்தமாய், அத்யவஸியென்றபடியென்கை. "இந்தப் புத்தி யாகிறது த்யாஜ்யகோடியில் உத்தீர்ணமாய், உபாயகோடி யில் அநநுப்ரவிஷ்டமாய், ப்ராபகாந்தரபரித்யாக பூர்வகமாய் பகவத்ரக்ஷகத்வாநுமதிருபமாய், சைதந்யகார்யமாய், ப்ரார்த்தநாகர்ப்பமாய், பகவந்முகவிகாஸஹேதுவாய், ஸ்வ ரூபாநுரூபமாய், வ்யபிசாரவிளம்பவிதுரமாய் இருப்பதொரு அத்யவஸாயாத்மக ஜ்ஞாநவிஶேஷம்" என்று பரந்தபடியில் இவர் அருளிச்செய்த இது இவ்விடத்திலே அநுஸந்தேயம்.

'ஸாமாந்யேந கதிவாசியான இது, மாநஸவாசிககாயிக ரூபமான கதித்ரயத்தையும் காட்டவற்றாயிருக்க, மாநஸமான அத்யவஸாயமாத்ரத்திலே ஒதுக்குகிறதென்?' என்ன, அருளிச்செய்கிறார் 'வாசிக காயிகங்களும்' என்று தொடங்கி.

மூ. 240. வாசிக காயிகங்களும் இதுக்கு அபேக்ஷிதங்களாயிருக்கச் செய்தேயும், ஜ்ஞாநந் மோக்ஷமாகையாலே மாநஸமான அநுஷ்டாநத்தைச் சொல்லுகிறது.

வ்யா:—அதாவது, *"சிந்தையாலுஞ் சொல்லாலுஞ் செய்கையினாலும்" என்கிறபடியே கரணத்ரயத்தாலும் உண்டான ஸ்வீகாரம் அதிகாரபூர்த்திக்கு உடலாகையாலே வரணேக்திரூபமான வாசிகமும் அஞ்சல்யாதிரூபமான காயிகமும் இந்த ஸ்வீகாரத்துக்கு அபேக்ஷிதங்களாயிருக்கச்செய்தேயும், "ஜ்ஞாநாந்மோக்ஷ:" ஆகையாலே அவையிரண்டையுமொழிய, மாநஸமான அநுஷ்டாநமாத்ரத்தைச் சொல்லுகிறதென்கை. ஆக, ப்ரதிபதம் அர்த்தம் அருளிச்செய்தாராயிற்று.

இனி, பூர்வார்த்தத்தாற் சொல்லுகிற அர்த்தத்தை அநுவதித்து நிகமிக்கிறார் 'ஆக த்யாஜ்யத்தைச்சொல்லி' என்று தொடங்கி.

மூ. 241. ஆக, த்யாஜ்யத்தைச்சொல்லி, த்யாக ப்ரகாரத்தைச் சொல்லி, பற்றப்படும் உபாயத்தைச் சொல்லி, உபாயநைரபேக்ஷ்யஞ்சொல்லி, உபாயத்வஞ் சொல்லி, உபாயஸ்வீகாரம் சொல்லுகிறது.

வ்யா:—அதாவது—ஆக, பூர்வார்த்தத்தால் 'ஸர்வதர்மாந்' என்று த்யாஜ்யத்தைச் சொல்லி, 'பரித்யஜ்ய' என்று த்யாக ப்ரகாரத்தைச் சொல்லி, 'மாம்' என்று பற்றப்படும் உபாயத்தைச் சொல்லி, 'ஏகம்' என்று உபாய நைரபேக்ஷ்யஞ்

* திருவாய் 6-5-11.

சொல்லி, 'ஶரணம்' என்று உபாயத்வஞ்சொல்லி, 'வ்ரஜ' என்று உபாயஸ்வீகாரஞ் சொல்லுகிறது என்கை.

அநந்தரம், உத்தரார்த்தத்துக்கு அர்த்தம் அருளிச்செய்வதாகக்கோலி, அதில் ப்ரதமபதத்தை உபாதாநம் பண்ணுகிறார் 'அஹம்' என்று.

மூ. 242. அஹம்.

இவ்வுத்தரார்த்தத்தில் ஈஶ்வரன் செய்தருளுகிற அம்ஶத்தை அருளிச்செய்கிறார் 'ஸ்வக்ருத்யத்தை அருளிச் செய்கிறான்' என்று.

மூ. 243. ஸ்வக்ருத்யத்தை அருளிச்செய்கிறான்.

வ்யா:—*அதாவது-அதிகாரிக்ருத்யமிறே பூர்வார்த்தத்திற் சொல்லிற்று; உபாயபூதனை தன்னுடைய க்ருத்யத்தை அருளிச்செய்கிறது இதிலேயிறே.*

இனி, இப்பதத்துக்கு அர்த்தம் அருளிச்செய்கிறார் 'ஸர்வஜ்ஞனாய்' என்றுதொடங்கி.

மூ. 244. ஸர்வஜ்ஞனாய், ஸர்வஶக்தியாய், ப்ராப்தனை நான்.

வ்யா:—*அதாவது, 183.* **"यस्सर्वज्ञः सर्ववित्"** **(யஸ் ஸர்வஜ்ஞஸ் ஸர்வவித்)** *என்கிறபடியே ஸர்வத்தையும் அறியுமவனாய்,* **"परास्य शक्तिर्विविधैव श्रूयते"** **(பராஸ்ய ஶக்திர் விவிதைவ ஶ்ரூயதே)** *என்கிறபடியே எல்லா ஸாமர்த்யத்தையும் உடையனாய், ஶேஷியாகையாலே ப்ராப்தனாயிருக்கிற நான் என்கை.*

அல்லாத குணங்கள் எல்லாங்கிடக்க, இந்த குணவிஶேஷங்களை இவ்வஹம்ஶப்தம் காட்டுகிற இதுக்கு ப்ரயோஜநம் அருளிச்செய்கிறார், 'இவன் கீழ்நின்ற நிலையும்' என்று தொடங்கி.

மூ. 245. இவன் கீழ்நின்ற நிலையும் மேல் போக்கடியும் அறிகைக்கும் அறிந்தபடியே செய்து தலைக்கட்டுகைக்கும் ஏகாந்தமான குணவிசேஷங்களையும், தன் பேறுகச்செய்து தலைக்கட்டுகைக்கு ஈடான பந்தவிசேஷத்தையும் காட்டுகிறது.

வ்யா:—அதாவது—இச்சேதநனுக்கு அநிஷ்டநிவ்ருத்தி இஷ்டப்ராப்திகளைப் மண்ணுமளவில், இவன் பூர்வத்தில் நின்றநிலையும், மேல் போகத்தக்க வழியும் அறிகைக்கும், அறிந்தபடியே அவற்றைச்செய்து தலைக்கட்டுகைக்கும் தக்கவையாயிருந்துள்ள ஸர்வஜ்ஞத்வ ஸர்வஶக்தித்வங்களாகிற குணவிஶேஷங்களையும், இவன் கார்யஞ் செய்யுமிடத்தில் இவனுக்காக அன்றிக்கே தன்பேறுகச்செய்து தலைக்கட்டுகைக்கு ஈடான ஶேஷித்வரூப பந்தவிஶேஷத்தையும் ப்ரகாஶிப்பிக்கிறது என்கை. 'மாம்' என்கிற இடத்தில் ஆஶ்ரயணத்துக்கு ஏகாந்தமான குணவிஶேஷங்கள் ப்ரகாஶித்தாற்போலே, 'அஹம்' என்கிற இடத்திலும் கார்யகரத்வத்துக்கு ஏகாந்தமான குணவிஶேஷங்கள் ப்ரகாஶிக்குமிறே; வாத்ஸல்யாதிகள் இல்லாதபோது ஆஶ்ரயணங் கூடாதாபோலே. ஜ்ஞாநஶக்த்யாதிகள் இல்லாதபோது கார்யகரத்வம் கடியாமையாலே. இவ்விடத்தில் ஜ்ஞாநஶக்திகளும் ப்ராப்தியுஞ்சொன்ன இது, பூர்த்திக்கும் உபலக்ஷணம்.

இப்பதத்தில் 'மாம்' என்கிற இடத்தில், ஸாரதியாய் நின்ற பாரதந்த்ர்யத்துக்கு எதிர்த்தட்டான தன்ஸ்வாதந்த்ர்யத்தை ப்ரகாஶிப்பித்தமையை அருளிச்செய்கிறார், 'தனக்காகக் கொண்ட' என்றுதொடங்கி.

மூ. 246. தனக்காகக்கொண்ட ஸாரத்யவேஷத்தை அவனையிட்டுப் பாராதே தன்னையிட்டுப்பார்த்து, அஞ்சின அச்சந்தீரத்தானான தன்மையை 'அஹம்' என்று காட்டுகிறான்.

வ்யா:-அதாவது-'மாம்' என்று ஸாரத்யவேஷத்தோடே நிற்கிற தன்னைப் பற்றச் சொன்னபோது, அர்ஜுநன், தன்னுடைய ரக்ஷணார்த்தமாக ஏறிட்டுக்கொண்ட ஸாரத்ய வேஷத்தை 'ஸர்வாதிகனானவன் இப்படித் தாழநின்றது, தன் குணத்தாலேயிறே' என்று அவனையிட்டுப் பாராதே, 'நமக்கு இழிதொழில்செய்து ஸாரதியாய் நிற்கிறவனன்றோ?' என்று தன்னையிட்டுப்பார்த்து, 'ஸர்வதர்மங்களையும்விட்டு என்னைப்பற்று என்னாநின்றான்; இது என்னாகக் கடவது?' என்று அஞ்சின அச்சம்தீர, ஸ்வாதீந த்ரிவித சேதநாசேதந ஸ்வரூபஸ்த்திதி ப்ரவ்ருத்திகளையுக்கொண்டு நிரங்குஶஸ்வதந்த்ரனாயிருக்கிற தன்னுடைய யதாவஸ்த்தித வேஷத்தை 'அஹம்' என்று தர்ஶிப்பிக்கிறானென்கை.

ஏவம்பூதனானவன் பரதந்த்ரனானதும், தனக்கு ஸ்வரூபமாய்ச்செய்ததன்று என்னுமிடத்தை அருளிச்செய்கிறார், 'கீழில்' என்று தொடங்கி.

மூ. 247. கீழில் பாரதந்த்ர்யமும் இந்த ஸ்வாதந்த்ர்யத்தினுடைய எல்லைநிலமிறே.

வ்யா:—அதாவது, கீழ், ஸாரதியாய்நின்ற பாரதந்த்ர்யமும், நினைத்தது செய்யுமளவில் தனக்கொரு நிவாரகரில்லாதபடியான இந்த ஸ்வாதந்த்ர்யத்தினுடைய ஸீமாபூமியிறே என்கை.

அநந்தரம், த்விதீயபதத்தை உபாதாநம் பண்ணுகிறார் 'த்வா' என்று. அதுக்கு அர்த்தம் அருளிச்செய்கிறார் 'அஜ்ஞனாய்' என்று தொடங்கி.

மூ. 248. த்வா-அஜ்ஞனாய், அஶக்தனாய், அப்ராப்தனாய், என்னையே உபாயமாகப் பற்றியிருக்கிற உன்னை.

வ்யா:— அதாவது-உன்கார்யங்கள் அறிகைக்குத் தக்க ஜ்ஞாநமில்லாதவனாய், அறிந்தாலும் செய்து தலைக்கட்டிக் கொள்ளுகைக்கு ஶக்தியில்லாதவனாய், அதுதான் உண்டானாலும் உன்னுடைய ரக்ஷணத்தில் உனக்கு ப்ராப்தியில்லாதவனாய், இப்படியிருக்கையாலே ஸர்வதர்மங்களையும் விட்டு என்னையே நிரபேக்ஷ உபாயமாகப் பரிக்ரஹித்திருக்கிற உன்னை யென்கை.

அநந்தரம், த்ருதீயபதத்தை உபாதாநம் பண்ணுகிறார் 'ஸர்வபாபேப்ய:' என்று. இதுவும்-பாபமும் பஹுவசநமும் ஸர்வஶப்தமுமாய் த்ரிப்ரகாரமாய் இருக்கையாலே, இம்மூன்றையும் உட்கொண்டு இப்பதத்துக்கு அர்த்தம் அருளிச்செய்கிறார் 'மத் ப்ராப்திப்ரதிபந்தகங்கள்' என்றுதொடங்கி.

மூ. 249. ஸர்வபாபேப்ய:-மத் ப்ராப்தி ப்ரதிபந்தகங்கள் என்று யாவையாவை சிலபாபங்களைக் குறித்து அஞ்சுகிறாய், அவ்வோபாபங்கள் எல்லாவற்றில் நின்றும்.

வ்யா:— அதாவது – பாபமாகிறது–இஷ்டவிரோதியாயும் அநிஷ்டஹேதுவாயும் இருக்குமதாகையாலும், மோக்ஷப்ரகரணமாகையாலே இவ்விடத்தில் இஷ்டவிரோதிகளாகிறன பகவல்லாப விரோதிகளாகையாலும், அதில் ஜ்ஞாநவிரோதியும் ருசிவிரோதியும் உபாயவிரோதியும் பண்டேநிவ்ருத்தமாகையாலும், இனி உள்ளது ப்ராப்திவிரோதியாகையாலே நீ என்னை ப்ராபிக்கைக்கு ப்ரதிபந்தகங்கள் என்று யாவை யாவை சிலபாபங்களை உத்தேசித்துப் பயப்படுகிறாய், அந்த அந்தப் பாபங்களெல்லாவற்றில் நின்றுமென்கை.

அதில் பஹுவசந விவக்ஷிதங்களை அருளிச்செய்கிறார் "பொய்ந்நின்ற ஞானமும் பொல்லாவொழுக்கும்" என்று தொடங்கி.

மூ. 250. "பொய்ந்நின்ற ஞானமும் பொல்லா வொழுக்கும் அழுக்குடம்பும்" என்கிறபடியே அவித்யா கர்ம வாஸநா ருசி ப்ரக்ருதி ஸம்பந்தங்களைச் சொல்லு கிறது.

வ்யா:—அதாவது- * "பொய்ந்நின்ற ஞானமும் பொல்லா வொழுக்கும் அழுக்குடம்பும்" என்று 'உத்பத்தி விநாசாதி யோகத்தாலே அஸத்ய சப்தவாச்யமான அசேதநவிஷயத்தில் ஆத்ம ஜ்ஞாநமும், அந்தத்தேஹாத்மாபிமாந மடியான ஸாம்ஸாரிகதுஷ்கர்ம ப்ரவ்ருத்தியும், அந்தக் கர்மமடியாக வரக்கடவதான மாம்ஸ அஸ்ருகாதி மலரூப தேஹஸம்பந்தமும்' என்று சொல்லுகிறபடியே அவித்யையும் கர்மமும் வாஸனையும் ருசியும் ப்ரக்ருதி ஸம்பந்தமுமாகிற அவற்றைச் சொல்லுகிறது என்கை. இவற்றில், அவித்யையாவது- ஜ்ஞாநாநுதய ரூபமாயும் அந்யதா ஜ்ஞாநரூபமாயும் விபரீதஜ்ஞாநரூபமாயும் மூன்றுவகைப்பட்ட அஜ்ஞாநம். கர்மமாவது-புண்யபாபம்; மோக்ஷத்தைப்பற்ற, பாபத்தோபாதி புண்யமும் த்யாஜ்யமாம்; 195 **"पुण्यपापे विधूय" (புண்யபாபே விதூய)** என்னக்கடவதிறே. வாஸனையாவது-அஜ்ஞாந வாஸனையும், கர்மவாஸனையும், ப்ரக்ருதிஸம்பந்த வாஸனையும். ருசியும்-விஷயபேதத்தாலே பஹுவிதையாயிருக்கும். ப்ரக்ருதி ஸம்பந்தமாவது-ஸ்தூலஸூக்ஷ்மரூபமாயிருந்துள்ள அசித் ஸம்பந்தம்.

இனி, ஸர்வசப்த விவக்ஷிதத்தை அருளிச்செய்கிறார் 'த்ருணச்சேத' இத்யாதியாலே;

மூ. 251. த்ருணச்சேத கண்டூயநாதிகளைப்போலே ப்ரக்ருதிவாஸனையாலே அநுவர்த்திக்குமவையென்ன, லோகாபவாத பீதியாலும், கருணையாலும், கலக்கத்தாலும் செய்யுமவையென்ன, எல்லாவற்றையும் நினைக்கிறது.

---
* திருவிருத்தம்-1.

வ்யா:—அதாவது-துரும்பு நறுக்குகை, தினவுதின்றவிடம் சொறிகை தொடக்கமானவைபோலே அபுத்திபூர்வகமாக ப்ரக்ருதி வாஸனையாலே அநுவர்த்திக்கும் உத்தராகங்களென்ன; நாம் இவற்றைச் செய்யாதபோது 'லோகம் நம்மை அபவாதஞ் சொல்லுமே' என்கிற பயத்தாலும் 'நம்மைக் கண்டு லௌகிகர் இவற்றைத் தவிருவர்களாகில் அவர்களுக்கு விநாஶமாமே; ஐயோ!' என்கிற க்ருபையாலுஞ் செய்யும் நித்ய நைமித்திக கர்மங்களென்ன; ரஜஸ்தமஸ்ஸுக்களாலே கலங்கி த்யக்த உபாயங்களிலே அந்வயித்தல் புந: ப்ரபத்திபண்ணுதல் செய்யுமவையென்ன; எல்லாவற்றையும் நினைக்கிறது என்கை.

'ஸாதநபுத்யா செய்யாதவையும் வஸ்துகத்யா ஸாதந கோடியிலே அந்வயிக்கும்' என்னுமத்தை ஶங்காபூர்வகமாக அருளிச்செய்கிறார் 'உந்மத்த' இத்யாதியாலே.

மூ. 252. 'உந்மத்த ப்ரவ்ருத்திக்கு க்ராமப்ராப்தி போலே த்யஜித்த உபாயங்களிலே இவை அந்விதங்களாமோ?' என்று நினைக்கவேண்டா.

வ்யா:—அதாவது- 196 **"उन्मादश्चित्तविभ्रमः" (உந்மாதஶ் சித்த விப்ரம:)** என்கிறபடியே சித்தவிப்ரமம் பிறந்தானொருவன், 'இன்னவூருக்குப் போகிறோம்' என்கிற நினைவு இன்றிக்கே ஒருவழியே போகாநின்றால், அவ்வழிக்கு ஊரோடே ஸம்பந்தமுண்டாயிருக்கையாலே அவ்வூரிலேசென்று சேருமாபோலே, ஸாதநபுத்திரஹிதமாக லோகாபவாத பீத்யாதிகளாலே செய்யப்படுகிற இவை-விட்ட உபாயங்களிலே அந்விதங்களாமோவென்று நினைக்கவேண்டா; அந்விதங்களாயே விடுமென்றபடி. "ஆந்ருஶம்ஸ்ய ப்ரதாநராய் அநுஷ்டித்தாலும், ஏறிட்ட கட்டி ஆகாஶத்திலே நில்லாதாபோலே, அவையும் ஒரு பலத்தோடே ஸந்திப்பிக்கக்கடவது; ஆகையாலே, அவையும் பாபஶப்தவாச்யமாகக் கடவது" என்றிறே தனிசரமத்தில் இவர்தாமே அருளிச்செய்தது.

'அதுதானேயாகிறது:-புந:ப்ரபத்திக்கு தோஷம் எது?' என்ன அருளிச்செய்கிறூர் 'கலங்கி' என்றுதொடங்கி.

மூ. 253. கலங்கி உபாயபுத்த்யா பண்ணும் ப்ரபத்தியும் பாதகத்தோடு ஒக்கும்.

வ்யா:-அதாவது-ஸக்ருத் அநுஷ்டாநமொழியப் புநரநுஷ்டாநத்தை ஸஹியாத ப்ரபத்தி ஸ்வபாவத்தை அறியாதே கலங்கி அநிஷ்ட நிவ்ருத்திக்காகவாதல் இஷ்டப்ராப்திக்காகவாதல் உபாயபுத்த்யா மீண்டு பண்ணும் ப்ரபத்தியும் 197 **"अथपातकभीतस्त्वं" (அதபாதக பீதஸ்த்வம்)** என்று உபாயாந்தரம்போலே பாதகஸமமென்கை.

அநந்தரம், சதுர்த்தபதத்தை உபாதாநம் பண்ணுகிறூர் 'மோக்ஷயிஷ்யாமி' என்று. அதுக்கு அர்த்தம் அருளிச்செய்கிறூர் 'முக்தனும்படி பண்ணக்கடவேன்' என்று.

மூ. 254. மோக்ஷயிஷ்யாமி—முக்தனும்படி பண்ணக் கடவேன்.

வ்யா:—அதாவது-இவற்றில் நின்றும் விடப்பட்டவனும்படி பண்ணக்கடவேனென்கை.

இனி, ணிஜர்த்தத்தை அருளிச்செய்கிறூர் 'ணிச்சாலே' என்றுதொடங்கி.

மூ. 255. ணிச்சாலே நானும் வேண்டா, நீயும் வேண்டா, அவை தன்னடையே விட்டுப்போங்காணென்கிறுன்.

வ்யா:–அதாவது-"யிஷ்யாமி" என்கிற ணிச்சாலே ஸ்வயம்கர்த்தாவாகையன்றிக்கே தான் ப்ரயோஜககர்த்தாவாய் விடுவிக்கக்கடவேனென்கையாலே, நானும் இதுக்கு ஒரு யத்நம் பண்ணவேண்டா, நீயும் இதுக்கு ப்ரார்த்திக்க வேண்டா; நீ என்னை ஆஶ்ரயித்த ராஜகுல மாஹாத்ம்யத்

தாலே உன்னைக்கண்டு தாமே பயப்பட்டு, * "காணேவொருங் கிற்றுக் கண்டிலமால்" என்கிறபடியே போனவழி தெரியாதபடி தன் நடையேவிட்டுப் போங்காணென்று அருளிச் செய்கிறனென்கை.

இப்படி அருளிச்செய்ததன் கருத்தை வெளியிடுகிறார் 'என்னுடைய' என்று தொடங்கி.

மூ. 256. என்னுடைய நிக்ரஹபலமாய் வந்தவை நானிரங்கினால் கிடக்குமோ என்கை.

வ்யா:—அதாவது-பாபங்களாகிறன, குப்பையில் ஆமணக்குப்போலே யெழுந்து, பாம்புபோலே மிடற்றைப் பிடிப்ப தொன்றன்றிறே; சேதநன் பண்ணின கர்மங்கள் க்ஷணத்வம்ஸிகளாகையாலே, அப்போதே நசித்துப்போம்; அஜ்ஞனாகையாலே கர்த்தாவான இவனும் மறந்துபோக, ஸ்வதஸ்ஸர்வஜ்ஞனாய் ஒன்றொழியாமல் உணர்ந்திருந்து ப்ராப்தகாலங்களிலே தப்பாமல் நிறுத்து அநுபவிப்பிக்கிற என்னுடைய நிக்ரஹரூப மாகையாலே, அந்த நிக்ரஹ பலமாய் வந்தவை, நிக்ரஹத்துக்கு ப்ரதிகோடியான அநுக்ரஹத்தை நான் பண்ணினால் அவ்விஷயத்திற்பின்னை கிடக்குமோ? என்கை இதுக்குக்கருத்து என்றபடி.

தன்னடையே விட்டுப்போம் என்கிற இடத்தில் அபிப்ரேதத்தை அருளிச்செய்கிறார் 'அநாதிகாலம்' என்றுதொடங்கி.

மூ. 257. அநாதிகாலம் பாபங்களைக்கண்டு நீ பட்ட பாட்டை அவைதாம் படும்படி பண்ணுகிறேன்.

வ்யா:—அதாவது, அநாதியான காலமெல்லாம் து:காவஹமான பாபங்கள் வந்து மேலிடப்புக்கால், அவற்றைக் கண்டு நீ நடுங்கின நடுக்கமெல்லாம் மதாஶ்ரயண ராஜகுல

* பெரியதிருவ-54.

மாஹாத்ம்யமுடைய உன்னைக்கண்டு அவைதான் குடல் கரிந்து நடுங்கும்படி பண்ணக்கடவேன் என்கை. "அவை தானே விட்டுப்போம்படி பண்ணுகையாவது, இவை நமக்குமுன்பு உண்டாய்க் கழிந்தது என்று தோற்றுபடி போக்குகை; அதாகிறது, இவை ஸ்ம்ருதிவிஷயமானாலும் தன்னுடைய ஸ்வாபாவிக வேஷத்தைப்பார்த்து ஸ்வப்நங் கண்டாற்போலே இவை நமக்கு வந்தேறியாய்க் கழிந்த தென்றிருக்கையும், ஸ்ம்ருதியாலே துக்கம் அநுவர்த்தியா திருக்கையும்" என்று தனிசரமத்தில் இவர்தாமே அருளிச் செய்தது இவ்விடத்தில் அநுஸந்தேயம்.

"மோக்ஷயிஷ்யாமி" என்கிற உத்தமனில் அபிப்ரேதமான ஒரர்த்த விசேஷத்தை அருளிச்செய்கிறார், இனி என்று தொடங்கி.

மூ. 258. இனி உன்கையிலும் உன்னைக்காட்டித் தாரேன். என்னுடம்பிலழுக்கை நானே போக்கிக் கொள்ளேனோ?

வ்யா:—இத்தனை காலமும் 'நம் கார்யத்துக்கு நாம் கட வோம்' என்று நீ திரிகையாலே, தன் கார்யம் தானே செய்துகொள்ளுகிறானென்றிருந்த இத்தனை போக்கி, 'எனக்கு நீ சரீரதயாசேஷம்' என்று அறிந்து என்பக்கலிலே ந்யஸ்த பரனான பின்பு உன்னுடைய பாபவிமோசநார்த்தமான யத்நம் நீ பண்ணிக்கொள்ளென்று உன்கையிலும் உன்னைக் காட்டித்தாரேன்; எனக்கு சரீரபூதனான உன்னுடைய அவித்யாரூபமாலிந்யத்தை சரீரியான நானே போக்கிக் கொள்ளேனோ என்கை. என்னுடம்பிலழுக்கை நானே போக்கிக் கொள்ளேனோ என்றது, யத்நபலித்வங்கள் இரண்டும் தன்னதென்று தோற்றுகைக்காக. ஆகையால், உன்னுடைய விரோதியில் கிடப்பதொன்றில்லை என்றபடி. "விரோதி நிவ்ருத்தியும், அபிமதப்ராப்தியும் இரண் டும் பலமாயிருக்க ஒன்றைச் சொல்லுவானென்னென்னில்,

ஒன்றைச்சொன்னால் மற்றையது தன்னடையே வருகை யாலே சொல்லிற்றில்லை; 198 **"मामेवैष्यसि"** (**மாமேவைஷ்யஸி**) *என்று, கீழில் உபாயத்துக்குச்சொன்ன பலமொழிய இவ் வுபாயத்துக்கு வேறுபலம் இல்லாமையாலே சொல்லிற் றில்லை என்னவுமாம்; ஆனால், விரோதிநிவ்ருத்தி தன்னைச் சொல்லுவானென்? என்னில்,—அது அதிகமாகையாலே சொல்லிற்று. விரோதி நிவ்ருத்தி பிறந்தால் பலம் ஸ்வதஸ் ஸித்தமாயிருக்கையாலே, தனித்துச் சொல்ல வேண்டா விறே" என்று ஸங்க்ரஹேண ஸ்ரிய:பதிப்படி ரஹஸ்யத்திலும் விஸ்தரேண பரந்தபடி தனிசரமங்களிலும் அருளிச்செய்த ஶங்காபரிஹாரங்கள் இவ்விடத்திலே அநுஸந்தேயம்.*

அநந்தரம், சரமபதத்தை உபாதாநம் பண்ணுகிறார் 'மாஶுச:' என்று. அதுக்கு அர்த்தம் அருளிச்செய்கிறார், 'நீ உன்கார்யத்திலே' என்று தொடங்கி.

மூ. 259. மாசுச:– 'நீ உன்கார்யத்திலே அதிகரி யாமையாலும், நான் உன்கார்யத்திலே அதிகரித்துக் கொண்டு போருகையாலும். உனக்கு சோகநிமித்தம் இல்லைகாண்' என்று அவனுடைய சோகநிவ்ருத்தி யைப் பண்ணிக்கொடுக்கிறான்.

வ்யா:—*அதாவது-'நீ உன்கார்யத்திலே அதிகரித்து நின்றாயாகில், 'நம்கார்யத்துக்கு என்செய்வோம்?' என்று கரைந்து ஶோகிக்க ப்ராப்தம்; நான் உன்கார்யத்திலே அதிகரியாதிருந்தேனாகில், 'நம்கார்யத்தில் இவன் உதா ஸீநனாயிரா நின்றான்; நாம் எங்ஙனே உஜ்ஜீவிக்கப் போகி றோம்?' என்று ஶோகிக்க ப்ராப்தம்; இங்ஙன் அன்றிக்கே யத்நபலித்வங்கள் இரண்டும் உனக்கு இல்லாதபடியான ஸ்வரூபபாரதந்த்ர்யத்தை உணர்ந்து, நீ உன்னுடைய ரக்ஷண கார்யத்திலே அதிகரியாதொழிகையாலும், உன்னுடைய ரக்ஷணத்தில் யத்நபலித்வங்கள் இரண்டும் என்னதாம்படி*

ஸ்வாமியான நான் உன் பக்கத்தில் தடையறுக்கையாலே உன்னுடைய ரக்ஷணகார்யத்திலே அதிகரித்துக்கொண்டு போருகையாலும், உனக்கு ஶோகிக்கைக்கு நிமித்தம் இல்லை காண்' என்று முன்பு ஶோகாவிஷ்டனாய் நின்ற அவனுடைய ஶோகத்தினுடைய நிவ்ருத்தியைப் பண்ணிக் கொடுகிறா னென்கை.

இத்தால், 'அஹம் த்வா' என்கிற பதங்களாலே சொல்லப்பட்ட ரக்ஷகரக்ஷ்யபூதரான இருவருடைய ஸ்வபாவத்தையும் அநுவதித்துக்கொண்டு ஶோகாபநோதநம் பண்ணின படியை அருளிச்செய்தாராயிற்று.

இனிமேல், நிவர்த்தகனான தன்னுடையவும் நிவர்த்யங்களான பாபங்களினுடையவும் ஸ்வபாவங்களைச் சொல்லி, ஶோகாபநோதநம் பண்ணினபடியை அருளிச்செய்கிறார் 'நிவர்த்தக ஸ்வரூபத்தை' என்றுதொடங்கி.

மூ. 260. நிவர்த்தக ஸ்வரூபத்தைச் சொல்லி, நிவர்த்யங்கள் உன்னை வந்து மேலிடாதென்று சொல்லி, உனக்கு சோகநிமித்தம் இல்லைகாண் என்கிறான்.

வ்யா:—அதாவது—"அஹம்" என்று ஸர்வஜ்ஞத்வாதி குணவிஶிஷ்டனாய்க்கொண்டு விரோதி நிவர்த்தகனாயிருக்கிற தன் ஸ்வரூபத்தைச் சொல்லி, "த்வா ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி" என்று நிச்சால் நிவர்த்யங்களான பாபங்கள் உன்னைக்கண்டு தானே அஞ்சி ஓடிப்போமொழிய, என்னையே உபாயமாக ஸ்வீகரித்திருக்கிற உன்னை வந்து மேலிடாது என்னுமிடம்சொல்லி, அநந்தரம் "மாஶுச:" என்கையாலே 'இப்படியானபின்பு உனக்கு ஶோகிக்க நிமித்தமில்லை' என்கிறானென்கை.

இத்தலையில் விரோதியைப் போக்குகைக்குத் தான் ஒருப்பட்டு நிற்கிறபடியை அறிவித்து, இவனுடைய

ஶோகத்தைப் போக்குகிறமையை அபியுக்தோக்தியை நிதர்ஶநமாக்கிக்கொண்டு அருளிச்செய்கிறார் 'எத்திறல்' என்று தொடங்கி.

மூ. 261. *'எத்திறலிடர்க்கடற்கிடத்தியேழை நெஞ்சமே' என்கிறான்.

வ்யா:—அதாவது—திருமழிசைப்பிரான் தம்முடைய திருவுள்ளத்தைக்குறித்து, ஸர்வேஶ்வரன் இத்தலையில் விரோதியைப்போக்கி அடிமைகொள்வதாக ஏன்று கொடுவந்து புகுந்திருக்கிறபடியைச்சொல்லி, 'இனி எதுக்காக நீ து:க்க ஸாகரத்திலே அழுந்துகிறாய்?' என்றாற்போலே, ஈஶ்வரனும் இப்போது இத்தலையில் ஸகலபாபங்களையும் போக்குவதாகத் தானே ஏறிட்டுக்கொண்டமையை அறிவித்து, 'இனி எதுக்காக ஶோகிக்கிறாய்?' என்று இவனைக்குறித்து அருளிச்செய்கிறானென்கை.

இனி, இவனுடைய ஶோகம் மறுவலிடாமல் போக்குகைக்கு உறுப்பானதொரு பகவதபிப்ராய விஶேஷத்தை அருளிச்செய்கிறார் 'பாபங்களை நான் பொறுத்து' என்றுதொடங்கி.

மூ. 262. பாபங்களை நான் பொறுத்துப் புண்யமென்று நினைப்பிடாநிற்க, நீ சோகிக்கக்கடவையோ?

வ்யா:—அதாவது—நீ செய்த பாபங்களை நான் முந்துற என்னுடைய க்ஷமாவிஷயமாக்கி, அவ்வளவுமன்றிக்கே பின்னை உன்பக்கல் எனக்கு உண்டான வாத்ஸல்யத்தாலே † "செய்த குற்றம் நற்றமாகவேகொள்" || "செய்தாரேல் நன்றுசெய்தார்" என்கிறபடியே அவைதன்னைப் பாபமாக நினையாதே புண்யமென்று நினைப்பிடாநிற்க, இனி நீ ஶோகிக்கக்கடவையோ என்கை.

---

*திருச்சந்த-115. † திருச்சந்த-111. || பெரியாழ்திரு 4-9-2.

ஆக, இவ்வுத்தரார்த்தத்தில் அஞ்சுபதத்தாலும்–நிவர்த்தக ஸ்வரூபத்தையும், நிவர்த்யாஶ்ரயத்தையும், நிவர்த்யங்களான பாபங்களையும், அவற்றினுடைய நிவ்ருத்தி ப்ரகாரத்தையும், தத்கார்யமான ஶோகநிவ்ருத்தியையும் சொல்லிற்றாயிற்று.

இனி, இந்த ஶ்லோகார்த்தத்தில் ருசி ஒருவனுக்கு உண்டாகையில் உள்ள அருமையையும், இந்த ஶ்லோகந்தனக்கு இன்னதிலே நோக்கு என்னுமத்தையும், இதில் விஶ்வாஸோத்பத்தியின் அருமையையும், ஈஶ்வரன்தான் முதலிலேஇத்தை உபதேஶியாமைக்கு ஹேதுவையும், வேதபுருஷன் உபாயாந்தரங்களை விதிக்கைக்கு ஹேதுவையும், உபாயாந்தரங்களை ஸ்வரூபேண த்யஜிக்குமளவில் தோஷமில்லை என்னுமத்தையும், அவைதான் முகாந்தரேண அந்விதங்கள் ஆகையாலே ஸ்வரூபேண த்யக்தங்கள் அன்று என்னுமிடத்தையும், பேற்றுக்கு ஸாதநம் இன்னது என்னுமத்தையும், பலஸித்திக்கு இவன்பக்கல் வேண்டும் அம்ஶத்தையும், ஈஶ்வரனுக்கு இவனுடைய ஸாக்ருதம் அநிஷ்டம் என்னுமத்தையும், இவ்வர்த்தத்தில் ஆஸ்திக்யாதிகள் உண்டாய்ப் பிழைத்தல் இல்லையாகில் நஶித்தலித்தனை என்னுமத்தையும், வ்யவஸாயஹீநன் இதில் அந்வயித்தால் விநாஶபர்யந்தமாம் என்னுமத்தையும், இதுக்கு அதிகாரிகள் இன்னார் என்னுமத்தையும் அடைவே அருளிச்செய்து தலைக்கட்டுகிறார்.

அவற்றில் ப்ரதமத்தில் இதில் ஒருவனுக்கு ருசிபிறக்கையில் உள்ள அருமையைத் தர்ஶிப்பிக்கைக்காக ஓர் ஐதிஹ்யத்தை அருளிச்செய்கிறார் 'உய்யக்கொண்டார் விஷயமாக' என்று தொடங்கி.

மூ. 263. உய்யக்கொண்டார் விஷயமாக உடையவர் அருளிச்செய்த வார்த்தையை ஸ்மரிப்பது.

வ்யா:—அதாவது-தத்த்வநிர்ணயம் பண்ணின உய்யக்கொண்டார் பக்திநிஷ்டராயிருக்கையாலே, அவரை ப்ரபத்தி நிஷ்டராம்படி பண்ணவேணுமென்று, அவருக்கு இந்த ஶ்லோகார்த்தத்தை அருளிச்செய்த அளவிலே, 'அர்த்தஸ்திதி அழகிதாயிருந்தது; ஆகிலும், அத்தைவிட்டு இத்தைப் பற்றத்தக்க ருசி எனக்கு இல்லை' என்ன, "வித்வானுகையாலே அர்த்தத்துக்கு இசைந்தாய்; பகவத்ப்ரஸாதம் இல்லாமையாலே ருசி பிறந்ததில்லை" என்று அவர் விஷயமாக உடையவர் அருளிச்செய்த வார்த்தையை நினைப்பது என்கை.

இனி, இந்த ஶ்லோகத்துக்கு இன்னதிலே நோக்கு என்னுமத்தை அருளிச்செய்கிறார் 'இதுக்கு ஈஶ்வர ஸ்வாதந்த்ர்யத்திலே நோக்கு' என்று.

மூ. 264. இதுக்கு ஈச்வர ஸ்வாதந்த்ர்யத்திலே நோக்கு.

வ்யா:—அதாவது—ஶாஸ்த்ரங்களெல்லாம் ஒருதலையும், தான் ஒருதலையுமாயிருக்கிற இந்த ஶ்லோகத்துக்கு ஶாஸ்த்ர விஹிதமான ஸகலதர்மங்களையும் ஸவாஸநமாக விடுவித்து, இச்சேதநனுக்குத் தானே நிரபேக்ஷ ஸாதநமாய், ப்ராப்தி ப்ரதிபந்தக ஸகலபாபங்களையும் தள்ளிப்புகட்டு, ஸ்வ ப்ராப்தியைப் பண்ணிக்கொடுக்கும் ஸ்வாதீந ஸகலப்ரவர்த்தகனை ஈஶ்வரனுடைய ஸ்வாதந்த்ர்யத்திலே தாத்பர்யமென்கை.

இனி, இதில் விஶ்வாஸோத்பத்தியில் அருமையை அருளிச்செய்கிறார் 'இதுதான்' என்றுதொடங்கி.

மூ. 265. "இதுதான் அநுவாதகோடியிலே" என்று வங்கிப்புரத்துநம்பி வார்த்தை.

வ்யா:—அதாவது-இந்த ஶ்லோகார்த்தந்தான் அநுவாதத்தினுடைய கோடியிலே என்று ஆப்ததமரான வங்கிப்புரத்து நம்பி அருளிச்செய்யும் வார்த்தையென்கை.

'அது எத்தாலே' என்ன அருளிச்செய்கிறார் 'அர்ஜுநன்' என்று தொடங்கி.

மூ. 266. அர்ஜ்ஜுநன், க்ருஷ்ணனுடைய ஆனைத் தொழில்களாலும், ருஷிகள் வாக்யங்களாலும், க்ருஷ்ணன் தன்கார்யத்திலே அதிகரித்துக்கொண்டு போருகையாலும், இவனே நமக்குத் தஞ்சமென்று துணிந்த பின்பு தன்னைப்பற்றச் சொல்லுகையாலே.

வ்யா:—*அதாவது-இதுக்கு அதிகாரியான அர்ஜுநன் பால்யமே தொடங்கி க்ருஷ்ணனுடைய அகடிதகடநா ஸாமர்த்ய ப்ரகாசகமான அதிமாநுஷ சேஷ்டிதங்களாலும், 199* **"एष नारायणः श्रीमान् क्षीरार्णवनिकेतनः। नागपर्यङ्कमुत्सृज्य ह्यागतो मथुरां पुरीम्॥"** (ஏஷ நாராயண: ஸ்ரீமாந் க்ஷீரார்ணவ நிகேதந: நாகபர்யங்கமுத்ஸ்ருஜ்ய ஹ்யாகதோ மதுராம் புரீம்) *200* **"पुण्या द्वारवती यत्र तत्रास्ते मधुसूदनः। साक्षाद्देवः पुराणोऽसौ स हि धर्मः सनातनः॥"** (புண்யா த்வாரவதீ யத்ர தத்ராஸ்தே மதுஸூதந: ஸாக்ஷாத்தேவ: புராணோஸௌ ஸஹி தர்மஸ் ஸநாதந:) *201* **"यत्र नारायणो देवः परमात्मा सनातनः। तत्र कृत्स्नं जगत्पार्थ तीर्थान्यायतनानि च॥"** (யத்ர நாராயணோ தேவ: பரமாத்மா ஸநாதந: தத்ர க்ருத்ஸ்நம் ஜகத் பார்த்த தீர்த்தாந்யாயதநாநி ச) *202* **"ये च वेदविदो विप्राः ये चाध्यात्मविदो जनाः। ते वदन्ति महात्मानं कृष्णं धर्मं सनातनम्॥"** (யே ச வேதவிதோ விப்ரா: யே சாத்யாத்மவிதோஜநா: தே வதந்தி மஹாத்மாநம் க்ருஷ்ணம் தர்மம் ஸநாதநம்) *203* **"पवित्राणां हि गोविन्दः पवित्रं परमुच्यते। पुण्यानामपि पुण्योऽसौ मङ्गलानाञ्च मङ्गलम्॥"** (பவித்ராணாம் ஹி கோவிந்த: பவித்ரம் பரமுச்யதே புண்யாநாமபி புண்யோஸௌ மங்களாநாஞ்ச மங்களம்) *204* **"कृष्ण एव हि लोकानामुत्पत्तिरपि चाप्ययः। कृष्णस्य हि कृते भूतमिदं विश्वं चराचरम्॥"** (க்ருஷ்ண ஏவ ஹி லோகாநாமுத்பத்திரபி சாப்யய:। க்ருஷ்ணஸ்ய ஹி க்ருதே பூதம் இதம் விஶ்வம் சராசரம்) *என்றும் இத்யாதிகளாயிருந்துள்ள பராவரதத்த்வயாதாத்ம்ய வித்துக்களான ருஷிகள்*

வாக்யங்களாலும், பால்யாத்ப்ரப்ருதி புரவாஸதசையோடு வநவாஸதசையோடு வாசியற க்ருஷ்ணன் தன் கார்யத்துக்குக் கடவனாய் நோக்கிக்கொண்டுபோருகையாலும், 'இவன் சொல்லுகிற உபாயங்கள் எல்லாம் நமக்குத் தஞ்சமன்று; இவனே நமக்குத் தஞ்சம்' என்று விஸ்வஸித்த பின்பு 'ஆனால் என்னைப்பற்று' என்று சொல்லுகையாலே யென்கை.

இது தன்னை முதலிலே உபதேஶியாமைக்கு ஹேதுவை அருளிச்செய்கிறார் 'புறம்பு' என்று தொடங்கி.

மூ. 267. புறம்பு பிறந்தது எல்லாம், இவன் நெஞ்சைச் சோதிக்கைக்காக.

வ்யா:-அதாவது-205 "**यच्छ्रेयः स्यान्निश्चितं ब्रूहि तन्मे शिष्यस्तेऽहं शाधि मां त्वां प्रपन्नम्॥**" (**யச்ச்ரேய: ஸ்யாந் நிஶ்சிதம் ப்ருஹி தந்மே ஶிஷ்யஸ்தேஹம் ஶாதி மாம் த்வாம் ப்ரபந்நம்**) என்ற இவனுக்கு உபாயோபதேஶம்பண்ணத் தொடங்குகிறவளவிலே முதலிலே இத்தை உபதேசியாதே உபாயாந்தரங்களைப் பரக்க நின்று உபதேசித்தது எல்லாம், 'அவ்வளவிலே பர்யவஸித்துவிடுமோ? அவற்றினுடைய தோஷதர்ஶநத்தாலே இவ்வுபாயோபதேஶத்துக்கு அதிகாரியாமோ?' என்று இவனுடைய ஹ்ருதயத்தைச் சோதிக்கைக்காக வென்கை.

'ஆனால், இவனன்றோ இப்படி ஹ்ருதய ஶோதநார்த்தமாக உபாயாந்தரங்களை உபதேசித்தவன்? வேதபுருஷன் அவற்றை விதிப்பான் என்?' என்ன அருளிச்செய்கிறார் 'வேதபுருஷன்' என்றுதொடங்கி.

மூ. 268. வேதபுருஷன் உபாயாந்தரங்களை விதித்தது, கொண்டிப் பசுவுக்குத் தடிகட்டி விடுவாரைப் போலே, அஹங்காரமமகாரங்களால் வந்த களிப்பு அற்று ஸ்வரூபஜ்ஞாநம் பிறக்கைக்காக.

வ்யா:-அதாவது-ஆப்ததமனான வேதபுருஷன் 206"**विज्ञाय प्रज्ञां कुर्वीत**" (விஜ்ஞாய ப்ரஜ்ஞாம் குர்வீத) 207 "**ओमित्यात्मानं ध्यायथ**" (ஓமித்யாத்மாநம்த்யாயத) 208 "**आत्मानमेव लोकमुपासीत**" (ஆத்மாநமேவ லோகமுபாஸீத) 209 "**आत्मा वा अरे द्रष्टव्यः श्रोतव्यो मन्तव्यो निदिध्यासितव्यः**" (ஆத்மா வா அரே த்ரஷ்டவ்யஶ் ஶ்ரோதவ்யோ மந்தவ்யோ நிதித்யாஸிதவ்ய:)இத்யாதிகளாலே உபாயாந்தரங்களை மோக்ஷஸாதநமாக விதித்தது-பட்டிதின்று திரிகிற பசுவுக்கு இடைஞ்சு வஶப்படுகைக்காகக் கழுத்திலே தடியைக் கட்டிவிடுவாரைப்போலே, அஹங்காரமமகாரவஶ்யனாய்க் களித்துத் திரிகிற இவனுக்கு, 210 "**जन्मान्तरसहस्रेषु तपोज्ञानसमाधिभिः**" (ஜந்மாந்தரஸஹஸ்ரேஷு தபோஜ்ஞாந ஸமாதிபி:) என்கிறபடியே காயக்லேஶரூபமான கர்மாநுஷ்டாநம் இந்த்ரியஜயம் முதலான அருந்தேவைகளாலே செறுப்புண்டு அந்தக்களிப்புப் போய் பகவத்பாரதந்த்ர்யமாகிற ஸ்வரூபஜ்ஞாநம் பிறக்கைக்காக என்கை.

'ஆனால், இப்படி ஸ்வரூபஜ்ஞாநோதய ஹேதுவான இவற்றைவிட்டால் குற்றமாகாதோ?' என்ன, அருளிச்செய்கிறார் 'ஸந்யாஸி' என்று தொடங்கி.

மூ. 269. ஸந்யாஸி முன்புள்ளவற்றை விடுமாபோலே இவ்வளவு பிறந்தவன் இவற்றைவிட்டால் குற்றம் வாராது.

வ்யா:-அதாவது-சரமாஶ்ரமத்திலே அந்விதனானவன் பூர்வாஶ்ரம தர்மங்களை விடுகிறாப்போலே, அந்யோபாயங்களினுடைய ஸ்வரூபவிரோதித்வாதிகளாலே ஸித்தோபாயத்திலே இழியும்படி இவ்வளவான ஜ்ஞாநபாகம் பிறந்தவன் இவ்வுபாயாந்தரங்களை விட்டால் தோஷமாகாது என்றபடி.

'இவைதான் ஆகாராந்தரத்தாலே அந்விதங்களாகையாலே, இவற்றில் இவன் தனக்கு ஸ்வரூபத்யாகம் இல்லை'

என்னுமத்தை அருளிச்செய்கிறார் 'இவன்தான் இவைதன்னை நேராகவிட்டிலன்' என்று.

மூ. 270. இவன்தான் இவைதன்னை நேராக விட்டிலன்.

வ்யா:–அதாவது-ஸாதநாந்தரபரித்யாக பூர்வகமாக ஸித்தஸாதந பரிக்ரஹம் பண்ணின இவ்வதிகாரிதான், கர்மஜ்ஞாநாதிகள் ஆகிற இவைதன்னை ஸ்வரூபேண த்யஜித்திலனென்கை.

'அது எங்ஙனே?' என்ன, அருளிச்செய்கிறார் 'கர்மம்' என்றுதொடங்கி.

மூ. 271. கர்மம்–கைங்கர்யத்திலே புகும்; ஜ்ஞாநம்–ஸ்வரூபப்ரகாசத்திலே புகும்; பக்தி-ப்ராப்யருசியிலே புகும்; ப்ரபத்தி-ஸ்வரூபயாதாத்ம்யஜ்ஞாநத்திலே புகும்.

வ்யா:–அதாவது-ஸ்வவர்ணஸ்வாஶ்ரமோசிதமாக இவன் அநுஷ்டிக்கும் விஹித கர்மம், ஸாதநபுத்த்யாவன்றிக்கே ஆந்ருஶம்ஸ்யத்தாலே பரார்த்தமாக அநுஷ்டிக்கையாலே, ஈஶ்வரனுக்கு மிகவும் உகப்பாகையாலே, தத்ப்ரீதி ஹேதுவாகப் பண்ணுங் கைங்கர்யத்திலே அந்தர்ப்பவிக்கும். /"நுண்ணறிவு" என்கிறபடியே ஸ்வஸ்வரூபஜ்ஞாந பூர்வகமாகப் பரஸ்வரூபத்தை ஸாக்ஷாத்கரிக்கைக்கும் உறுப்பான ஸூக்ஷ்ம ஜ்ஞாநம், ஸாதநபுத்தி கழிந்தவாறே ஸ்வரூபத்தினுடைய ப்ரகாஶத்திலே அந்தர்ப்பவிக்கும். *211* **"भक्त्या त्वनन्यया शक्यः" (பக்த்யா த்வநந்யயா ஶக்ய:)** என்கிறபடியே பகவத்ப்ராப்திக்கு ஸாதநமான பக்தி அந்த ஸாதநபுத்தி போனவாறே போஜநத்துக்கு க்ஷுத்துப்போலே ப்ராப்யமான கைங்கர்யத்துக்குப் பூர்வக்ஷணத்திலே அநுவர்த்திக்கக்கடவதான ருசியிலே அந்தர்ப்பவிக்கும். ஸித்தோபாய

/ திருவாய் 5-7-1.

வரணரூபையான ப்ரபத்தி ஏகபதத்திலே சொல்லுகிற படியே ஸாதநபாவம் கழிந்தவாறே அத்யந்தபரதந்த்ரதயா அநந்யஶரணமாயிருந்துள்ள ஸ்வரூபத்தினுடைய யாதாத்ம்ய ஜ்ஞாநத்திலே அந்தர்ப்பவிக்குமென்கை.

'பக்தி ப்ரபத்திகள் இரண்டையுங் கழித்தால் இவன் தனக்குப் பலஸாதநமாவது எது?' என்ன, அருளிச்செய்கிறார் 'ஒருபலத்துக்கு' என்றுதொடங்கி.

மூ. 272. ஒருபலத்துக்கு அரிய வழியையும், எளிய வழியையும் உபதேசிக்கையாலே, இவை இரண்டும் ஒழிய பகவத்ப்ரஸாதமே உபாயமாகக்கடவது.

வ்யா:—அதாவது-பகவத் ப்ராப்தியாகிற ஒருபலத்துக்கு 212 **"जन्मान्तरसहस्रेषु तपोज्ञानसमाधिभिः। नराणां क्षीणपापानां कृष्णे भक्तिः प्रजायते॥"** **(ஜந்மாந்தர ஸஹஸ்ரேஷு தபோ ஜ்ஞாந ஸமாதிபி:-நராணாம் க்ஷீணபாபாநாம் க்ருஷ்ணே பக்தி: ப்ரஜாயதே)** என்கிறபடியே அநேக ஜந்மங்களிலே கர்ம ஜ்ஞாநாதிகளாகிற அங்கங்களாலே ஸாதிக்கப்படுமதாகையாலே அரிதாயிருந்துள்ள பக்திமார்க்கத்தையும், "ஸர்வதர்மாந் பரித்யஜ்ய" என்று ஸகலப்ரவ்ருத்தி நிவ்ருத்திபூர்வகமாக ஸக்ருதநுஷ்டேயமாகையாலே எளிதாயிருந்துள்ள ப்ரபத்திமார்க்கத்தையும் உபதேசிக்கையாலே, ஸாதநகௌரவ லாகவங்களில் தாத்பர்யமின்றிக்கே தத்தத் வ்யாஜேந பலப்ரதனாகாநின்றுள்ள அவனுடைய ப்ரஸாதமே ப்ரதாநமாகையாலே, பக்திப்ரபத்திகளாகிற இவையிரண்டுமொழிய பகவானுடைய ப்ரஸாதம் உபாயமாகக்கடவது என்கை.

'ஆனாலும், பேற்றுக்கு இவன் பக்கலிலும் ஏதேனும் உண்டாகவேண்டாவோ?' என்ன, அருளிச்செய்கிறார் 'பேற்றுக்கு' என்றுதொடங்கி.

மூ. 273. பேற்றுக்கு வேண்டுவது—விலக்காமை யும், இரப்பும்.

வ்யா:—*அதாவது-பலஸித்திக்குச் சேதநன்பக்கல் உண் டாகவேண்டுவது-ஸ்வயத்நத்தாலே அவன் பண்ணும் ரக்ஷ ணத்தை விலக்காதொழிகையும், அது புருஷார்த்தமாகைக்கு உறுப்பான இரப்புமென்கை.*

'இங்ஙனன்றிக்கே இவன்பக்கலிலும் சிலஸுக்ருதம் உண்டாஞல் ஆகாதோ?' என்ன, அது உபாயபூதனுக்கு அநிஷ்டமென்னுமத்தை அருளிச்செய்கிருர் 'சக்ரவர்த்தித் திருமகன்' என்றுதொடங்கி.

மூ. 274. சக்ரவர்த்தித் திருமகன் பாபத்தோடே வரிலும் அமையுமென்ருன்; இவன் புண்யத்தைப் போகட்டு வரவேணுமென்ருன்.

வ்யா:—*அதாவது- 213* **"रामो विग्रहवान् धर्मः" (ராமோ விக்ரஹவாந் தர்ம:)** *என்கிற சக்ரவர்த்தித்திருமகன் 214* **"यदि वा रावणः स्वयं" (யதிவா ராவணஸ் ஸ்வயம்)** *என்று 'பாபிஷ்டனை ராவணன்தாஞகிலும் அழைத்துவாரும்' என்கையாலே பாபம் பேற்றுக்கு ஹேதுவாக நினைக்கைக்கு உடல் அல்லாமையாலே, 'பாபத்தோடே வரிலும் அமை யும்' என்ருன்; 215* **"कृष्णं धर्मं सनातनं" (க்ருஷ்ணம் தர்மம் ஸநாதநம்)** *என்கிற இவன் 'ஸர்வதர்மாந் பரித்யஜ்ய' என்கை யாலே பேற்றுக்கு ஹேதுவாக நினைக்கைக்கு உடலான புண்யத்தைப் போகட்டு வரவேணுமென்ருன் என்கை. ஆகையால், ஸஹாயாந்தர ஸம்ஸர்க்க அஸஹனை உபாய பூதனுக்கு இவன்பக்கல் ஸுக்ருதம் அநிஷ்டம் என்று கருத்து.*

இவ்வர்த்தத்தில் இழிந்தவனுக்கு ஆஸ்திகனுய் உஜ் ஜீவித்தல், நாஸ்திகனுய் நசித்தல் ஒழிய, மத்யமஸ்திதியில்லை

என்னுமத்தைப் பூர்வாசார்ய வசநத்தாலே அறிவிக்கிருர் 'ஆஸ்திகனுய்' என்றுதொடங்கி.

மூ. 275. "ஆஸ்திகனுய் இவ்வர்த்தத்தில் ருசி விச்வாஸங்களுடையனுய் உஜ்ஜீவித்தல், நாஸ்திகனுய் நசித்தல் ஒழிய நடுவில் நிலையில்லை" என்று பட்டர்க்கு எம்பார் அருளிச்செய்த வார்த்தை.

வ்யா:—அதாவது—"இவ்வர்த்தத்தில் அந்விதனுனவன் பகவத்ப்ரபாவத்தால் 'இது ஸத்யம்' என்று ஆஸ்திகனுய் இவ்வர்த்தத்தில் ருசியும் 'இது தப்பாது' என்கிற விச்வாஸமுமுடையனுய் உஜ்ஜீவித்தல், ஶாஸ்த்ரங்களெல்லாம் ஒருதலையும் இது ஒருதலையுமாய் இப்படியிருப்பதொன்றுண்டோ?' என்று நாஸ்திகனுய் இத்தை அநாதரித்து நசித்தலித்தனையொழிய, நடுவிலொரு நிலையில்லை" என்று ஸகலஶாஸ்த்ர வித்தமரான பட்டருக்கு ஆப்ததமரான எம்பார் அருளிச்செய்த வார்த்தையென்கை.

'வ்யவஸாயஹீநனுக்கு இதில் அந்வயம் விநாஶத்துக்கு உடலாம்' என்னுமத்தை ஸத்ருஷ்டாந்தமாக அருளிச்செய்கிருர் 'வ்யவஸாயம்' என்றுதொடங்கி.

மூ. 276. வ்யவஸாயம் இல்லாதவனுக்கு இதில் அந்வயம், ஆமத்தில் போஜநம்போலே.

வ்யா:—அதாவது-இதிற் சொல்லுகிற த்யாக ஸ்வீகாரங்களுக்கு ஈடான வ்யவஸாயம் இல்லாதவனுக்கு இதிலுண்டான அந்வயம், அஜீர்ணதசையிற் பண்ணின போஜநம் மரணஹேதுவாமாபோலே விநாஶஹேதுவாய்ப் பர்யவஸிக்குமென்கை.

இது தனக்கு அதிகாரிகள் இன்னுரென்னுமத்தை அருளிச்செய்கிருர் 'விட்டுசித்தர் கேட்டிருப்பரென்கிறபடியே அதிகாரிகள் நியதர்' என்று.

மூ. 277. *"விட்டுசித்தர் கேட்டிருப்பர்" என்கிற படியே அதிகாரிகள் நியதர்.

வ்யா:—*அதாவது-* "செம்மையுடைய திருவரங்கர்தாம் பணித்த மெய்ம்மைப் பெருவார்த்தை விட்டுசித்தர் கேட்டிருப்பர்" என்று 'கரணத்ரயத்தாலும் செவ்வியராய் அது தன்னை அர்த்தக்ரியாகாரியாய்க்கொண்டு கோயிலிலேசாய்ந் தருளினவர்தாம், அர்ஜுநவ்யாஜத்தாலே திருத்தேர்த்தட்டிலேநின்று அருளிச்செய்த யதார்த்தமுமாய்ச் சீரியதுமாய் ஸுலபமுமான "மாமேகம் ஶரணம் வ்ரஜ" என்கிற வார்த்தையைப் பெரியாழ்வார் கேட்டு, தந்நிஷ்டராயிருப்பர்' என்கிறபடியே இவ்வர்த்தத்துக்கு அதிகாரிகள் இது கேட்டால் இதன்படியே நியதராயிருக்குமவர்களென்கை.*

இவ்வர்த்தநிஷ்டரான ஆழ்வார்களுடைய திவ்யஸூக்தியில் இதுக்கு அர்த்தமாக அநுஸந்திக்கபடுமவற்றை அருளிச்செய்து இதுதன்னை நிகமிக்கிறுர் 'வார்த்தையறிபவர்' என்றுதொடங்கி.

மூ. 278. †"வார்த்தையறிபவர்" என்கிற பாட்டும் ‖"அத்தனுகி" என்கிற பாட்டும் இதுக்கு அர்த்தமாக அநுஸந்தேயம்.

சரமச்லோகப்ரகரணம் முற்றிற்று.

பிள்ளைலோகாசார்யர் அருளிய முமுக்ஷுப்படி முற்றிற்று.

வ்யா:—*அதாவது-*† "வார்த்தையறிபவர்-பேர்த்த பிறப்பொடு நோயொடு மூப்பொடு இறப்பவை பேர்த்துப் பெருந் துன்பம் வேரறநீக்கித் தன்தாளின்கீழ்ச் சேர்த்து அவன் செய்யுஞ் சேமத்தையெண்ணித் தெளிவுற்று மாயவற்கு ஆளன்றியாவரோ" என்று "மாமேகம் ஶரணம் வ்ரஜ-ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி" என்ற நல்வார்த்தையை அறியுமவர்கள் பரணிக்கூடு ‖வரிந்தாற்போலே இவ்வாத்*

* நாச்-திரு 10-10. † திருவாய் 7-5-10. ‖ திருச்சந்த 115.
/ (பா) பரந்தாற்போலே.

மாவைச் சூழப்பொதிந்துகிடக்கிற ஜந்மங்களோடும், அவை புக்கவிடத்தே புகக்கடவதான வ்யாதியோடும், அங்ஙனே யாகிலும் சிறிதுநாள் செல்லாதபடி இடிவிழுந்தாற்போலே வரும் ஜரையோடும், அங்ஙனேயாகிலும் இருக்கவொண்ணாதபடி இவனுக்கு அநபிமதமான விநாஶமுமாகிற இவற்றை விரகர் நெடுஞ்சுவர் தன்னுமாபோலே தள்ளி, அவைபோன அநந்தரம் வரக்கடவதான கைவல்யமாகிற மஹாதுக்கத்தை ஸவாஸநமாகப் போக்கி, பாதரேகை போலே தன் திருவடிகளின் கீழே சேரும்படிபண்ணி, புநராவ்ருத்தியறும்படி அவன்பண்ணும் ரக்ஷையை அநுஸந்தித்து வ்யவஸிதராய்க்கொண்டு தங்களுக்கு ஆஶ்ரயணீயனாய் விரோதிநிவர்த்தகனான ஆஶ்சர்யபூதனுக்கு ஒழிய வேறொருவர்க்கு ஆளாவரோ?' என்று நம்மாழ்வாரருளிச்செய்த "வார்த்தையறிபவர்" என்கிற பாட்டும்,—"முத்தனார் முகுந்தனார் ஒத்தொவ்வாத பல்பிறப்பொழித்து நம்மையாட்கொள்வான்-அத்தனாகி யன்னையாகி யாளுமெம்பிரானுமாய்ப் புகுந்து-நம்முள் மேவினார்; ஏழைநெஞ்சமே! எத்தினால் இடர்க்கடல்கிடத்தி" என்று 'ஹேயப்ரத்யநீகராகையாலே அஸ்ப்ருஷ்ட ஸம்ஸாரகந்தராய் முக்திபூமிப்ரதரானவர் ஸகல தேஹவர்த்திகளான ஆத்மாக்களும் ஜ்ஞானைகாகாரதயா ஒத்துத் தேவாதிபேதத்தாலே ஒவ்வாமலிருக்கும் பலவகைப் பட்ட ஜந்மங்களைப்போக்கி, நித்யஸம்ஸாரிகளாய்ப் போந்த நம்மை நித்யஸூரிகள் கொள்ளும் அடிமையைக் கொள்ளுகைக்காக ஹிதமே ப்ரவர்த்திப்பிக்கும் பிதாவாயும் ப்ரியமே ப்ரவர்த்திப்பிக்கும் மாதாவாயும் அடிமை கொள்ளக்கடவ நம்முடைய ஸ்வாமியாயும் இப்படி ஸர்வ வித பந்துவுமாய், நம்முடைய தண்மையையும் தம்முடைய பெருமையையும் பாராதே நம்முடைய ஸர்வபரத்தையும் தாமேயேறிட்டுக்கொண்டு செய்வாராக ஹேயமான நம்முள்ளே புகுந்து ஒருநீராகப் பொருந்தினார்; அறிவிலியான நெஞ்சே! நம்முடைய ஹிதம் அறிகைக்கு நாம் ஸர்வஜ்ஞராயோ அவன் அஜ்ஞனோ, ஹிதத்தைப் ப்ரவர்த்திப்

பிக்கைக்கு நாம் ஶக்தராயோ அவன் அஶக்தனையோ, கார் யஞ்செய்து கொள்ளுகைக்கு நாம் ப்ராப்தராயோ அவன் அப்ராப்தனையோ, தன் மேன்மைபாராதே தாழநின்று உப கரிக்குமவனுயிருக்க எத்தாலே நீ து:க்கஸாகரத்திலே கிடக் கிறது?' என்று திருமழிசைப்பிரானருளிச்செய்த "அத்த னுகி" என்கிற பாட்டும் இந்த ஶ்லோகத்துக்கு அர்த்தமாக அநுஸந்தேயமென்கை.

ஆக. இத்தால் ஸ்வீகாராங்கதயா த்யாஜ்யமான தர்ம விஶேஷங்களையும், அந்தத் தர்மங்களினுடைய த்யாகப்ர காரத்தையும், அந்தத் தர்மத்யாக பூர்வகமாகப் பற்றும் விஷயத்தினுடைய ஸௌலப்யாதி குணயோகத்தையும், அக்குணவிஶிஷ்ட வஸ்துவினுடைய ஸஹாய அஸஹத்வ லக்ஷணமான நைரபேக்ஷ்யத்தையும், நிரபேக்ஷ வஸ்துவி னுடைய உபாயபாவத்தையும், அத்தை உபாயத்வேந ஸ்வீ கரிக்கையையும், ஸ்வீக்ருதமான உபாயத்தினுடைய ஜ்ஞாந ஶக்த்யாதிகுணயோகத்தையும், அக்குணவிசிஷ்ட வஸ்து விலே ந்யஸ்தபரனை அதிகாரியையும், அதிகாரிக்கு விரோதி யான பாபஸமூஹத்தையும்· அப்பாபவிமோசந ப்ர காரத்தையும், அப்பாபவிமோசகனைப் பற்றின அதிகாரி யுடைய நைர்ப்பர்யத்தையும் சொல்லிற்றுயிற்று.

சரமஶ்லோகப்ரகரண வ்யாக்யானம் முற்றிற்று.

பிள்ளைலோகாசார்யர் திருவடிகளே சரணம்.

சீயர் திருவடிகளே ஶரணம்.

மணவாள மாமுனிகள் அருளிச்செய்த

முமுக்ஷுப்படி வ்யாக்யானம்

ஸம்பூர்ணம்.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:
ஸ்ரீமத் வரவரமுநயே நம:

முமுக்ஷுப்படி வ்யாக்யான ப்ரமாணத்திரட்டு

1. அஸந்நேவ ஸ பவதி அஸத் ப்ரஹ்மேதி வேத சேத்।
அஸ்தி ப்ரஹ்மேதி சேத் வேத। ஸந்தமேநம் ததோ விது:॥

[*'ப்ரஹ்மத்தை அறிகிறான்' என்பது (ஒருவனுக்கு) இல்லையாகில், அவன் (இருந்தும்) இல்லாதவனாகவே ஆகிறான். 'ப்ரஹ்மத்தை அறிகிறான்' என்பது (ஒருவனுக்கு) உள்ளதாகில், அதனால் இவனை உள்ளவனாக (நல்லோனாக) அறிகிறார்கள்.*]

2. லக்ஷ்மீநாதஸமாரம்பாம் நாதயாமுநமத்யமாம்।
அஸ்மதாசார்யபர்யந்தாம் வந்தே குருபரம்பராம்॥

[*லக்ஷ்மீநாதனிடமிருந்து தொடங்குவதும், நாதமுனிகளையும், யாமுனமுனிகளையும் நடுவிலுடையதும், எம்முடைய ஆசார்யருடன் முடிவதுமான குருபரம்பரையை வணங்குகிறேன்.*]

3. ஸ்வஜ்ஞாநம் ப்ராபகஜ்ஞாநம் ப்ராப்யஜ்ஞாநம் முமுக்ஷுபி:।
ஜ்ஞாநத்ரயமுபாதேயம் ஏததந்யந்ந கிஞ்சந॥

[*தன் (ஆத்மஸ்வரூப) ஜ்ஞாநமும், உபாயஜ்ஞாநமும், புருஷார்த்த ஜ்ஞாநமும், ஆகிய மூன்றுவகை அறிவுகள் முமுக்ஷுக்களால் கொள்ளத்தக்கவை. வேறெதுவும் வேண்டியதில்லை.*]

4. மந்தாரம் த்ராயத இதி மந்த்ர:

[*மனனம் செய்பவனைக் காப்பாற்றுவது என்னும் காரணத்தாலே மந்திரம் எனப்படுகிறது.*]

---

1. தை-ஆந-6. 2. ஆழ்வான் முக்தகம். 3.
4. வ்யுத்பத்தி.

5. தேஹாஸக்தாத்மபுத்திர் யதி பவதி பதம் ஸாது வித்யாத் த்ருதீயம்
ஸ்வாதந்த்ர்யாந்தோ யதிஸ்யாத் ப்ரதமமிதரசேஷத்வதீச்சேத் த்விதீயம்
ஆத்மத்ராணோந்முகச்சேந்நம இதி ச பதம் பாந்தவாபாஸலோல:
சப்தம் நாராயணாக்யம் விஷயசபலதீச்சேச் சதுர்த்தீம் ப்ரபந்ந:

[ப்ரபந்நனானவன், தேஹத்தில் ஆத்மபுத்தியையுடையவனா ணுகில் (தான் ஜ்ஞாநாகாரனென்று காட்டும் ப்ரணவத் தின்) மூன்றாவது பதமான மகாரத்தை நன்கு அறியக்கடவன். தான் சுதந்திரன் என்னும் எண்ணத்தாலே அறிவு கெட் டிருந்தானாகில் (தன்னை ஈச்வரசேஷமென்றறிவிக்கிற ப்ரண வத்தின்) முதற்பதமான அகாரத்தையும், மற்றவர்களுக்குத் தன்னைஅடிமையென்றுஎண்ணினானாகில் (அவனுக்கே அடிமை யென்று அறிவிக்கும் ப்ரணவத்தின்) இரண்டாவது பதமான உகாரத்தையும் தன்னை ரக்ஷித்துக்கொள்வதில் ஈடுபட்டா னாகில், (தன்னைத்தான் ரக்ஷிக்கமுடியாதெனக்காட்டும்) நம: என்னும் பதத்தையும் ஆபாஸ(மேலெழத்தோன்றும்)பந்துக் களிடம் ஈடுபட்டானாகில் (எல்லாவுறவும் அவனேயென அறி விக்கும்)நாராயணன் என்னும் சப்தத்தையும், இந்திரிய விஷ யங்களில் ஈடுபட்ட புத்தியையுடையவனாகில் (பகவத்கைங் கரிய ரஸத்தைப் பிரார்த்திக்கும்) 'ஆய' என்னும் சதுர்த்தி யையும் நன்கு அறியக்கடவன்.]

6. ருசோ யஜூம்ஷி ஸாமாநி ததைவாதர்வணாநி ச।
ஸர்வமஷ்டாக்ஷராந்தஸ்தம் யச்சாந்யதபி வாங்மயம் ||

[ருக், யஜுஸ், ஸாமம், அதர்வணம் என்னும் வேதங்களும், மற்றுள்ள உபப்ரும்ஹணவாக்குகளுமாகிய எல்லாம் அஷ்டா க்ஷரத்தில் அடங்கியுள்ளன.]

7. மந்த்ராணாம் பரமோ மந்த்ரோ குஹ்யாநாம் குஹ்யமுத்தமம்।
பவித்ரஞ்ச பவித்ராணாம் மூலமந்த்ரஸ் ஸநாதந: ||

[மந்திரங்களுள் மேலான மந்திரமும், ரஹஸ்யங்களுள் மேலான ரஹஸ்யமும், பாவனங்களுள் பரமபாவனமும் பழையதான (அஷ்டாக்ஷரமெனும்) மூலமந்திரமேயாகும்.]

---

5. அஷ்டச்லோகீ-4. 6. வ்ருத்தஹாரீதஸ்ம்ருதி 3-45.
7. நாரதீயகல்பம், அஷ்டாக்ஷரப்ரஹ்மவித்யை 1-11.

8. குரும் ப்ரகாஶயேத் தீமாந் மந்த்ரம் யத்நேந கோபயேத் ।
அப்ரகாஶப்ரகாஶாப்யாம் க்ஷீயேதே ஸம்பதாயுஷீ ॥

[அறிவாளியாயிருப்பவன் குருவை வெளிப்படுத்தக்கடவன்; மந்திரத்தை மிகமுயன்று (அநதிகாரிகளிடமிருந்து) மறைக்கக்கடவன் (ஆசாரியனை) வெளிப்படுத்தாததாலும், (மந்திரத்தை) வெளிப்படுத்துவதாலும் (முறையே) செல்வமும் ஆயுளும் நசிக்கும்.]

9. தைவாதீநம் ஜகத் ஸர்வம் மந்த்ராதீநம் து தைவதம் ।
தந்மந்த்ரம் ப்ராஹ்மணாதீநம் தஸ்மாத் ப்ராஹ்மண தைவதம் ॥

[எல்லாவுலகும் தெய்வத்திற்கு வசப்பட்டது. தெய்வமோவெனில் மந்திரத்திற்குக் கட்டுப்படுவது; அந்த மந்திரம் ஆசார்யவசத்திலிருப்பது. ஆகையால் ஆசாரியனே (சேதனனுக்கு) தெய்வமாவான்.]

10. மந்த்ரே தத்தேவதாயாஞ்ச ததா மந்த்ரப்ரதே குரௌ ।
த்ரிஷு பக்தி: ஸதா கார்யா ஸா ஹி ப்ரதமஸாதநம் ॥

[மந்திரத்தினிடத்தும், அதன் தேவதையிடமும் அப்படியே அம்மந்திரத்தையளித்த ஆசாரியனிடமும் (ஒன்றொழியாமல்) இம்மூன்றினிடமும் எப்போதும் பக்தி செய்யப்படவேண்டும்; அந்த பக்தியே (பகவத் ப்ராப்திக்கு) முதல் உபாயமாகும்.]

11. தாஸபூதா: ஸ்வத: ஸர்வே ஹ்யாத்மாந: பரமாத்மந: ।
நாந்யதா லக்ஷணம் தேஷாம் பந்தே மோக்ஷே ததைவ ச ॥

[எல்லா ஆத்மாக்களும் இயற்கையாகவே பரமாத்மாவுக்கு அடிமைப்பட்டவர்களன்றோ. ஸம்ஸாரத்திலும் மோக்ஷத்திலும் அவர்களுக்கு வேறுவகை லக்ஷணமில்லை.]

12. பதிம் விச்வஸ்யாத்மேச்வரம் ।

[உலகிற்குப் பதியும், தனக்குத் தானே ஈச்வரனுமாயிருப்பவன் நாராயணன்.]

---

8. சேஷஸம்ஹிதை 14-50. 9. விஹகேந்த்ரஸம்ஹிதைபடலம்-22. 10. ஸ்ரீவிஷ்ணுதத்வம். 11. ஹாரீதஸ்ம்ருதி. 12. தை-நா.

13. ஸ்வத்வமாத்மநி ஸஞ்ஜாதம் ஸ்வாமித்வம் ப்ரஹ்மணி ஸ்திதம்।
உபயோரேஷ ஸம்பந்தோ ந பரோऽபிமதோ மம॥

[உடைமையாயிருக்கும் தன்மை ஆத்மாவில் இயற்கையாயிருப்பது; உடையவனாயிருக்கும் தன்மை ப்ரஹ்மத்திடம் இயற்கையாயிருப்பது. இருவர்க்கும் இதுவே ஸம்பந்தம்; வேறெதையும் நான் ஒப்பவில்லை.]

14. ஸம்ஸார ஸாகரம் கோரமநந்த க்லேசபாஜநம்।
த்வாமேவ சரணம் ப்ராப்ய நிஸ்தரந்தி மநீஷிண:॥

[கொடியதாய், அளவற்ற துன்பத்திற்கு இருப்பிடமான ஸம்ஸாரக்கடலை உன்னைச் சரணடைந்தே மனிதர்கள் தாண்டுகிறார்கள்.]

15. ப்ராப்யஸ்ய ப்ரஹ்மணோ ரூபம் ப்ராப்துச்ச ப்ரத்யகாத்மந:।
ப்ராப்த்யுபாயம் பலம் ப்ராப்தேஸ் ததா ப்ராப்திவிரோதி ச।
வதந்தி ஸகலா வேதாஸ் ஸேதிஹாஸபுராணகா:।
முநயச்ச மஹாத்மானோ வேதவேதார்த்தவேதிந:॥

[அடையத்தக்க பரம்பொருளின் தன்மை, அடைபவனான ஜீவாத்மாவின் தன்மை, அடையும் வழி, அடைந்து பெறும் பயன், அடைவதற்குத் தடை ஆகியவற்றை இதிஹாஸ புராணங்களோடு கூடிய எல்லா வேதங்களும் வேதசப் தார்த்தங்களையறியும் மஹாபுருஷர்களான முனிவர்களும் உரைக்கின்றனர்.]

16. ஈசேசிதவ்ய ஸம்பந்தாதநிதம்ப்ரதமாதபி।
ரக்ஷிஷ்யத்யநுகூலாந்ந இதி யா ஸுத்ருடா மதி:॥
ஸ விச்வாஸோ பவேத்

[அநாதியாயிருக்கும் உடையவனுக்கும் உடைமைக்குமுள்ள உறவால், அன்புடைய நம்மை அவசியம் ரக்ஷித்தே தீருவான் என்னும் உறுதியான எண்ணமே மஹாவிச்வாஸம் எனப் படுகிறது.]

---

13. ஸ்ரீவிஷ்ணுதத்வம். 14. ஜிதந்தே 1-4. 15. ஹாரீத ஸ்மிருதி 8-141. 16. லக்ஷ்மீதந்த்ரம் 17-70.

17. ஏவம் ஸம்ஸ்ருதிசக்ரஸ்தே ப்ராம்யமாணே ஸ்வகர்மபி: ।
ஜீவே து:க்காகுலே விஷ்ணோ: க்ருபா காப்யுபஜாயதே ।

[ஸம்ஸார சக்கரத்தில் தன் கருமங்களால் இவ்வண்ணம் சுழன்று துன்புற்ற ஜீவனிடத்தில் விஷ்ணுவுக்கு விவரிக்க முடியாததொரு கருணை உண்டாகிறது.]

18. 14-வது இலக்கம் காண்க.

19. ஸம்ஸாரார்ணவமக்நாநாம் விஷயாக்ராந்த சேதஸாம் ।
விஷ்ணுபோதம் விநா நாந்யத் கிஞ்சிதஸ்தி பராயணம் ॥

[ஸம்ஸாரக்கடலில் முழுகி, (முதலைகள்போன்ற) விஷயங்களாலே பீடிக்கப்பட்ட மனத்தையுடையவர்களுக்கு விஷ்ணுவாகிற (ஸர்வவ்யாபியான) ஓடத்தைத்தவிர வேறு கரை சேர சிறந்த உபாயமில்லை.]

20. ஆஸ்திகோ தர்மஶீலஶ்ச ஶீலவாந் வைஷ்ணவ: ஶுசி: ।
கம்பீரஶ் சதுரோ தீர: ஶிஷ்ய இத்யபிதீயதே ॥

[சாஸ்திரத்தில் நம்பிக்கையுள்ளவனும், (அதிற்சொன்ன) தர்மாநுஷ்டானத்தில் ஈடுபட விருப்பமுள்ளவனும், (அதற்குத்தக்க) நடத்தையுடையவனும். விஷ்ணு பக்தியுடையவனும், தற்பெருமையில்லாத பரிசுத்தனும் (ஆசார்ய பக்தியில்) ஆழங்காணமுடியாதவனும் (ஆசார்ய சுச்ரூஷையில்) வல்லவனும் (ஆசார்ய கைங்கர்யத்தில்) மனோதைர்யமுள்ளவனுமானவனே சிஷ்யன் எனப்படுகிறான்.]

21. சரீரம் வஸு விஜ்ஞாநம் வாஸ: கர்ம குணாநஸூந் ।
குர்வர்த்தம் தாரயேத் யஸ்து ஸ சிஷ்யோ நேதர: ஸ்ம்ருத: ॥

[சரீரத்தையும், பொருளையும், அறிவையும், வஸிக்குமிடத்தையும், செயல்களையும், குணங்களையும், பிராணன்களையும் ஆசார்யனுக்காக எவன் தரிக்கிறானோ அவனே சிஷ்யனெனத் தக்கவன். வேறுவிதமாக இருப்பவன் சீடனல்லன்.]

17. அஹிர்புத்ந்யஸம்ஹிதை 14-28. 19. விஷ்ணு தர்மம் 1-59. 20. 21. ஜயஸம்ஹிதை.

22. ஸத்புத்திஸ் ஸாதுஸேவீ ஸமுசிதசரிதஸ் தத்வபோதாபிலாஷீ
சுச்ரூஷுஸ் த்யக்தமாந: ப்ரணிபதநபர: ப்ரச்நகாலப்ரதீக்ஷ:
சாந்தோ தாந்தோநஸூயு: சரணமுபகத: சாஸ்த்ரவிச்வாஸசாலீ
சிஷ்ய: ப்ராப்த: பரீக்ஷாம் க்ருதவிதபிமதஸ் தத்வத: சிக்ஷணீய:

[நல்லறிவையுடையவனும், நல்லோர்களை அநுவர்த்திப்பவனும், அறிவுக்கேற்ற நடத்தையுடையவனும், தத்துவஞானம் பெறுவதில் விருப்பமுள்ளவனும், ஆசார்யஸேவையை விரும்பியிருப்பவனும், அஹங்காரமற்றவனும், (ஆசாரியனை) அடிவணங்குவதில் ஈடுபட்டவனும், கேள்விகேட்கும் சமயத்தை அறிந்து கேட்பவனும், மனவடக்கமும் புலனடக்கமுமுள்ளவனும், பொறாமையற்றவனும், ஆசார்யக்ருஹத்தை அடைந்தவனும், சாஸ்திரத்தில் நம்பிக்கையுள்ளவனும், (முற்கூறிய விஷயங்களில்) பரீக்ஷை செய்யப்பட்டவனும், (ஆசார்யன் செய்த) உபகாரத்தை மறவாத மஹான்களுக்கு இனியவனுமான சிஷ்யன் உண்மையை உபதேசிக்கத் தக்கவன்.]

23. ஶாஸ்த்ரஜ்ஞாநம் பஹுக்லேஶம் புத்தேஶ் சலநகாரணம் ।
உபதேஶாத் ஹரிம் புத்த்வா விரமேத் ஸர்வகர்மஸு ॥

[சாஸ்திரங்களாலுண்டாகும் அறிவு மிகுந்த சிரமத்தை உண்டாக்கக்கூடியது; புத்திக்குக் கலக்கத்தைக் கொடுக்கக்கூடியது; (ஆகையால்) உபதேசத்தால் பரமபுருஷனை (உபாயமாக) அறிந்து, (சாஸ்திரஜ்ஞானத்தை ஸம்பாதிக்கும்) எல்லாக் கருமங்களையும் கைவிடக்கடவன்.]

24. ஆஸ்தாம் தே குணராசிவத் குணபரீவாஹாத்மநாம் ஜந்மநாம்
ஸங்க்யா பௌமநிகேதநேஷ்வபி குடீகுஞ்ஜேஷு ரங்கேச்வர
அர்ச்ய: ஸர்வஸஹிஷ்ணுரர்ச்சகபராதீநாகிலாத்மஸ்திதி:
ப்ரீணீஷே ஹ்ருதயாளுபிஸ் தவ தத: சீலாத் ஜடீபூயதே

[அரங்கநகரப்பனே! (எல்லையிலாத) உமது குணஸமூஹங்களைப்போலவே குணங்களை வெளிவிடும் அவதாரங்களின் எண்ணிக்கையும் (ஒருபுறம்) இருக்கட்டும். பூமியிலுள்ள திருக்கோயில்களிலும், வீடுகளிலும், பர்ணசாலைகளிலும் அனைவராலும் அர்ச்சிக்கத்தக்கவராய், எல்லா அபசாரங்களை

---

22. ந்யாஸவிம்சதி-7.   23.   24. ர-ஸ்த 2-74.

யும் பொறுப்பவராய், எல்லா நிலைகளும் அர்ச்சகருக்குப் பராதீனமாயிருக்கப்பெற்றவராய் உகக்கிறீர். அந்த சீலகுணத்தைக்கண்டு நல்லமனமுடையோர் மயக்கமடைகிறார்கள்.]

25. பஹவோ ந்ருப கல்யாணகுணா: புத்ரஸ்ய ஸந்தி தே

[அரசனே! உன்னுடைய பிள்ளைக்குப் பல நற்குணங்கள் உள்ளன.]

26. தவாநந்தகுணஸ்யாபி ஷடேவ ப்ரதமே குணா:

[எல்லையில்லாத குணங்களையுடையவனாக இருந்தபோதிலும் உனக்கு ஆறு குணங்களே முதன்மையானவை.]

27. பஹூநி மே வ்யதீதாநி ஜந்மாநி தவ சார்ஜுந।
தாந்யஹம் வேத ஸர்வாணி ந த்வம் வேத்தபரந்தப॥

[அர்ஜுநா! எனக்கு அளவிறந்த பிறப்புக்கள் ஏற்பட்டுவிட்டன. உனக்கும் அப்படியே. நான் அவையனைத்தையும் அறிவேன். நீ அறியாய்.]

28. அநந்தா வை பகவந்மந்த்ரா:

[பகவந் மந்திரங்கள் கணக்கற்றவை.]

29. நாராயணாய வித்மஹே வாஸுதேவாய தீமஹி
தந்நோ விஷ்ணு: ப்ரசோதயாத்

[நாராயணனை அடைய விரும்புகிறோம்; (அதன்பொருட்டு) வாஸுதேவனாகிற அவனை உபாஸிக்கிறோம்; அந்த உபாஸனையை விஷ்ணுவானவர் வளரச்செய்யட்டும்.]

30. யதா ஸர்வேஷு வேதேஷு நாஸ்தி நாராயணாத் பர:।
ததா ஸர்வேஷு மந்த்ரேஷு நாஸ்தி சாஷ்டாக்ஷராத் பர:॥

[எல்லா தேவர்களுக்குள்ளும் நாராயணனைக்காட்டிலும் மேலானவனில்லாததுபோலே, எல்லா மந்திரங்களுக்குள்ளும் அஷ்டாக்ஷரத்தைக்காட்டிலும் மேலானதில்லை.]

---

25. ரா-அ 2-26. 26. விஷ்ணுதர்மம். 27. கீதை 4-5. 28. தைத்-ப்ராஹ். 29. தைத்-நாராயணவல்லி. 30. நாரதீயம்-அஷ்டாக்ஷரப்ரஹ்மவித்யை 1-41.

31. பூத்வோர்த்வபாஹுரத்யாத்ர ஸத்யபூர்வம் ப்ரவீமி வ:।
ஹே புத்ரசிஷ்யா: ச்ருணுத ந மந்த்ரோஷ்டாக்ஷராத் பர:॥

[புத்திர சிஷ்யர்களே! இங்கே இப்போதே கைதூக்கி சத்தியம் செய்து சொல்லுகிறேன்; கேளுங்கள். திருவஷ்டாக்ஷரத்தைக்காட்டிலும் மேலானமந்திரமில்லை.]

32. விச்வம் நாராயணம்

[எல்லாமாயிருப்பவன் நாராயணனே.]

33. நாராயணபரம் ப்ரஹ்ம தத்வம் நாராயண: பர:।
நாராயணபரோ ஜ்யோதிராத்மா நாராயண: பர:॥
யச்ச கிஞ்சிஜ்ஜகத்யஸ்மிந் த்ருச்யதே ச்ரூயதேऽபி வா।
அந்தர் பஹிச்ச தத் ஸர்வம் வ்யாப்ய நாராயண: ஸ்தித:॥

[நாராயணனே பரப்ரஹ்மம்; நாராயணனே பரதத்வம்; பரஞ்சோதியும் நாராயணனே; பரமாத்மாவும் நாராயணனே; இவ்வுலகில் காண்பனவும் கேட்பனவுமான அனைத்தின் உள்ளும் புறமும் வியாபித்து விளங்குகிறான் நாராயணன்.]

34. ஏகோ ஹவை நாராயண ஆஸீந் ந ப்ரஹ்மா நேசாநோ
நேமே த்யாவாப்ருதிவீ

[(ப்ரளயகாலத்தில்) நாராயணன் ஒருவனேயிருந்தான்; பிரமனுமில்லை; சிவனுமில்லை; இந்த ஆகாச பூமிகளும் இல்லை.]

35. சக்ஷுச்ச த்ரஷ்டவ்யஞ்ச நாராயண:।
ச்ரோத்ரஞ்ச ச்ரோதவ்யஞ்ச நாராயண:॥

[கண்ணும் காண்பனவும் நாராயணனே; காதும் கேட்பனவும் நாராயணனே.]

36. திசச்ச ப்ரதிசச்ச நாராயண:

[திக்குகளும், விதிக்குகளும் நாராயணனே.]

37. யஸ்யாத்மா சரீரம் யஸ்ய ப்ருதிவீ சரீரம்

[எவனுக்கு ஆத்மா சரீரமோ, எவனுக்கு பூமி சரீரமோ]

---

31. நாரஸிம்ஹ புராணம் 18-32. 32. தை-நாரா
33. தை-நாரா. 34. மஹோபனிஷத். 35, 36, 37. ஸுபாலோபனிஷத்.

38. யஸ்ய ம்ருத்யு: சரீரம்

[எவனுக்கு ம்ருத்யுசப்தவாச்யமான மூலப்ரக்ருதி சரீரமோ.]

39. ஏஷ ஸர்வபூதாந்தராத்மா அபஹதபாப்மா திவ்யோ தேவ ஏகோ நாராயண:

[எல்லா பூதங்களுக்கும் அந்தராத்மாவாகவும், தோஷமற்ற வனுகவும், பரமபதத்திலிருப்பவனுகவுமுள்ள தேவன் நாரா யணன் ஒருவனே.]

40. 30-ஆவது இலக்கம் காண்க.

41. ஸர்வ வேதாந்த ஸாரார்த்தஸ் ஸம்ஸாரார்ணவதாரக:
கதிரஷ்டாக்ஷரோ ந்ருணும் அபுநர்ப்பவ காங்க்ஷிணும் ||

[மறுபிறப்பின்மையை விரும்பும் மனிதர்களுக்கு எல்லா வேதாந்தங்களின் ஸாரப்பொருளும் ஸம்ஸாரக்கடலைத் தாண்டுவிப்பதுமான அஷ்டாக்ஷரமே புகலாகும்.]

42. ஆர்த்தா விஷண்ணு: சிதிலாச்ச பீதா:
கோரேஷு ச வ்யாதிஷு வர்த்தமாநா: |
ஸங்கீர்த்ய நாராயண சப்த மாத்ரம்
விமுக்த து:க்கா: ஸுகிநோ பவந்தி ||

[செல்வமிழந்து வருந்துமவர்களும், செல்வம் பெருமல் துன்புறுமவர்களும், ஆத்மாநுபவமில்லாமல் சிதைகின்றவர் களும், பகவதநுபவம் பெருமல் பயப்படுமவர்களும், கோர மான வியாதிகளில் துன்புறுகின்றவர்களும் நாராயண சப்தத்தை மாத்திரம் ஸங்கீர்த்தனம் செய்தவுடன் துன்பம் நீங்கி இன்புறுகிருர்கள்.]

43. நாராயணேதி ஶப்தோऽஸ்தி வாகஸ்தி வஶவர்த்திநீ |
ததாபி நரகே கோரே பதந்தீதி கிமத்புதம் ||

[நாராயணனெனும் சொல் உள்ளது; வாக்கெனும் இந்திரியம் வசத்திலுள்ளது. அப்படியும் கொடியநரகில் வீழ்கின்றனரே! என்ன ஆச்சரியம்!]

38, 39. ஸுபாலோபநிஷத். *41.* நாரதீயம் அஷ்டாக்ஷர ப்ரஹ்மவித்யை 1-41. *42.* பாரதம்-ஸஹஸ்ரநாமாத்யாயம். *43.* விஹகேச்வரஸம்ஹிதை 24-12, காருடபுராணம்பூ 220-9.

44. கிம் தத்ர பஹுபிர் மந்த்ரை: கிம் தத்ர பஹுபிர் வ்ரதை: |
நமோ நாராயணயேதி மந்த்ரஸ் ஸர்வார்த்த ஸாதக: |

[பல மந்திரங்களால் என்ன பயன்? பல விரதங்களால் என்ன பயன்? 'நமோ நாராயணாய' என்னும் மந்திரமே எல்லாப்பயன்களையும் ஈடேற்றிவைக்கின்றதே.]

45. மஹத்யாபதி ஸம்ப்ராப்தே ஸ்மர்த்தவ்யோ பகவாந் ஹரி:

[பேராபத்து வந்தபோது ஹரியை நினைக்கவேண்டும்.]

46. ஶங்க சக்ரகதாபாணே த்வாரகாநிலயாச்யுத !
கோவிந்த புண்டரீகாக்ஷ ரக்ஷ மாம் ஶரணாகதம் ||

[சங்கம், சக்கரம், கதை ஆகிய ஆயுதங்களைக் கையிலுடையவனே! துவாரகையில் வாழும் அச்சுதனே! கோவிந்தனே! தாமரைக்கண்ணா! சரணமடைந்த என்னை ரக்ஷிப்பாய்.]

47. கோவிந்தேதி யதாக்ரந்தத் க்ருஷ்ணா மாம் தூரவாஸிநம் |
ருணம் ப்ரவ்ருத்தமிவ மே ஹ்ருதயாந் நாபஸர்ப்பதி ||

[வெகுதூரத்திலிருந்த என்னை துரௌபதியானவள் 'கோவிந்தா' என்று கூப்பிட்டது விருத்தியடைந்த கடன் போலே என் நெஞ்சிலிருந்து அகல்கின்றதில்லை.]

48. ஸாங்கேத்யம் பாரிஹாஸ்யம் ச ஸ்தோபம் ஹேளநமேவ வா|
வைகுண்டநாமக்ரஹணமஶேஷாகஹரம் விது: ||

[(வேறொருவருடைய) பெயரிட்டழைக்கும்போதும், பரிஹாஸத்திற்காகவும், அர்த்தமில்லாமலும், ஏளனமாகவும் வைகுண்டனுடைய பெயரைச் சொல்லுவதுங்கூட எல்லாப் பாபங்களையும் போக்குவதென்று அறிகிறார்கள்.]

49. இஹலௌகிகமைச்வர்யம்ஸ்வர்க்கார்த்யம்பாரலௌகிகம்|
கைவல்யம் பகவந்தஞ்ச மந்த்ரோயம் ஸாதயிஷ்யதி ||

[இவ்வுலகச் செல்வத்தையும் சுவர்க்கம் முதலான மறுமைச் செல்வத்தையும் ஆத்மாநுபவமாகிற கைவல்யத்தையும் பக

---

44. நாரதீயம்-அஷ்டாக்ஷரப்ரஹ்மவித்யை 1-40. ப்ரஹ்மபுராணம் 57-24. 45. பார-ஸபாபர்-த்யூதபர் 90-42. 46. பார-ஸபா த்யூத 90-43. 47. பார-உத் 47-39. 48. பாகவதம் 6-2-14. 49. வ்ருத்தஹாரீதஸ்ம்ருதி 3-4-7.

வதநுபவத்தையும் (அதையதை விரும்புவார்க்கு) இந்த மந்திரம் ஸாதித்துக் கொடுக்கும்.]

50. 15–வது இலக்கம் காண்க.

51. **ஓமித்யேகாக்ஷரம்। நம இதி த்வே அக்ஷரே। நாராயணாயேதி பஞ்சாக்ஷராணி। இத்யஷ்டாக்ஷரா சந்தஸா காயத்ரீ சேதி।**

['ஓம்' என்பது ஓரக்ஷரம்; 'நம:' என்பது இரண்டக்ஷரங்கள்; 'நாராயணாய' என்பது ஐந்தக்ஷரங்கள். இப்படி இம்மந்திரம் எட்டு அக்ஷரமாகிறது. காயத்ரீ சந்தஸ்ஸையுடையதாகவுமாகிறது.]

52. **ஓமித்யக்ரே வ்யாஹரேத்। நம இதி பஶ்சாத்। நாராயணாயேத்யுபரிஷ்டாத்।**

['ஓம்' என்று முதலில் சொல்லக்கடவன்; 'நம:' என்று அடுத்தபடியாகவும், அதற்குமேல் 'நாராயணாய' என்றும் சொல்லக்கடவன்.]

53. **ப்ரணவாத்யம் நமோமத்யம் நாராயணபதாந்திமம்। மந்த்ரமஷ்டாக்ஷரம் வித்யாத் ஸர்வஸித்திகரம் ந்ருணாம்॥**

[ஓங்காரத்தை முதற்பதமாகவும், நமச்சப்தத்தை நடுப்பதமாகவும், நாராயணபதத்தைக் கடைசியிலும் கொண்டதே அஷ்டாக்ஷரமென்று அறியக்கடவன்; இது மனிதர்களுக்கு எல்லா ஸித்திகளையும் அளிப்பது.]

54. **பூரிதி ருக்வேதாதஜாயத। புவ இதி யஜுர்வேதாத்। ஸுவரிதி ஸாமவேதாத்। தாநி சுக்ராண்யப்யதபத்। தேப்யோऽபிதப்தேப்யஸ் த்ரயோ வர்ணா அஜாயந்த। அகார உகார மகார இதி। தாநேகதா ஸமபரத்। ததேததோமிதி॥**

['பூ:' என்பது ருக்வேதஸாரமாக உண்டாயிற்று; 'புவ:' என்பது யஜுர்வேதஸாரமாக உண்டாயிற்று; 'ஸுவ:'

---

51. 52. நாராயணோபநிஷத். 53. 54. அதர்வவேதம் கோபதப்ராஹ்மணம், பூர்வபாகம் ப்ரபா-1, ப்ராஹ்மணம்-6.

என்பது ஸாமவேதஸாரமாக உண்டாயிற்று; 'பூ: புவ: ஸுவ:' என்னும் மூன்று வ்யாஹ்ருதிகளாகிற அந்த பரிசுத்த மான பொறகட்டிகளை உருக்கினன் பிரஜாபதி; உருக்கின அவற்றிலிருந்து (அவற்றின் ஸாரமான) 'அ' 'உ' 'ம' என்னும் எழுத்துக்கள் உண்டாயின. அவற்றை ஒன்று கூட்டினன். அதுதான் இந்த ஓங்காரமாயிற்று.]

55. **அகாரஞ்சாப்யுகாரஞ்ச மகாரஞ்ச ப்ரஜாபதி:।
வேதத்ரயாந் நிரப்ருஹத் பூர்புவஸ் ஸுவரிதி ச॥**

[பிரஜாபதி மூன்று வேதங்களிலிருந்து (அவற்றின் ஸார மான பூ:, புவ:. ஸுவ: என்னும் மூன்று வியாஹ்ருதிகளையும், அவற்றின் ஸாரமான 'அ', 'உ', 'ம', என்னும் எழுத்துக் களையும் எடுத்தான்.]

56. **நாமரூபஞ்ச பூதாநாம் க்ருத்யாநாஞ்ச ப்ரபஞ்சநம்।
வேதஶப்தேப்ய ஏவாதௌ தேவாதீநாம் சகார ஸ:॥**

[ஸ்ருஷ்டிகாலத்தில் தேவமநுஷ்யதிர்யக் ஸ்தாவரங்களாகிற நாலுவகையோனிகளிற் பிறந்த ஜீவராசிகளுக்கும் நாமரூபங் களையும், தொழில் முறைகளையும் வேதசப்தங்களிலிருந்தே ப்ரஜாபதி படைத்தான்.]

57. **ப்ரணவாத்யாஸ் ததா வேதா: ப்ரணவே பர்யவஸ்திதா:।
வாங்மயம் ப்ரணவஸ் ஸர்வம் தஸ்மாத் ப்ரணவமப்யஸேத்॥**

[எல்லா வேதங்களும் ப்ரணவத்தை முதலிற்கொண்டவை; ப்ரணவத்தில் முடிகின்றன. எல்லாச் சொற்களும் ப்ரணவமா யிருக்கும்; ஆகையால் ப்ரவணவத்தைக் கற்கவேண்டும்.]

58. **விநிர்ஜக்முர் முகேப்யஸ்து ப்ரஹ்மணோऽவ்யக்தஜந்மந:।
ஓங்காரப்ரபவா வேதா: ஜக்முஸ் தே ச ரஸாதலம்॥**

[காண்பரிய நாராயணனிடமிருந்து பிறந்த பிரமனின் நாலு முகங்களிலிருந்து ஓங்காரத்தைக் காரணமாகக்கொண்ட நான்கு வேதங்களும் தோன்றின. (பிறகு) அவை ரஸா தலத்தை அடைந்தன.]

---

55. மநு 2-76. 56. வி-பு 1-5-63. 57. லக்வத்ரிஸ்ம் ருதி 1-12. 58. விஷ்ணுதர்மம் 67-6.

59. யத்வேதாதௌ ஸ்வர: ப்ரோக்தோ வேதாந்தே ச ப்ரதிஷ்டித:
தஸ்ய ப்ரக்ருதிலீநஸ்ய ய: பர: ஸ மஹேச்வர:

[யாதொரு ஸ்வரமாகிய ஓங்காரம் வேதத்தின் முதலில் ஓதப்படுகிறதோ, வேதத்தின் முடிவிலும் நிலைநிற்கிறதோ, தன் காரணத்தில் (அகாரத்தில்) அடங்கிய அந்தஓங்காரத்திற்குப்பொருளாயிருப்பவனே மஹேச்வரன்.]

60. அகாரோ வை ஸர்வா வாக்

[எல்லா வார்த்தையும் 'அ' எனும் எழுத்தேயாம்; (அதன்) விகாரமாம் என்றபடி.]

61. ஸமஸ்தஶப்தமூலத்வாதகாரஸ்ய ஸ்வபாவத: ।
ஸமஸ்தவாச்யமூலத்வாத் ப்ரஹ்மணோऽபி ஸ்வபாவத: ॥
வாச்யவாசகஸம்பந்தஸ் தயோரர்த்தாத் ப்ரதீயதே ॥

[இயல்பாகவே அகாரம் எல்லாச் சொற்களுக்கும் மூலகாரணமாயிருக்கையாலும், இயல்பாகவே பரம்பொருளும் எல்லாப்பொருள்களுக்கும் மூலகாரணமாயிருக்கையாலும், அவ்வகாரத்திற்கும், அப்பரம்பொருளுக்கும் சொல்லும் (அதன்) பொருளுமாயிருக்கும் சம்பந்தம் சொற்பொருள் தன்மையால் தோன்றுகிறது.]

62. யதோ வா இமாநி பூதாநி ஜாயந்தே। யேந ஜாதாநி ஜீவந்தி।
யத்ப்ரயந்த்யபிஸம்விஶந்தி । தத்விஜிஜ்ஞாஸஸ்வ தத்
ப்ரஹ்மேதி ।

[இந்தப் பொருள்கள் யாதொன்றினிடமிருந்து தோன்றுகின்றனவோ, தோன்றியவை யாதொன்றினால் வாழ்கின்றனவோ, அழியும்போது யாதொன்றை அடைகின்றனவோ அதுவே ப்ரஹ்மமாகையால் அதை அறிவாய்.]

63. ஸ ஏவ ஸ்ருஜ்ய: ஸ ச ஸர்க்ககர்த்தா
ஸ ஏவ பாத்யத்தி ச பால்யதே ச ।
ப்ரஹ்மாத்யவஸ்தாபிரஶேஷமூர்த்திர்
விஷ்ணுர் வரிஷ்டோ வரதோ வரேண்ய: ॥

[ஸ்ருஷ்டிக்கப்படுமவனும் விஷ்ணுவே; ஸ்ருஷ்டியைச் செய்பவனும் அவனே; அவனே (இவற்றைக்) காப்பாற்றுகிறான்

---

59. தை-நாரா 10-24. 60. காருடம். 61. வாமநம்.
62. தை-ப்ருகு 1-1. 63. வி-பு 1-2-70.

அவனே (ப்ரளயகாலத்தில் இவற்றை) உண்கின்றான். அவனே காப்பாற்றவும் படுகிறான். (உண்ணவும் படுகிறான்.) மிகச் சிறந்தவனும், வரமளிப்பவனும், வரிக்கப்படுபவனுமான விஷ்ணுவே பிரமன் முதலான நிலைகளாலே எல்லா உல கையும் சரீரமாகக் கொண்டிருக்கிறான்.]

64. **லக்ஷ்ம்யா ஸஹ ஹ்ருஷீகேசோ தேவ்யா காருண்யரூபயா।**
ரக்ஷகஸ் ஸர்வஸித்தாந்தே வேதாந்தேபி ச கீயதே ||

[கருணையே வடிவெடுத்தவளான லக்ஷ்மீதேவியோடு கூடிய இருடீகேசனே (பாஞ்சராத்ரத்திலுள்ள மந்த்ர ஆகம தந்த்ர தந்த்ராந்தரங்களெனப்படும்) எல்லா ஸித்தாந்தங்களிலும் வேதாந்தங்களிலும் ரக்ஷகனாகக் கூறப்படுகிறான்.]

65. **ச்ரயத இதி ஸ்ரீ:**

[எம்பெருமானை (எப்போதும்) ஆச்ரயித்திருக்கிறாளாகை யால் 'ஸ்ரீ' எனப்படுகிறாள்.]

66. **ஸ்ரீயத இதி ஸ்ரீ:**

[(அனைவராலும்) ஆச்ரயிக்கப்படுகிறாளாகையால் 'ஸ்ரீ' எனப்படுகிறாள்.]

67. **அநந்யா ராகவேணாஹம் பாஸ்கரேண ப்ரபா யதா**

[சூரியனை விட்டுப் பிரியாத ஒளிபோலே நான் ஸ்ரீராம பிரானை விட்டுப் பிரியாமலிருப்பவள்.]

68. **அநந்யா ஹி மயா ஸீதா பாஸ்கரேண ப்ரபா யதா**

[சூரியனை விட்டுப்பிரியாத ஒளிபோல சீதை என்னை விட்டுப் பிரியாமலிருப்பவள்.]

69. **தவ ஸ்பர்சாதீசம் ஸ்ப்ருசதி கமலே மங்களபதம்**
தவேதம் நோபாதேருபநிபதிதம் ஸ்ரீரஸி யத:।
ப்ரஸூநம் புஷ்யந்தீமபி பரிமளர்த்திம் ஜிகதிஷுர்
ந சைவம்த்வாதேவம் ஸ்வதத இதி கச்சித் கவயதே ||

---

64. லக்ஷ்மீதந்த்ரம் 28-14. 65, 66. ஸ்ரீசப்தவ்யுத்பத்தி. 67. ரா-ஸு 21-16. 68. ரா-யு 121-15. 69. ஸ்ரீகுண ரத்நகோசம்-29.

[கமலையே! உன்னுடைய உறவாலே ஈச்வரன் 'மங்களம்' என்ற சொல்லுக்குப் பொருளாகிறான். 'ஸ்ரீ:' என்னும் பெயரையே உடையவளாயிருப்பதால் உன்னை மங்களபதம் ஒரு காரணத்தால் குறிப்பதன்று; (இயற்கையாகவே குறிப்பது). பூவுக்குப் பெருமையளிக்கும் நறுமணச் சிறப்பைக் கவிபாட முற்பட்ட எவனும், (மணத்தாலே பூ இனியதாகிறது என்பதுபோலே), இன்னதாலே மணம் இனியதாகிறது என்று கவிபாடுவதில்லையே.]

70. **தாதர்த்யே சதுர்த்தீ**

[நான்காம் வேற்றுமையுருபு 'அதற்காக' என்னும் பொருளுடையது]

71. **ஸர்வம் பரவசம் து:க்கம் ஸர்வமாத்மவசம் ஸுகம்।**
இதி வித்யாத் ஸமாஸேந லக்ஷணம் ஸுகது:க்கயோ: ॥

[பிறர்க்கு வசப்பட்டிருப்பது எல்லாவகையிலும் துன்புறுத்துவது; தன் வசத்திலிருப்பது எல்லாவகையிலும் இன்பமளிப்பது; இன்பதுன்பமளிப்பவற்றின் லக்ஷணத்தை இவ்வாறு சுருக்கமாக அறியலாம்.]

72. **ஸேவா ச்வவ்ருத்திராக்யாதா தஸ்மாத் தாம் பரிவர்ஜயேத்।**

[அடிமைசெய்தல் நாய்த்தொழில் எனப்படுகிறது; ஆகையால் அதை அடியோடு விலக்கவேண்டும்.]

73. **13–வது இலக்கம் காண்க.**

74. **ஸ்வோஜ்ஜீவநேச்சா யதி தே ஸ்வஸத்தாயாம் ஸ்ப்ருஹா யதி**
ஆத்மதாஸ்யம் ஹரே: ஸ்வாம்யம் ஸ்வபாவஞ்ச ஸதா ஸ்மர

[நீ உய்வதில் உனக்கு விருப்பமுள்ளதாகில் உன் இருப்பிலே இஷ்டமிருந்ததாகில் ஆத்மாவின் அடிமைத் தன்மையையும் ஹரியின் தலைமையையுமே இயற்கையானதாக எப்போதும் நினைப்பாயாக.]

75. **11–வது இலக்கம் காண்க.**

---

70. இலக்கணநூலார் வழக்கு. 71. மநு 4-160. 72. மநு 4-6.
74. விஷ்ணுதத்வம்.

76. யோந்யதா ஸந்தமாத்மாநமந்யதா ப்ரதிபத்யதே।
கிம் தேந ந க்ருதம் பாபம் சோரேணாத்மாபஹாரிணா ||

[பகவானுக்கு அடிமைப்பட்டிருக்கும் ஆத்மாவை தன் வசப்பட்டதாக எவன் அறிகிறானோ, ஆத்மாவைத் திருடும் அந்தத் திருடனால் என்ன பாவந்தான் செய்யப்படவில்லை?]

77. 1–வது இலக்கம் காண்க.

78. ததேவ பூதம் தது பவ்யமா இதம் தததக்ஷரே பரமே வ்யோமந்

[பரம்பொருளே இறந்தகாலப் பொருள்; அதுவே வருங்காலப்பொருள். இப்படிப்பட்ட அது அழியாத பரமாகாசத்தில் (பரமபதத்தில்) உள்ளது.]

79. ததேவாக்நிஸ் தத் வாயுஸ் தத் ஸூர்யஸ் தது சந்த்ரமா:

[பரம்பொருளே அக்னியாகும்; அதுவே வாயு; அதுவே சூரியன்; அதுவே சந்திரன்.]

80. அகாரச்சித்ஸ்வரூபஸ்ய விஷ்ணோர் வாசக இஷ்யதே।
உகாரச்சித்ஸ்வரூபாயா: ஶ்ரியோ வாசீ ததா விது: ||
மகாரஸ்து தயோர் தாஸ இதி ப்ரணவலக்ஷணம் ||

[அகாரம் ஞானமயனான விஷ்ணுவைச் சொல்லுவதெனப் படுகிறது; அப்படியே உகாரம் ஞானஸ்வரூபிணியான ஸ்ரீதேவியைச் சொல்லுவதென அறிகிறார்கள். மகாரம் அவ்விருவர்க்கும் அடிமையான ஜீவனைச் சொல்லுகிறது; இதுவே ப்ரணவ லக்ஷணம்.]

81. அகாரேணோச்யதே விஷ்ணு: ஸர்வலோகேச்வரோ ஹரி:।
உத்த்ருதா விஷ்ணுநா லக்ஷ்மீருகாரேணோச்யதே ஸதா।
மகாரஸ்து தயோர் விப்ர ஸ்ரீநாராயணயோஸ் ஸதா ||
ஆத்மந: ஶேஷபூதஸ்ய வாசக: ச்ருதிசோதித: ||

[ஸர்வலோகேச்வரனாய் ஸர்வவ்யாபியான ஹரி அகாரத்தால் சொல்லப்படுகிறான்; விஷ்ணுவினால் (திருமார்பில்) உத்தரிக்கப்பட்ட லக்ஷ்மீதேவி உகாரத்தால் சொல்லப்படுகிறாள்;

---

76. பார-ஆதி 74-28. 78, 79. தை-நா-2. 80. பாஞ்சராத்ரம்.
81. பாஞ்சராத்ரம்.

அந்தணரே! ஸ்ரீநாராயணர்களான அவர்களுக்கு எப்போதும் அடிமையாயிருக்கும் ஜீவனுக்கு மகாரம் வாசகம் என்று வேதத்தில் சொல்லப்பட்டுள்ளது.]

82. **பூதாநி ச கவர்க்கேண சவர்க்கேணேந்த்ரியாணி ச।**
டவர்க்கேண தவர்க்கேண ஜ்ஞாநகந்தாதயஸ்ததா ||
மந: பகாரேணைவோக்தம் பகாரேண த்வஹங்க்ருதி:।
பகாரேண பகாரேண மஹாந் ப்ரக்ருதிருச்யதே ||
ஆத்மா து ஸ மகாரேண பஞ்சவிம்ஶ: ப்ரகீர்த்தித: ||

*[**'क', 'ख', 'ग', 'घ' 'ङ'**, என்னும் கவர்க்கம் ஐந்திலும் பூமி முதலிய ஐந்து பூதங்களும், சவர்க்கம் ஐந்திலும் ஐந்து கர்மேந்திரியங்களும், டவர்க்கம் ஐந்தில் ஞானேந்திரியமைந்தும், தவர்க்கம் ஐந்தில் கந்தம் ரஸம் முதலான ஐந்து பூத குணங்களும், பகாரத்திலே மனமும், **'फ'** எனும் எழுத்தால் அஹங்காரமும் **'ब' 'भ'** என்னும் எழுத்துக்களால் (முறையே) மஹானும், ப்ரக்ருதியும் சொல்லப்படுகின்றன. இருபத்தைந்தாவது தத்துமான ஜீவன் (இருபத்தைந்தாம் அக்ஷரமான) மகாரத்திலே சொல்லப்படுகிறான்.]*

83 **பஞ்சவிம்ஶோऽயம் புருஷ:**

[இந்தப் புருஷன் இருபத்தைந்தாமவன்.]

84. **பஞ்சவிம்ஶ ஆத்மா பவதி**

[ஆத்மா இருபத்தைந்தாம் தத்துவமாவான்.]

85. **விஜ்ஞாநாத்மா புருஷ:**

[ஜீவன் ஞானஸ்வரூபன்.]

86. **விஜ்ஞாதாரமரே கேந விஜாநீயாத்**

[சிடனே! அறிபவனை ஜீவனை எதனால் அறியலாம்.]

87. **உக்தார்த்த விஶதீகார யுக்தார்த்தாந்தர போதநம்।**
மதம் விவரணம் தத்ர மஹிதாநாம் மநீஷிணாம் ||

---

82. பாத்மோத்தரபுராணம் 226-25. 83.
84. யஜுர்-அஷ்டகம் 1-2-47. 85. ப்ரச்நோபநிஷத் 4-9.
86. ப்ருஹ 6-5-15. 87. வாதிகேஸரிகாரிகை.

[சொல்லப்படும் பொருளைத் தெளிவுபடுத்தி. தக்க பொருள்களை உணர்த்துவதே வியாக்கியானமாகும் என்று மேன்மை மிக்க பெரியோர்களின் கொள்கை.]

88. **நாகிஞ்சித்குர்வத: சேஷத்வம்**

[கைங்கரியஞ் செய்யாதவனுக்கு சேஷத்வமில்லை.]

89. **அகிஞ்சித்கரஸ்ய சேஷத்வாநுபபத்தி:**

[கைங்கரியம் செய்யாதவனுக்கு சேஷத்வம் பொருந்தாது.]

90. **த்வம் மே஽ஹம் மே குதஸ்தத் ததபி குத இதம் வேதமூலப்ரமாணாத்
ஏதச்சாநாதி ஸித்தாதநுபவவிபவாத் ஸோபி ஸாக்ரோச ஏவ
க்வாக்ரோச:கஸ்யகீதாதிஷுமம விதித: கோத்ர ஸாக்ஷீ ஸுதீ: ஸ்யாத்
ஹந்த த்வத்பக்ஷபாதீ ஸ இதி ந்ருகலஹே ம்ருக்யமத்யஸ்தவத் த்வம்**

*[**ஈச்வரன்**:– நீ எனக்கு (உரியவன்); **ஜீவன்**:–நான் எனக்கு (உரியவன்) **ஈச்**:–அது எப்படி? **ஜீவன்**:–நீர் சொல்லியதுதான் எப்படி? **ஈச்**:—நான் சொன்னது வேதமூலமான ஓங்கார மாகிற ப்ரமாணத்தாலே (நிரூபிதமாகிறது); **ஜீவன்**:—நான் சொல்லியதும் அநாதியான அநுபவப் பெருமையால் ஸித்திக்கிறது. **ஈ.ச்**:-அந்த அநுபவம் ஆக்ஷேபிக்கப்பட்டிருக்கிறது; **ஜீவன்**:–யார் எங்கு ஆக்ஷேபித்தார்கள்? **ஈச்**:–கீதை முதலிய சாஸ்திரங்களில் என் ஆக்ஷேபம் ஸுப்ரஸித்தம். **ஜீவன்**:– அதற்கு ஸாக்ஷி யார்? **ஈச்**:-ஞானியே ஸாக்ஷியாவான். **ஜீவன்**:– ஐயோ! உன்னிடம் பக்ஷபாதமுள்ள அவனெப்படி ஸாக்ஷியாக முடியும்? என்று இவ்வண்ணமாக ஜீவனோடு ஏற்பட்ட வழக்கில் (ஸாக்ஷியில்லாமையால்) ஸத்யம்செய்து உம்கட்சியை ஸ்தாபித்துக்கொள்ளுகிறவர்போலே தேவரீர் (துளசிமாலையணிந்து திருமஞ்சனம் செய்துகொள்ளுமவராய்) காட்சியளிக்கிறீர்.]*

91. **சேதநஸ்ய யதா மம்யம் ஸ்வஸ்மிந் ஸ்வீயே ச வஸ்துநி |
மம இத்யக்ஷரத்வந்த்வம் ததா மம்யஸ்ய வாசகம் ||**

[தன்னிடத்திலும், தன்னையொட்டியிருக்கும் பொருள்களிடத்திலும் 'என்னுடையது' என்னும் எண்ணம் எப்போது

88.&89. மீமாம்ஸகர் வழக்கு. 90. பட்டர் முக்தகம்.
91. அஹிர்புத்ந்யஸம்ஹிதை 52-20.

ஏற்படுகிறதோ அப்போது 'மம' (என்னுடையது) என்னும் அவ்விரண்டு எழுத்துக்களும் (ஜீவனுடைய) (அஹங்கார) மமகாரத்தைக் காட்டுகின்றன.]

92. **த்வ்யக்ஷரஸ்துபவேந்ம்ருத்யுஸ் தர்யக்ஷரம்ப்ரஹ்மண: பதம்।**
மமேதி த்வ்யக்ஷரோ ம்ருத்யுர் ந மமேதி ச ஶாஶ்வதம்॥

[இரண்டு அக்ஷரங்கள் ஆத்மாவுக்கு யமன்; மூன்று அக்ஷரங்களோ அழிவின்மையைத் தருவது. (அவையெவையென்னில்:) 'மம' என்னும் இரண்டக்ஷரமும் ஆத்மாவை அழிப்பது. 'நமம' என்னும் மூன்றெழுத்துக்கள் அழிவின்மையை அளிப்பது.]

93. **ஸ்வரூபம் ஸ்வாதந்த்ர்யம் பகவத இதம் சந்த்ரவதநே**
த்வதாஶ்லேஷோத்கர்ஷாத் பவதி கலு நிஷ்கர்ஷ ஸமயே।
த்வமாஸீர் மாத: ஶ்ரீ: கமிதுரிதமித்தந்த்வவிபவ:
ததந்தர்பாவாத் த்வாம் ந ப்ருதகபிதத்தே ச்ருதிரபி॥

[சந்திரனையொத்த முகமுடைய ஸ்ரீதேவித்தாயே! பகவானுடைய இந்த ஸ்வரூபமும் ஸ்வாதந்திரியமும் பரதத்துவ நிர்ணய ஸமயத்தில் உன்னோடு சேர்ந்திருக்கும் பெருமையைக் கொண்டு அறுதியிடப்படுகிறது. உனக்கு இனியவனான பிரானுக்கு நீர் ஸ்வரூபநிரூபகபூதையாயிருக்கும் பெருமையை யுடையீர். (இப்படி) அவரோடு ஒன்றி நிற்கையால் தேவரீரை வேதம் தனித்துப் படிப்பதில்லை.]

94. **74—வது இலக்கம் காண்க.**

95. **ஸ்வாபிமத நித்ய நிரவத்யாநுரூப ஸ்வரூப ரூப குண விபவைச்வர்ய சீலாத்யநவதிகாதிசயாஸங்க்யேய கல்யாண குண கண ஸ்ரீவல்லப!**

[(ஸர்வேச்வரனை) *தனக்கு இனியதும், எப்போதுமுள்ளதும், குற்றமற்றதும், தனக்கேற்றதுமான ஸ்வரூபம், ரூபம், ரூப குணங்கள், விபவங்கள், ஐச்வர்யம், சீலம் முதலான எல்லையற்ற பெருமையையுடைய கணக்கற்ற மங்களகுணக் கூட்டங்கள் ஆகியவற்றையுடைய பெரியபிராட்டியார்க்கு இனிய*

---

92. பார-சாந்தி 13-4; ஆச்வமேத 51-29. 93. ஸ்ரீகுணரத்நகோஶம்-28. 95. ஶரணாகதிகத்யம்-3.

வனே! இப்படிப்பட்ட பூமிப்பிராட்டிக்கும் நப்பின்னைப் பிராட்டிக்கும் நாயகனே!]

96. போக்யா வாமபி நாந்தரீயகதயா புஷ்பாங்கராகை: ஸமம்
நிர்வ்ருத்த ப்ரணயாதிவாஹநவிதௌ நீதா: பரீவாஹதாம்
தேவி த்வாமநு நீளயா ஸஹ மஹீ தேவ்ய: ஸஹஸ்ரம் ததா
யாபிஸ் த்வம் ஸ்தநபாஹுத்ருஷ்டிபிரிவ ஸ்வாபி: ப்ரியம் ச்லாகஸே

[ஸ்ரீதேவியே! பதிபத்னிகளாகிற உங்களிருவர்க்கும் புஷ்ப சந்நாதிகளைப்போல் இன்றியமையாதவராயிருப்பதினால் இனியவர்களாயிருப்பவர்களாய், கரைபுரண்ட காதல் வெள்ளப்பெருக்கிற்கு வெட்டிவிடப்பட்ட மடைபோல் நியமிக்கப் பட்டிருப்பவர்களாய் விளங்குகின்றனர் உன்னையொட்டியிருக்கும் நீளாதேவியோடுகூடிய பூதேவியும் மற்றும் ஆயிரக்கணக்கான தேவியரும். உம்முடைய கொங்கை, திருக்கைகள், திருக்கண்களுக்கு ஆகியவற்றால் காந்தனை உகப்பிப்பதுபோலே இவர்களாலும் அவனை உகப்பிக்கிறீர்.]

97. **அண்டாநாந்து ஸஹஸ்ராணும் ஸஹஸ்ராண்யயுதாநி ச।**
ஈச்ருசாநாம் ததா தத்ர கோடிகோடி சதாநி ச॥

[ஆயிரமண்டங்களின் ஆயிரங்களும், பதினாயிரங்களும், அப்படியே இப்படிப்பட்ட அண்டங்களின் கோடி கோடி நூறுகளும் ப்ரக்ருதிமண்டலத்தில் உள்ளன.]

98. **நாரஸ் த்விதி ஸர்வபும்ஸாம் ஸமூஹ: பரிகத்யதே।**
கதிராலம்பநம் தஸ்ய தேந நாராயண: ஸ்ம்ருத:॥

[நாரசப்தத்தாலே (அழிவில்லாத) ஜீவஸமூஹம் முழுவதும் சொல்லப்படுகிறது; அதற்கு அடைவிக்கும் உபாயமாகவும் அடையப்படும் ப்ராப்யமாகவுமிருப்பதால் நாராயணனெனப் படுகிறான்.]

99. **நாரசப்தேந ஜீவாநாம் ஸமூஹ: ப்ரோச்யதே புதை:।**
தேஷாமயநபூதத்வாந் நாராயண இஹோச்யதே॥

---

96. ஸ்ரீகுண-26. 97. வி-பு 2-7-27. 98. பாத்மோத்தர புராணம் 226-52. 99.

[அறிவாளிகளால் ஜீவஸமூஹம் நாரசப்தத்தால் சொல்லப் படுகிறது; அவர்களுக்கு ப்ராப்யப்ராபகமாகிற அயநமாவ தால் நாராயணனெனப்படுகிறான்.]

100. **தத் விஷ்ணோ: பரமம் பதம்। ஸதா பஶ்யந்தி ஸூரய:**

[விஷ்ணுவினுடைய அந்தப் பரமபதத்தை நித்யஸூரிகள் எப்போதும் காண்கிறார்கள்.]

101. **பிதரம் மாதரம் தாராந் புத்ராந் பந்தூந் ஸகீந் குரூந்।**
ரத்நாநி தநதாந்யாநி க்ஷேத்ராணி ச க்ருஹாணி ச ॥
ஸர்வதர்மாம்ஶ்ச ஸந்த்யஜ்ய ஸர்வகாமாம்ஶ்ச ஸாக்ஷராந்।
லோகவிக்ராந்தசரணௌ ஶரணம் தேऽவ்ரஜம் விபோ ॥

[எம்பிரானே! தந்தை, தாய், மனைவி, மக்கள், உறவினர் நண்பர், ஆசாரியர்கள், ரத்தினங்கள், தனதானியங்கள், வயல்கள், வீடுகள், எல்லா உபாயங்கள், கைவல்யமுள் ளிட்ட எல்லா உபேயங்கள் ஆகிய அனைத்தையும் வாஸனை யோடு விட்டு தேவரீருடைய உலகமளந்த பொன்னடி களையே சரணமடைந்தேன்.]

102. **யஸ்ய தேவே பரா பக்திர் யதா தேவே ததா குரௌ।**
தஸ்யைதே கதிதா ஹ்யர்த்தா: ப்ரகாஶந்தே மஹாத்மந: ॥

[எவனுக்குப் பரதெய்வத்திடம் மேலான பக்தியுள்ளதோ, தெய்வத்திடம் போலே ஆசாரியனிடமும் மேலான பக்தி யுள்ளதோ அந்த மஹாபுருஷனுக்கே உபதேசிக்கப்பட்ட இவ்வர்த்தங்கள் விளங்கும்.]

103. **அஹமஸ்ம்யபராதாநாமாலயோऽகிஞ்சநோऽகதி:।**
த்வமேவோபாயபூதோ மே பவேதி ப்ரார்த்தநாமதி: ॥
ஶரணாகதிரித்யுக்தா ஸா தேவேஸ்மிந் ப்ரயுஜ்யதாம் ॥

["நான் குற்றங்களுக்கெல்லாம் கொள்கலமாயிருப்பவன்; (உன்னைத்தவிர) வேறு உபாயமற்றவன்; வேறு உபேயமு மற்றவன். நீயே எனக்கு உபாயமாவாயாக" என்று

---

100. யஜுஸ்-காண்டம் 4-2-29. ருக்வேத விஷ்ணுஸூக்தம். 101. விஹகேந்த்ரஸம்ஹிதை-படலம்-22. 102. ச்வேதாச் வதரம் 6-23. 103. அஹிர்புத்ந்யஸம்ஹிதை 36-38.

பிரார்த்திக்கும் புத்தியே சரணாகதியெனப்படுகிறது. அது இந்த தேவனிடத்தில் செய்யப்படட்டும்.]

104. **ந தர்மநிஷ்டோऽஸ்மி ந சாத்மவேதீ**
ந பக்திமாம்ஸ் த்வச்சரணாரவிந்தே।
அகிஞ்சநோऽநந்யகதி: ஶரண்ய
த்வத்பாதமூலம் ஶரணம் ப்ரபத்யே ||

[சரணமடையத்தக்கவனே! நான் கர்மயோகத்தில் நிலையுடையேனல்லேன்; ஜ்ஞானயோகத்திலுமப்படியே; உன் திருவடிகளில் பக்தியோகத்திலும் நிஷ்டையில்லை: உன்னைத் தவிர வேறு உபாயமில்லாதவன்; வேறு ப்ராப்யமில்லாதவன்; உன் திருவடிவாரத்தை சரணமடைகிறேன்.]

105. **ஸ்ரீரிதி ப்ரதமம் நாம லக்ஷ்ம்யா:**

[லக்ஷ்மீதேவிக்கு 'ஸ்ரீ:' என்பது முதல் திருநாமம்.]

106. **அ இதி பகவதோ நாராயணஸ்ய ப்ரதமாபிதாநம் அபிததா கிம் நாம மங்களம் ந க்ருதம்**

[பகவான் நாராயணனின் முதல் திருநாமமான அகாரத்தை முதலிற்சொன்ன இவராலே என்ன மங்களம்தான் செய்யப் படவில்லை?]

107. **போக்தாரம் யஜ்ஞதபஸாம் ஸர்வலோகமஹேச்வரம்।**
ஸுஹ்ருதம் ஸர்வபூதாநாம் ஜ்ஞாத்வா மாம் ஶாந்திம் ருச்சதி ||

[யஜ்ஞங்களையும் தவங்களையும் அனுபவிப்பவனும், எல்லாவுலகங்கட்கும் பெரிய ஈச்வரனும், எல்லா உயிர்களுக்கும் நண்பனுமாக என்னை அறிந்து சாந்தியை அடைகிறான்.]

108. **ஸமோऽஹம் ஸர்வபூதேஷு ந மே த்வேஷ்யோஸ்தி ந ப்ரிய:।**
யே யஜந்தி து மாம் பக்த்யா மயி தே தேஷு சாப்யஹம் ||

---

104. ஸ்தோ-ர-22. 105.
106. மஹாபாஷ்யம்-1. 107. கீதை 5-29. 108. கீதை 9-29.

[எல்லா உயிர்கட்கும் நான் ஸமமானவன்; எனக்கு விரோதியு மில்லை; பிரியமானவனுமில்லை; என்னை பக்தியோடு உபாஸிப் பவர்கள் என்னிடத்திலுள்ளனர்; அவர்களிடத்திலும் நான் இருக்கிறேன்.]

109 **பிதேவ த்வத்ப்ரேயாந் ஜநநி பரிபூர்ணாகஸி ஜநே**
ஹிதஸ்ரோதோவ்ருத்த்யா பவதி ச கதாசித் கலுஷதீ:।
கிமேதந் நிர்த்தோஷ: க இஹ ஜகதீதி த்வமுசிதை:
உபாயைர் விஸ்மார்ய ஸ்வஜநயஸி மாதா ததஸி ந:॥

[தாயே! குற்றம் நிறைந்த ஜீவன் விஷயத்தில் படிப்படியாகத் திருத்தி நன்மை செய்வதற்காக உமது நாதன் சிலசமயம் கோபங்கொள்கின்றார்; "ஏனிந்தக் கோபம்?" என்றுகூறி உசிதமான உபாயங்களின்மூலம் குற்றங்களை அவர் மறக்கும் படிசெய்து அவருடைய திருவடியிலே சேர்ப்பிக்கிறீர். அதனாலேயே எங்களுக்குத் தாயாகிறீர்.]

110. **தாநஹம் த்விஷத: க்ரூராந் ஸம்ஸாரேஷு நராதமாந்।**
க்ஷிபாம்யஜஸ்ரமசுபாநாஸுரீஷ்வேவ யோநிஷு॥

[த்வேஷிகளும், கொடியவர்களும், மனிதரிற் கடையானவர் களும், அமங்களமானவர்களுமான அவர்களை ஸம்ஸாரத் திலேயே அஸுரஸம்பந்தமுள்ள பிறப்புக்களிலேயே எப் போதும் தள்ளுகிறேன்.]

*110.** **மத்பக்தம் ச்வபசம் வாபி நிந்தாம் குர்வந்தி யே நரா:।**
பத்மகோடிசதேநாபி ந க்ஷமாமி வஸுந்தரே॥

[நாய்மாமிசம் தின்னும் சண்டாளனாயினும் என் பக்தனை எவர்கள் நிந்தனை செய்கின்றனரோ அவர்களை நூறுகோடி பத்மகாலங்கள் கழிந்தாலும் பொறுக்கமாட்டேன்.]

111. **109-வது இலக்கம் காண்க.**

112. **த்வம் மாதா ஸர்வலோகாநாம் தேவதேவோ ஹரி: பிதா**

[எல்லாவுலகிற்கும் தேவரீர் தாயாகிறீர்; தேவதேவனான ஹரி தந்தையாகிறார்.]

---

109. ஸ்ரீகுண-52. 110. கீதை 16-19. 110. வராஹ புராணம். 112. வி-பு 1-9-1.*

113. **அகிலஜகந்மாதரம்......ஶரணமஹம் ப்ரபத்யே**

[எல்லாவுலகிற்கும் தாயான ஸ்ரீதேவியை சரணடைகிறேன்.]

114. **அஸ்யேஶாநா ஜகதோ விஷ்ணுபத்நீ**

[விஷ்ணுவுக்குப் பத்தினியாயும், (அதனாலேயே) இவ்வுலகிற்குத் தலைவியாகவும் இருப்பவள்.]

115. **ஏவமுக்தா து வைதேஹீ ஹநூமந்தம் யஶஸ்விநம் ।**
ராஜஸம்ஶ்ரய வஶ்யாநாம் குர்வந்தீநாம் பராஜ்ஞயா ॥
விதேயாநாஞ்ச தாஸீநாம் க: குப்யேத் வாநரோத்தம ॥

[இப்படிச் சொல்லப்பட்ட சீதையானவள், புகழ்படைத்த அனுமனை நோக்கிச் சொல்லுகிறாள்:- வானரர் தலைவ! ராவணனுடைய அரசனைப் பற்றியிருப்பதால் அவனுக்கு வசப்பட்டிருப்பவர்களும், அவனுடைய ஏவலினால் (எனக்குக் கொடுமை)செய்தவர்களும், அவனால் நியமிக்கப்பட்டவர்களும், (அவனுக்கு) அடிமைகளாகவுமுள்ள ராக்ஷஸிகளின் மேல் யார்தான் கோபங்கொள்ளுவார்கள்?]

116. **பாபாநாம் வா சுபாநாம் வா வதார்ஹாணும் ப்லவங்கம ।**
கார்யம் கருணமார்யேண ந கஶ்சிந் நாபராத்யதி ॥

[வானரனே! பாபிகளாயினும், நல்லோராயினும், கொல்லத்தக்கவராயினும், அவர்கள் திறத்து நல்லோனால் கருணை காட்டப்படவேண்டும். குற்றம் செய்யாதவன் ஒருவனுமில்லையே.]

117. **ஶ்ரிய:பதி: நிகிலஹேயப்ரத்யநீக கல்யாணைகதாந: ஸ்வேதர ஸமஸ்தவஸ்து விலக்ஷணாநந்த ஜ்ஞாநாநந்தைக ஸ்வரூப:**

[திருவின் நாயகனாய், தாழ்வுகளனைத்துக்கும் எதிர்த்தட்டாயிருப்பவனாய், மங்களகுணங்களுக்கு ஒரே இருப்பிடமானவனாய், தன்னையொழிந்த எல்லாப் பொருள்களிலும் சிறந்தவனாய், அளவற்ற ஞானம் ஆனந்தம் ஆகியவற்றையே ஸ்வரூபமாகவுடையவனாயிருப்பவன்.]

---

113. ஶரணாகதிகத்யம்-1. 114. யஜுர்-கா 4-4-37. 115. ரா-யு 116-38. 116. ரா-யு 116-44. 117. கீதா பாஷ்ய அவதாரிகை.

118. யத் ப்ரஹ்மகல்ப நியுதாநுபவேப்யநாஶ்யம்
தத் கில்பிஷம் ஸ்ருஜதி ஜந்துரிஹ க்ஷணார்த்தே।
ஏவம் ஸதா ஸகலஜந்மஸு ஸாபராதம்
க்ஷாம்யஸ்யஹோ ததபிஸந்திவிராமமாத்ராத்॥

[எந்தப் பாபமானது பிரமனுடைய ஆயுளைப்போன்று லக்ஷம் மடங்கு காலம் அநுபவித்தாலும் அழியாதோ, அப்படிப் பட்ட பாவத்தை ஜீவன் இங்கு அரைக்கணத்தில் செய்கிறான். இப்படி எல்லாப் பிறப்புகளிலும் குற்றம்புரிந்த அடியேனை 'இனிப் பாவஞ் செய்யமாட்டேன்' என்று பாபத்தில் விருப்பம் தவிர்ந்தவுடன் பொறுத்தருளுகிறாய். என்ன ஆச்சரியம்!]

119. 64-வது இலக்கம் காண்க.

120. ஸ தம் நிபதிதம் பூமௌ ஶரண்ய: ஶரணாகதம்।
வதார்ஹமபி காகுத்ஸ்த: க்ருபயா பர்யபாலயத்॥

[சரணமாக அடையத்தக்க அந்தக் காகுத்தன் பூமியில் விழுந்து சரணமடைந்த அந்தக் காகாஸுரனை கொலைசெய்யத் தக்கவனாயிருந்தபோதிலும் கருணையோடு காப்பாற்றினான்.]

121. மித்ரபாவேந ஸம்ப்ராப்தம் ந த்யஜேயம் கதஞ்சந॥
தோஷோ யத்யபி தஸ்ய ஸ்யாத் ஸதாமேததகர்ஹிதம்।

[நண்பனின் வேஷத்தோடு வந்தடைந்தவனையும் நான் ஒரு போதும் விடமாட்டேன். அவனுக்கு தோஷமிருந்தாலும் மிகநன்று; நல்லோர்களுக்கு அது பழிக்கத்தக்கதன்று.]

122. ஸக்ருதேவ ப்ரபந்நாய தவாஸ்மீதி ச யாசதே।
அபயம் ஸர்வபூதேப்யோ ததாம்யேதத் வ்ரதம் மம॥

[ஒருகால் சரணமடைந்தவன் பொருட்டும், 'நான் உனக்குரியேன்' என்று யாசிப்பவன் பொருட்டும், எல்லாப் பிராணிகளிடத்தினின்றும் அபயமளிக்கிறேன். இது என்னுடைய விரதம்.]

---

118. ஸ்ரீவைகுண்டஸ்தவம் 61. 120. ரா-ஸு 38-35.
121. ரா-யு 18-3. 122. ரா-யு 18-34.

123. **சரமச்லோகம்.**

124. **உபாயே க்ருஹரக்ஷித்ரோ: ஶப்த: ஶரணமித்யயம் ।**
வர்த்ததே ஸாம்ப்ரதம் சைஷ உபாயார்த்தைகவாசக: ॥

[உபாயம், வீடு, ரக்ஷகன் என்னும் மூன்று பொருள்களை யுடையது 'ஶரணம்' என்னும் சொல். இப்போது இந்த ஶரணஶப்தம் 'உபாயம்' என்னும் பொருளையே கூறுகிறது.]

125. **வைகுண்டே து பரே லோகே ஶ்ரியா ஸார்த்தம் ஜகத்பதி: ।**
ஆஸ்தே விஷ்ணுரசிந்த்யாத்மா பக்தைர் பாகவதைஸ் ஸஹ ॥

[வைகுண்டமெனும் மேலான உலகில் ஸ்ரீதேவியோடுகூட ஜகத்ஸ்வாமியாய், அறிதற்கரியவரான விஷ்ணு குணநிஷ்டர்களோடும், கைங்கர்யநிஷ்டரோடும் எழுந்தருளியிருக்கிறார்.]

126. **யோ வேத நிஹிதம் குஹாயாம் பரமே வ்யோமந்**
ஸோऽச்நுதே ஸர்வாந் காமாந் ஸஹ ப்ரஹ்மணா விபச்சிதேதி

[அநந்தனை ப்ரஹ்மத்தை பரமபதத்திலிருப்பவனாகவும், ஹ்ருதயகுஹையிலிருப்பவனாகவும் எவன் அறிகிறானோ, அந்த உபாஸகன் எல்லாவற்றையும் உணர்ந்த பரம்பொருளோடு எல்லாக் கல்யாணகுணங்களையும் அநுபவிக்கிறான்.]

127. **100–வது இலக்கம் காண்க.**

128. **கமலநயந வாஸுதேவ விஷ்ணோ**
தரணிதராச்யுத ஶங்கசக்ரபாணே ।
பவ ஶரணமிதீரயந்தி யே வை
த்யஜ பட தூரதரேண தாநபாபாந் ॥

[தூதனே! "கமலக்கண்ணனே! வாசுதேவனே! விஷ்ணுவே! பூமியைத் தரித்தவனே! அச்யுதனே! (எனக்கு) உபாயமாவாய்!" என்று எவர்கள் சொல்லுகின்றனரோ, பாபமற்ற அவர்களை வெகுதூரத்தில் விலகிச் செல்வாய்.]

129. **அஞ்ஜலி: பரமா முத்ரா க்ஷிப்ரம் தேவப்ரஸாதிநீ**

[மிகச்சிறந்த சின்னமான அஞ்ஜலி விரைவில் ஈச்வரனை உகப்பிக்கிறது.]

---

124. அஹிர் 36-36. 125. சைவபுராணம். 126. தை-ஆந 2-2. 128. வி-பு 3-7-33. 129. காருடபுராணம்-பூர்வகண்டம்11-26.

130. ஜ்ஞாநாந் மோக்ஷோ ஜாயதே ராஜஸிம்ஹ
நாஸ்த்யஜ்ஞாநாதேவமாஹுர் நரேந்த்ர।
தஸ்மாத் ஜ்ஞாநம் தத்த்வதோऽந்வேஷணீயம்
யேநாத்மாநம் மோக்ஷயேஜ் ஜந்மம்ருத்யோ:॥

[அரசர் தலைவனே! மோக்ஷம் ஜ்ஞானத்தாலேயே உண்டாகிறது; அஜ்ஞானத்தால் உண்டாகாது. இவ்வாறு அறிவாளிகள் உரைக்கின்றனர். ஆகையால் எந்த அறிவினால் பிறப்புகளிலிருந்து தன்னை விடுவித்துக்கொள்வானோ அந்த அறிவு உள்ளபடி தேடத்தக்கது.]

131. ஸக்ருதேவ ஹி சாஸ்த்ரார்த்த: க்ருதோऽயம் தாரயேந் நரம்।
உபாயாபாயஸம்யோகே நிஷ்டயா ஹீயதேऽநயா॥

[சாஸ்திரதாத்பர்யமான இந்த ப்ரபத்தி ஒருதடவை செய்யப்பட்டாலும் மனிதனை (பவக்கடலினின்றும்) தாண்டுவிக்கும். மற்ற உபாயங்களையும் (தகாத செயல்களாகிற) அபாயங்களையும் அநுஷ்டித்தால் இந்த ப்ரபத்தி நிஷ்டை நழுவுகிறது.]

132. 122-வது இலக்கம் காண்க.

133. 101-வது இலக்கம் காண்க.

134. அபாயஸம்ப்லவே ஸத்ய: ப்ராயச்சித்தம் ஸமாசரேத்।
ப்ராயச்சித்திரியம் ஸாத்ர யத் புந: சரணம் வ்ரஜேத்॥
உபாயாநாமுபாயத்வ ஸ்வீகாரேऽப்யேவமேவ ஹி॥

[(தகாத செயல்களாகிற) அபாயாநுஷ்டானம் உண்டானால் ப்ராயச்சித்தம் செய்யவேண்டும். மறுபடியும் சரணமடைவது ப்ராயச்சித்தமாகும். மற்ற உபாயங்களை உபாயமாக எண்ணி அநுஷ்டித்தாலும் இதுவே ப்ராயச்சித்தமாகும்.]

135. பவாம்ஸ்து ஸஹ வைதேஹ்யா கிரிஸாநுஷு ரம்ஸ்யதே।
அஹம் ஸர்வம் கரிஷ்யாமி ஜாக்ரத: ஸ்வபதச்ச தே॥

[தேவரீர் வைதேகியோடுகூட மலைத்தாழ்வரைகளில் விளையாடுவீர். தேவரீர் விழித்திருக்கும்போதும், கண்வளரும்போதும் உமக்கு எல்லாவடிமைகளும் செய்வேன்.]

---

130. பார-சாந்தி 323; மோக்ஷதர்மம் 3-87. 131. லக்ஷ்மீ தந்த்ரம் 17-90. 134. லக்ஷ்மீதந்த்ரம் 17-91. 135. ரா-அ 31-25.

136. ஸ ப்ராதுஶ் சரணௌ காடம் நிபீட்ய ரகுநந்தந: ।
ஸீதாமுவாசாதியஶா: ராகவம் ச மஹாவ்ரதம் ॥

[பெரும்புகழையுடைய இலக்குவன் தமையனுடைய திருவடிகளை உறுதியாகப் பிடித்துக்கொண்டு பிராட்டியிடம் விண்ணப்பித்தான்; (பிறகு) சரணாகதரக்ஷணமாகிற பெரிய விரதத்தையுடைய ஸ்ரீராமபிரானிடமும் விண்ணப்பித்தான்]

137. ஏவமுக்தஸ்து ராமேண லக்ஷ்மண: ஸம்யதாஞ்ஜலி: ।
ஸீதாஸமக்ஷம் காகுத்ஸ்தமிதம் வசநமப்ரவீத் ॥

[ராமபிரானால் இவ்வண்ணஞ் சொல்லப்பட்ட இலக்குவன் கைகூப்பியவனாய் சீதாபிராட்டியின் முன்னிலையில் காகுத்தனைநோக்கி இந்த வார்த்தையைச் சொல்லலுற்றான்.]

138. 100-வது இலக்கம் காண்க.

139. 126-வது இலக்கம் காண்க.

140. ரஸம் ஹ்யேவாயம் லப்த்வாऽऽநந்தீ பவதி

[இந்த ஜீவன் ரஸஸ்வரூபனாகிய பரம்பொருளை அடைந்து ஆனந்தமுடையவனாகிறான்.]

141. 71-வது இலக்கம் காண்க.

142. 72-வது இலக்கம் காண்க.

143. யேந யேந தாதா கச்சதி தேந தேந ஸஹ கச்சதி ।
தத் யதா தருணவத்ஸா வத்ஸம் வத்ஸோ வா மாதரம்
சாயா வா ஸத்வமநுகச்சேத் ததாப்ரகாரம் ॥

[எப்படி, இளங்கன்றையுடைய பசு கன்றையும், கன்று பசுவையும், நிழல் பிராணியையும் பின் தொடர்கின்றனவோ அப்படியே எப்படி எப்படிப் பரமபுருஷன் செல்லுகிறானோ, அப்படி அப்படியே (முக்தனும்) கூடப்போகிறான்.]

144. வாஸுதேவ தருச்சாயா நாதிஶீதா ந கர்மதா ।
நரகாங்காரஶமநீ ஸா கிமர்த்தம் ந ஸேவ்யதே ॥

---

136. ரா-அ 34-2. 137. ரா-ஆ 15-6. 140. தை-ஆந-7.
143. பரமஸம்ஹிதை. 144. விஹகேந்த்ரஸம்ஹிதை 24-14: காருட புராணம் பூர்வகண்டம் 222-25.

[மிகக்குளிர்ந்ததாயுமல்லாமலும், மிகுந்த வெப்பத்தையும் தராமலும், நரகமாகிற நெருப்பின் வெப்பத்தைத் தணிப்பது மாயிருக்கும் வாஸுதேவனுகிற மரநிழல் ஏன் அடையப் படவில்லை?]

145. ஏதத் ஸாம காயந்நாஸ்தே

[முக்தன் இந்த ஸாமகானத்தைச்செய்துகொண்டிருக்கிறான்]

146. ஸஹிதாஸ்சாப்யதாவந்த ததஸ்தே மாநவா த்ருதம் |
க்ருதாஞ்ஜலிபுடா ஹ்ருஷ்டா நம இத்யேவ வாதிந: ||

[பின்பு, அந்த ச்வேதத்வீபவாஸிகளான மஹான்கள் கைகூப்பியவர்களாய், மகிழ்ச்சியுடையவர்களாய், 'நம:' என்றே சொல்லுமவர்களாய் ஒன்றுகூடி விரைவில் ஓடினார்கள்.]

147. 143-வது இலக்கம் காண்க.

148. 89-வது இலக்கம் காண்க.

149. பவந்தமேவாநுசரந்நிரந்தரம்
ப்ரசாந்த நிஸ்சேஷ மநோரதாந்தர: |
கதாஹமைகாந்திக நித்யகிங்கர:
ப்ரஹர்ஷயிஷ்யாமி ஸநாதஜீவித: ||

[அடியேன் எப்போதும் தேவரீரையே பின்பற்றிநின்று, மற்ற ஆசைகளெல்லாம் அடியோடு அழியப்பெற்று, ஒரு படிப்பட்டதாய், நித்யமான கைங்கரியத்தையுடையவனாய், வாழ்வின் பயன் பெற்றவனாய், என்றுதான் தேவரீரையே மிகவும் உகப்பிக்கப்போகிறேன்?]

150. நித்யகிங்கரோ பவாநி

[நித்யகைங்கரியம் செய்பவனாக ஆகக்கடவேன்.]

151. 88-வது இலக்கம் காண்க.

152. போக்தாஹம் மம போகோயம்

[நான் அனுபவிப்பவன்; இது என்னுடைய போகம்.]

---

145. *தை-ப்ருகு 10-5.* *146.* *பார-சாந்தி 344-45.*
149. *ஸ்தோ-ர-46.* *150.* *சரணாகதிகத்யம்.* *152.*

153. அநாத்மந்யாத்மாபுத்திர்யா சாஸ்வே ஸ்வமிதி யா மதி: ।
ஸம்ஸாரதருஸம்பூதி பீஜமேதத் த்விதா ஸ்திதம் ॥

[ஆத்மாவல்லாத தேஹத்தில் ஆத்மா என்னும் புத்தியும், தனதல்லாத வஸ்துவில் தன்னுடையது என்னும் புத்தியும், ஸம்ஸாரமாகிய வ்ருக்ஷத்தின் வ்ருத்திக்கு இருவகையாயிருக்கும் விதையாகும்.]

154. மநோவாக்காயை: அநாதிகால ப்ரவ்ருத்தாநந்தாக்ருத்யகரண க்ருத்யாகரண பகவதபசார பாகவதாபசாராஸஹ்யாபசார ரூப நாநாவிதாநந்தாபசாராந் ஆரப்தகார்யாந் அநாரப்தகார்யாந் க்ருதாந் க்ரியமாணாந் கரிஷ்யமாணாம்ச்ச ஸர்வாந் அசேஷத: க்ஷமஸ்வ

[மனம், மொழி, மெய் என்னும் முக்கரணங்களாலும் அநாதி காலமாகத் தொடரும் கணக்கற்றவையான தகாதனசெய்வனவும், தக்கன செய்யாமையும், பகவானிடம் செய்யும் குற்றமும், பக்தர்களிடம் செய்யும் குற்றமும், பொறுக்க வொண்ணுக் குற்றமுமாகிற பலவித எல்லையற்ற குற்றங்களையும், பயன் தரத்தொடங்கியவற்றையும், பயன் தரத்தொடங்காதவற்றையும், செய்தவற்றையும், செய்கிறவற்றையும், செய்யப்புகுமவற்றையும் ஆகிய இவையெல்லாக் குற்றங்களையும் ஒன்றுவிடாமல் பொறுத்தருளவேணும்.]

155. அநாதிகால ப்ரவ்ருத்த விபரீத ஜ்ஞானம் ஆத்மவிஷயம் க்ருத்ஸ்ந ஜகத்விஷயஞ்ச விபரீத வ்ருத்தஞ்ச அசேஷவிஷயம் அத்யாபி வர்த்தமாநம் வர்த்திஷ்யமாணஞ்ச ஸர்வம் க்ஷமஸ்வ

[தன் விஷயமாகவும், மற்றுள்ள உலகின் விஷயமாகவும் அநாதிகாலமாகத் தொடரும் (ஒன்றை மற்றொன்றாக நினைக்கும்) மாறுபட்ட அறிவையும் தகாத ஒழுக்கத்தையும், எல்லா விஷயத்திலும் இன்றுமிருப்பவையும் இருக்கப்புகுமவையுமான எல்லா விபரீதஜ்ஞாந வ்ருத்தங்களையும் பொறுத்தருளுவாய்.]

156. மதீயாநாதி கர்ம ப்ரவாஹப்ரவ்ருத்தாம் பகவத்ஸ்வரூபதிரோதாநகரீம் விபரீதஜ்ஞாநஜநநீம் ஸ்வவிஷயாயாச்ச போக்யபுத்தேர் ஜநநீம் தேஹேந்த்ரியத்வேந போக்யத்வேந ஸூக்ஷ்மரூபேண சாவஸ்திநாம் தைவீம் குணமயீம் மாயாம் தாஸபூதம்
'சரணாகதோஸ்மி தவாஸ்மி தாஸ:' இதி வக்தாரம் மாம் தாரய

---

153. வி-பு 6-7-11. 154, 155, 156. சரணாகதிகத்யம்.

[என்னுடைய அநாதியான கருமப்பெருக்கால் உண்டானதும், பகவானுடைய ஸ்வரூபத்தை (நானறியமுடியாதபடி) மறைப்பதும், மாறுபட்ட அறிவை விளைப்பதும், (ப்ரக்ருதியாகிற) தான் இனியதென்னும் அறிவை விளைப்பதும், தேஹமாகவும், இந்திரியமாகவும், அநுபவிக்கப்படும் இனியதாகத்தோற்றும் விஷயங்களாகவும் (ஸ்தூலரூபமாகவும்), (ப்ரக்ருதி மஹான் முதலான) ஸூக்ஷ்மரூபமாகவுமிருப்பதும், தேவனுகிற உனக்கு விளையாட்டுக் கருவியாயிருப்பதும், ஸத்வரஜஸ்தமோகுணமயமாயிருப்பதுமான ப்ரக்ருதியை, உனக்கடியவனாய், 'சரணமடைந்தேன்; உனக்குரியேனாவேன்' என்று சொல்லுமவனை உன்னைத் தாண்டுவிப்பாய்.]

157. **146-வது இலக்கம் காண்க.**

158 **ப்ரக்ஷால்ய பாதாவாசாமேத் ஸ்நாத்வா விதிவதர்ச்சயேத்**
ஸ்தித்வார்க்யம் பாநவே தத்யாத் த்யாத்வா தேவம் ஜபேந் மநும்

[கால்களைக் கழுவிக்கொண்டபின்புதான் ஆசமனம் செய்யவேண்டும்; ஸ்நாநம் செய்தபின்புதான் விதிப்படி பூஜிக்கவேண்டும்; நின்றுகொண்டுதான் அர்க்யத்தை சூரியனுக்குக் கொடுக்கவேண்டும்; தேவனை தியானித்துக்கொண்டுதான் மந்திரத்தை ஜபிக்கவேண்டும்.]

159. **தஸ்மாதஸக்தஸ் ஸததம் கார்யம் கர்ம ஸமாசர।**
அஸக்தோ ஹ்யாசரந் கர்ம பரமாப்நோதி பூருஷ:।
கர்மணைவ ஹி ஸம்ஸித்திமாஸ்திதா ஜநகாதய:॥

[ஆகையால், (கர்மத்தில்) பற்றில்லாமலே எப்போதும் செய்யவேண்டிய கருமத்தைச் செய்வாயாக; பற்றில்லாமல் கர்மத்தைச் செய்பவன் ஆத்மாவை அடைகிறான். ஜனகன் முதலானோர் கர்மத்தினாலேயே ஆத்மஸாக்ஷாத்காரத்தை அடைந்தனரன்றோ.]

160. **ச்ரேயாந் த்ரவ்யமயாத் யஜ்ஞாத் ஜ்ஞாநயஜ்ஞ: பரந்தப।**
ஸர்வம் கர்மாகிலம் பார்த்த ஜ்ஞாநே பரிஸமாப்யதே॥

[எதிரிகளைக் காய்பவனே! (திரவியம், ஞானம் என்னும் இரண்டு பிரிவுகளையுடைய யஜ்ஞத்தில்) திரவியமயமான

159. கீதை 3-19. 160. கீதை 4-33

யஜ்ஞத்தைக்காட்டிலும் ஞானமயமான யஜ்ஞம் சிறந்தது: குந்தீ புத்திரனே! எல்லாக்கருமமும், அதையொட்டிய மற்றெல்லாமும் ஞானத்தில் முடிவடைகின்றன.]

161. **யதைதாம்ஸி ஸமித்தோऽக்நிர் பஸ்மஸாத் குருதேऽர்ஜுந ।**
ஜ்ஞாநாக்நி: ஸர்வகர்மாணி பஸ்மஸாத் குருதே ததா ।
ந ஹி ஜ்ஞாநேந ஸத்ருஶம் பவித்ரமிஹ வித்யதே ।
தத் ஸ்வயம் யோகஸம்ஸித்த: காலேநாத்மநி விந்ததி ॥

[அர்ஜுனனே! கொழுந்துவிட்டெரியும் நெருப்பானது எப்படி விறகுகளைச் சாம்பலாக்குகிறதோ, அப்படியே அறிவாகிற நெருப்பு எல்லாக் கர்மங்களையும் சாம்பலாக்கிவிடுகிறது. ஞானத்தைப்போல் சுத்தப்படுத்தும் பொருள் இவ்வுலகில் இல்லையன்றோ. அப்படிப்பட்ட ஞானத்தை ஜ்ஞானம் கலந்த கர்மயோகம் கைவந்தவன் நாள் செல்லச்செல்ல தானே தன்னிடத்தில் அடைகிறான்.]

162. **பக்த்யா த்வநந்யயா ஶக்ய அஹமேவம்விதோऽர்ஜுந ।**
ஜ்ஞாதும் த்ரஷ்டும் ச தத்த்வேந ப்ரவேஷ்டும் ச பரந்தப ॥

[அர்ஜுனா! எதிரிகளை அழிப்பவனே! ஒரு பலனை எதிர்பாராத பக்தியினாலேயே இம்மாதிரியான நான், உண்மையாக அறிவதற்கும், பார்ப்பதற்கும், நுழைவதற்கும் தக்கவன்.]

163. **மந்மநா பவ மத்பக்தோ மத்யாஜீ மாம் நமஸ்குரு ।**
மாமேவைஷ்யஸி ஸத்யம் தே ப்ரதிஜாநே ப்ரியோऽஸி மே ॥

[என்னிடத்தில் மனத்தை வைத்தவனாகவும், என்னுடைய பக்தனாகவும், என்னை ஆராதிப்பவனாகவும் ஆவாயாக. என்னை நமஸ்கரிப்பாயாக. என்னையே அடைவாய்; இது ஸத்யம். உனக்கு ப்ரதிஜ்ஞை செய்கிறேன். எனக்குப் பிரியனன்றோ நீ.]

164. **ஜந்ம கர்ம ச மே திவ்யம் ஏவம் யோ வேத்தி தத்த்வத: ।**
த்யக்த்வா தேஹம் புநர்ஜந்ம நைதி மாமேதி ஸோऽர்ஜுன ॥

[அர்ஜுனா! என்னுடைய அப்ராக்ருதமான பிறப்பையும், சேஷ்டிதங்களையும் எவன் இப்படி உண்மையாக அறிகிறானோ,

---

161. கீதை 4-37, 38. 162. கீதை 11-54 163. கீதை 9-34.
164. கீதை 4-9

அவன் தேஹத்தை விட்டு மறுஜன்மம் அடையான்; என்னை அடைகிருன்.]

165. இதி குஹ்யதமம் ஶாஸ்த்ரமிதமுக்தம் மயாऽநக।
ஏதத் புத்த்வா புத்திமாந் ஸ்யாத் க்ருதக்ருத்யஶ்ச பாரத॥

[இவ்வாருக (நானே புருஷோத்தமனென்பதைச் சொல்லும்) மிகர்ஹஸ்யமான இந்தப் புருஷோத்தமவித்யையென்னும் சாஸ்திரம் என்னுலே சொல்லப்பட்டது. பரதவம்சத்தில் பிறந்து குற்றமற்று விளங்கும் அர்ஜுனனே! இதை அறிந்து கொண்டால் நல்லறிவையுடையவனுகவும், செய்யவேண்டியதைச் செய்தவனுகவுமாகலாம்.]

166. தேஶோऽயம் ஸர்வகாமதுக்

[இந்த தேசம் எல்லா இஷடங்களையும் கொடுக்கும்.]

167. வாஸுதேவாச்ரயோ மர்த்யோ வாஸுதேவ பராயண:।
ஸர்வபாபவிசுத்தாத்மா யாதி ப்ரஹ்ம ஸநாதநம்॥

[வாஸுதேவனை அடைந்து, வாஸுதேவனையே மேலான புகலாகக்கொண்ட மனிதன், எல்லாப் பாபங்களினின்றும் விடுபட்ட ஸ்வரூபத்தையுடையவனுய் பரம்பொருளை அடைகிருன்.]

168. க்ருதேந வாத தைலேந தீபம் யோ ஜ்வாலயேந் நர:।
விஷ்ணவே விதிவத் பக்த்யா தஸ்ய புண்யபலம் ஶ்ருணு॥
விஹாய ஸகலம் பாபம் ஸஹஸ்ராதித்யஸந்நிப:।
ஜ்யோதிஷ்மதா விமாநேந விஷ்ணுலோகே மஹீயதே॥

[எந்த மனிதன் விஷ்ணுவின் பொருட்டு, அன்போடு சாஸ்திரத்திற் சொன்ன முறைப்படி நெய்யினுலாவது அல்லது எண்ணெயினுலாவது திருவிளக்கை எரியும்படி செய்கிருனே, அவனுடைய புண்ணியத்தின் பலனைக்கேள்; அவன் எல்லாப்பாபங்களையும் விட்டு, ஆயிரம் சூரியனுக்கு ஒப்பானவனுகி, ஒளிபெற்ற விமானத்தாலே விஷ்ணு லோகத்தில் பெருமை பெறுகிருன்.]

---

165. கீதை 15-20. 166. காருட புராணம்-ஸ்ரீரங்கமாஹாத்ம்யம் 11-5. 167. பாரத-ஆநுசா 254-132.
168. நாரஸிம்ஹபுராணம் 33-27.

169. ஸந்த்யாஹீநோऽசுசிர் நித்யமநர்ஹ: ஸர்வகர்மஸு।

[ஸந்த்யாவந்தனம் பண்ணுதவன் பரிசுத்தியற்றவன்; எப்போதும் எல்லாக் கருமங்களிலும் தகுதியற்றவன்.]

170. சோதநாலக்ஷணோர்த்தோ தர்ம:

['இதைச் செய்; அதைச் செய்யாதே' என்றாற்போன்ற ஒரு விதியினால் விதிக்கப்படும் பொருள் தர்மம் எனப்படுகிறது.]

171. ப்ரஹ்மஹத்யா ஸுராபாநம் ஸ்தேயம் குர்வங்கநாகம:।
மஹாந்தி பாதகாந்யாஹு: ஸம்ஸர்க்கஶ்சாபி தை: ஸஹ ॥

[அந்தணனைக் கொல்லுதல், கள்குடித்தல், பொன்னைத் திருடுதல், ஆசார்ய பத்தினியைப் புணர்தல் ஆகிய இவையும், இவை செய்தவரோடு கூடுதலும் (பஞ்ச) மஹாபாதகங்கள் எனப்படுகின்றன.]

172. அத பாதகபீதஸ்த்வம் ஸர்வபாவேந பாரத।
விமுக்தாந்ய ஸமாரம்போ நாராயணபரோ பவ ॥

[பரதவமிசத்துதித்தவனே! இனி, நீ (மற்ற உபாயங்களை அநுஷ்டித்தலாகிற) பாவத்தைச் செய்ய அஞ்சினாயாகில், முழுமனத்தோடு வேறு முயற்சிகளைக் கைவிட்டு நாராயணனிடமே உபாயபுத்தியுள்ளவனாக இருப்பாயாக.]

173. ச்ராத்தபோஜநகாலே து தீபோ யதி விநச்யதி।
புநரந்நம் ந போக்தவ்யம் புக்த்வா சாந்த்ராயணம் சரேத் ॥

[சிராத்தத்தில் புசிக்கும்போது விளக்கு அணைந்தால் உணவை மறுபடி புசிக்கலாகாது. புசித்தால், (அதற்கு ப்ராயச்சித்தமாக) சாந்த்ராயணவிரதத்தை அனுஷ்டிக்கவேண்டும்.]

174. ஸ்நாத்வா புஞ்ஜீத

[ஸ்நானம் செய்துவிட்டே புசிக்கவேண்டும்.]

175. யோ வஜ்ரபாதாஶநி ஸந்நிபாதாத்
ந சுக்ஷுபே நாபி சசால ராஜா।

---

169. தக்ஷஸ்ம்ருதி 1-12. 170. பூர்வமீமாம்ஸை 1-1-2.
171. மநுஸ்ம்ருதி 11-54. 172. விஷ்ணுதர்மம் 66-71.
173. உசந:ஸம்ஹிதை 5-50. 174. 175. ரா-யு 59-140.

ஸ ராமபாணாபிஹதோ ப்ருசார்த்த:
சசால சாபஞ்ச முமோச வீர: ||

[எந்த ராவணன் வஜ்ராயுதத்தால் அடிபட்டாலும், இடி விழுந்தாலும் மனக்கலக்கத்தை அடையவில்லையோ, சரீரம் நடுங்கப்பெறவுமில்லையோ, அந்த ராவணன் ஸ்ரீராம பாணத்தாலே அடிக்கப்பெற்று மிகவும் கலங்கி நடுநடுங்கினான். வீரனாயிருந்தும்(நிராயுதபாணியை ராகவன் அடிக்க மாட்டான் என்னும் நினைவாலே) வில்லையும் கைவிட்டான்.]

176. **கச்சாநுஜாநாமி ரணார்த்திதஸ் த்வம் ப்ரவிச்ய ராத்ரிஞ்சரராஜ லங்காம்**
ஆச்வாஸ்ய நிர்யாஹி ரதீ ச தந்வீ ததா பலம் த்ரக்ஷ்யஸி மே ரதஸ்த:

[ராக்ஷஸராஜனே! நீ யுத்தத்தில் களைப்படைந்துவிட்டாய்; திரும்பிப்போ; நானே அனுமதிக்கிறேன். லங்கையில் நுழைந்து, களைப்பாற்றிக்கொண்டு, ரதத்தையுடையவனாகவும், வில்லையுடையவனாகவும் திரும்பி வா. ரதத்திலிருந்துகொண்டு அப்போது என்னுடைய பலத்தைப் பார்ப்பாய்.]

177. **ராமோ விக்ரஹவாந் தர்ம: ஸாது: ஸத்யபராக்ரம: |**
ராஜா ஸர்வஸ்ய லோகஸ்ய தேவாநாம் மகவாநிவ ||

[ராமன் தர்மமே உருவெடுத்தவன்; நல்லொழுக்க முடையவன்; உண்மை வீரன்; தேவர்களுக்கு இந்திரனைப்போல் எல்லாவுலகிற்கும் இவன் அரசனாகிறான்.]

178. **யே ச வேதவிதோ விப்ரா: யே சாத்யாத்மவிதோ ஜநா: |**
தே வதந்தி மஹாத்மாநம் க்ருஷ்ணம் தர்மம் ஸநாதநம் ||

[வேதமறிந்த வேதியர்களும், வேதாந்தமுணர்ந்த வித்தமர்களும் மஹாபுருஷனான க்ருஷ்ணனையே பழைமையான தர்மஸ்வரூபியென்று சொல்லுகிறார்கள்.]

179. **ஹ்ருஷீகேசம் ததா வாக்யமிதமாஹ மஹீபதே |**
ஸேநயோருபயோர் மத்யே ரதம் ஸ்தாபய மேச்யுத ||

[அரசனே! அப்போது அர்ஜுனன் கண்ணனைப் பார்த்து இவ்வாறு வார்த்தை சொன்னான்,-- ''அச்சுதனே! இரண்டு சேனைகளுக்குமிடையே என் தேரை நிறுத்துவாய்'' என்று.]

---

176. ரா-யு 59-144. 177. ரா-ஆ 37-13. 178. பார-ஆர-தீர்த்த 86-26. 179. கீதை 1-22.

180. ஸர்வஜ்ஞோபி ஹி ஸர்வேசஸ் ஸதா காருணிகோऽபி ஸந் ।
ஸம்ஸாரதந்த்ர வாஹித்வாத் ரக்ஷ்யாபேக்ஷாம் ப்ரதீக்ஷதே ॥

[ஸர்வேச்வரன் எல்லாமறிந்தவனுயிருந்தபோதிலும், எப்போதும் கருணையுடையவனுயிருந்தபோதிலும், ஸம்ஸாரத்தை (நெறிவழுவாமல்) நடத்திக்கொண்டுபோக வேண்டியிருத்தலால் ரக்ஷிக்கப்படவேண்டிய ஜீவன் ('என்னை ரக்ஷிக்கவேண்டும்' என்று) அபேக்ஷிப்பதாகிற ஒன்றை மாத்திரம் எதிர்பார்க்கிறுன்.]

181. பரித்ராணுய ஸாதூநாம் விநாசாய ச துஷ்க்ருதாம் ।
தர்மஸம்ஸ்தாபநார்த்தாய ஸம்பவாமி யுகே யுகே ॥

[ஸாதுக்களை ரக்ஷிப்பதற்கும், தீயவர்களை அழிப்பதற்கும், வைதிகதர்மத்தை நிலைநிறுத்துவதற்கும் யுகந்தோறும் பிறக்கிறேன்.]

182. 178–வது இலக்கம் காண்க.

183. யஸ் ஸர்வஜ்ஞஸ் ஸர்வவித் யஸ்ய ஜ்ஞாநமயம் தப:

[எந்தப் பரமாத்மாவானவன் எல்லா வஸ்துக்களுடைய ஸ்வரூபத்தையும், ஸ்வபாவங்களையும் அறிகிறுனே, எவனுடைய ஸங்கல்பமானது ஞானமயமாயிருக்கிறதோ......]

184. பராஸ்ய சக்திர் விவிதைவ ச்ரூயதே ஸ்வாபாவிகீ ஜ்ஞாநபலக்ரியா ச

[இந்தப் பரமாத்மாவுக்குக்கு பலபடிப்பட்டதும், மேலானதுமான சக்தியும், இயற்கையான ஞானமும், பலமும் (ஸ்ருஷ்டித்தல் முதலிய) காரியங்களும் உண்டென்று அறியப்படுகிறது.]

185. பலமத உபபத்தே:

[மோக்ஷபலன் ஈச்வரனுலேயே உண்டாகிறது; பொருத்தமிருக்கையாலே.]

186. ஸகேதி மத்வா ப்ரஸபம் யதுக்தம்
ஹே க்ருஷ்ண ஹே யாதவ ஹே ஸகேதி ।
அஜாநதா மஹிமாநம் தவேதம்
மயா ப்ரமாதாத் ப்ரணயேந வாபி ॥

---

180. லக்ஷ்மீதந்த்ரம் 17-78. 181. கீதை 4-8.
183. முண்டக 1-1-10. 184. ச்வே 6-8.
185. ப்ரஹ்மஸூத்ரம் 3-2-37. 186. கீதை 11-41.

யச்சாபஹாஸார்த்தமஸத்க்ருதோஸி
விஹாரஶய்யாஸந போஜநேஷு।
ஏகோऽதவாப்யச்யுத தத்ஸமக்ஷம்
தத் க்ஷாமயே த்வாமஹமப்ரமேயம் ||

[அச்யுதனே! உன்னுடைய இந்த மஹிமையை அறியாத என்னால், கவனமின்மையாலும், அன்பினாலும் (உன்னை) நண்பனென எண்ணி 'ஏ கிருஷ்ணா! யாதவா! நண்பா!' என்று (உன் விஷயத்தில்) சொல்லப்பட்டது யாதொன்றுண்டோ, பரிஹாஸத்திற்காக விளையாடும்போதும், படுத்திருக்கும் போதும், உட்கார்ந்திருக்கும்போதும், உண்ணும்போதும், ஒருவனாயிருக்கும்போதும்,பலர் முன்னிலையிலும் (நீ என்னால்) அவமதிக்கப்பட்டது யாதொன்றுண்டோ அது அனைத்தையும், நான் அளத்தற்கரிய உன்னைப் பொறுக்கும்படி வேண்டுகிறேன்.]

187. தைவீ ஹ்யேஷா குணமயீ மம மாயா துரத்யயா।
மாமேவ யே ப்ரபத்யந்தே மாயாமேதாம் தரந்தி தே ||

[தேவனாகிற என்னால் நிர்மிக்கப்பட்டதும், முக்குணங்களை உடையதுமான இந்த என்னுடைய மாயை தாண்ட அரிதானது. என்னையே எவர்கள் சரணமடைகிறார்களோ அவர்கள் இந்த மாயையைத் தாண்டுகிறார்கள்.]

188. தமேவ சாத்யம் புருஷம் ப்ரபத்யே-
யத: ப்ரவ்ருத்தி: ப்ரஸ்ருதா புராணீ

[ஆதிபுருஷனான அவனையே சரணடைந்து, (அஜ்ஞான மழிதல் முதலான) இவையனைத்துக்கும் (ஸாதனமான) (முமுக்ஷுக்களுடைய) செயல்கள் பழங்காலத்திலிருந்து ஏற்பட்டிருக்கிறது.]

189. 103-வது இலக்கம் காண்க.

190. 191-வது இலக்கம் காண்க.

191. ஆக்ஷேபத: ப்ராப்தாதாபிதா நிகஸ்யைவ க்ராஹ்யத்வாத்

[அர்த்தபலத்தால் வருவதைக்காட்டிலும், சப்தபலத்தால் வருவதே ஏற்றுக்கொள்ளத் தக்கதாகையால்.]

192. கத்யர்த்தா புத்யர்த்தா:

---

187. கீதை 7-14. *188.* கீதை 15-4. *191.* ஸ்ரீபாஷ்யாரம்பம்.
192. இலக்கண நூல்வழக்கு.

[கதியைச் சொல்லும் சப்தங்கள் (மானஸகதியான) புத்தியையும் சொல்லுகின்றன.]

193. **183–வது இலக்கம் காண்க.**

194. **184–வது இலக்கம் காண்க.**

195. **ததா வித்வாந் புண்யபாபே விதூய நிரஞ்ஜந: பரமம் ஸாம்யமுபைதி**

[பரமபுருஷனை ஸாக்ஷாத்கரித்தவுடன் ப்ரஹ்மஜ்ஞானியானவன், புண்யபாபங்களைவிட்டு, ப்ரக்ருதிஸம்பந்தமற்றவனாய், (புருஷோத்தமனுடன்) மேலான ஸாம்யத்தை அடைகிறான்.]

196. **உந்மாதஶ் சித்த விப்ரம:**

[உன்மாதமென்னும் சொல்லும் மனமயக்கமும் பர்யாயம் (ஒருபொருளுடையவை.)]

197. **172–வது இலக்கம் காண்க.**

198. **163–வது இலக்கம் காண்க.**

199. **ஏஷ நாராயண: ஸ்ரீமாந் க்ஷீரார்ணவநிகேதந: ।**
நாகபர்யங்கமுத்ஸ்ருஜ்ய ஹ்யாகதோ மதுராம் புரீம் ॥

[பாற்கடலில் பள்ளிகொண்டவனான இந்த ஸ்ரீமந்நாராயணனே பைந்நாகப்பாயை விட்டு மதுராபுரிக்கு வந்திருக்கிறான்.]

200. **புண்யா த்வாரவதீ யத்ர தத்ராஸ்தே மதுஸூதந: ।**
ஸாக்ஷாத் தேவ: புராணோऽஸௌ ஸ ஹி தர்ம: ஸநாதந: ॥

[புண்ணியமான த்வாரகையிருக்குமிடத்தில் மதுஸூதனனிருக்கிறான்; அவன்தான் இயற்கையான தேவனும், பழையோனுமிருப்பவன், அவனே பழைமையான தர்மமாவான்]

201. **யத்ர நாராயணோ தேவ: பரமாத்மா ஸநாதந: ।**
தத்ர க்ருத்ஸ்நம் ஜகத் பார்த்த தீர்த்தாந்யாயதநாநி ச ॥

[பார்த்தனே! பரம்பொருளும் பழையோனும் தேவனுமான நாராயணன் எங்கிருக்கிறானோ அங்குதான் எல்லாவுலகும் தீர்த்தங்களும் கோயில்களுமுள்ளன.]

202. **178–வது இலக்கம் காண்க.**

---

195. முண்டக 3-1-3. 196. அமர 1-200. 198. கீதை 8-65.
199. பார-ஆர-தீர்த்த 86-24; ஹரிவம்சம் 133-62.
200. பார-ஆர 86-25. 201. பார-ஆர 88-27.

203. பவித்ராணாம் ஹி கோவிந்த: பவித்ரம் பரமுச்யதே।
புண்யாநாமபி புண்யோऽஸௌ மங்களாநாஞ்ச மங்களம் ॥

[புனிதப்படுத்தும் பொருள்களில் மேலான புனிதப்பொருளாகச் சொல்லப்படுகிறான் கோவிந்தன்; புண்ணியங்களுக்கெல்லாம் புண்ணியமாயிருப்பவனும், மங்களங்களுக்கெல்லாம் மங்களமாயிருப்பவனுமவனே.]

204. க்ருஷ்ண ஏவஹி லோகாநாமுத்பத்திரபி சாப்யய:।
க்ருஷ்ணஸ்ய ஹி க்ருதே பூதமிதம் விச்வம் சராசரம் ॥

[கண்ணனே உலகங்களையெல்லாம் படைப்பவனும் அழிப்பவனுமாவானன்றோ; ஸ்தாவரஜங்கமரூபமான இவ்வுலகெல்லாம் கண்ணனுக்கே உரியதன்றோ.]

205. கார்ப்பண்ய தோஷோபஹததஸ்வபாவ:
ப்ருச்சாமி த்வாம் தர்மஸம்மூடசேதா:।
யச்ச்ரேய: ஸ்யாந்நிச்சிதம் ப்ரூஹி தந்மே
சிஷ்யஸ் தேऽஹம் சாதி மாம் த்வாம் ப்ரபந்நம் ॥

[குறுகிய மனப்பான்மையாகிற குற்றத்தால் நலங்கெட்ட நான் தர்மம் இன்னதென்றறியாமல் உன்னைக் கேட்கிறேன். எனக்கு உறுதியாக எது நன்மைபயக்குமோ அதைச்சொல்லு. உனக்கு நான் சீடன். உன்னைச் சரணமடைந்த எனக்கு நல்லறிவை உண்டாக்குவாய்.]

206. தமேவ தீரோ விஜ்ஞாய ப்ரஜ்ஞாம் குர்வீத ப்ராஹ்மண:।
நாநுத்யாயாத் பஹூந் சப்தாந் வாசோ விக்லாபநம் ஹி தத் ॥

[வேதமோதியவன் அறிவுடையவனாய், அந்தப் பரமபுருஷனையே (ச்ரவணமநநங்களால்) அறிந்து தியானம் செய்யக் கடவன். (அவனையொழிந்தவற்றைச் சொல்லும்) பல சொற்களை மனத்தாலும் எண்ணவேண்டாம். அப்படி எண்ணுவது வார்த்தைகளை வாட்டுவதேயாகுமன்றோ.]

203. பார-ஆர 86-27 204. பார-ஸபா 41-23.
205. கீதை 2-7. 206. ப்ருஹ 6-4-21.

207. ஓமித்யேவ த்யாயதாத்மாநம் ஸ்வஸ்தி வ: பாராய தமஸ: பரஸ்தாத்

[ப்ரக்ருதிக்கு அப்பாலுள்ள அவனைப் பெறுவதற்கு, பரமாத்மாவை 'ஓம்' என்றே தியானியுங்கள்; உங்களுக்கு நன்மையுண்டாகும்.]

208. **ஆத்மாநமேவ லோகமுபாஸீத**

[காணத்தக்க பரமாத்வை உபாஸியுங்கள்.]

209. **ஆத்மா வா அரே த்ரஷ்டவ்ய:**
ஸ்ரோதவ்யோ மந்தவ்யோ நிதித்யாஸிதவ்ய:

[கேட்கத்தக்கதும், நினைக்கத்தக்கதுமான ஆத்மா தியானிக்கத் தக்கது; பார்க்கத்தக்கது.]

210. **ஜந்மாந்தர ஸஹஸ்ரேஷு தபோஜ்ஞாநஸமாதிபி: ।**
நராணும் க்ஷீணபாபாநாம் க்ருஷ்ணே பக்தி: ப்ரஜாயதே ॥

[ஆயிரக்கணக்கான பிறப்புக்களில் கர்மஜ்ஞானபக்தியோகங்களை அனுஷ்டித்துப் பாபம் நீங்கப்பெற்ற மனிதர்களுக்குக் கண்ணனிடம் பக்தியானது உண்டாகிறது.]

211. 162-வது இலக்கம் காண்க.

212. 210-வது இலக்கம் காண்க.

213. 177-வது இலக்கம் காண்க.

214. **ஆநயைநம் ஹரிச்ரேஷ்ட தத்தமஸ்யாபயம் மயா ।**
விபீஷணோ வா ஸுக்ரீவ! யதி வா ராவண: ஸ்வயம் ॥

[வானரர்களுள் சிறந்தவனான ஸுக்ரீவனே! இவனை அழைத்துவா; விபீஷணனாயிருந்தாலும், ராவணன் தானேயாயிருந்தாலும், இவனுக்கு என்னால் அபயமளிக்கப்பட்டது.]

215. **178-வது இலக்கம் காண்க.**

ஸ்ரீக்ருஷ்ணஸ்வாமிதாஸ விரசிதமான
முமுக்ஷுப்படி வ்யாக்யாந ப்ராமாணத்திரட்டு முற்றிற்று.
ஜீயர் திருவடிகளே சரணம்.

---

207. முண்டக 2-2-6. 208. ப்ருஹ 3-4-15. 209. ப்ருஹ 6-5-6.
210. லக்வத்ரிஸ்மிருதி-1. 214. ரா-யு 18-35.

ப்ரமாண அநுக்ரமணிகை

அ

அ இதிபகவ 106
அகாரஞ்சாப் 55
அகாரச்சித் 80
அகாரேஞேச் 81
அகாரோவை 60
அகிஞ்சநோகதி 103
அகிஞ்சநோநந் 104
அகிஞ்சித்கர 89
அகிலஜகந் 113
அஞ்ஜலி: பர 129
அண்டாநாந்து 97
அதபாதக 172
அநந்தாவை 28
அநந்யாராக 67
அநந்யாஹி 68
அநாத்மந்யா 153
அநாதிகால 155
அபயம்ஸர்வ 122
அஸந்நேவ 1
அஹம் மே 90

ஆ

ஆக்ஷேபத:ப்ரா 191
ஆத்மதாஸ்யம் 74
ஆத்மாநமேவ 208
ஆத்மாவா 209
ஆர்த்தாவிஷண் 42
ஆஸ்தாந்தே 24
ஆஸ்திகோதர்ம 20

ஈ

ஈரோஸி தவ்ய 16

உ

உத்தார்த்த 87
உந்மாதஸித்த 196
உபாயேக்ருஹ 124

ऋ

ருசோ யஜூம்ஷி 6

ஏ

ஏகோஹவை 34
ஏதத்புத்த்வா 165
ஏதத்ஸாம 145
ஏவம்ஸம்ஸ்ருதி 17
ஏஷ நாராயண 199
ஏஷ ஸர்வபூதா 39

ஐ

ஐஹலௌகிக 49

ஓ

ஓங்காரப்ரபவா 58
ஓமித்யக்ரே 52
ஓமித்யாத்மாந 207
ஓமித்யேகாக்ஷர 52

க

க:குப்யேத் 115
கதஞ்சந நத்ய 121
கமலநயந 128
கர்மணைவஹி 159
கிந்தத்ர 44
கிந்தேந 94
கிமேதந் 111
க்ருபயாபர் 120
க்ருஷ்ண ஏவ 178

ग

கச்சாநுஜாநா 176
கத்யர்த்தா 192
குரும்ப்ரகா 8
கோவிந்தேதி 47

घ

க்ருதேந வாத 168

ச

சக்ஷுச்ச 35
சேதநஸ்ய 91
சோதநாலக்ஷ 170

छ

சாயாவா 143

ஜ

ஜந்மகர்ம 130
ஜந்மாந்தர 210

த

ததேவபூதம் 78
ததேவாக்நிஸ் 79
தந்மந்த்ரம் 9
தமேவசாத்யம் 188
தவஸ்பர்ஸாத் 69
தவாநந்தகுண 26
தஸ்யப்ரக்ருதி 59
தாதர்த்யே 70
த்வமேவோபா 189
த்வம் மாதா 112
த்வம் மே 90
த்வாமேவ 18

द

தாஸபூதா: 11
திஸஸ்ச 36
தேவித்வாமநு 96
தேவ்யாகாரு 199
தேஸோயம் 166
தேஹாஸக்தா 5
தைவாதீநம் 9
த்வ்யக்ஷரஸ்து 92

ध

தர்மஸம்ஸ்தா 181

ந

நகச்சிந்நா 116
நக்ஷமாமி 110*
நம இத்யேவ 146
நமந்த்ரோ 31
நஹிஜ்ஞாநேந 161
நாகிஞ்சித் 88
நாமரூபஞ்ச 56
நாரஸப்தேந 99
நாரஸ்த்விதி 98

நாராயணபரம் 33
நாராயணுயவித் 29
நாராயணேதி 43
நாஸ்திசாஷ்டா 30
நித்யகிங்கர:ப்ர 149
நித்யகிங்கரோ 150

ப

பஞ்சவிம்ஶத் 84
பஞ்சவிம்ஶோய 83
பதிம்விச்வஸ்ய 12
பராஸ்யஶக்தி 184
பரிபூர்ணுகஸி 109
பவித்ராணும் 203
பாபாநாம் 116
பிதரம் 101
பிதேவத்வத் 109
புண்யாபாபே 195
புண்யாத்வார 200
ப்ரக்ஷாள்ய 158
ப்ரணவாத்யம் 53
ப்ரணவாத்ய: 57
ப்ரஸந்நம்புஷ் 69
ப்ராப்யஸ்ய 15
ப்ராயஶ்சித்தி 134

ப²

பலமத: 185

ப³

பஹவோநருப 25
பஹூநிமே 27
ப்ரஹ்மஹத் 171

ப⁴

பக்த்யாத்வந 162
பவஶரணம் 281
பவாம்ஸ்துஸ 135
புக்த்வாசாந்த் 173
பூதாநிசகவர்த் 82
பூத்வோர்த்வ 31
பூரிதிருக் 54
போக்தாஹம் 152
போக்யாவாமபி 96

ம

மதீயாநாதி 156
மநோவாக்கா 154
மந்தாரம்த்ரா 4
மந்தரம்யத்நேந 8
மந்த்ராணும் பர 7
மந்த்ரேதத் 10
மந்மநாபவ 163
மஹத்யாபதி 45
மாமேவயே 187
மாமேவைஷ் 198

ய

யச்ச்ரேயஸ் 205
யதாஸர்வேஷு 40
யதிவாராவ 214
யதோவாஇமாநி 62
யத்ப்ரஹ்ம 118
யத்ரநாராய 201
யஸ்யதேவே 102
யஸ்யம்ருத்யு: 38
யஸ்யாத்மா 37
யஸ்ஸர்வஜ்ஞ 183
யேசவேதவி 202
யேநயேந 147
யோந்யதா 76
யோவஜ்ரபா 175

ர

ரக்ஷ்யாபேக்ஷா 180
ரஸம்ஹ்யேவா 140
ராஜஸம்ச்ரய 115
ராமோவிக்ரஹ 177

ல

லக்ஷ்மீநாத 2
லக்ஷ்ம்யாஸஹ 64
லோகவிக்ராந் 133

வ

விஜ்ஞாதாரம 86
விஜ்ஞாநாத்மா 85
விஜ்ஞாயப்ரஜ் 206
விச்வம்நாரா 32
விஷ்ணுபத்நீ 114

ஶ

ஶங்கசக்ரகதா 46
ஶரீரம்வஸு 21
ஶாஸ்த்ரஜ்ஞாந 23
ஶ்ரயத இதி 65
ஶ்ரிய:பதி: 117
ஶ்ரியாஸார்த்த 125
ஶ்ரீயத இதி 66
ஶ்ரீரிதிப்ரதமம் 105
ஶ்ரீவல்லப 95

ஸ

ஸ ஏவஸ்ருஜ்ய: 63
ஸக்ருதேவப்ர 132
ஸக்ருதேவஹி 131
ஸதாபச்யந்தி 100
ஸத்புத்தி: 22
ஸந்த்யாஹீந: 169
ஸமஸ்தஶப்த 66
ஸமோஹம் 108
ஸம்ஸாரஸாக 14
ஸம்ஸாரார்ணவ 19
ஸர்வபாபேப் 123
ஸர்வபாப 167
ஸர்வம்கர்மா 160
ஸர்வம்பரவஶம் 71
ஸர்வவேதாந்த 41
ஸர்வாந்காமாந் 126
ஸாகிமர்த்தம் 144
ஸாங்கேத்யம் 48
ஸீதாமுவாச 136
ஸீதாஸமக்ஷம் 137
ஸுஹ்ருதம் 107
ஸேநயோருப 179
ஸேவாச்வவ்ரு 72
ஸோச்நுதே 139
ஸ்நாத்வாபுஞ் 174
ஸ்வஜ்ஞாநம் 3
ஸ்வத்வமாத்மநி 13
ஸ்வரூபம்ஸ்வா 93
ஸ்வாமித்வம் 13

ஹ

ஹேக்ருஷ்ண 186

க்ஷ&ஜ்ஞ

க்ஷிபாமி 110
ஜ்ஞாநாந் 130

பிழைதிருத்தம்

பக்கம்	வரி	பிழைகள்	திருத்தங்கள்
8	30	ஸூக்ரஹமான	ஸூக்ரஹமாக
27	3	அஸம்ஹிதகாரத்தாலே	அஸம்ஹிதாகாரத்தாலே
29	11	ப்ரணவம் தனக்குத் தான்	ப்ரணவம்தனக்குத் தான்
35	8	ஸ்த்தியில்லாமையை	ஸ்த்திதியில்லாமையை
43	20	தருதீயாக்ஷரமான	த்ருதீயாக்ஷரமான
44	25	வாசகமோ?	வாசகமாமோ?
56	11	அப்படியின்றக்கே	அப்படியின்றிக்கே
58	28	நாரா: அயந:	நாரா; அயநம்
59	23	ஜ்ஞாநந்தாமலத்வாதி	ஜ்ஞாநாநந்தாமலத்வாதி
60	17	ஓரே	ஓரோ
66	3	சுற்றயெனக்கரசு	சுற்றமெனக்கரசு
70	23	ப்ரகாஶம்	ப்ரகாஶகம்
77	10	இவனுக்கும்	இவனுக்கு
93	12	ஸஹயாந்தர	ஸஹாயாந்தர
119	3	உள்ளவைதாம்தாம்	உள்ளவைதாம்
131	14	பேஅக்ஷிதார்த்தங்களை	அபேக்ஷிதார்த்தங்களை
132	1	தர்ஶப்பித்தமையை	தர்ஶிப்பித்தமையை
144	7	மண்ணுமளவில்	பண்ணுமளவில்
153	5	கொடுகிரு	கொடுக்கிரு
164	7	சாய்ந்தருனினவர்	சாய்ந்தருளினவர்